விலை: யாழ். ரூபா 30, வன்னி ரூபா 20 பக்கங்கள் 52

பொது நூலகம்
கோண்டாவில்

# உதயன்

மகாராஜா பொதிகள் சேவை
இலங்கையில் அனைத்து நகரங்கள், மாவட்டங்களிற்கான உள்நாட்டு கடிதங்கள் மற்றும் பொதிகள் சேவைக்கு இன்றே நாடுங்கள்.
GTV Enterprises (Pvt)Ltd.
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024
இல 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
024 - 4930200

சுடர் 30 கதிர் 326 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 1, ஞாயிற்றுக்கிழமை 18.10.2015

# போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தினர் தமிழ்க் கைதிகள்

## சம்பந்தன் வழங்கிய உறுதிமொழியை அடுத்து

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 18

எதிர்வரும் நவம்பர் 7 ஆம் திகதிக்கு முன்னர் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படும். அதை நிறைவேற்ற வைப்போம். எம்மை நம்புங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தமிழ் அரசியல் கைதிகளிடத்தில் விடுத்த வேண்டுகோளுக்கு அமையத் தற்காலிகமாக எதிர்வரும்

நவம்பர் 7 ஆம் திகதி வரை உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஒத்திவைப்பதாக, தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

பொதுமன்னிப்பில் தம்மை

பக்.24

## பிரகீத் கொல்லப்பட்டு கடலில் வீசப்பட்டாரா?

கொழும்பு, ஒக்.18

லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கொலை செய்யப்பட்டு, அவரது சடலம் கடலில் வீசப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின் றது.

கடத்திச் செல்லப்பட்ட எக்னெலிகொட வெலிகந்த மன்னம்பிட்டி என்னும் இடத் தில் காணப்பட்ட இடைக்கால இராணுவ முகாமொன்றில் வைத்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் எனக்



கூறப்படுகின்றது.

கொலை செய்யப்பட்ட எக்னெலிகொடவின் சடலம், திருகோணமலைக் கடற்பரப்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு வீசி எறியப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

கொலைசெய்யப்பட்ட எக்னெலிகொட முன்னதாக சொரிவில பிரதேசத்தில் சகதிக் குழியொன்றில் புதைக்கப்பட்டார் எனவும், சடலம் மேலே வந்த காரணத்தால் அதனை எடுத்துத் திருகோணமலை கடற்பரப்பில் வீசி எறிந்ததாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

சொரிவில பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த இந்த முகாம் கருணா அம்மானாலும், பிள்ளையானாலும் நிர்வாகம் செய்யப்பட்டு வந்தது எனக் கூறப்படுகின்றது.

2010ஆம் ஆண்டு

பக்.24

## அரியாலை மண்டையோடு மருத்துவப் பகுப்பாய்வுக்கு

### யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப்பு



யாழ்ப்பாணம், ஒக். 18

அரியாலை முள்ளிப் பகுதியில் நேற்று முன்தினம் கண்டறியப்பட்ட பெண்ணுடையது எனக் கருதப்படும் மனித மண்டை ஓடு மற்றும் எலும்புகள் தொடர்பில்

பக்.24

## மேன்முறையீட்டு நீதிமன்றம் செல்லத் தயாராகிறார் மகிந்த

### ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு எதிராக

கொழும்பு, ஒக்.18

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, தனது தரப்புச் சட்டத்தரணிகளின் ஆட்சேபனைகளைக் கருத்திற் கொள்ளாமல் நடந்து கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, மேன் முறையீட்டு நீதிமன்றம் செல்ல எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

பெரியளவிலான நிதி மோசடிகள் மற்றும் ஊழல்கள் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் முன்னிலையில் மகிந்த ராஜபக்ச நேற்றுமுன்தினம் முன்னிலையாகியிருந்தார்.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம்பேசும்போதே முன்னாள் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பக்.24

## தமிழ் அரசியல் கைதிகளையும் நல்லாட்சியில் வாழவிடுங்கள்

### கிழக்கில் கைதிகளின் உறவுகள் கண்ணீருடன் வேண்டுகோள்

மட்டக்களப்பு, ஒக்.18

ஜனாதிபதியே தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள், நல்லாட்சியில் தமிழ் அரசியல் கைதிகளையும் வாழவிடுங்கள், தயவு செய்து எங்கள் அப்பாவை எங்களுடன் சேர்த்து வாழவையுங்கள், புதிய அரசே இருளில் உள்ளவரை வெளிச்சத்துக்குக் கொண்டு வரவும், ஜனாதிபதியே தமிழ் அரசியல் கைதிகள் மீது இரக்கம் காட்டுங்கள்.

பக்.24




## மயக்கமடைந்த 36 கைதிகளும் தொடர்ந்து வைத்தியசாலையில்

கொழும்பு, ஒக்.18

நல்லாட்சி அரசு தங்களைப் பொதுமன்னிப்பில்விடுதலை செய்யவேண்டும் என்று வலியுறுத்தி நாடு முழுவதிலும் உள்ள 14 சிறைச்சாலைகளில் 217 தமிழ் அரசியல் கைதிகள் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தைக் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்திருந்தனர். அவர்களில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு வரை 36 பேர் உடல் நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டு மயக்கமடைந்த நிலையில் சிறைச்சாலை வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

கொழும்பு – மகஸின் சிறைச்சாலையிலிருந்து 30 பேரும், அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து 4 பேரும், கண்டி, பல்லேகல-தும்பர சிறைச்சாலையிலிருந்து 2 பேரும்

பக்.24

## திருட்டுக் குற்றச்சாட்டில் 8 இராணுவத்தினர் கைது

### கைதடியில் நள்ளிரவு சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 18

வீதியோரத்தில் பொருத்தப்பட்டிருந்த இரும்புக் குழாய்களாலான பெரிய விளம்பரத் தட்டியை வீழ்த்தி அதிலிருந்த இரும்புக் குழாய்களை அறுத்துத் திருட முற்பட்ட குற்றச் சாட் டில் 8 இராணுவச் சிப்பாய்களைக் கைது செய்துள்ளதாகச் சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதடி பனை

பக்.24

## யாழ். மாணவன் கொழும்பில் வாகன விபத்தில் சிக்கிச் சாவு

யாழ்ப்பாணம், ஒக், 18

கொழும்பில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் மொறட்டுவப் பல்கலைக் கழகப் பொறியியல் பீடத்தில் பயிலும் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மொறட்டுவப் பல்கலைக் கழகமாணவனானமகேந்திரன்

பக்.24







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவுத் திருமண எண்ணிக்கை வீழ்ச்சி கண்டு வருகின்றது

## மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.18

பதிவுத் திருமணம் செய்பவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

**கண்டிய மற்றும் முஸ்லிம் பதிவுத் திருமணங்களும் குறைந்துள்ளன என்று மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.**

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள 2015ஆம் ஆண்டின் புள்ளி விவரவியல் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள் ளது.

அந்த அறிக்கையின்படி கடந்த வருடம் 1 லட்சத்து 75 ஆயிரத்து 728 பதிவுத் திருமணங்கள் நடைபெற்றன. 2013ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 80 ஆயிரத்து 760 பதிவுத் திருமணங்கள் நடைபெற்றன. 2011ஆம் ஆண்டு 2 லட்சத்து 214 பதிவுத் திருமணங்கள் நடைபெற்றன. இது 2012ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 98 ஆயிரத்து 710 ஆக இருந்தது.

கண்டிய மற்றும் முஸ்லிம் பதிவுத் திருமணங்களும் குறைந்துள்ளன. கண்டிய திருமணம் 2012 ஆம் ஆண்டு ஆயிரத்து 651 ஆக இருந்தது. இது கடந்த 2011 ஆம் ஆண்டு ஆயிரத்து 432 ஆக இருந்தது.

இதேவேளை 2012ஆம் ஆண்டு 20 ஆயிரத்து 189 முஸ்லிம் பதிவுத் திருமணங்கள் நடைபெற்றுள்ளன. எனினும் 2013ஆம் ஆண்டு 19 ஆயிரத்து 990 பதிவுத் திருமணங்களே நடைபெற்றுள்ளன.(ற)

## 'போர்ட் சிட்டி' திட்டம் மீள ஆரம்பமாகும்

### பிரதியமைச்சர் எரான் நம்பிக்கை

கொழும்பு, ஒக்.18

கொழும்பு போர்ட்சிட்டி தொடர்பான சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கை திருப்திகரமாக காணப்படுவதால் எது வித தடையுமின்றி அந்தத் திட்டம் மீண்டும் ஆரம்பமாகும் என பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் எரான் விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.

கடந்த அரசு மேற்கொண்ட சூழல் பாதிப்பு மதிப்பீடுகள் போலியானவை என குறிப்பிட்டு நல்லாட்சி அரசு போர்ட் சிட்டி திட்டத்தை இடைநிறுத்தி வைத்திருந்தது. தற்பொழுது குறித்த மதிப்பீட்டு அறிக்கை தயராகியுள்ளது. அதனை கரையோர பாதுகாப்பு திணைக்களத்திடம் அனுப்பிய பின்னர் அந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பிரதியமைச்சர் -

அந்த அறிக்கை திருப்திகரமானதாக காணப்படுவதால் அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்ற பின்னர் போர்ட்சிட்டி திட்டத்தை தொடருவோம். அனைத்தும் திருப் திகரமானதாக காணப்பட்டால், அடுத்தவருட ஆரம்பத்தில் போர்ட்சிட்டி திட்டம் மீண்டும் செயற்பட தொடங்கும். - என்றார். (ற)

## இலங்கைக்கு கஞ்சா கடத்திய இருவர் கைது

சென்னை, ஒக்.18

இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த கஞ்சா பொதியுடன் சந்தேக நபர்கள் இருவர் தமிழக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களிடம் இருந்து 134 கிலோகிராம் கஞ்சாவை தமிழக பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

தமிழகத்தின் இராமநாதபுரம் கரையோரத்திலுள்ள இடமொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த கஞ்சாத் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்படுகின்றது.

இந்தக் கஞ்சாத் தொகை கடல் மார்க்கமாக இலங்கைக்கு கடத்தப்படவிருந்தமை ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)



கொழும்பு பாபர் வீதி மாரியம்மன் ஆலய தேரோட்டத்தைத் தடை செய்து இந்துக்களின் வழிபாட்டுரிமைக்கு இடைஞ்சல் ஏற்படுத்தப்பட்டமை மற்றும் நாடளாவிய ரீதியில் இந்துக்களுக்கு நடக்கும் கொடுமைகளை இல்லாது செய்யவும் நேற்றுமுன்தினம் நல்லூர் ஆலய முன்றிலில் சிறப்பு வழிபாடு முன்னெடுக்கப்பட்டது. இந்துத் துறவிகள் மற்றும் இந்துக்கள் இணைந்து முன்னெடுத்து கர்ப்பூரம் கொளுத்தி தேங்காய் உடைத்து பிரார்த்தனையில் ஈடுபட்டனர். இது தொடர்பாக மக்களை தெளிவூட்டும் துண்டுப் பிரசுரங்களும் மக்களுக்கு வழங்கப்பட்டன. (ற)

## ஒலுவிலில் கஞ்சாவுடன் இளைஞர் கைது

அம்பாறை, ஒக்.18

ஒலுவில் பிரதேசத்தில் கஞ்சா வியாபாரி ஒருவர் கஞ்சாவுடன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து குறித்த பகுதியில் பொலிஸார் சோதனை மேற்கொண்டனர். இதன்போதே [illegible] வயதுடைய கஞ்சா வியாபாரி ஒருவரை 2 பக்கற்றுகள் கஞ்சாவுடன் கைதுசெய்துள்ளனர். குறித்த நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற)

# அரச ஓய்வூதியர்கள் அனைவரும் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தில்

## ஓய்வூதியத் திணைக்களம் நடவடிக்கை

அச்சுவேலி, ஒக். 18

அரச சேவை ஓய்வூதியர்கள் அனைவரும் பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தில் அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஓய்வூதியர்களின் மாதாந்தக் கொடுப்பனவுகளில் இருந்து நம்பிக்கை நிதியத்துக்கான சந்தா 50 ரூபா மாதாந்தம் செலுத்தப்படும். இதற்கான ஏற்பாடுகளை அரச நிர்வாக மற்றும் ஜனநாயக அமைச்சின் பணிப்புரைக்கு அமைய ஓய்வூதியத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இந்த வகையில் பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தில் உறுப்பினர் எண்ணிக்கை 6 லட்சத்தைத் தாண்டி உள்ளது எனக் கூறப்படுகின்றது.

இது ஓய்வூதியர்கள் தொடர்பாக நாடளாவிய ரீதியிலான பொது அமைப்பாகும்.

ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தில் உறுப்பினர்களுக்கு கண்வில்லை பொருத்துவதற்கான கொடுப்பனவு கண் ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் 10 ஆயிரம் ரூபா, வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும்போது நாள் ஒன்றுக்கு 500 வீதம் 5 ஆயிரம் ரூபா, சத்திர சிகிச்சைக்கான கொடுப்பனவு, பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் கொடுப்பனவு, விரைவான கடன்திட்டம், மரணப் பணிக்கொடை உள்ளிட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. உறுப்பினர் தொகை அதிகரித்திருப்பதன் மூலம் கொடுப்பனவுகளின் தொகை அதிகரிக்கலாம் என கூறப்படுகின்றது.

பகிரங்கசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியக் கிளைச் சங்கங்கள் பிரதேச செயலக பிரிவுகள் தோறும் செயற்பட்டு வருகின்றன.

உறுப்பினர்கள் தமது கொடுப்பனவுகள், தேவைகள் தொடர்பாக பிரதேச செயலக பிரிவு சங்கங்கள் ஊடாக தொடர்பு கொண்டு கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

ஓய்வூதியர்கள் நம்பிக்கை நிதியச் சங்கத்தில் இதுவரையில் 35 வீதமான ஓய்வூதியர்கள் உறுப்புரிமை பெற்றிருந்தனர். தற்பொழுது அரசசேவை ஓய்வூதியர்கள் அனைவரும் உறுப்பினராக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களுக்கான உறுப்புரிமை சந்தா கடந்த மாதத்தில் இருந்து பெறப்படுகின்றது. (ற-1)

# வீதி விளக்குகள் ஒளிரவில்லை என பொதுமக்கள் குற்றச்சாட்டு

## முறைப்பாடு கிடைக்கவில்லை என்கிறது வலி. தெற்கு பிரதேச சபை

யாழ்ப்பாணம், ஒக்.18

உடுவில் - மானிப்பாய் வீதியில் உள்ள ஆலடிச் சந்தியில் இருந்து மருதனார்மடம் செல்லும் வீதியில் உள்ள வீதி மின்விளக்குகள் கடந்த ஒருவார காலமாக ஒளிர்வதில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வீதி மின்விளக்குகள் ஒளிராததனால் இரவில் இந்த வீதி இருளில் மூழ்கிக் காணப்படுகின்றது. அதனால் வீதியால் பயணிக்கும் போது பெரும் சிரங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

கடந்த வாரத்தில் மின்னலுடன் கூடிய இடி முழக்கத்தை அடுத்தே இந்த வீதி மின்விளக்குகள் ஒளிர்வதில்லை. ஒளிராமல் இருக்கும் இந்த வீதி மின் விளக்குகளை [illegible] செய்ய உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து வலி. தெற்கு பிரதேச சபையின் செயலாளர் ரி.தியாகச்சந்திரனைக் கேட்டபோது அவர் குறித்த வீதியில் மின் விளக்குகள் ஒளிராதமை தொடர்பில் தமக்கு எந்த முறைப்பாடுகளும் கிடைக்கப்பெறவில்லை என்று தெரிவித்தார்.

முறைப்பாடு கிடைத்திருந்தால் நாங்கள் உடன் உரிய நடவடிக்கை எடுத்திருப்போம். மழை காலம் என்பதால் இந்த நிலை ஏற்பட்டிருக்கலாம் என்றும் அவர் விளக்கமளித்தார். (ற-10,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலனறுவையில் நிலைகொண்டுள்ள மைத்திரி



கடந்த சில தினங்களாக ஜனாதிபதி மைத்திரிபால தனது சொந்த இடமான பொலநறுவை மாவட்டத்தில் தங்கியுள்ளார். பொலநறுவை மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் பொலநறுவை மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. பொலனறுவையின் அபிவிருத்தி குறித்து இதில் ஜனாதிபதி ஆலோசனைகளை வழங்கினார். (த)

## திருட்டில் ஈடுபட்ட குற்றத்துக்காக 3 பொலிஸாருக்கு கடூழியச் சிறை

### மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் விதித்தது

அம்பாறை, ஒக்.18

திருட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பான வழக்கில் திருட்டுக் குற்றம் சந்தேகமில்லாமல் நிரூபிக்கப் பட்டதால் இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கும், ஒரு பொலிஸ் சாரதிக்கும் மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் இரு வருட கடூழியச் சிறைத் தண்டனையும், தண்டமும் விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

குற்றவாளிகளான மேற்படி மூவருக்கும் விதிக்கப்பட்ட தலா இருவருட கடூழிய சிறைத் தண்டனையில், கட்டாயமாக ஆறுமாத காலம் கடூழிய சிறை அனுபவிக்க வேண்டும் எனவும், ஏனைய தலா 18 மாதங்களும் பத்து வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட கடூழிய சிறைத்தண்டனையாகவும் நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் தீர்ப்பில் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பிரேமதிலக், ஜொஹான் ரூபசிங்க ஆகிய இரு பொலிஸ் கான்ஸ்டபிள் களுக்கும், லால் ஞானாநந்த எனும் பொலிஸ் சாரதிக்கும் எதிராக திருட்டுக் குற்றம் சாட்டி சட்டமா அதிபரால் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்குத் தொடரப் பட்டிருந்தது.

பட்டிப் பளை கொக்கட்டிச் சோலைப் பிரதேசம், போர்க் காலத்தில் இராணுவ நடவடிக்கை மூலம் மீட்கப்பட்டதையடுத்து அங்கு பொலிஸ் நிலையம் ஒன்றை அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளில் ஈடுபட்ட சமயமே குறித்த திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கொக்கட்டிச்சோலைப் பிரதேச செயலகத்தில் பொருத்தப்பட்டிருந்த குளிரூட்டி இயந்திரம் ஒன்றும், அந்தப் பிரதேச செயலக சமுர்த்தி அலுவலகத்தில் பொருத்தப்பட்டிருந்த மூன்று மின்விசிறிகளும் திருடப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே குறித்த மூவர் மீதும் குற்றம் சுமத்தப் பட்டிருந்தது.

திருடப்பட்ட குறித்த பொருள்கள் மட்டக்களப்பு பொலிஸ் நிலைய, பொலிஸார் தங்கும் விடுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் வழக்கு விசாரணையின்போது குறித்த பிரதேச செயலாளர் மற்றும் சமுர்த்தி முகாமையாளர் ஆகியோர் சாட்சியமளித்ததுடன், கைவிரல் அடையாளங்களும் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்பட்டன. அத்துடன் பொலிஸ் சாட்சியமும் அளிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் குறித்த திருட்டுக் குற்றச்சாட்டு வழக்கு விசாரணை நடைபெற்றபோது சந்தேக நபர்களான மூன்று பொலிஸாரும் (ஒருவர் சாரதி) குற்றத்தை மறுத்து வந்தனர்.

எனினும் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் குற்றஞ்சாட்டப் பட்டு தொடரப்பட்ட இந்த வழக்கு விசாரணையின் சாட்சியங் களின் படி, சந்தேகமில்லாமல் குறித்த மூவர் மீதான திருட்டுக்குற்றம் நிரூபிக்கப்பட்டது.

இதனையடுத்து கடந்த வியாழக்கிழமை மேல்நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் தீர்ப்பு வழங்கினார்.

நாற்பது பக்கங்களைக் கொண்ட தீர்ப்பை வாசித்த நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம், மூன்று பொலிஸாரையும் (ஒருவர் சாரதி) குற்றவாளிகளாகக் கண்டு தீர்ப்பளித்தார்.

இதன்படி மூவருக்கும் தலா இரு வருட கடூழிய சிறைத்தண்டனையும், தலா பத்தாயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.

அத்துடன் இருவருட கடூழிய சிறை தண்டனையில் கட்டாயம் ஆறுமாத கடூழியச் சிறைத் தண்டனையை அனு பவிக்க வேண்டுமெனவும், ஏனைய தலா 18 மாதங்களும் பத்து வரு டங்கள் ஒத்திவைக்கப்பட்ட கடூழியச் சிறை தண்டனையாகவும் நீதிபதி தீர்ப்பில் தெரிவித்தார்.

தண்டம் செலுத்தத் தவறினால் தலாமூன்று மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ற-30)

## அடம்பனில் அனுமதியின்றி மரம் வெட்டியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஒக். 18

மன்னார் அடம்பன் காட்டுக்குள் அத்துமீறி மரம் வெட்டிய குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பிரதான நபருக்கு 60 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தது மன்னார் நீதிமன்று.

குறித்த 3 பேரும் வனவளத் திணைக்களத்தின் அனுமதி இன்றி லான்ட் மாஸ்ரரில் சென்று மரம் வெட்டியபோது வனவளத் திணைக் களத்தினரிடம் மாட்டிக் கொண்டனர். அவர்களுக்கு எதிராக 4 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. அதன்படி காட்டுக்குள் அத்துமீறி நுழைந்தமை, முதிரை மரங்களை வெட்டியமை, அவர்கள் கொண்டு சென்ற லான்ட்மாஸ்ரருக்கு இலக்கத் தகடு இல் லாமை, அதனைச் செலுத்திச் சென்றவருக்கு சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாமை ஆகிய குற்றச்சாட்டுக்களே முன்வைக்கப்பட்டன.

மன்னார் நீதிவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அவர்களில் முதலாவது சந்தேக நபரே ஏனைய இரண்டு பேரையும் கூலிக்கு அழைத்தச் சென்றதாக விசாரணையில் தெரிவிக்கப் பட்டது. தவிர தன் மீதான குற்றச் சாட்டையும் அவர் ஏற்றுக்கொண்டார். அவருக்கு முதலாவது குற்றச்சாட்டுக்கு 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒரு மாதகால சிறைத் தண்டனையும், இரண்டாவது குற்றச்சாட்டுக்கு 50 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 2 மாதகால சிறைத் தண்டனையும், 3 ஆவது குற்றச் சாட்டுக்கு 2 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒருமாதகால சிறைத் தண்டனையும், 4 ஆவது குற்றச்சாட்டுக்கு 3 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒரு மாதகால சிறைத் தண்டனையு மாக 60 ஆயிரம் ரூபா அபராத மும் அதனைச் செலுத்தத் தவறின் 5 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிமன்று தீர்ப்பளித்தது. அவருடன் சென்ற ஏனைய 2 பேரும் விடுதலை செய்யப்பட்டனர். தவிர அவர்கள் கொண்டு சென்ற லான் மாஸ்ரர் தொடர்பான வழக்கு உரிமைக் கோரிக்கைக்காக ஒத்திவைக்கப் பட்டுள்ளது. (ற-4)

## மாணவர்களில் 26 வீதத்தினர் போதைக்கு அடிமை

மட்டக்களப்பு, ஒக்.18

பாடசாலை மாணவர்களில் 26 வீதமானவர்கள் மது மற் றும் புகையிலைப் பழக்கம் உள்ளவர்கள் என மட்டக்களப்பு மாநகர சபையின் சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே. தேவநேசன் தெரிவித்துள்ளார்.

மதுபானம் மற்றும் புகைத்தலால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி க. பொ.த. உயர் தர மாணவர் களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் அங்கு தெரிவித்துள்ளதாவது:-

போதைப் பொருள்களைப் பாவிப்போர் எப்போதும் மன அழுத்தம் மற்றும் மன இறுக்கத்துக்குள்ளாகி இருப்பார்கள். இலங்கையில் சிகரட் பாவனையால் வருடத்துக்கு 20 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர். அது போல் மதுப்பாவனையால் வருடத்துக்கு 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரையிலானோர் இறக்கின்றனர்.

எதிர்காலத்தில் தலைவர்களாக வரவுள்ள மாணவர்களை போதைப் பொருள்களில் உள்ள இரசாயனப் பொருள்கள் பல்வேறுபட்ட சட்டவிரோத குற்றச் செயல்களைச் செய்வதற்கு தூண்டுகின்றன. பிள்ளைகளின் சட்டவிரோதச் செயல்களால் கவலை கொண்டு சாவைத் தழுவிய பெற்றோர்களும் உள்ளார்கள். இவற்றைக் கருத்தில் கொண்டு சுகாதார மிக்கமாணவர்களாக வாழ்ந்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும் - என்றார். (ற-10)

## பெருங்கடல் செல்லும் கால்வாயை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

### மன்னார் நகர் மீனவர்கள் விடுத்தனர்

மன்னார், ஒக்.18

மீன்பிடிக்காகத் தாம் பெருங் கடலுக்குள் செல்லும் கால்வாய் மூடப் பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள மன்னார் நகர் மீனவர்கள் அதைப் புனரமைத்துத் திறந்து விடுமாறு மன்னார் மாவட்ட செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னாருக்கான புகையிரத சேவைகள் ஆரம்பிக்கப்பட் வேளை மன்னார் சவுத்பார் பகுதியில் அமைக்கப்பட்ட புகையிர பால வேலைகளின்போது மன்னார் மீனவர்கள் பெருங்கடலுக்கு செல்லும் கால்வாய் மணலால் மூடப்பட்டது. இதனால் மீனவர்கள் பெருங்கடலுக்கு செல்வதில் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

பணங்கட்டுகொட்டு, பள்ளிமுனை, பெரியகடை, உப்புக்குளம், சாந்திபுரம், சவுத்பார், ரயில்வே ஸ்ரேசன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 300க்கு மேற்பட்ட மீனவர்கள் மன்னார் நகர் பாலக் கடற்கரையோரத்திலிருந்து ஆழ் கடலுக்கு சென்று காலா காலமாக மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்கள் ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் செல்வதென்றால் கடலில் அமைக்கப்பட்டிருக்கும் ரயில்வே பாலத்தை ஊடறுத்தே ஒரு கால்வாய் ஊடாக தென் கடலுக்குச் செல்ல வேண்டும்.

ஆனால் கால்வாய் மணலால் மூடப்பட்டதால் கால்வாய் ஊடாக மீனவர்கள் தங்கள் படகுகளைச் செலுத்த முடியாதுள்ளது. அதனால் சுமார் நூறு மீற்றர் தூரம் பலபேர் சேர்ந்தே படகுகளை இழுத்துச் சென்று தொழிலுக்குச் சென்று வரவேண்டிய நிலை காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கால்வாயை அகழ்ந்து பெருங்கடலில் கடற்றொழிலை மேற்கொள்வதற்கு ஏற்ற நடவடிக்கையை எடுக்க வேண் டும் என்று மன்னார் மாவட்ட செயலாளர் எம்.வை.எஸ்.தேசப் பிரியவுக்கு அண்மையில் மீனவர்கள் மனுக் கொடுத்திருந்தனர்.

கடந்த வெள்ளிக் கிழமை மன்னார் மாவட்ட செயலாளர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் மன்னார் மாவட்ட செயல கத்தில் இது குறித்த கலந்துரை யாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தீர்க்கமான எந்த முடிவும் எடுக்கப்படவில்லையெனவும் மணலால் மூடப்பட்டிருக்கும் ரயில் பாலப் பகுதியை ரயில்வே திணைக்கள அதிகாரிகளே பார்வையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## சீர்கேடான உணவு ரூ.20 ஆயிரம் அபராதம்

வேலணை சாட்டி மாதா கோயில் பகுதியில் சிற்றுண்டி வகைகளை சுகாதாரச் சீர்கேடாக வைத்திருந்ததோடு, அவற்றை அழுக்கடைந்த சாரத் தால் மூடி வைத்திருந்தவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது நீதிமன்று.

உடுவில் பகுதியில் வைத்துத் தயா ரிக்கப்பட்ட குறித்த உணவுப் பொருள்களை அதே நபர் வேலணைக்குக் கொண்டு சென்று விற்றுள்ளார். அதன்போது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பரிசோதனையிட்ட போதே சுகாதாரச் சீர்கேடு நிலவியமை தெரிய வந்தது. அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது.

தவிர பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஒருவர் அதே கோயிலில் சுகாதார சீர்கேடாக இனிப்புப் பண்டங்களை விற்பனைக்கு வைத்திருந்த குற்றத்துக்காகவும் ஊர்காவற்றுறை நீதிமன்று 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பனை வளம் பெருக்க பலமான கட்டமைப்பு தேவை

வடக்கில் மழை அன்னை தனது திவ்விய முகத்தைக் காட்டுவதற்கு ஆரம்பித்து விட்டாள். வன்னிப் பெருநிலப்பரப்பிலும், தென்மராட்சிப் பிராந்தியத்திலும் கனமழை பெய்யத் தொடங்கி விட்டது. இரண்டு பகுதிகளிலும் பல இடங்களில் மாரி கால நெல்விதைப்புத் தொடங்கிவிட்டது. வயல்களில் சிறு பயிர்களாகி நீண்டு நிற்கின்றன.

தென்மராட்சியின் பல பகுதிகளில் நெற்பயிர்கள் உயர்ந்து காணப்படுகின்றன. வன்னிப் பிராந்தியத்தில் அதனை விட அதிகமாக நெற்பயிர்கள் நிமிர்ந்து நிற்கின்றன.

அதேவேளை, உரப்பற்றாக்குறை குறித்தே விவசாயிகள் பேசிக்கொள்கிறார்கள். தென்மராட்சியில் பரப்பு ஒன்றுக்கு 400 கிராம் அடிக்கட்டுப் பசளையே கமநல சேவைகள் நிலையங்களால் விநியோகிக்கப்படுகின்றது. அங்குள்ள கமநல சேவை நிலையங்களில் மானிய விலையில் உரவகைகளின் விநியோகம் இடம்பெறுவதும் கருத்தில், கவனத்தில் கொள்ளத் தக்கதே.

எனினும், அதன் அளவு உடன் தேவைக்குப் போதாமையால், விவசாயிகள் தமக்குத் தேவையான மேலதிக உரத்தை, தனியார் கடைகளில் அதிக விலை கொடுத்தும் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை உயர்ந்து நிற்கிறது.

நாள்கள் செல்லச் செல்ல உரம் ஊட்டுதலின் தேவை மேன்மேலும் அதிகரிக்கும் என்பதனால்--

அவற்றை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு, கமநல சேவை நிலையங்கள் -- அவற்றின் அதிகாரிகள் விரைந்து செயற்பட வேண்டும். சாக்குப் போக்கு எதனையும் வனைவதற்கு முனையலாகாது. நெற்காணியின் ஈரப்பற்றுக் காய்ந்து போகாது பாதுகாப்பதற்கு உதவ வேண்டும். இன்றைய, இப்போதைய உடன் தேவை அது. மா ஈரம் போகுது என்ற ஏக்கத்துடன் விதை கொண்டு ஓடும் நிலை வரை காலத்தைக் கடத்தக் கூடாது.

அதேவேளை, மறுபுறத்தில் நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மற்றுமொரு மிகப்பெரிய சவாலுக்கு முகம்கொடுக்க நேர்ந்து வருகிறது. பலதரப்பட்ட சிரமங்கள் மத்தியிலும் விவசாயிகள் தமது நெல் விதைப்பை மேற்கொண்ட பின்னர், கட்டாக்காலி கால் நடைகளால் அவர்களது நெற்பயிர்கள் சேதத்துக்கு உள்ளாக்கப்படுவது வழமையாகி விட்டது. பொறுப்பான தரப்புக்கள் கால்நடை வளர்ப்போருக்கு இது தொடர்பாக அறிவித்தல் விடுத்தும், எச்சரிக்கை செய்தும் கால் நடைவளர்ப்பாளர்கள் பொறுப்பற்ற விதத்தில் தமது கால்நடைகளைக் கட்டி வைத்துக் கட்டுப்படுத்தத் தவறுவது ஒரு சமூகத் தவறாகக் கொள்ளத்தக்கது.

அதேவேளை, வடக்கின் கற்பக தருவான பனையின் விதைகளை நடுகை செய்யும் காலபோகமும் மழை பெய்த கையோடு தொடங்கிவிட்டது. அதனைக் கருத்தில், கவனத்தில் கொண்டு, வடமராட்சி கிழக்கில் பனை விதைகளை நடும் மிகப்பெரிய திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட உள்ளது.

அதன்போது, வடமராட்சி கிழக்கின் மாமுனைப் பகுதியில் 400 ஏக்கர் காணியில் ஐம்பதாயிரம் பனை விதைகளை நடும் திட்டம் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனைப் பனை அபிவிருத்திச் சபை முன்னின்று செயற்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தத் திட்டத்தின் நீட்சியாக, குடாநாடு முழுவதிலும் பரவலாக, நான்கு லட்சம் பனம் விதைகளை நடுகை செய்வதற்கு ஏற்பாடாகி வருகிறது.

மழை காலம் ஆரம்பமாகி உள்ள தருணத்தில், பனம் விதைகளைத் தீவுப்பகுதி, வலி.கிழக்கு, வலிகாமம் ஆகிய சகல பிரதேசங்களிலும் நடுகை செய்வதற்கு வகை செய்யப்பட உள்ளது.

நல்ல முயற்சி. வடக்கின் பாரம்பரியத்துடன் காலம் காலமாக ஒன்றித்துவிட்ட பனை வள வளர்ச்சி, அதன் பயன்பாடு மேன்மேலும் உயரட்டும்.

இந்தத் தருணத்தில், பனை அபிவிருத்திக்குத் தன்னம் தனியாக, தனது உடல், பொருளால் ஆத் மார்த்தமாக உழைத்த மில்க்வைற் க.கனகராசா வள்ளலை இங்கு நினைவு கூருவது மிகப்பொருத்தம். தனி மனிதனாக நின்று, பனைச் செய்கையை வவுனியா வரை ஊக்குவித்தவர் அவர். யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லும் வீதிகளில் பனை மரங்கள் வானுயர்ந்து நிற்பதற்கு முதல் முன்னோடி அவரே எனின் தப்பன்று.

அவரைப் பின்பற்றியே அப்போதைய அரசு, பனை அபிவிருத்தி சபையைத் தோற்றுவித்தது என்பது கல்மேல் எழுத்துப்போல் ஆயிற்று.

அவர் அடியொற்றி, யாழ்ப்பாணத்தின் சின்னமான பனை வளர்ப்பு அபிவிருத்தி, காலத்துக்குக் காலம் ஏற்றவாறு, நவீன உற்பத்தித் துறைகள் மூலம் வளர உழைப்பது மக்கள் பொறுப்பாகும்.

வேலி எல்லை, வெற்றிடங்களில் பனைகளை நிறையப் பயிரிடுக, என்று செல்லும் இடமெல்லாம் முழங்கிய வள்ளல் கனகராசா, யாழ்ப்பாணச் சரித்திரத்தில் என்றும் நிலைத்து நிற்பார் என்பதனையும் இங்கு பொருத்துவது மிகப் பொருந்தும்.

# இரட்டைக் குடியுரிமை குறித்து பொலிஸ் இரகசிய விசாரணை

கொழும்பு, ஒக்.18

முக்கிய அரசியல்வாதிகள் இரட்டைக் குடியுரிமை கொண்டிருப்பதை அடுத்து அவர்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறானவர்கள் குறித்து இரகசியமான முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும், அதற்காக விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரி வித்துள்ளன.

இரட்டைக் குடியுரிமை தொடர்பில் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று கூறப்படுகின்றது.

விசாரணைகள் நிறைவு பெற்றதும் அது தொடர்பான அறிக்கை அரசிடம் கையளிக்கப்படவுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ற)

# எதிர்பார்த்த நல்லாட்சி நாட்டில் மலரவில்லை

## சரத் பொன்சேகா தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.18

நாட்டில் எதிர்பார்த்த நல்லாட்சி மலரவில்லை என்று தெரிவித்துள்ளார் ஜனநாயகக் கட்சியின் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

அரசு மக்கள் எதிர்பார்த்த திசையில் செல்ல வேண்டும் எனின் மகிந்தவுடன் ஒட்டியிருந்தவர்கள் தோற்கடிக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்ற ஜனநாயகக் கட்சியின் மாவட்ட பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மகிந்தவைத் தோற்கடித்தது நான் தான் என்று குறிப்பிட்டுள்ள அவர் மகிந்தவைச் சுற்றியிருந்த பலர் தற் போது இந்த அரசையும் சுற்றியுள்ளனர் என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர்களையும் தோற்கடிக்க வேண்டும் என்று தெரிவித்ததுடன் மகிந்தவைத் தோற் கடித்த எனக்கு அவர்களைத் தோற்கடிப்பது பெரிய விடயமல்ல என்றும் அவர் கூறியுள்ளார்.

அந்தக் கட்சியின் அமைப்பாளர் எஸ்.எச்.எம்.சாபி தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் மேல்மாகாண சபை உறுப்பினர் இந்திக பண்டார உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர். (ற)

# உயிருக்கு அச்சுறுத்தல் மேர்வின் முறைப்பாடு

கொழும்பு, ஒக்.18

தமக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். நாரஹேன்பிட்டி பொலிஸார் இது தொடர்பில் கொழும்பு மேலதிக நீதிவான் நிசாந்த பீரிஸிடம் அறிக்கையிட்டுள்ளனர்.

இனந்தெரியாத நபர்களால் தமக்கு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று மேர்வின் சில்வா தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அச்சுறுத்தல் விடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் தொலைபேசி இலக்கங்கள் குறித்து தகவல்களை வழங்குமாறு தொலைபேசி சேவை வழங்கும் நிறுவனங்களுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் பொலிஸார் நீதிமன்றில் கோரியுள்ளனர். அதையடுத்து நீதிமன்றம் அவ்வாறு உத்தரவிட்டுள்ளது. (ற)

# அரசியல் கைதிகள் எனக் கூறி எவரையும் விடுவிக்கக் கூடாது

## குணதாச அமரசேகர கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.18

பயங்கரவாதத்துடன் தொடர்புடைய நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை அரசியல் கைதிகள் என்ற பெயரில் விடுவிக்கக் கூடாது. - இவ்வாறு தெரிவித்துள்ளார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர.

சர்வதேச அழுத்தங்களில் இருந்து தப்பித்துக் கொள்ளவும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டளைக்கு அமைவாகவுமே அரசு அவர்களை விடுவிக்க முயற்சிக்கின்றது என்றும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இந்த ஆண்டு இறுதிக்குள் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் முடிவு எட்டப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. அது தொடர்பில் அவர் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோது இவ்வாறு கூறியுள்ளார்.

குற்றமற்றவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் தண்டனையை அனுபவிக்கக் கூடாது என்பது எமது சட்டத்தின் விதியாகும். ஆகவே குற்றமற்ற நபர்களை சிறைகளில் தடுத்து வைத்திருக்கக் கூடாது. கடந்த அரசில் சட்டமும் நீதியும் சரியாக செயற்படுத்தப்பட்டன. அதை எவராலும் விமர்சிக்க முடியாது. அதேபோல் சட்டத்துக்கு முரணான வகையில் எவரையும் கைது செய்யவில்லை. அவ்வாறு இருக்கையில், அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என பல தரப்புகளில் இருந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைச் சிறைகளில் அரசியல் கைதிகள் என எவரும் இல்லை. தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சியில் விடுவிக்கப்பட்டு விட்டனர். இப்போது சிறைகளில் இருக்கும் அனைவரும் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்ட நபர்களே யாகும். ஆகவே அவர்களை விடுவிப்பதில் எந்த நியாயமும் இல்லை. பயங்கர வாதத்துடன் எந்த வகையிலும் தொடர்புபட்ட நபர்களை நியாயப் படுத்த முடியாது. எந்த வகையி லேனும் இந்த நாட்டை பிரிக்கவோ அல்லது சீரழிக்கவோ முயற்சித்த நபர்களை அப்பாவிகள் என்று குறிப்பிட முடியாது.

இந்த நபர்களினால் அதிகளவில் வடக்கு மக்களே பாதிக்கப்பட்டனர். ஆயுதப் போராட்டத்தில் அதிகளவில் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்றால் அதற்கு முதற் காரணம் இந்த புலிப் பயங்கர வாதிகளேயாகும். ஆகவே அவர்களை நியாயப்படுத்தி விடுவிப்பதில் எந்தப் பயனும் இல்லை. எனவே இவர்களை சட்டத்துக்கு அமையத் தண்டிக்க வேண்டும்.

இலங்கை அரசு இப்பொது சர்வதேச மட்டத்தில் மிகப்பெரிய அழுத்தங்களை எதிர்கொண்டு வருகின்றது. இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் கட்டாய விசாரணை கள் மேற்கொள்ளப்படும் நிலைமை உருவாகியுள்ள நிலையில், அவற்றில் இருந்து தப்பிக் கவேண்டுமாயின் அரசுக்கு புலிகளின் நிகழ்ச்சி நிரல்களை நடைமுறைப் படுத்த வேண்டியுள்ளது.

ஆகவே அரசு, புலம்பெயர் புலி அமைப் புகள் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளின் தேவைக்கு ஏற்றபடி இலங்கையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது. அந்த நிகழ்ச்சி நிரலின் ஒரு கட்டமே சிறைச்சாலைகளில் உள்ள இந்தக் கைதிகளை விடுதலைசெய்வதாகும். ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகளின் அழுத் தங்கள் மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சர்வதேச தரப்புக்கு கொடுத்த வாக்குறுதிகளுக்கு அமைய இந்த விடயங்களை செய்தாக வேண்டும் என்ற நிலைப்பாடு இப்போது அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும், இந்தக் கைதிகளை விடுவிக்கக் கூடாது. அவ்வாறு விடுதலை செய்ய முன்னர் அவர்கள் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மீண்டும் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். ஒரு சிலரின் அழுத்தங்களை மட்டுமே கருத்தில் கொண்டு நாட்டில் மீண்டும் குழப்பங்களை ஏற்படுத்தக் கூடாது - என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு



### கார் விற்பனைக்கு

Suzuki , Celerio (Auto) NPCAG XXXX இலக்கமுடைய வைத்தியரின் பாவனையில் உள்ள 2015 June பதிவு செய்யப்பட்ட glistening metallic grey நிறமுடைய கார் விற்பனைக்குண்டு.(4900km)

தொடர்பு: 076 885 7953 (64103)(11,15,16)

### விற்பனைக்கு

NP - HV XXXX சிறந்த நிலையில் முச்சக்கர வண்டி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 943 9431
117/2, மோறிஸ்லேன், கண்டுக்குளி,
(64107)(11,15,16,17) யாழ்ப்பாணம்.

### காணி விற்பனைக்கு

நுணாவில் மேற்கு சாவகச்சேரியில் சுமார் 74 பரப்புக் காணி கட்டடங்களுடன் முழுமையாக அல்லது பகுதியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0774 866 659 (60636)(11,15,16,17)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை வீதி **சயன்ஸ் அக்கடமி ரியூசன் சென்ரருக்கு** அருகில் வீடு கிணற்றுடன் சேர்ந்த மூன்று பரப்பு ஆதனம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: சந்திரதாசன் 077 610 6760
சிவா(416)438 8509, (416) 845 8509



## தேவை



### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1983 பூரம் 8இல் செவ்வாய் கிரகபாவம் 80 Cima stage III சித்தியெய்தி கொழும்பில் தனியார் கொம்பனியில் வேலை செய்யும் Asst accountant மணமகனுக்கு கொழும்பில் வேலை செய்யும் மணமகள் தேவை. 011 272 9855 (C/18463)(11,15,16)

### மணமகள் தேவை

மாதகலூர் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 21.12.1978 காலை 8 மணிக்குப் பிறந்த (சிங்கராசி, பூரம் 2ஆம் பாதம்) மகனுக்குப் (5அடி, 2அங்) பொருத்தமான மணமகளைப் பெற்றோர் தேடு கின்றனர். மணமகன் கூட்டுறவுச் சங்கக்கடை முகாமையாளராகப் பணி செய்கிறார்.
தகவல் - சகோதரர் ஜீவன், Mobile - 0776564693,
Email:email2jeeva@yahoo.co.uk.
விரும்புவோர் குறிப்பை மின்னஞ்சலில் அனுப்பலாம்.

### தேவை

விற்பனை விநியோகஸ்தர்கள் தேவை (Distributors) யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய பிரதேசங்களிற்கு

தொடர்பு: 076 804 6489,
0714563518, 0718733943

### பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

இலங்கையில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற நிறுவனங்களுக்கு பயிற்சியுள்ள, பயிற்சியற்ற ஆண், பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. சாறி அணியும் பெண்கள் விரும்பத்தக்கது. வயது 18- 55 சம்பளம் OT யுடன் 35,000/ சாப்பாடு, தங்குமிடம் இலவசம். தேவைப்படும் பிரதேசங்கள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை இன்னும் பல பிரதேசங்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன. மொழி அவசியமில்லை. தொடர்பு கொண்டு நேர்முக பரீட்சைக்கு சமுகம் தரவும்.076 8016 129

R.S.International Job Centre
No: 48A1/1, Hill Street,
Maharagama Road,
Dehiwela,Colombo.

### தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல கடை ஒன்றிற்கு ஆண் அல்லது பெண் O/L, A/L படித்த 18-30 வயதிற்குட்பட்டவர்கள் உடனடியாகத் தேவை. யாழ் நகரப்பகுதியைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: நாஷிக் கிப்ட் சென்ரர்
றலீர் - 077 7905 333

## ஏனையவை

### ஸ்ரீ லக்ஷ்மி பஞ்ச தைல தீப மூலிகை எண்ணெய்



இவ் எண்ணையானது சித்த வைத்திய முறைமையை கொண்டு108 மூலிகை மற்றும் ஐந்து வகை எண்ணெய்களினால் தயாரிக்கப்பட்டது.

**இவ் எண்ணையில் தீபம் ஏற்றுவதால் உண்டாகும் பலன்கள்**

* நறுமணம் வீசிடும்.
* தீராத நோய்கள் விலகும்.
* தோஷங்கள் நீங்கும்.
* நவக்கிரக தோஷம் நீங்கும்.
* திருஷ்டிகள் நீங்கும்.
* சத்துருக்கள் விலகும்.
* தீய சிந்தனை ஏற்படாது.
* நற்சிந்தனை உண்டாகும்.
* லக்ஷ்மி கடாட்சம் உண்டாகும்.
* புத்துணர்ச்சி உண்டாகும்.
* நீண்ட ஆயுள் உண்டாகும்.
* செய்யும்தொழில் விருத்தியடையும்.
* இறையருள் உண்டாகும்.
* செல்வம் செழிக்கும்.
* மங்களம் உண்டாகும்.

GODSPEED

இவ் எண்ணெய் இலங்கை முழுவதும் அனைத்து சில்லறை கடைகளிலும் கிடைக்கும். மொத்தமாக பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்க.
**0767274804**

### VISA REJECTED?




நாம் உங்களுக்கு உதவ தயார்

**•Visit Visas •Rejected Visas**

நிராகரிக்கப்பட்ட மற்றும் புதிய விண்ணப்பங்கள்

*Appeals & Rejected Visas *Special Occasions
*Family & Friends Visit *Medical Visits
*Tourist/Business Visits

• Australia • Canada • China • France • Germany
• Italy • Japan • New Zealand • Netherlands • Norway
• Switzerland • Sweden • UK • USA

100% உத்தரவாதம்*

THE VISA CENTRE
Migration, Work & Study Solutions
Level One, 21, Maitland Crescent, Colombo 07.

**HOTLINES:**
**0777 633 955 / 0777 633 977 / 0773 444 447**


அனைத்து விதமான கட்டணங்களும் The Visa Centre தலைமை காரியாலயத்தில் மட்டுமே செலுத்தப்படல் வேண்டும்.

Tel: 5 334433 Fax: 5 352303 Email: info@thevisacentre.com
www.thevisacentre.com

### Majestic Cineplex Jaffna

கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




விசாரணை 021- 2227712

CeylonTheatres
www.ceylontheatres.lk



* பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் டெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (உதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
151, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 1731 (தர்ஷினி)

### விஜயதசமியை முன்னிட்டு

ஏடும் சகலகலாவல்லிமாலைப் புத்தகமும் அண்ணா தொழிலகத்தில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு - அண்ணா தொழிலகம் இணுவில்.

### இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப்பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N.குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.
காலை 9 மணி முதல் மாலை 5.00 மணிவரை.
இல.424/11,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
(சிவன்கோயிலடி பிரகாஷ் ரான்ஸ்போட் எதிரில்)
தொ.பே. 072 681 6681, 072 681 6691 (65428) (13.15)

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் நீராவியடிப் பகுதியில் யாழ். இந்துக் கல்லூரி சுற்றாடலில் கல்லூரி வீதியில் மேல்மாடி வீட்டின் மேல்மாடி மட்டும் வாடகைக்கு உண்டு.
அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0778965 965

### வீடு வாடகைக்கு உண்டு

சாவகச்சேரி A-9 வீதியில் இருந்து நுணாவில் எல்லை ஒழுங்கையில் இருந்து 50 யார் தூரத்தில் வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும்.
தொடர்பு- 077 664 14 99
(64017)

### A/L2016/17 COMBINED MATHS & PHYSICS

க.பொ.த.உயர்தரம் 2016/17
இணைந்த கணிதம்,
பௌதிகவியல் பிரத்தியேக, சிறு குழு வகுப்புக்கள் (ஆங்கில/தமிழ் மொழி மூலம்)
பொறியியலாளரினால்
(164015)(11,15,16,17) தொடர்பு: 077 354 4413

### கடைத்தொகுதி வாடகைக்கு

மல்லாகம் சந்தி கே.கே.எஸ். வீதியில் மக்கள் வங்கிக்கு முன்பாக 48 அடி X 20 அடி, 48அடி X 22 அடி அளவு கொண்ட இரு கடைகள் அடங்கிய கடைத்தொகுதி தனித்தனியே இணைந்த மலசலகூடம், குளியலறை வசதியும் போதியளவு வாகனத் தரிப்பிட வசதியுடனும் உடனடியாக வாடகைக்கு உண்டு. வங்கிகள், தனியார் நிறுவனங்கள், காட்சியறைகள், கிளினிக் சென்ரர் போன்றவற்றிற்கு மிகவும் உகந்தது.
தொடர்பு:
RTR Ice Cream Corner,Mallakam
077 773 0583, 021 224 1100
(Net cafe நிலையத்திற்கு பயன்படுத்தும் பொருட்கள் விற்பனைக்கு உண்டு)
(64101)(11,1616)

## வேலைவாய்ப்பு

### வேலைவாய்ப்பு

ரூ.48000 அதி உயர் சம்பளம். விமான நிலையம், துறைமுகம், தனியார் தொழிற்சாலை ஆகியவற்றுக்கு (வயது: 18-40)ஆண், பெண், உணவு, தங்மிடம் முற்றிலும் இலவசம். 6 மாதத்தில் நிலையான தொழில். இன்னும் 50 வேலைவாய்ப்புகள் மற்றும் அதிஉயர் சம்பளம்.சிறந்த எதிர்காலம். வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்.
தொடர்புகொள்ளவும்:
077 956 9606, 075 420 4351

இலங்கை முழுவதும் இப்போது உடனடி வேலைவாய்ப்புகள். நீங்கள் எதிர்ப்பாக்காத வருமானத்தை ஈட்டிக்கொள்ளலாம். சொக்லேட், கோடியல்,பால்மா, சோயா, குளிர்பானம் ஆகிய துறைகளில் உடனடியாக 75 வேலைவாய்ப்புக்கள். (வயது: 18 - 55) உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். ஆண், பெண். சம்பளம் (20000 - 40000) நாள் சம்பளம் - OTயுடன் 1500 (OT-1 Hrs) நாள் சம்பளம் பெற்றுக் கொள்ளலாம் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
T.P. 075 028 7319, 078 308 8234

நாள்சம்பளம் 1500/= மாதாந்தம் எவ்வளவு? உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். சொக்லெட், பால்மா, ஐஸ்கிறீம் போன்ற தொழிற்சாலைகளின் அனைத்துப் பிரிவுகளுக்கும். வந்த நாளிலே வேலை. ஆண்/பெண், (18-55) OT உடன் 40000/= இற்கும் அதிகமான சம்பளம் (நாள்சம்பளம், கிழமைச்சம்பளம், மாதச் சம்பளம்) உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
T.P. 077 401 7543, 755 446 898

சொன்ன சம்பளம் கிடைத்ததா? மாதக் கடசியில் (8000 -12000) ஆகிய சம்பளமா கிடைத்தது. உணவு,தங்குமிடம்,உங்கள் சம்பளத்தில் கழித்துக்கொண்டார்களா? இதோ உண்மையான சம்பளம் நாள் சம்பளம் -1500/= உங்கள் விரும்பப்படி ஒவ்வொரு நாளும் சம்பளம் உணவு, தங்குமிடம் உடை ஆகியன முற்றிலும் இலவசம். உங்கள் சம்பளத்தை நீங்களே கணக்குப் போட்டு பார்த்துக்கொள்ளவும். (நாள்சம்பளம் - 1500×25 Day= 37500) (உண்மையான சம்பளம்) பிரதான தொழிற்சாலைகளில் லேபல், உற்பத்தி, பொதியிடல் ஆகிய பிரிவுகளுக்கு, ஆண், பெண் (வயது: 18 -50) வரும் நாளிலே வேலை.
T.P. 775 977 259, 77 891 0598 (65079) (13.15.16)

### வேலை வாய்ப்பு

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட எமது கிளைகளில் வேலைக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. O/L,A/L தகைமையுள்ள இளைஞர், யுவதிகள் நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப் பிக்கலாம்.

தொடர்புக்கு:
கிளிநொச்சி - 077 280 3773
யாழ்ப்பாணம் - 077 208 3140
திருகோணமலை - 0775 267 295

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. அமைதிப் படையை ஒருங்கிணைக்க ஆலோசகர்

## நியமித்தது கொழும்பு

கொழும்பு, ஒக்.18
ஐ.நாவில் இலங்கையின் அமைதி காப்பு முயற்சிகளை ஒருக்கிணைக்கவே, நியூயோர்க்கில் உள்ள, ஐ.நாவுக்கான இலங்கைத் தூதரகத்தில் புதிதாக இராணுவ ஆலோசகர் பதவியொன்றுஉருவாக்கப்பட்டுள்ளதாகக்கொழும்புசெய்திகள் தெரிவிக்கின்றன.
நியூயோர்க்கில் உள்ள ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகத்தில் புதிதாக இராணுவ ஆலோசகர் என்ற பதவி உருவாக்கப்பட்டு அந்தப் பதவிக்கு, இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் உபய மெதவல நியமிக்கப்பட்டுள்ளார்.
மேஜர் ஜெனரல் உபய மெதவல இந்தப் பதவியை அடுத்த சில நாள்களில் ஏற்றுக்கொள்வார் என்று எதிர் பார்க்கப்படுகிறது.ஐ.நாவுக்கான தூதரகத்தில் இராணுவ ஆலோசகர் பதவி புதிதாக உருவாக்கப்பட்டமை தொடர்பாக கேள்விகள் எழுந்துள்ளன.
இந்த நிலையில், இது குறித்து, வெளிவிவகார அமைச்சின் பதில் ஊடகப் பணிப்பாளர் சத்யா ரொட்ரிக்கோ கருத்து தெரிவிக்கையில்,
இதன்படி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்றதையடுத்தே இந்தப் புதிய பதவி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில், ஐ.நாவின் அமைதிகாப்பு முயற்சிகளில் இலங்கையின் பங்களிப்பைவலுப்படுத்தவேண்டும்என்றுஜனாதிபதிகோரிக்கை விடுத்திருந்தார்.
இதையடுத்தே நியூயோர்க்கில் உள்ள தூதரகத்தில் இராணுவ ஆலோசகர் பதவி உருவாக்கப்பட்டுள்ளது. இவர், ஐ.நாவில் இலங்கையின் அமைதிகாப்புமுயற்சிகளைஒருங்கிணைப்பார்.
இந்த இராணுவச் செயற்பாடுகளை ஒருங்கிணைக்க எமக்குத் தொழில்நுட்ப நிபுணர்கள் தேவையில்லை. மேஜர் ஜெனரல் மெதவலவினால் இந்தப் பங்களிப்பை திறமையாக மேற்கொள்ள முடியும்.
அவர், பல்வேறு நாடுகளின் இரா ணுவ அமைப்புகளை இலங்கை பாதுகாப்பு அமைச்சில் ஒருங்கிணைத்துப் பணியாற்றியவர் என்று குறிப்பிட்டார்.
இலங்கையின் முப்படைகளும் ஐ.நா அமைதிப் படையில் பணியாற்றி வருகின்றன. ஐ.நா அமைதிப் படையில் 5 ஆயிரம் இலங்கைப் படையினரை இணைத்துக் கொள்ள அரசு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத் தக்கது. (த-வ)

## சிங்கப்பூர் பிரதமருடன் ரணில் சந்தித்துப் பேச்சு

இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணமாகச் சிங்கப்பூர் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அந்த நாட்டின் பிரதமர் லீ சென் லூங் மற்றும் அமைச்சர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.
நேற்றுமுன்தினம்சிங்கப்பூர்பிரதமர் லீசென்லூங்கைசந்தித்தஇலங்கைப் பிரதமர், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை ஊக்குவிப்பது குறித்துப் பேச்சு நடத்தினார்.
இதேவேளை, சிங்கப்பூரின் பிரதிப் பிரதமரும், பொருளாதார மற்றும் சமூக கொள்கைக்கான இணைப்பு அமைச்சருமானதர்மன்சண்முகரத்தினம், உள்நாட்டு விவகார மற்றும் சட்ட அமைச்சரான சண்முகம், வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன், வர்த்தகைத்தொழில் அமைச்சர் ஈஸ்வரன், நிதி அமைச்சர் ஹெங் வீ கீற் உள்ளிட்டோருடனும்ரணில் விக்கிரமசிங்க பேச்சுக்களை நடத்தியுள்ளார்.
இலங்கையில் அதிகளவு பொருளாதார முதலீடுகளைச் செய்ய சிங்கப்பூரை ஊக்குவிக்கும் நோக்கிலேயேரணில் விக்கிரமசிங்க சிங்கப் பூருக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளார் எனப் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (த-வ)


### வீடு உடனடி விற்பனைக்கு

மானிப்பாய், கனகசபை றோட்டில் 3 பரப்பு 3.5 குழியில் அமைந்த, 7 அறைகள் கொண்ட மாடி வீடு உடனடியாக விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு - 077 199 1275 (64045)(11,15,16)


## மரண அறிவித்தல்கள்

### மகேந்திரன் அமிழ்தன்

(பழைய மாணவன்- பரியோவான் கல்லூரி-2010 இறுதி ஆண்டு மொறட்டுவ பல்கலைக்கழகம் பொறியியல் பீடம்)




யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரன் அமிழ்தன் 16.10.2015 வெள்ளிக்கிழமை அகால மரணம் அடைந்தார்
அன்னார் செல்லர் மகேந்திரன் (முன்னாள் விளையாட்டு த் துறை பொறுப்பாளர்- யாழ் மத்திய கல்லூரி) லதா(முன்னாள் ஆசிரியர் சுண்டுக்குளிமகளிர் கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி) தம்பதியரின் அன்பு மகனும் லவண்யா,ஜோய் காருண்யா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்
அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் .இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

30,பேர்ன்நாயகம்லேன்,
சுண்டுக்குளி.
(64099)(12.15.17)
தகவல்
குடும்பத்தினர்.

### ஏரம்பு கணபதிப்பிள்ளை


(அழகு)(இளைப்பாறிய கட்டுமான மேற்பார்வையாளர் (S.D.&.C.C)



மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பு கணபதிப்பிள்ளை (அழகு) 14.10.2015 புதன்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்பு - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் நாகரத்தினம்- அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சற்குண தேவியின் அன்புக் கணவரும் தமிழ்ச்செல்வன், ரமேஷ், றமணன், சசிதரன் , பிரசாத் ஆகியோரின் அன்புத் தந்தையும் கலைவாணி, ஜெயந்தி, கிருஷ்ணவேணி, லஜிதா, தர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் யாமினி,சாய் கண்ணன், சாயிசன், அருண், நவீன், அமுனா, அஷினி ,அஷ்வின், விபுஷனன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற தியாகராசா மற்றும் மனோன்மணி, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் தங்கராசா, தவராசா, தியாகராசா, யோகராசா, கபிலன், சுசித்திரா, சுவேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,புத்தூர் சந்தி,
கொடிகாமம்.
(65495)(12.15.17)
தகவல்:
மனைவி,பிள்ளைகள்.

### திருமதி அக்கினஸ் (அன்னம்) மரியாம்பிள்ளை



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அக்கினஸ் (அன்னம்) மரியாம்பிள்ளை 13.10.2015 காலமாகிவிட்டார்
அன்னார் காலஞ்சென்றவர்களான றப்பியேல் பிள்ளை - மேரி யோசேப்பின் தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற வர்களான பஸ்ரி யாம்பிள்ளை எலிசபேத் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் மேரியோ சேப்பின் (நவம்), மதுரநாயகம் (கனடா), மரிய நாயகம் (கனடா) ஆகியோரின் பாசமிகுந்த தாயாரும் காலஞ் சென்றவர்களான றோசம்மா, மனு வல்பிள்ளை, திரேசம்மா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிங்கராசா, அந்தோனிப்பிள்ளை மற்றும் செல்லம்(கனடா) ஆகியோரின் மைத்துனியும் மேரியெசிந்தா(நவம்),வதனி ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற சக்கரமன்தாஸ் (இலங்கேந்திரன்) மற்றும் வினித்தா(கனடா), பிருந்தா (கனடா), அனுறீபன்(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பற்றிக், யூட், யூலியானா,கிசான் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் நாளை (19.10.2015) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புனித யுவானியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சிசேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

49/4 A,கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
(65495)(12.15.17)
தகவல்
மேரியோசேப்பின்(நவம்)
(மகன்)


### Water Proofing Work
### தற்காலம் மழைகாலம் நீர்க்கசிவைத் தடுப்போம்

தற்காலம் மழைகாலம் என்பதனால் தங்கள் வீடுகள், வியாபார ஸ்தாபனங்களில் உள்ள சிமெந்திலான கூரைகள், சுவர்கள், நீர்த் தொட்டிகள் ஆகியவற்றில் ஏற்படும் நீர்க்கசிவை நிரந்தரமாக தடுப்பதற்கும் மற்றும் கம்பிகள் துருப்பிடிப்பதால் விழுந்துள்ள சிமெந்துப் படையை உத்தரவாதத்துடன் சீர் செய்து கொள்வதற்கும் நாடுங்கள்.
NORTH AND EAST ENGINEERING
No. 55, Stanley Road, Jaffna.
FINCO
தங்கள் வீடுகள், வியாபார ஸ்தாபனங்களுக்கு வர்ணப்பூச்சுப் பூசும் போது சுவர்களில் ஏற்பட்டுள்ள வெடிப்புக்களை நிரப்புவதற்கு பயன்படுத்தப்படும் உலகத்தரம் வாய்ந்த CrakSealer. எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
021 222 2363, 077 524 4177, 077 756 8686

### யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகிறது

ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (PVT) LTD
P. ஜெய்சங்கர்
கொழும்பில் கடந்த 25 வருடங்களாக, கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில் வாய்ப்புகள், வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ்பெற்ற சோதிடர்களால், தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ்க்கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகிறது.
தொடர்புகளுக்கு : 384 A, நாவலர் வீதி, (கைலாசபிள்ளையார் கோயில் சந்தி, நல்லூர்.)
தொலைபேசி : 021 221 7944
கொழும்பு முகவரி:
19, 1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி.
தொலைபேசி: 011 258 6180/ 011 258 6208

### 100% Scholarships!
### Study in Germany

Free.... இலவசம்....
State funded universities with 100% waiver on tuition fees!
More than 14,000 degree disciplines are offered!
Low cost of living with world's friendly people!
German "Senior Consultant" give you valuable counselling on 21th October, 2015 come and sit for an entrance exam and get benefited from the free consultation. Exam fee Rs. 1000/=
"Do not miss this opportunity in your life"
"Pay no tuition fees is guaranteed"
*Condition apply
Many courses with paid placements!
Please visit our office for more information
IG CAMPUS INTERNATIONAL GRADUATE CAMPUS
Tel : +94 112 690 350 Hot : +94 77 99 666 46
www.igcampus.edu.lk Info@igcampus.edu.lk
www.twitter.com/IG_Campus www.facebook.com/igcampus
# 51/1, D.S.Senanayake Mawatha, Borella, Colombo 08, Sri Lanka.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'மீன் நினைவுகள்' கவிதை நூல் வெளியீடு

கிளிநொச்சி, ஒக்.18

வள்ளுவர்புரம் செல்லமுத்து வெளியீட்டகம் வெளியீடு செய்யும், கிளிநொச்சி காவலூர் அகிலன் எழுதிய 'மீன் நினைவுகள்' கவிதை நூல் இன்று பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் தூயவன் விளையாட்டுக்கழக அருகாமையில் குடிமனைகளோடு இணைந்த பகுதியில் நடைபெறவுள்ளது. வவுனியா தமிழ் விருட்சம் செயலாளர் கவிஞர் மாணிக்கம் ஜெகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வெளியீட்டுரையை யாழ். இலக் கியக் குவியத் தலைவர் மருத் தவர் வேலனையூர் தாஸும், ஏற்புரையை நூலாசிரியர் காவலூர் அகிலனும் நிகழ்த்தவுள்ளதுடன் நூலுக்கான வாழ்த்துரையை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் வழங்கவுள்ளார். (ஐ–10)

## ஆண்டு விழா

கொழும்புத்துறை, ஒக்.18

கொழும்புத்துறை சென்றொசாறியன் சனசமூக நிலையத்தின் 45 ஆவது ஆண்டு விழா நேற்று ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து இன்று ஞாயிற்றுக்கிழமையும் ஆண்டு விழா இடம்பெறவுள்ளது.

நிலையத் தலைவர் எஸ்.ஜெயந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கிளி நொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும், கௌரவவிருந்தினர்களாக வடமாகாண சபைத் தவிசாளர் சி.வீ.கே. சிவஞானம், முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர் சொலமன் சூ சிறில், யாழ். மாநகர சபை ச.ச. நிலைய உத்தியோகத்தர் ச.லோகசிவம் ஆகியோர் கலந்துகொள்வர். (த–135)

## ஐரோப்பிய ஒன்றியத்திடம் இலங்கை மீனவர் பிரச்சினை பற்றி முறையிடாது

கொழும்பு, ஒக்.18

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறுவது தொடர்பாக, ஐரோப்பிய ஒன்றியத்துக்கு முறைப்பாடு செய்வதில்லை என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

இந்தியா, இலங்கையின் அயல் நாடு என்பதனால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். இந்திய ஆங்கில ஊடகமான இந்து பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல், ஐரோப்பிய ஒன்றியத்தினால் எமது நாட்டு மீன்களைக் கொள்வனவு செய்வதில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதால், அது தொடர்பான நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி வருகின்றோம்.

இலங்கையின் மீன்களை ஐரோப்பிய நாடுகளுக்கு மீண்டும் விநியோகம் செய்வதற்காக 57 நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதன்படி அதில் 36 நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன – என்றார். (த–வ)


American Swimming Coaches Association (ASCA) தரம்- 1 சான்றிதழ் பெற்ற Life Saving Association Of Srilanka (LSASL)

அங்கத்தவரான பயிற்றுவிப்பாளரினால் நீச்சல் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

| | |
|---|---|
| இடம் | : கிறீன் கிறாஸ் ஹோட்டல் |
| தொடக்க காலம் | : 22.10.2015 (விஜய தசமி அன்று) |
| பயிற்சிக்காலம் | : 6 மாதங்கள் |
| மாதாந்த கட்டணம் | : வயது வந்தவர்களுக்கு ரூ.3500, சிறுவர்களுக்கு ரூ.2750 |

முற்பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்.

077 780 3874

(c 18716) (14,15,16)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

**அழைப்பின் பேரில் வான் (Hiace) ஒன்றினை வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ தேவைக்காக தேவையான நேரங்களில் பயன்படுத்துவதற்கு (On call basis) ஆங்கில இலக்கப் பதிவுடைய கீழ்க்குறிப்பிட்ட வகையான வாகனத்துக்கு கிலோமீற்றர் அடிப்படையில் வாடகைக்கு வழங்கக்கூடிய வாகன உரிமையாளரிடமிருந்து விலைமனு கோரப்படுகின்றது.

**வான்- ஆசன எண்ணிக்கை 09- குளிரூட்டப்பட்டது**

மேற்குறிப்பிட்ட வான் சேவையை அவ்வாகனத்திற்கான சாரதி எரிபொருள், காப்புறுதி மற்றும் திருத்தவேலைகள் போன்றவற்றுடன் வழங்க வேண்டும். மேலும் வாகனத்தின் முதற்பதிவு ஆனது 2009ஆம் ஆண்டுக்கு பிற்பட்டதாகவும் வாகனத்தின் உற்பத்திக்காலம் 2007 ஆம் ஆண்டுக்கு பின்னரானதாகவும் இருக்கவேண்டும்

மேற்படி வாகனத்துக்குரிய விண்ணப்பப் படிவம் மற்றும் கூறுவிலை ஆவணங்களையும் மேலதிக விவரங்களையும் 26.10.2015 மதியம் 12.00 மணிவரை மீளளிப்புச் செய்யப்படாத வைப்புப்பணமாக ரூபா 500.00 பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்திசெய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்களை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **'' வான் ஒன்றை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி''** என அடையாளமிட்டு 2015.11.04 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் **தலைவர், கேள்விச் சபை, த.பெ.எண் 57, யாழ்ப்பாண பல்கலைக்கழகம், திருநெல்வேலி** என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். நேரடியாகச் சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த காலவரையறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடலாம்.

கேள்வி விண்ணப்பங்கள்2015.11.04 அன்று பி.ப 3.00 மணிக்கு பரிசீலிக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடமான சபா மண்டபத்திற்கு சமுகமளிக்கலாம். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**தலைவர்**
**கேள்விச்சபை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

(c 15932) (12.15.16)




## திருநெல்வேலி சிமாட் கிட்ஸ்
### ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

THIRUNELVELY SMART KIDS

**Play Group மற்றும் முன்பள்ளி மாணவர்களுக்கான அனுமதி:**

இன்றைய சிறார்களின் ஆளுமை வளர்ச்சியில் வழமையான அம்சங்களுடன் ஆங்கிலமும் கணினியும் அவசியமென உணரப்படுகின்றது. அதனை ஈடுசெய்யும் வகையில் எமது 'சிமாட் கிட்ஸின்' கலைத் திட்டம் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. இலாப நோக்கமின்றி ஆரம்பிக்கப்பட்டுள்ள திருநெல்வேலி 'சிமாட் கிட்ஸ்' முன்பள்ளியில் உங்கள் குழந்தைகளுக்கு அனுமதியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் அவர்களுக்கு நவீன யுக்திகளுடன் தரமான ஆசிரியர் குழாமால் சிறந்த கல்வியை வழங்க முடியும். 15 மாணவர்களுக்கு இரு ஆசிரியர்கள் (பொது மற்றும் ஆங்கிலம்) என்ற வகையில் செயற்படுத்தப் படுகின்றது.

புற நிகழ்ச்சிகளாக மாணவரின் வளர்ச்சி கருதி விளையாட்டு விழா, வருட இறுதி கலைவிழா, நவராத்திரி விழா, Jolly Evening, சுற்றுலா போன்றவை செயற்படுத்தப்படுகின்றது.



மழலைகளின் திறனை மேம்படுத்த CALSDA ஆங்கில நெறி, CHESS மற் றும் Art வகுப்புகள் இடம்பெறுகின்றன.

மாதாந்தம் பெற்றோர்கள், ஆசிரியர்கள் சிறார்களுக்கிடையே உறவை மேம்படுத்தும் நோக்குடன் PARENTS' CIRCLE அமைக்கப்பட்டு செயற் படுத்தப்படுகின்றது.

அனுமதி பெற விரும்புவோர் 31.10.2015 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

**வித்தியாரம்பம் விஜயதசமியன்று**
**22.10.2015 வியாழக்கிழமை**
**மு.ப. 9.00 மணி**

| | |
|---|---|
| அ.பஞ்சலிங்கம் | ப.பாலமுகுந்தன் |
| (முன்னாள் அதிபர்-யா/இந்துக் கல்லூரி) | [illegible] |
| தலைவர். | நிறைவேற்று இயக்குநர் |
| (64095)(10.15.17) | T.P: 021 205 2262 |



## உடனடி வேலை வாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கிவரும் பிரபல இரும்பு உருக்கு உற்பத்திக் கம்பனியில் இயந்திர இயக்குநர், இயந்திர இயக்குநர் பயிற்சியாளர் பதவிக்கு விளைத்திறனான ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எதிர்பார்க்கப்படும் தகைமைகள்:-

- க.பொ.த.சாதாரணதரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- நேரமுகாமைத்துவத்துடன் நன்னடத்தை உடையவராகவும் காணப்பட வேண்டும்.
- குறித்த துறையில் குறைந்தது 6 மாத முன்னனுபவம் விரும்பத்தக்கது.

தகுதியானவர்கள் 27/10/2015 அன்று காலை 9 மணிமுதல் 12 மணிவரை இடம்பெறும் நேர்முகத் தேர்வுக்கு உரிய ஆவணத்துடன் சமுகம் தரவும்.

மேலதிக தகவல்களுக்கு கீழுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் : 021 492 5815

(C/15947) (11.15.16.17)



## கட்டைக்காடு குழந்தையேசு ஆலயத் திருப்பு விழா



காலம்
19.10.2015

நேரம்
மு.ப.10 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இ.மத்தியாஸ்



## வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை
### வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் - 2016

சபையானது 2016 ஆம் ஆண்டுக்கான கீழ்க் குறிக்கப்பட்டுள்ள பொருள்கள் சேவைகளை வழங்குவதற்குத் தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**01. பொருள்கள்**

1) காகிதாதிகள் பொருள்கள் எழுது பொருள்கள்
2) அலுவலக உபகரணங்கள்
3) நூலகங்களுக்கான நூல்கள்
4) துணிவகைகள்
5) கட்டடப் பொருள்கள் (சிமெந்து, ஓடுகள், கம்பி வகைகள், கொங்கிறீட் தூண்கள், சிமெந்துக் கற்கள்
6) கற்கள், மணல்,கிரவல்
7) தீந்தைகள் வகைகள் (Paints) மற்றும் நிறந்தீட்டும் பொருள்கள்
8) நீர்வழங்கும் குழாய்கள், கியூம் பைப்புகள் (Hume Pipes) மற்றும் ஏனைய பொருள்கள்.
9) வாகன உதிரிப்பாகங்கள் துணைப் பொருள்கள்
10) மின் வழங்கும் பொருள்கள், மின்பாவனைப் பொருள்கள்.
11) எரிபொருள், உராய்வு நீக்கிகள்
12) இரும்புப் பொருள்கள்
13) தீராந்திகள், பலகைகள்
14) பனைமரங்கள், சலாகைகள்
15) வாகனங்களுக்கான டயர், ரியூப் மற்றும் மின்கலங்கள்.
16) கணினி, பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்.
17) சுத்திகரிப்புப் பொருள்கள், கிருமிநாசினிகள்.
18) பாதணிகள், தோற்பொருள்கள்.
19) அலங்காரப் பொருள்கள்
20) இலத்திரனியல் பொருள்கள்

**02. சேவைகள்**

1) அச்சிடுதல், புத்தகங்கள் கட்டுதல்.
2) மோட்டார் வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள்
3) ஒட்டுவேலைகள், உலோகவேலைகள்.
4) மின்சாதனங்கள் திருத்தம், மீளமின்வலுவூட்டல் (Battery Charge)
5) இலத்திரனியல் சாதனங்கள்
6) வாகனங்கள் ரியூப் ஒட்டுதல்
7) கோலவுடை, சீருடை தைத்தல்.
8) கணினி பிரதியாக்கம் இயந்திரம் திருத்துதல், சுத்திகரிப்பு (Service)
9) இறப்பர் முத்திரை தயாரித்தல்.

**03. ஒப்பந்த வேலைகள் (ICTAD) பதிவு உள்ளவர்கள் மட்டும்**

1) கட்டட நிர்மாண வேலைகள்
2) கிணறு அமைத்தல்
3) வீதி நிர்மாணம், திருத்த வேலைகள்

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக் கட்டணமாக ரூபா 1130(வரிகள் உட்பட) செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் -2016 எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் செயலாளர், தலைமைக் காரியாலயம் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரிய குளவீதி, நெளுக்குளம், வவுனியா என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் 20.12.2015 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். மேலதிக விவரங்களுக்கு 024 222 5737 அல்லது 024 2050 067எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, | சுகந்தி கிஷோர், |
| வவுனியா | செயலாளர் |
| (சி/15938)(11,15,16) | வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரருட்திரு
யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை
யாழ். மாநிலத்துக்கு ஒரு மகுடம்




ஈழ நாட்டின் இதயத்தில் உங்கள் புகழ்கொடிபறக்கும் பொன்
நாளில் 13.10.2015 ஆயராக நியமனம் பெற்ற ஆண்டகையே
வண்டிசைத்து உளம் கவரும் பொழில் நிறைந்த வளமான இளவாலை புனித கென்றியரசர்
கல்லூரி வடமாநிலக் கல்விச் சங்கிலியில் ஒரு புத்தகம்
இந்தக் கல்லூரியில் கால் நூற்றாண்டு காலம் அதிபராக பணி செய்து ஒரு இளவரசர்
போல் மதிக்கப் பெற்றவரே கல்லூரியையும் அன்னம்மாள் ஆலயத்தையும் கண்ணின்
மணிகளாகக் காத்து வந்து எம்மையெல்லாம் பரிவோடு கற்பித்த ஆசானே - நீர்
பணிசெய்ய என்றே வெள்ளை அங்கியை அணிந்து புன்னகை பூத்த முகத்துடன் சேவை என்ற
சிலுவையை மௌனத்தோடு சுமந்து மண்டலத்துத் தமிழர்கள் வாழ்த்தும் வேளை ஆயராகக்
கோலம் கொண்ட ஆண்டகையே
மகிழ்வோடு நாம் சேர்ந்து இறை ஆசீர் வேண்டி
வாழ்த்துகின்றோம்.

புனித கென்றியரசர் பழைய மாணவர் லிமிட்டட் லண்டன்
HENRICIAN UK LTD
SECRETARY: JOE PHILIPPS.
(0044 7968 150939



**காணி விற்பனைக்கு**

புலோலி கிழக்கு மருதங்கேணி வீதியில் பல்லப்பை வைரவர் கோயிலடியில் பரப்பு 5 குளி 11.5 குடக்கைப் புலம் எனும் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:
071 263 8729,021 321 4551
C/15935)(11,15,16)

**இணையத்தள வடிவமைப்பு**

பாடசாலைகள், கிராமங்கள், ஆலயங்கள் மற்றும் ஏனைய தேவைகளுக் கான இணையத்தளங்களை சிறந்த தரத்துடன் 7000 ரூபா முதல் வடிவமைத்துக் கொள்ள தொடர்பு கொள்ளுங் கள்.
T.P: 077 033 3663
(64074)



# ஜீவக வாத தைலம்®
Jeewaka Vãta Thailaya



முதுகு வலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை பிரளுதல், முழங்கால் வலியும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை கால் விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உளுக்கு, வீக்கம், ஊமை உளுக்கு, அரிப்பு, எரிவு, நரம்பு சார்ந்த வலி, பாரிச வாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல், ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரத்தை வழங்கும். வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம், காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.



Siva Narumanab Poonga - Jaffna - 0212222567
Kanesamoorthy & Sons - Vavuniya - 0242222414
Rasiah Medical - Vavuniya - 0242224819
Son Medical - Trincomalee - 0262221057
Paranjothi Medical - Trincomalee - 0262222419
Ifham Ayurvedic Osu Sala - Samanthurei - 0672260615
Royal Plus Pharmacy - Baticaloa - 0770754119
Kabeer Ayurvedic Osu Sala - Kalmunei - 0777704448
SaamSaan Ayurvedic Osu Sala - Kalmunei - 0774667111
Family Pharmacy - Kaththankudi - 0774004678
Jesmin Ayurvedic Osu Sala - Kaththankudi - 0774460113
Shakthi Super Market -Manna - 0232222192
Swarna Medical - Manna - 0232251127/0715125956
Bizar Medical - Maruthamunai - 0672221590/0776667657
Jumaira Ayurvedic Drugs Shop - Batticaloa - 0779909963/0774949217

**Available on : Cargills Food City, Arpico, Laugfs & Island wide Ayurvedic shop & Pharmacy**

| | |
|---|---|
| 25ml | Rs. 150.00 |
| 50ml | Rs. 280.00 |
| 100ml | Rs. 450.00 |

Manufactured & Marketed by
Jeewaka Herbal Products(Pvt)Ltd
Contact: 071-2271526



LG | SMARTPHONES




0%
வட்டியின்றிய
கொடுப்பனவு
திட்டங்கள் அபான்ஸிடமிருந்து மட்டுமே






*நிபந்தனைகளுக்குட்பட்டது
* ஒரு வருட LG ஸ்மார்ட் உத்தரவாதம் Available at Abans Showrooms Islandwide Like us on / LG mobile - Abans Abans



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர்

# கருவுக்கோர் உணவு

## கர்ப்பகால உணவுப் பழக்கம்



எப்போதும் பாரம்பரிய பழக்கங்களுக்கும், புதிய மருத்துவ அறிவுரைகளுக்கும் இடையில் ஒரு கண்ணுக்குத் தெரியாத இழுபறி இருந்து கொண்டே இருக்கும். இது கர்ப்பிணித் தாய்மாருக்கும் அவர்களின் உணவு பற்றிய பல கேள்விகளுக்கும் பொருந்தும். ஒரு பெண் தாயாக மாறத் தொடங்கியவுடன் பலரும் 'இதைச் சாப்பிடாதே, அதைச் சாப்பிடதே' என்று அறிவுரை கூறத் தொடங்கி விடுவார்கள். உண்மையில் அந்தப் புதிதாகத் தாயாகப் போகும் பெண்தான் பாவம். மேலும், கிடைக்கும் சில அறிவுரைகளையும் வாசித்து அவளும் குழம்பி விடுவாள். இவ்வாறான சந்தேகங்களைத் தீர்ப்பதற்குச் சற்று முயற்சிப்போம்.

**எவ்வகையான உணவுகளை உண்ணலாம்?**

1. குறுகிய இடைவெளிகளில் சிறிய அளவில் இலகுவில் சமிபாடடையக் கூடிய உணவுகளை உண்ண வேண்டும்.

2. போசாக்குள்ள உணவுகளே ஓருடல் ஈருயிர் ஆக இருக்கும் கர்ப்பிணித் தாய்மாருக்கு உகந்ததாகும்.

3. சம போசாக்குள்ள உணவே எப்போதும் சிறந்தது. இது கருவுற்ற காலத்துக்கும் பொருந்தும்.

4. இதற்கு முன்னர் ஏதாவது உணவுகள், பழங்கள், விலங்கு உணவுகள் என்பன ஒத்துக்கொள்ளாமல் இருந்திருப்பின், அவற்றைகர்ப்பகாலத்தில்கட்டாயம்தவிர்க்கவும். (உதாரணம்: கணவாய், இறால், தக்காளி)

5. இதைத் தவிர வேறு சில உணவுகளைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும். (உதாரணம் : விற்றமின் 'ஏ' நிறைந்த ஈரல்)

6. அதேவேளை, காய்ப்பருவத்திலுள்ள பப்பாசி, அன்னாசி போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். நன்கு கனிந்த பப்பாசி, அன்னாசி போன்றவற்றைச் சாப்பிடலாம். இவற்றால் பாதிப்பு இல்லை என விலங்குகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

7. சிலவேளைகளில் கர்ப்ப காலத்தில் நீரிழிவு நோய் இருக்குமாயின், அதற்குரிய முறையில் சாப்பிட வேண்டும். அதி கூடிய இனிப்பு, மாச்சத்து நிறைந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும். இல்லாவிடில் இந்த வகை உணவுகளின் விளைவாக ஏற்படும் அதிகூடிய குளுக்கோசினால் கருவிலுள்ள சிசு பாதிக்கப்படும். அளவான மாச்சத்து உள்ள உணவுகளை மருத்துவ ஆலோசனைப்படி சாப்பிடலாம்.

8. ஆரம்ப மூன்று மாதங்களும் சற்று வாந்தி, வயிற்றுப் பிரட்டல் கூடிய காலப்பகுதியாகும். இது வழமையாக ஏற்படும் நிகழ்வு ஆகும். உரிய முறையில் மருத்துவ ஆலோசனை மற்றும் சில மருந்துகளின் மூலம் இந்தப் பிரச்சினையைச் சமாளிக்கலாம்.

9. போசாக்கான உணவை உண்பதால் சுகதேகியான தாயும் சுகதாகியாக, பிள்ளையும் உருவாகலாம். நாம் வழமையாக உண்ணும் உணவே சிறந்த மருந்தாகும். மேலதிகமாகக் கர்ப்பகாலத்தில் சிலவகை விட்டமின்கள் மற்றும் கனியுப்புக்களை எடுத்துக் கொள்ள வேண்டும். (Folic Acid, Calcium)

10. கூடுதலாக பழங்கள் (வாழைப்பழம்), காய்கறிகள் மற்றும் கீரை வகைகளை உணவில் சேர்ப்பதால் உணவு இலகுவில் சமிபாடு அடையும். மலச்சிக்கல் ஏற்படும் வாய்ப்பு இருக்காது.

11. எமது பிரதேசத்தில் அதிகளவில் காணப்படும் இரத்தச் சோகைக் குறைபாடும், உணவில் கீரைகளைச் சேர்ப் பதால் குறையும்.

12. முருங்கையிலை எமது பகுதியில் கிடைக்கும் மலிவான கிருமிநாசினித் தொற்று இல்லாத, இரும்புச் சத்து உள்ள கீரை ஆகும். இந்த முருங்கையிலையை உணவில் சேர்ப்பதைப் பற்றி சுகாதார ஆராய்ச்சி நிறுவனம் (NRIdsrilanka) தற்போது ஆராய்ச்சி செய்து வருகிறது.

13. இவற்றுடன், மேலதிகமாக இரும்புச் சத்து குளிகைகளை வைத்திய ஆலோசனைப்படி தவறாது எடுக்க வேண்டும்.

**வேறு என்ன தெரிந்திருக்க வேண்டும்?**

1. கர்ப்பகாலம் உடல் நிறையைக் கூட்டுவதற்கான காலம் அல்ல. அதேபோல் குறைப்பதற்கான காலமும் அல்ல. உடல் நிறையைக் கட்டுப்படுத்துவது கர்ப்பம் தங்குவதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய ஒரு செயலாகும்.

2. அதிகளவான நீரைப் பருகுதல் ஆரோக்கியமான ஒரு பழக்கம். கர்ப்ப காலத்தில் அதிக நீரைப் பருகுவதால் சிறுநீர்க் கிருமித் தொற்று நோய்கள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். வெப்ப காலத்தில் ஏற்படும் நீர் இழப்பையும் தடுக்கலாம்.

3. பச்சைக் காய்கறிகளை உண்ணுதல் எப்போதும் தவிர்க்கப்பட வேண்டும். உப்பு நீரில் நன்றாகக் கழுவி உண்ணலாம். அல்லது கரட் போன்றவற்றை நன்கு தோல் சீவி உண்ணலாம்.

4. அதேவேளை சுத்தமற்ற அல்லது வீதி ஓரங்களில் விற்கப்படும் பாதுகாப்பற்ற உணவுகளைத் தவிர்க்க வேண்டும். அதேமாதிரி கடலுணவுகளை நன்றாகச் சமைத்து உண்ண வேண்டும்.

5. மாச்சத்து நிரம்பிய உணவுகளை அதிகளவில் எடுக்க வேண்டாம்.

6. நிறையுணவாக, அனைத்துச் சத்துக்களும் நிறைந்த உணவே எப்போதும் சிறந்தது.

அதுவே தாய்க்கும் சேய்க்கும் சிறப்பானது.

மருத்துவர் கந்தையா குருபரன்
பெண் நோயியல் மகப்பேற்றியல் நிபுணர்
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ்.மருத்துவ பீடம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மறைமாவட்டத்தின் 8ஆவது ஆயராக

## யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை



அருட்திரு.ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர்
– யாழ்.பல்கலைக்கழகம்



யாழ். மறைமாவட்டத்தின் 8ஆவது ஆயர் மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் பணி ஏற்பு எதிர்வரும் நவம்பர் மாதம் 28ஆம் திகதி நடைபெறுவதை யொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

யாழ்.மறைமாவட்டத்தின் 8ஆவது ஆயராக மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை நியமிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் புலம் பெயர்ந்து உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் அனைவருக்கும் பேருவகை தரும் ஒரு செய்தியாகும்.

யாழ்.மறைமாவட்ட ஆயராக 1992ஆம் ஆண்டு முதல் 2015 வரை 23 ஆண்டுகள் பணியாற்றிய மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை திருச்சபைச் சட்டப்படி தனது 75வது வயதில் 2013ஆம் ஆண்டு தமது பணி ஓய்வு விண்ணப்பத்தை உரோமாபுரிக்கு அனுப்பி – அது பிரான்சீஸ் பாப்பரசரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில், யாழ்.மறை மாவட்டத்தின் புதிய ஆயராக அருட்கலாநிதி மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளாருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. உயர்ந்த உருவம் – கம்பீர நடை – சிரித்த முகம் – கனிவான பார்வை – அன்பான பேச்சு – கடமையில் கவனம் – சிறந்த நிர்வாகம் – தூர நோக்கு – துணிவான செயல்முறை – அனைவரையும் ஆட்கொள்ளும் சுபாவம் எனப் பன்முக ஆளுமை கொண்ட ஒருவரான மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையிடம் யாழ்.மறைமாவட்டம் மட்டுமல்ல இலங்கை வாழ் தமிழ் மக்களும் புலம் பெயர்ந்து உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களும் நிறையவே எதிர்பார்க்கின்றனர்.

மூன்று தசாப்த கால கொடிய போர் முடிந்து – நிலமைகள் சற்றுச் சாதகமாகி – நல்லெண்ண அரசொன்று உருவாகி – இனவாதம் சற்று குறைந்து – அமைதியும் புரிந்துணர்வும் ஓரளவு ஏற்பட்டு – தமிழ் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடும் நிலையில், இதுபோன்ற பன்முக ஆளுமை கொண்ட ஒருவரது பணி காலத்தின் தேவையும் கட்டாயமும் ஆகும். தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல யாழ் மறை மாவட்டத்துக்கும் இவரது பணி தேவையானதாகவே இருக்கிறது. யாழ்.மறைமாவட்ட குருக்கள் – துறவிகள் – இறைமக்கள் அனைவரும் ஒரு புதிய ஆற்றுகைக்கும் – வழிப்படுத்துதலுக்கும் – நெறிப்படுத்துதலுக்கும் உட்படவேண்டிய ஒரு தேவையிலேயே இருக்கிறார்கள்.

ஆயர்ப்பணி பெருமையையும் பெரும் புகழையும் பெற்றுத் தருகின்ற ஒரு பணியாகப் பொதுவாகப் பார்க்கப்படுகின்றபோது அங்கே பார்க்கப்படாத ஒரு பகுதியும் உண்டு. வெண்ணிற ஆடையில் சமுதாயத்தில் மதிப்போடும் மரியாதையோடும் வலம் வரும் இவர்கள் தங்களது மறைமாவட்டத்தின் எல்லாப் பிரச்சினைகளையும் தம்முடையதாக்கி – எல்லாப்பிரச்சினைகளுக்கும் தமது மண்டையைப் போட்டுடைத்து – எல்லோர் துன்பங்களையும் தமது துன்பமாக்கி – எல்லோர் குற்றங்களையும் தாமே செய்தவர் போலாகி – எல்லோர் குற்றச்சாட்டுக்களையும் தாமே தாங்கிக் கொண்டு – எல்லோர் பேச்சுக்களையும் தாமே கேட்டுக் கொண்டு – எல்லாப் பொறுப்புக் களையும் கூட்டாக ஏற்றுக்கொண்டு – எல்லோருக்கும் எல்லாமானேன் (1கொரிந்தியர் 9:22) – உரோமம் கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறி போன்று (எசாயா 53:7) ஆகிவிடுகின்றனர். இதுவே பார்க்கப்படாத அந்தப் பக்கமாகும். இது போன்ற நேரங்களில் இறுதியில் இவர்களும் மனி தர்களே என்று நன்கு தெரிந்த அந்த அடிப்படை உண்மையை பலர் மறந்தே போய் விடுகின்றனர்.

வேதாகமத்தில் இறைவாக்கினர் ஏரேமியாவின் அழைப்பின்போது தெரிவிக்கப்பட்ட வார்த்தைகளைத் தவிர வேறு மிகப் பொருத்தமான வார்த் தைகளை மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் பணி ஏற்பின் போது தெரிவிக்க முடியாது.

"தாய்வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன். நீ பிறக்குமுன்பே உன்னை திருநிலைப்படுத்தினேன். மக்களினங்களுக்கு இறைவாக்கினராக உன்னை ஏற்படுத்தினேன். யாரிடமெல்லாம் உன்னை அனுப்புகிறேனோ, அவர்களிடம் செல் – எவற்றை எல்லாம் சொல்லக் கட்டளை இடுகிறேனோ அவற்றைச்சொல் – அவர்கள்முன் அஞ்சாதே. ஏனெனில் உன்னை விடுவிக்க நான் உன்னோடு இருக்கிறேன்" என்கிறார் ஆண்டவர். ஆண்டவர் தம் கையை நீட்டி என் வாயைத் தொட்டு என்னிடம் கூறியது இதோ பார் என் சொற்களை உன் வாயில் வைத்துள்ளேன். பிடுங்கவும் தகர்க்கவும் – அழிக்கவும் கவிழ்க்கவும் – கட்டவும் நடவும் – இன்று நான் உன்னை மக்களினங்கள் மேலும் அரசுகள் மேலும் பொறுப்பாளனாக ஏற்படுத்தியுள்ளேன். (ஏரேமியா 1:5–10)

அருட்கலாநிதி மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளார் 2007ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு யாழ்.ஆயர் நியமனத்தைப் பெறும் வரை 8 ஆண்டுகள் யாழ்.மறைமாவட்டத்தின் குருமுதல்வராகப் பணியாற்றியவர். 2008 – 2015 காலப் பகுதியில் குருமுதல்வர் பணியோடு கத்தோலிக்க அச்சக அதிபராகவும் பணியாற்றியுள்ளார்.

குருத்துவப்பணியில் 40 ஆண்டுகளை 2014ஆம் ஆண்டு நிறைவு செய்துள்ள அருட்கலாநிதி மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளார், தனது பணிக்காலத்தின் 31 ஆண்டுகளை கல்விப்பணியிலே – குறிப்பாக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும், புனித பத்திரிசியார் கல்லூரியிலும் – ஆற்றி 2001ஆம் ஆண்டு கல்விப்பணியில் 25 ஆண்டுகளை நிறைவு செய்தவர்.

1976ஆம் ஆண்டு முதல் 1989ஆம் ஆண்டு வரை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் உப அதிபராகவும் 1989 முதல் 2002 ஆம் ஆண்டு வரை அதன் அதிபராகவும், பணியாற்றிய இவர், அரச பாடசாலையில் இருந்து தனியார் பாடசாலைக்கு பணிமாற்றம் பெற்று 2002 முதல் 2007 வரை புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றியவர்.

இங்கிலாந்தில் 1986 ஆண்டு முதல் 1988 வரை கலாநிதிப் பட்டத்தையும், 1979 ஆண்டு முதல் 1980 வரை முதுகலைமாணிப்பட்டத்தையும் இங்கிலாந்திலேயே பெற்ற இவர், 1991 ஆம் ஆண்டு இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு I தரத்தைப்பெற்று 1990–1994 ஆண்டு காலப்பகுதியில் இளவாலையில் 12 அரசபாடசாலைகளின் கொத்தணி அதிபராகப் பணியாற்றியவர்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராக 1998 ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை பணியாற்றிய இவர் 1982 முதல் 1984 வரை யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறையில் விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். 2003ஆம் ஆண்டு முதல் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒழுங்காற்று சபைத் தலைவராகவும் – 2002 ஆம் ஆண்டு முதல் யாழ்.பல்கலைக்கழக கலாநிதி மற்றும் முதுகலைமாணிப் பட்ட மதிப்பீட்டாளராகவும் பரீட்சையாளராகவும் இன்றுவரை பணியாற்றி வருகிறார். கோப்பாய் கல்வியியல் கல்லூரியின் ஆலோசனைசபை உறுப்பினராக 2003ஆம் ஆண்டு முதல் இன்று வரை பணியாற்றி வருகிறார்.

1994ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு வரை இளவாலை மறைக்கோட்டத்தின் 12 பங்குகளின் முதல்வராகப் பணியாற்றிய இவர் அதே காலப்பகுதியில் யாழ்.மறை மாவட்ட ஆயரின்பேரவை அங்கத்தவராகப் பணியாற்றி பின்னர் அதே பணியை 2007ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை ஆற்றியவர்.

யாழ்.மறைமாவட்ட கல்வி ஆணைக்குழுவின் தலைவராக 1992 – 2002 ஆண்டு காலப்பகுதியில் பணியாற்றிய இவர் 1992 முதல் 2006 வரை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி மெய்யியற்றுறையில் கல்வியியல் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். யாழ் மறைமாவட்ட கிறிஸ்தவ சமயங்களுக்கிடையிலான ஒன்றிப்பு ஆணைக்குழுவின் தலைவராக 1981 – 1986 ஆண்டு காலப்பகுதியில் பணியாற்றிய இவர், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி இறையியற் துறையில் 1984 – 1986 ஆண்டு காலப்பகுதியில் கிறிஸ்தவ சமயங்களுக்கிடையிலான ஒன்றிப்பு விரிவுரையாளராக பணியாற்றியவர். 1999ஆம் ஆண்டு குருத்துவ வெள்ளி விழாவைக் கொண்டாடியவர்.

1974ஆம் ஆண்டு யாழ்.புனித அடைக்கல அன்னை (ஓ.எல்.ஆர்) ஆலயத்தில் மறைந்த யாழ்.ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் 1980 – 1985 ஆண்டு காலப்பகுதியில் மாரீசன்கூடல் பங்குத் தந்தையாகவும் 1976 – 1979 ஆண்டு காலப்பகுதியில் இளவாலை புனித அன்னாள் ஆலய உதவிப் பங்குத்தந்தையாகவும் பணியாற்றியவர். 1975 – 1976 ஆண்டு காலப்பகுதியில் உருத்திரபுரம் பணித்தளத்தில் பணியாற்றிய இவர் அன்று லோங் தொழில் நுட்ப நிறுவனம் என அழைக்கப்பட்ட மாணவர் இல்லத்தில் உதவி இயக்குநராகவும் பணியாற்றியவர். இவரது முதல் குருத்துவப்பணி நியமனம் 1974 – 1974 ஆண்டு காலப்பகுதியில் கிளிநொச்சி – வலைப்பாடு ஆகிய பங்குகளில் அமைந்திருந்தது.

இவர் தனது இறையியல் கல்வியை 1972 – 1974 ஆண்டு காலப்பகுதியில் இந்தியா புனே பாப்பிறை குருத்துவக் கல்லூரியில் கற்று இறையியல் இளங்கலைமாணிப் பட்டத்தை பெற்றவர். இவர் தனது மெய்யியல் கல்வியை 1966 – 1969 ஆண்டு காலப்பகுதியில் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியிலும், ஆரம்ப கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் மற்றும் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பெற்றவர். 1948ஆம் ஆண்டு ஊர்காவற்றுறை புனித மரியன்னை ஆலயப்பங்கில் பிறந்த அருட்கலாநிதி மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகையின் பணி ஏற்பு எதிர்வரும் நவம்பர் மாதம் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது.

17 பெப்ரவரி 1845 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம், அப்போஸ்தலிக்க ஆளுநர் பிரிவாக உருவாக்கப்பட்டது. 1946ஆம் ஆண்டு முதல் 1887ஆம் ஆண்டு வரை 4 அப்போஸ்தலிக்க ஆளுநர்கள் யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க ஆளுநர் பிரிவை ஆட்சி செய்துள்ளனர். அந்த 4 அப்போஸ்தலிக்க ஆளுநர்களும் முறையே ஆயர் ஒறாசியோ பெற்றக்கினி (1846 – 1857) – ஆயர் ஜே.ஸ் ரீபன் சமறியா அ.ம.தி (1857 – 1868) – ஆயர் கிறிஸ்ரோபர் பொன்ஜின் அ.ம.தி (1868 – 1883) ஆயர் அன்று மெலிசன் அ.ம.தி (1883–1887) ஆகியோராவர். அப்போஸ்தலிக்க ஆளுநர் பிரிவாக இருந்த யாழ்ப்பாணம் 1896 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 01 ஆம் திகதி முதல் மறைமாவட்டமாகத் தரமுயர்த்தப்பட்ட பின்னர் ஆயர் அன்ரு மெலிசன் அ.ம.தி ஆண்டகை தமது அப்போஸ்தலிக்க ஆளுநர் பணியைத் தொடர்ந்து யாழ்.மறைமாவட்டத்தின் முதல் ஆயராக (1887–1893) பணியாற்றியுள்ளார். யாழ்.மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக ஹென்றி யூலியன் அ.ம.தி (1893 – 1919) ஆண்டகையும், மூன்றாவது ஆயராக யூலியஸ் ஏ. புறோ அ.ம.தி (1920 – 1923) ஆண்டகையும், நான்காவது ஆயராக ஜே.ஏ கயமர் அ.ம.தி (1924 – 1950) ஆண்டகையும், ஐந்தாவது ஆயராகவும் முதல் சுதேச ஆயராகவும் ஜே.எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி (1950 – 1972) ஆண்டகையும் பணியாற்றியுள்ளனர். யாழ்.மறைமாவட்டத்தின் ஆறாவது ஆயராகவும் மறைமாவட்ட குருக்களில் இருந்து முதல் ஆயராகவும், பி.தியோகுப்பிள்ளை ஆண்டகையும் (1972 – 1992) ஏழாவது ஆயராக தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் (1992 – 2015) பணியாற்றினர்.

4 ஆயிரத்து 440 கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட யாழ்.மறைமாவட்டத்தில் ஏறக்குறைய 15 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 2 லட்சத்து 47 ஆயிரத்து 315 பேர் கத்தோலிக்கராவர். யாழ்.மறைமாவட்டத்தின் 59 பங்குகளில் 162 குருக்கள் பணியாற்றுகின்றனர். யாழ்.ஆயர் மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கு நிறைந்த அருள் – வழிகாட்டும் ஞானம் – நீடித்த ஆயுள் – நல்லசுகம் – நேர்மையான ஆட்சி – முழுமையான ஒத்துழைப்பு என்பன நிறையவே கிடைக்க இறையாசீர் வேண்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலச்செழுமை மிக்க உள்நாட்டுப் பால்

## தற்போது உங்களது விசுவாசத்தை வென்றுள்ள அங்கரிடமிருந்து கிடைக்கப்பெறுகின்றது

அறிமுகமாகின்றது




ரூ. 210/ 1L

இலங்கையில் நாம் எமது பயணத்தை 38 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்திருந்தோம். இதன் போது, இலங்கையர்களுக்கு உயர் தரம் வாய்ந்த பாற்போஷாக்கை பெற்றுக் கொடுப்பது எமது நோக்கமாக அமைந்திருந்தது. கடந்த காலங்களில் உங்கள் மாறுபடும் தேவைகள் காரணமாக, உங்களுக்கு உயர் தரம் வாய்ந்த பாலுற்பத்திகளை இலகுவில் பெற்றுக் கொடுக்கும் வகையில் எம்மை ஊக்குவித்திருந்தது. இந்த புத்தாக்கம் தொடர்பில் தொடர்ச்சியான செயன்முறையின் மூலமாக, தற்போது நீங்கள் அங்கர் திரவப் பாலை அனுபவிக்கலாம். சர்வதேச தரங்களுக்கமைய இலங்கையின் தூய பாலை கொண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

1996 இல், 200 பாற்பண்ணைகளுடன் ஆரம்பித்திருந்த எமது செயற்பாடுகள், இன்று, பரந்து ஆயிரக்கணக்கான பாற்பண்ணைக் குடும்பங்களுடன் உறவை மேம்படுத்திக் கொள்ள முடிந்துள்ளது. இந்த குடும்பங்கள் உயர் தரம் வாய்ந்த பாற் போஷாக்கை வழங்க தம்மை அர்ப்பணித்துள்ளன.

அங்கர் திரவப் பால் அறிமுகத்துடன், 10 மில்லியன் லீற்றர்க்கும் அதிகமான பால் உள்நாட்டு பாற்பண்ணையாளர்களிடமிருந்து வருடாந்தம் சேகரிக்கப்படவுள்ளது. இதற்காக மிகப்பெரிய பாற்பண்ணையாளர்கள் வலையமைப்பு, பால் சேகரிப்பு மற்றும் குளிர வைக்கும் நிலையங்கள் நாடு முழுவதும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு திரட்டப்படும் பால், நவீன வசதிகள் படைத்த தொழிற்சாலைக்கு கொண்டு வரப்பட்டு, சர்வதேச தரங்களுக்கமைய பதப்படுத்தப்படுகிறது.

எமது அங்கர் திரவப் பால் அல்ட்ரா-உயர் வெப்பநிலை (UHT) பதப்படுத்தல் முறைக்கு உட்படுத்தப்பட்டு, பின்னர் 1 லீற்றர் 'Tetra pack' களில் அடைக்கப்படுகின்றன. இந்த UHT முறை மூலமாக குளிர்சாதனப் பெட்டியில் வைக்காமல் பாலை நீண்ட காலம் பழுதடையாமல் பேணக்கூடிய தன்மையை பெற்றுக் கொடுக்கலாம். மேலும், எவ்வித செயற்கை சேர்மானங்களும் சேர்க்கப்படாததன் காரணமாக, நீங்கள் தூய இலங்கை பாலை பெறுவதை உறுதி செய்து கொள்ள முடியும்.

பின்னர் அங்கர் திரவப் பால், நாடு முழுவதும் காணப்படும் விற்பனையகங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இதன் மூலம் சௌகர்யமான பொதியில், சிறந்த போஷாக்கை உங்களால் அனுபவிக்க முடியும்.

உள்நாட்டு பாற்பண்ணைத்துறையை வலிமையடையச் செய்வதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம், அதாவது, பால் குளிரவைத்தல் மற்றும் சேகரிப்பு நிலையங்கள் நிறுவுதல் போன்றவற்றில் நாம் முதலீடுகளை மேற்கொள்கிறோம். இந்த நிலையங்கள் உள்நாட்டு பாற்பண்ணையாளர்களுடன் அறிவு பகிர்வு மையங்களாக இயங்கும். இலங்கையின் பாற்பண்ணைத்துறையின் வளர்ச்சிக்கு இந்த செயற்பாடுகள் பங்களிப்பு வழங்கும் வகையில் அமைந்திருக்கும்.

நீங்கள் அங்கர் திரவப் பாலை கொள்வனவு செய்யும் ஒவ்வொரு தடவையும், உள்நாட்டு பாற்பண்ணைத்துறைக்கு பங்களிப்பு வழங்குகின்றீர்கள். அதாவது, தரம் மற்றும் உற்பத்தியை மேம்படுத்த தம்மை அர்ப்பணித்துள்ள உள்நாட்டு பாற்பண்ணையாளர்களுக்கு வருமானமீட்டுவதற்கு நீங்கள் உங்கள் பங்களிப்பை வழங்குகின்றீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாவாந்துறை வடக்கு நித்திய ஒளி முன்பள்ளியின் சிறுவர் கண்காட்சியும் சிறுவர் சந்தையும் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்-கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், நித்திய ஒளி முன்பள்ளியின் ஸ்தாபகர் அ.தர்மராசா, கிராமசேவையாளர் அ.சர்வேஸ்வரன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.தயாபரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ-10)



வயாவிளான் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற உலக ஆசிரியர் தின விழாவில் ஆசிரியர்கள் கீதம் இசைப்பதைக் காணலாம். (ஜ)



உலக அஞ்சல்தினம் குடாநாட்டிலுள்ள தபாலகங்களில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதன் போது வல்வெட்டித்துறைத் தபாலகத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்ற மூன்று அலுவலர்கள் நினைவுப்பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ஜ-108)





சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையமும் அம்பாள் விளையாட்டுக் கழகமும் இணைந்து இரத்தான முகாம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தன. இதன் போது தெல்லிப்பழை ஆதார வைத் தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பதிகாரி வைத்திய அதிகாரி எஸ்.பார்த்திபன் தலைமையிலான குழுவினர் இரத்த சேகரிப்பு நடவடிக்கைகளை மேற் கொண்டனர். (ஜ-86)



நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய ஆசிரிய தின நிகழ்வுகளின் போது...





வட்டு- கிழக்கு தாவளை சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற முதியோர் சிறுவர் தின நிகழ்வில் வாழ்வாதாரம் அற்ற குடும்பத்தினருக்கு கனடாவில் வசிக்கும் த.பரமநாதனின், நிதியுதவியுடன் நுளம்பு வலைகளும் வழங்கி வைக்கப்பட்டன. (ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னார் மாவட்டத்தில் சுய உதவிக் குழுக்களுக்கான சிக்கன சேமிப்பு தினம் மன்னார் மாவட்ட நகரசபை மண்டபத்தில் சொண்ட் நிறுவனத்தினால் நடத்தப்பட்டது. நிறுவனப் பணிப்பாளர் ச.செந்துராசா. அமைச்சர் டெனீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்ட நிகழ்வின் காட்சிகள். (ஐ)









கிழக்கு மாகாண அம்பாறை மாவட்ட பாலர் பாடசாலை கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சிறுவர்தின நிகழ்வு அம்பாறை மாவட்ட பாலர் பாட சாலை கல்விப் பணிமனையின் செயல்திட்ட அதிகாரி மு.ஆ.சுபைர் தலைமையில் இடம்பெற்றது. கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி பிரதம விருந்தினராகவும். கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இராஜேஸ்வரன். கிழக்கு மாகாண பாலர் பாடசாலை கல்விப் பணிமனையின் தவிசாளர் பொன் செல்வநாயகம் உட்பட மாணவர்களும் கலந்து கொண்டனர். (ஐ)





வவுனியா கோமரசன்குளம் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் தின நிகழ்வுகள் அண்மையில் இடம் பெற்றபோது கௌரவிக்கப்பட்ட ஆசிரியர்களையும். மாணவரொருவர் ஆசிரியையொருவரைக் கௌரவிப்பதையும் காணலாம். (ஐ-421)



சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் ஹதீஜா முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அங்கு கற்கும் மாணவர்கள் அன்பளிப்புகளை வழங்கிக் கௌரவமளித்தனர். (ஐ)



யாழ். இலக்கியக் குவியத்தின் ஏற்பாட்டில் எழுத்தாளர் ராஜாஜி ராஜகோபாலனின் 'குதிரை இல்லாத ராஜகுமாரன்' சிறுகதைத் தொகுதி மற்றும் 'ஒரு வழிப் போக்கனின் வாக்கு மூலம்' கவிதைத் தொகுதி ஆகியவற்றுக்கான அறிமுகமும் விமர்சன அரங்கும் யாழ்.திருமறைக்கலாமன்ற அழகியற் கல்லூரியில் புலோலியூர் வேல்நந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது. (ஐ)





கற்சிலைமடு ஸ்ரீ சித்திவிநாயகர் வருடாந்த மகோற்சவத்தின்போது பக்தர்கள் வடம் பிடித்து தேர் இழுக்கும்போது....





வவுனியா செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் மாணவர் நாடாளுமன்றத்தால் கொண்டாடப்பட்ட ஆசிரியர் தின நிகழ்வுகள். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, தபால்பெட்டிச் சந்திக்கருகில் 1¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 977 3375

(11,15) (64063)

## மணமகள் தேவை

வடமராட்சி இந்து கௌரவ குடும்பம். வயது 45. தொழில்- விவசாயம். கிரக பாவம் 93, லக்கினத்தில் சூரியன், செவ்வாய், சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது. தொடர்பு: 077 615 7200 (64062)

## Join Us & Fulfill Your Aspirations !!!



We are a unique organization presently operating in Sri Lanka for over 18 years. We provide career opportunities to those who are self-motivated and hungry to make money and achieve goals in life. We know you are not experienced and only few companies want to take risks with you.

Our team of Managers are positive and driven towards achieving their goals. We are willing to take the challenge to train you and help you establish yourself in the Industry.

MARKETING EXECUTIVES (MALE/FEMALE)

CALLING ALL SCHOOL LEAVERS

### Requirements :

- Must have lots of energy and be a positive minded individual. If you are lazy then don't bother applying.
- Willing to learn the job and work hard towards achieving goals.
- Must be good in communication either in English or Tamil.
- Studied upto GCE A/L and passed the GCE O/L examination.
- Age preferably 18 and above but not more than 25 yrs.

### Benefits :

- You can earn over Rs.50,000/- per month.
- We will pay you a Basic Salary, Travelling Allowance and provide you cash incentives and commissions.
- You also have the opportunity to travel overseas through our Annual Overseas incentives.
- If you are one of top achievers, you will get an opportunity to participate at Our Annual Achievers Conference.
- You will be class room trained by our Senior Manager and subsequently trained on the job on a daily basis.
- If you possess leadership qualities and a high achiever, you will be absorbed to the Management Trainee position within 6 - 9 months of your employment.

*Call us or send your CV to schedule an interview immediately*

Jaffna 021 567 1130, 0773 566835 jaffnapioneerhouse@gmail.com

Address: Poineer House
No.100, 2nd Floor, Manipay Road,
Jaffna.

www.pioneerhouselearning.com/careers

## British Business College

Where Students Come First



**BBC பாடசாலைகளின் முத்தமிழ் விழாவிற்கு அன்புடன் அழைக்கின்றோம்**

இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்
நேரம் : காலை 8.00 மணி

பங்குபற்றும் பாடசாலைகள்
24ம் திகதி சனிக்கிழமை நல்லூர், மானிப்பாய் I, மானிப்பாய் II, நீர்வேலி
31ம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம், சுன்னாகம் I, சுன்னாகம் II, சங்கானை, சாவகச்சேரி, கோப்பாய், புத்தூர், நெல்லியடி.

## விஜயதசமி அன்று வித்தியாரம்பம்

BBC 13 வது வருடத்தில்

**பாலர் பாடசாலை பிரிவுகள்**

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2+ முதல் 3+ வரை | 3+ முதல் 4+ வரை | 4+ முதல் 5+ வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |

**கற்பித்தல் மொழி**
ஆங்கில மொழி மூலம்
தமிழ் கட்டாய பாடம்

**சிறார்களின் அபிவிருத்திக்கான செயற்பாடுகள்**
2+ முதல் 5+ குழந்தைகளின் அறிவுத்திறனை ஊக்குவிக்குமுகமாக எல்லாக் குழந்தைகளும் பின்வரும் கல்வி, விளையாட்டு சார் நிகழ்ச்சிகளில் பங்குபெறுவர்.

* Sports Meet * English Day Concert
* முத்தமிழ் விழா * Art & Craft Exhibition
* Carols * Pre School Graduation

**பாட விதானமும் கற்பித்தல் முறையும்**
NEW SYLLABUS
* Dr. Maria Montessori Method
* Canadian ECE Method
* German LKG, KG, UKG System

எமது கற்பித்தல் முறையும் பாட விதானமும் மேற் கூறப்பட்ட சர்வதேச முறைமைகளைச் சார்ந்து எமது சூழலிற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

**பாலர் பாடசாலையின் சாதனைகளும் மைல் கற்களும்**
* கடந்த 13 ஆண்டுகளாக எமது 12 வளாகங்களில் 8000 மாணவர்களுக்கு மேல் பயனடைந்துள்ளார்கள்.
* யாழ் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட 1வது ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலை
* யுத்த காலத்திலும் யாழ் சிறார்களுக்காக இயங்கிய ஒரேயொரு தனியார் பாடசாலை
* எமது பாடசாலைகளில் கல்வி பயின்ற 90% மாணவர்கள் Year 5 Scholarship பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

**பாலர் கல்வியை மேலும் மேம்படுத்தும் எமது விசேட செயற்பாடுகள்**
* Percussion Band, Meditation, Speech, Dance & Drama (In English & Tamil)
* குழந்தை- பெற்றோர்- ஆசிரியர் களிற்கிடையில் சிறந்த உறவையும் குழந்தையின் அறிவையும் வளர்ப்பதற்கு ஊக்குவிக்கும் மாதாந்தச் செயற்பாடுகள்.

**BBC யின் 12 பாலர் பாடசாலை வளாகங்கள்**

| யாழ்ப்பாணம் 1 | யாழ்ப்பாணம் 2 | கோப்பாய் |
|---|---|---|
| 64, கோயில் வீதி யாழ்ப்பாணம் | 625, K.K.S வீதி யாழ்ப்பாணம் | பருத்தித்துறை வீதி கோப்பாய் சந்தி |

| மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சுன்னாகம் 1 | சுன்னாகம் 2 | நீர்வேலி |
|---|---|---|---|---|
| 252, யாழ் வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய். | சங்கரப்பிள்ளை வீதி மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி | Dr. சபாரத்தினம் வீதி, சுன்னாகம். | இல. 142, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம் (NSB வங்கி முன்பாக) | 1வது வாய்க்கால், இராச வீதி, நீர்வேலி. |

| வடமராட்சி | சாவகச்சேரி | சங்கானை | புத்தூர் |
|---|---|---|---|
| பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி. | சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை | பிரதேச செயலகம் அருகாமை நிகர வைரவர் கோவிலடி | [illegible] |

British Business College — Where Students Come First

BRITISH BUSINESS COLLEGE 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 077 362 7055, 021 222 4060


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**சூசைப்பிள்ளை நோபேட் உதயகுமார் (SLPS-I)**
BA, P.G.Dip. in Edu, M.Ed(Hons)



தந்தையவர் வழிதனிலே
தனயன் நீரும் தடம் பதித்து
ஆசானாய் அறிவு புகட்டி
அதிபராய் பணி செய்து - இன்று
சங்கானைக் கோட்டக்கல்வி
பணிப்பாளர் எனும் உயர்வு பெற்றீர்
வாழ்த்துகின்றோம் உமை நாமே
வாழ்க எம் மண்ணின் மைந்தனே
பல உயர்வு மேலும் பெற்று
பல்லாண்டு நீர் வாழ்கவே

புனித யூதாததேயு ஆலயம்
இளவாலை

பங்குத்தந்தையும் பங்குமக்களும்


## SB Travels & Tours (Pvt) Ltd தேவை

கொழும்பில் இயங்கிவரும் பிரபல்யமான SB-Travels and Tours Pvt Ltd இற்கு புதிதாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள Branch air ticketing office இற்கு

♦ Reservation executor தேவை. Ticketing system (அனுபவமுள்ள) தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. ஆண் or பெண் தேவை.

அத்துடன் Abacus system நன்கு தெரிந்தவர்கள் Ticketing issuing நன்கு தெரிந்த

♦ Ticketing executive supervisior தேவை.

உங்களுடைய bio data வை புகைப்படத்துடன் எமது email இற்கு அனுப்பவும்.

Email - sbtravels 216@ yahoo.com
sbtravels 216@ gmail.com

Tel.No - 021 222 9555, 0766 911 080 / 81

## NORTHSHORE
COLLEGE OF BUSINESS AND TECHNOLOGY

* MEng/BEng (Hons) Civil Engineering
* MEng/BEng (Hons) Electrical & Electronic Engineering
* BSc (Hons) Software Engineering
* BSc (Hons) Business Administration

November Intake 2015/16



2015, அக்டோபர் மாதம் 30ம் திகதிக்கு [illegible] பதிவு செய்து [illegible] சலுகைகளை பெற்றுக்கொள்ளுங்கள். தொடர்புகளுக்கு 071 5 500 200

முழு பட்டப்படிப்பையும் இலங்கையில் [illegible] ஒரு பகுதியை [illegible]யிலும் மிகுதி பட்டப்படிப்பை இங்கிலாந்திலும் கற்றுக்கொள்ளலாம்.

UGC Recognized Degree Programmes

+94 715 500 200
+94 115 990 000

University of the West of England

NORTHSHORE

141 Church Road,
Colombo 15, Sri Lanka


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜெயசுந்தரி தனபதி



யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வவுனியா குட்செட் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயசுந்தரி தனபதி 16.10.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற எதிர்வீரசிங்கம்-சிவகாமசுந்தரி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம்-பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகளும், தனபதியின் அன்பு மனைவியும், தர்சினி, தனுயா, தாரணி, தபோதினி, நிகேதன் ஆகியோரின் அன்புத் தாயும், ஜெயவீரசிங்கம் (கனடா), ஜெயரட்ணசிங்கம், ஜெயராணி (லண்டன்), ஜெயகுமார், அமரர் ஜெயசூரியர், ஜெயகுமாரி (கனடா), ஜெய நேசன் (கனடா), ஜெயசங்கர் (லண்டன்), ஜெயாஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் குணநாயகி, திலகநாயகி, ஜீவலட்சுமி, அமரர் பரமநாயகம், நேசநாயகம், அமரர் சூரியகுமாரன், ரேவதி, கயிலைநாதன், துரைசிங்கம், ஜெயலிங்கம் (டென்மார்க்), போஜலிங்கம், கந்தகௌரி, அமரர் இந்திரகுமார், சந்திரகுமார் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும், சுதர்சன் (லண்டன்), தர்சன், செந்தூரான் ஆகியோரின் மாமியும் நிரோன், சாயிவர்ஸா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.10.2015) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.172/1, குட்செட் வீதி,
தோணிக்கல், வவுனியா.

தகவல்: குடும்பத்தினர்.
(C/15941) (10.17) 077 0733719

### இராசையா புஸ்பராஜா

(முன்னாள் கமத்தொழில் பெரும்பாக உத்தியோகத்தர் - முன்னாள் விசேட ஆணையாளர் , வீரமா பிடாரி அம்பாள் ஆலய ஆயுட்கால தர்மகர்த்தாசபைத் தலைவர்)



தோற்றம் 24.03.1927 — மறைவு 14.10.2015

ராஜகிரி, பொன்னையா வீதி ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடா (Scarbarrow) ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா புஸ்பராஜா 14.10.2015 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - சின்னத்தங்கச்சி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பையா - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும் ஜானகியின் (பாக்கியரத்தினம்) அன்புக் கணவரும் நளினி(பேபி), பவானி, ஷர்மினி, மனோராஜ், பாலகுமார், ராஜ்குமார், ஜுமானி ஆகியோரின் அன்புத் தந்தையும் ராஜ்குமார், ராஜகாரியர் காலஞ்சென்ற கதிர்காமநாயகன் மற்றும் மாலினி, பூமாதேவி,வசந்தி, குற்றால்நாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரியதர்ஷினி, சுரேஸ்குமார், பிரதீபன், பிரசாந்தன், அனோஜன், நிறோஜினி, மரீனா, அபிஷிந், விபிஷினி, கிஷோரி, வர்ஜினி, சரண்யா, தர்மினி ஆகியோரின் அன்புப்பேரனும் ஹேஷாவின் அன்புப் பூட்டனும் காலஞ்சென்றவர்களான பத்மராஜா, யோகராஜா மற்றும் புஸ்பராணி, பத்மராணி, மகாராஜா காலஞ்சென்ற நட ராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.10.2015) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ராஜகிரி,
பொன்னையா வீதி,
ஆனைக்கோட்டை.

(64080) (14.15.16)

தகவல்:
குடும்பத்தினர்.
021 221 3312

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய பழைய மாணவன்

**ஏரம்பு கணபதிப்பிள்ளை**

அவர்கள் 14.10.2015 அன்று இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல வேம்படி விநாயகரை வேண்டி அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை சமூகம்
மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி



## மரண அறிவித்தல்

### திருமதி சறோஜாதேவி சிறிதரன் (பாபு)



தோற்றம் 21.09.1963 — மறைவு 14.10.2015

சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜாதேவி சிறிதரன் 14.10.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் செல்லம்மா தம்பதியினரின் அன்புப்புதல்வியும் காலஞ்சென்ற கணேசரட்ணம் மற்றும் நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகளும் சிறிதரனின் பாசமிகு மனைவியும் கீர்த்திகாயினி(கனடா), பவிதா, தயந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருஸ்ணகுமாரின்(கனடா) அன்பு மாமியும் மதுசனின் (கனடா) அன்புப் பேர்த்தியும் சரஸ்வதி, சாவித்திரி (கனடா) காலஞ்சென்ற நாகரட்ணம்(வவுனியா) மற்றும் இராசதுரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.

(64106) (14.16.17)

தகவல்:
குடும்பத்தினர்.
021 300 6339

## உரை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 18

சமகாலக் கலை, கட்டடக் கலை மற்றும் வடி வமைப்புக்கான ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்தொடரின் 22 ஆவது நிகழ்வாக ஓவியமும் இறப்பும் எனும் தலைப்பிலான டுமித் குலசேரவின் உரையொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள சமகாலக் கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தில் இடம் பெற வுள்ளதாக ஆவணக் காப்பகத்தின் பொது முகாமையாளர் விமலாவேல்ஸ் தெரிவித் துள்ளார். (ஐ-ரி2)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக்.18

சபாரத்தினம் தங்கமா மயிலோனின் வணங் கற்பாக்கள் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு திரு நெல்வேலி பழங் கிணற்றடிப் பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முக தாஸும், ஜப்பான் கக்சுயின் பல்கலைக்கழகத்தின் முன்னாள் ஆய்வுப் பேராசிரியர் முனைவர் திருமதி மனோன் மணி சண் முக தாஸும்,சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ, வணிக பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் நிகழ்த்தவுள்ளதாகவும் நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் விழா ஏற் பாட் டுக் குழு அறிவித்துள்ளது.(ஐ-ரி6)

## அளுத்கமவில் படையினர் வெளியேறினர்

கொழும்பு, ஒக்.18

அளுத்கம பிரதேசத்தில் நிலை நிறுத்தப்பட் டிருந்த இராணுவத்தினர் முற்று முழுதாக வெளியேறியுள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பௌத்தர்களுக்கும்முஸ்லிம்களுக்கும் இடையில் இடம் பெற்ற மோதல்களைத் தொடர்ந்து இராணுவத்தினர் அளுத்கம பிரதேசத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

கடந்த 16 மாதங்களாகப் படையினர் அளுத்கம பிரதேசத்தில் நிலை நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கலவரத்தில் சேதமடைந்த வீடுகள் மற்றும் கட்டடங்களைப் புனரமைக்கும் பொறுப்பு படையினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

நீண்டகாலம்நிலைகொண்டிருந்த படையினர் அப்பகுதியை விட்டு வெளியேறுவதை முன்னிட்டுப் பிரதேச மக்களும் அளுத்கம அபி விருத்தி நிறுவனமும், விசேட பிரியாவிடை நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-வ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### திருமதி சிவயோகம் சற்குணநாதன்

(யோகக்கா)

மலர்வு 18.09.1944 — உதிர்வு 17.09.2015

அம்மா!

நீங்கள் எமைப்பிரிந்து
திங்கள் ஒன்று ஆகிவிட்டாலும்
உங்கள் அன்புருவான வதனமும்
கனிவான பேச்சும் அறிவுரைகளும்
எம்முயிருள்ளவரை எம்மோடு இருக்கும்.
விழியோரம் கண்ணீருடன்
பரிதவிக்கும் நெஞ்சோடும்
வாழ்கிறோம் அம்மா!

எமது குடும்பத்தின் குலவிளக்கு அணைந்த செய்தி அறிந்து நேரில்வந்தும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவருக்கும் பல வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், துண்டுப்பிரசுரம் வெளியிட்டோருக்கும் இறுதிக்கிரியைகளல் கலந்துகொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொகிறோம்.

இன்று (18.10.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமதில்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

கலாசாலை வீதி,
2ஆம் ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு.

குடும்பத்தினர்.

(65650)(45.3.7)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## ஆறாத ஆறாம் ஆண்டு நினைவுகள்



### அமரர் கந்தசாமி தங்கராசா (பத்தர்)

திதி: 18.10.2015 (பூர்வபக்க சஷ்டி)

நிஜமாய் 15.04.1949 — நினைவாய் 24.09.2009

"ஆறாது ஆறாது அழுதாலும் தீராது
ஆறாண்டாயினும் ஆறவில்லை எமதுயரம்"

ஏன் அப்பா எங்களை விட்டுப் பிரிந்தீர்கள்
எப்பொழுது எங்களிடம்
திரும்பி வரப்போறீங்கள்அப்பா
உங்களுடன் சேர்ந்து
கதைத்து சிரிக்க வேணும் அப்பா
உங்களிடம் எங்கள்
கவலைகளைச் சொல்லி
அழ வேணும் அப்பா
எப்ப அப்பா வரப் போறீங்க
கண்ணீருடன் காத்திருக்கும்
குடும்பத்தினர்.

601, கே.கே.எஸ்.றோட்,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(65492) (14,16,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை நூல் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், ஒக்.18

புதுக்குடியிருப்பு ஜெயம் ஜெகனின் போர்க்காலமும் ஊர்க்கோலமும் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலாபூஷணம் ந. இராமநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதரகத்தின் துணைத் தூதுவர் ஆ.நடராஜனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவசந்திரனும், கௌரவ விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் இ.பிரதாபனும் கலந்து கொள்ளவுள்ளனர். இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ-ரி2)

# நவராத்திரி விழா சிறப்புப் பூசை

யாழ்ப்பாணம், ஒக்.18

யாழ்ப்பாணத்தில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அம்மனின் அருள் ஒளி தர்சன மாலையும், நவராத்திரி விழா சிறப்புப் பூசையும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது என நிலையத்தின் யாழ்ப்பாண இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ-ரி6)


## பேக்கரி வாடகைக்கு

ஆனைக்கோட்டையில் சகல வசதிகளையும் கொண்ட பேக்கரி வாடகைக்கு உண்டு.

(64098) (14.15.18)

தொடர்பு: 077 509 2544

## தேவை

கொழும்பில் நடைபெறும் Juice Shop இற்கு 21 வயதிற்கு குறைந்த வேலை ஆள் தேவை. சம்பளம் 20,000/= தங்கு மிடம் வழங்கப்படும். நடத்துநர் யாழ். நல்லூரைச் சார்ந்தவர்.

தொடர்பு : 0776 63 48 26

## English Classes

ஆரம்பம் 22.10.2015 விஜயதசமி அன்று

அடிப்படை இலக்கணம்
வாக்கிய அமைப்பு
எழுத்து/பேச்சு பயிற்சிகளால் உங்கள் ஆங்கில அறிவை மேம்படுத்த வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

Group Classes உம் நடத்திக் கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 240 3135

## Lakeland Inter - American School

முற்று முழுதான ஆங்கில மொழி (ENGLISH MEDIUM) மூலம் முன்பள்ளிச் சிறார்களுக்கு எமது பாடசாலையில் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. எமது பாலர் முன்பள்ளிக்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 21.10.2015 முதல் பெற்றுக்கொள்ளலாம்.

எமது பாடசாலை செயற்பாடுகளாவன:



* Dr.Maria Montessori இன் எண்ணக்கருவில் பிள்ளைகளின் பரிணாம வளர்ச்சிக் கேற்ற முறையில் வடிவமைக்கப்பட்ட கற்பித்தல் (AMI) முறை மூலமான கற்றல் செயற்பாடுகள்.
* இலகு முறையிலான உபகரணங்கள் கொண்டு காட்சிப்படுத்தல் முறையில் கற்பித்தல்.
* மழலைகள் தங்களது விருப்பத்திற்கேற்ப செயல்படுதிறன்களையும் பழக்க வழக்கங்களையும் வேலைகளையும் புத்திசாதுரியமாக வெளிக்கொணர்தல்.
* பாலர் முன்பள்ளியில் கல்விபயிலும் பிள்ளைகள் தமது திறமைகளை வெளிக்கொணர்வதற்கும் தமது ஆற்றல்களைப் பெருக்குவதற்கும் சிறந்த களமாக அமைந்து அறிவைப்பெருக்குதல்.
* பிள்ளைகளுக்குப் புத்திக்கூர்மை, சுதந்திரம், பொறுப்புணர்வு, கடமையுணர்வு ஆகியவற்றை எமது நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களின் உதவியுடன் மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் புகட்டுதல்.

உங்கள் பிள்ளைகளின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கும் வளர்ப்பதற்கும் உங்களின் தெரிவு எமதாகட்டும்.

உங்கள் நம்பிக்கைக்கான தெரிவு Lakeland Inter - American School.

விரையுங்கள் உங்கள் பதிவுகளுக்கு: வயதெல்லை $2\frac{1}{2} - 5\frac{1}{2}$

No. 154,Brown Road, Jaffna.
T.P.No.021 222 6242 mail: aerolankajaf@gmail.com

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- இலங்கையில் FRENCH MINISTRY OF FOREIGN AFFAIRES & FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் உலகின் மிகப்பெரிய வலையமைப்பை கொண்ட சர்வதேச நிறுவனம் AF மட்டுமே.
- 136 நாடுகளில் 1092 கிளைகள்(இலங்கையில் கொழும்பு, கண்டி, மாத்தறை, காலி & யாழில் 1976 முதல்)எமது தலைமை நிறுவனம் 1883 PARIS இல் நிறுவப்பட்டது. www.ambafrance-lk.org
- பிரான்ஸிலிருந்து வருகைதரும் நிபுணர்களால் பயிற்றுவிக்கப்படும் சிறந்த ஆற்றலும் அனுபவமும் மிக்க ஆசிரியர்கள், யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் (பிரான்ஸ் நாட்டவரும்) ஆசிரியர்கள். இலங்கையில் AF ஆசிரியர்கள் மட்டுமே சர்வதேச பரீட்சைகளை நடத்துகிறார்கள்.
- இலங்கையில் AF மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF,DALF)ஐ வழங்குகிறது. இச்சான்றிதழ்களை எந்தவொரு நாட்டிலும் சமர்ப்பிக்க முடியும்.
- பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள். VISA FORM நிரப்புதல்...
- யாழ்,வன்னி,மன்னார்,திருகோணமலை,மட்டக்களப்பு,கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AFஇல் படித்தே FRANCE, CANADA...(திருமணம் மூலம்/தொழில்/ படிப்பிற்காக)செல்கிறார்கள். எமது மாணவர்கள் விரைவாக பிரெஞ் பேசுகிறார்கள்.

ஆரம்பம் விரைவில். உடன் பதிவை உறுதிப்படுத்துக

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF(வெள்ளை மாடிக்கட்டடம்)

குறிப்பு : யாழில் பல பொய்களை கூறி மோசடி செய்வோரிடம் ஏமாந்த பலர் எமது AF க்கு வந்துள்ளனர்.

## யாழ். நகரில் வீடு விற்பனைக்கு



யாழ்.நகரில் இரண்டு பரப்புக் காணியில் நான்கு படுக்கை அறைகள்,ரைல்ஸ் பதிக்கப்பட்ட இரண்டு குளியல் அறைகள், விசாலமான ஹோல், இரண்டு சாப்பாட்டு அறைகள், சுற்றுமதில், வாகனத் தரிப்பிடம், மூடிய பின்விறாந்தை, குடிதண்ணீர் கிணறு, வேலையாளுக்கான தனியான அறை வசதிகளைக் கொண்ட, யாழ். ரயில் நிலையம், பஸ் நிலையம், சுப்பர் மார்க்கெட், ஆஸ்பத்திரி, வங்கிகள், முன்னணி பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் ஆகியவற்றுக்கு மிகவும் சமீபமாக குடிமனைகள் உள்ள பகுதியில் அமைந்துள்ள அழகிய வீடு விற்பனைக்கு உண்டு.

தரகர்கள் இன்றி நேரடித் தொடர்புகளுக்கு
077-3870487

## ஆங்கிலம் தெரிந்த உங்களுக்கு 125 அரிய வாய்ப்புக்கள் இதோ!

### டோஹா கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

[எயார்போட் VIP, Five Star Hotel]

டோஹா கட்டார் நாட்டில் வர்த்தக நிலையங்களில் தொழில்புரிய உங்களுக்கும் சந்தர்ப்பம்

(விரைவில் பயணம்)

| | |
|---|---|
| பாதுகாப்பு அதிகாரி<br>SECURITY GUARDS - MALE / FEMALE | 43200/= |
| சுத்திகரிப்பாளர்கள் - பெண்கள்<br>CLEANERS - MALE / FEMALE | 36000/= |
| லேபர்<br>LABOUR | 36000/= |
| மேசன்<br>MASON | 55000/= |
| சட்டரிங் காபெண்டர்<br>SHATTERING CARPENTER | 55000/= |
| ஸ்டீல் பிக்சர<br>STEEL FIXTURE | 55000/= |
| மென்ரக வாகன சாரதி<br>L/V DRIVER - GULF LICENSE | 60000/= |
| கனரக வாகன சாரதி<br>H/V DRIVER - GULF LICENSE | 72000/= |
| TEA BOY / TEA GIRL | 38000/= |

(64070 x 10.15.17)

### அல் அம்னா

வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (ப.இலக்கம் 2229)

இலக்கம்.151, முதலாம் மாடி, உ.பீ.வெலகெதர வீதி, குருநாகல்.

தொடர்பு : 0374921817, 0770562797, 0777868199

## Mega Sale தீபத்திருநாளை முன்னிட்டு...

### மாபெரும் மலிவு விற்பனை

### 5% தொடக்கம் 15% வரை

தம்ரோ, பியெஸ்ரா ஏக விநியோகஸ்தராகிய எங்களிடம்




- நீங்கள் வாங்கும் ஒவ்வொரு Sofa செற்றிகளுடனும் 7500/= பெறுமதியான (Glass Coffee Table) மற்றும் Stand fan free இலவசம்.
- நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மெத்தைகளுடனும் ஒரு சுவர் மணிக்கூடு (Wall Clock) இலவசம்.
- Innovex TV மற்றும் Preethi Mixi, Stand Fan, Damro Washing Machine, Rice Cookers ஐ அதிகூடிய விலைக் கழிவுடனும் Damro உத்தரவாதத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.
- 25000/= இற்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் கொள்வனவு செய்தால் இலவசமாக விநியோக சேவை (Home Delivery) செய்யப்படும்.
- Damro, Pyestra Nilkamal, Phonix, Arpico ஆகிய பொருள்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

(C/15944 x 10.15.17)




JAMUNA FURNITURE 181, Navalar Road, Jaffna. T.P. 021 222 1092, 077 757 4776


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி வீடு விற்பனைக்கு

வடமராட்சி கரவெட்டி வதிரிச்சந்திக்கு அருகில் நில பர 6 ½ விஸ்தீரணம் 06 அறைகள் கொண்ட வீட்டுடன் கிணறும் விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 021 226 3466
077 722 8527
(65256)(12.15.17)

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை புற்று நோய் ஆஸ்பத்திரிக்கு முன்பாக (Cancer hospitel) உள்ள 5 பரப்பு காணிகடைத்தொகுதி கட்டடத்துடன் விற்பனைக்குண்டு பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்

தொடர்பு: 076 835 3719
(64118)(12.16.17)

## விறகு தேவை

பலதரப்பட்ட விறகுகளும் கொள்வனவு செய்யப்படும்.
இல.15/4, பிறவுன் றோட்,
யாழ்ப்பாணம்.
(64124) (10.17)

தொலைபேசி: 076 822 7536

## விற்பனைக்கு

K.K.S வீதி, கோண்டாவிலில் வீடு குழாய் கிணற்றுடன் கூடிய காணி விற் பனைக்கு உண்டு. விவரங்களுக்கு

077 791 8342, 077 653 2365

## A/L Personal class

Chemistry (இரசாயனவியல்)
Biology (உயிரியல்)
Science for Technology (தொழிநுட்ப வியலுக்கான விஞ்ஞானம்)

TP.No :076 654 1292 (64086)

## நாகபூஷணி திருமண சேவை

டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் மற்றும் வங்கி உத்தி யோகத்தர், அரச உத்தியோகத்தர் தனியார் துறையைச் சேர்ந்த வர். உள்நாட்டு/ வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் எம் மிடம் நிறைய உள்ளன. நீங்கள் விரும்பும் மணமக்களின் ஜாத கங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

T.P.NO: 077 138 7596, 021 222 9306
T.P.NO: 071 894 5692 , 021 320 9793 (64109) (11.15.16.17)
Email:nakapoosany wedding@gmail.com
383/14B, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
( நல்லூர் கோவில் வடக்குப் பக்கம்)
(எங்கு வேறு கிளைகள் கிடையாது)
வாரத்தின் ஏழு நாள்களும் திறந்திருக்கும்

## வேலை வாய்ப்பு

குறைந்த தகைமையுடன் எமது விளம்பரப்படுத்தல் நிறுவனத் துக்கு நான்கு பதவிகள்

★ விநியோகஸ்தர் ★ மேற்பார்வையாளர்
★ உதவி முகாமையாளர் ★ வரவேற்பாளர் (பெண்)

யாழ்., கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். அடிப் படைச் சம்பளம் அத்துடன் கொமிசன், தங்குமிடம், உணவு இலவசம்.

குறிப்பு: வயதெல்லை 18 - 40 முந்தும் 12 பேருக்கு முன்னுரிமை.

தொடர்புகளுக்கு:
077 9091 067, 077 900 9639, 077 621 9536
No.08, 6th Cross Street, Jaffna. (64125) (10.17)

## வீடு வாடகைக்கு

யாழ் போதனா வைத்தியசாலைக்கு அருகில் சகலவசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு

தொடர்பு: 076 848 6050
(64116)(12.16.17)

## வேலைவாய்ப்பு


எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சர்வதேச பாடசாலையை விளம்பரப்படுத்துவதற்கான விளம்பரதாரர்கள் ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பினை ஏற்படுத்தவும்.

- உடனடி வேலைவாய்ப்பு
- கவர்ச்சிகரமான சம்பளம்
- வெளியிடங்களிலிருந்து வருவோர்க்கு தங்குமிட வசதி

தொடர்பு: 071 566 9641
021 225 6641
தாவடி வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

## விழிநீர் சொரிகின்றோம்

மலர்வு 05 . 01 . 1934



உதிர்வு 14 . 10 . 2015

### ஆறுமுகம் தேவராஜன்

தம்பசிட்டி, மல்லிகை கலட்டியில் மலர்ந்து மணம் வீசி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும் கலாமன்றம் அமைத்துக் கலைகள் வளர்த்துச் சதாவ தானி கதிரைவேற்பிள்ளையின் புகழ்பாடி, அன்னார் பற்றிய அருந் தமிழ் நூல்களை மறுபிரசுரம் செய்து மகத்தான சேவையாற்றிய தமிழ் மொழி ஆர்வலரும், தொல்லியல் ஆய்வாளரும் இங்கிலாந் தின் இரண்டாவது எலிசபேத் மகாராணியாரின் 2011 ஆம் ஆண்டிற்கான ராணி சேவை விருது பெற்றவருமான பன்முக வல்லுனர் அமரர் ஆ. தேவராஜன் அவர்கள் காலமான துயரச் செய்தியறிந்து கண்ணீர் சொரிந்து அஞ்சலிக்கின்றோம்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய வேண்டி இறைவனை இறைஞ்சுகின்றோம்.

துயரில் மூழ்கியுள்ள,
சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினர்.
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

## அமெரிக்க விசா லொத்தர்

A/L தகுதியுடையவர்கள் விசா லொத்தர் மூலம் அங்கு குடியேற லாம்.

BBS NETTING
தொடர்பு: 077 581 1106 (C/ )8459 (11,15,16,17)

## விற்பனைக்கு

யாழ் பருத்தித்துறை பிரதான வீதியிலிருந்து 400m தூரத்தில் கல்வியங்காடு கட்டைப்பிராயில் உள்ள குளிக்கண்டி வீதியில் அமைந்துள்ள 3 பரப்புக் காணியும் கல் வீடும்,கிணறும் விற்பனைக்குண்டு.

தொ.பே.இல :-021 225 6525
077 0260 406
077 40 111 54

## பணியாளர் தேவை

யாழ் நகரில் அழகு சாதன பொருள்கள் மற்றும் அன்பளிப்பு பொருள்களை வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து விற்பனை செய்துவரும் எமது குளிரூட்டப்பட்ட காட்சியறைக்கு முகாமையாளர் மற்றும் விற்பனையாளர் தேவை. (64115)(12.16.17)

தொடர்பு: 077 766 0396

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
யோகேஸ்வரி சண்முகம்

தோற்றம் 24.04.1943
மறைவு 18.09.2015

நாள்கள் முப்பத்தொன்று சென்றிடினும்
மறைந்திடுமா உன்நினைவு பரிதவிக்குதம்மா எம் நெஞ்சம்
உன் புன் சிரிப்பைக் காண விழியோரக்கண்ணீருடன்
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

கல்லாரை, மல்லாகம். குடும்பத்தினர்.

## மணமகள் தேவை

1974 ஆம் ஆண்டு பிறந்த கிரகபாவம் 19 ½ லக்கினத்தில் செவ்வாய் சுவாதி நட்சத்திரம் லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு பொருத்தமான மணமகளை உள்நாட்டில் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்

தொடர்பு: 077 631 4178 (64114)(12.16.17)


குறைந்தளவான கட்டணங்களுடன்
சுயதொழில் வாய்ப்புகளை கொண்ட கற்கைநெறிகள்
New Gateway Tech இடமிருந்து....



AUTODESK
AUTOCAD

கட்டட நிர்மாணத்துறை மற்றும் பொறியியல் துறைகளில் மிக முக்கியமான மென்பொருள்

விரும்பிய நேரசூசியுடன் ஆரம்பத்திலிருந்து மென்பொருளை முழுமையாக கையாளக்கூடிய நிலை வரை பயிற்சிகள் வழங்கப்படும். AutoCAD for Beginners மற்றும் ஏற்கனவே மென்பொருள் பற்றி அறிந்தவர்கள் பயிலக்கூடிய வகையில் Advanced AutoCAD கற்கை நெறிகளும் நடைபெறுகின்றன.

4ஆவது பிரிவு ஆரம்பம்
20.10.2015 செவ்வாய்க்கிழமை

NGT NEW GATEWAY TECH
GATEWAY
No. 39, College Road, Neeraviyadi, Jaffna.

Address : 39, College Road, Neeraviyadi, Jaffna.
Telephone : 021 493 6666 / 0716 362 362
(X10.15.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் அருகி வரும் உயிரினமாக ஆண்கள்

## மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.18

இலங்கையில் வாழும் ஒவ்வொரு மூத்த சகோதரியும் தன்னுடைய ஆண் சகோதரனின் கல்விக்கான வழிகாட்டலை வழங்க வேண்டிய கடமைப்பாட்டில் உள்ளனர். அந்தப் பிள்ளைகளைத் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்து வழிகாட்ட வேண்டிய பொறுப்பு இவர்களைச் சார்ந்துள்ளது. இல்லாவிட்டால் ஆண் பரம்பரை உலகில் அருகி வரும்ஓர்உயிரினமாக மாறும்அபாயம் உள்ளதென மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.முஹம்மத் தெரிவித்துள்ளார்.

கஹட்டோவிட்டவில் நடைபெற்ற நிகழ்வொன்றில்பிரதமஅதிதியாகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போதுமேலதிகதேர்தல்கள்ஆணையாளர் எம்.எம். முஹம்மத் தனது உரையில்,

ஆண்களில் படிக்கின்றவர்களின் எண்ணிக்கை இன்று குறைந்து கொண்டு செல்லும் நிலை காணப்படுகின்றது. இது எமது நாட்டுக்கு இன்று ஏற்பட்டுள்ள ஒரு சாபக்கேடாகும். இன்று அரச சேவையில் 65 வீதமானவர்கள் பெண்களே காணப்படுகின்றனர். நாட்டின்மொத்த சனத்தொகையில் பெண்கள் 51 வீதம் காணப்படுகின்றனர்.

தொழில்வாய்ப்பில் ஆண்கள் சம வாய்ப்பு வேண்டிச் சண்டை பிடிக்க வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. பெண்கள் அரசியல் துறையிலேயே தங்களுக்குச் சம உரிமை கேட்டுச் சண்டைபிடிக்கவேண்டியுள்ளது. ஏனெனில், இன்றுநாடாளுமன்ற பிரதி நிதித்துவத்தில் 225 பேருக்கு 13பேர்களேபெண்களாகவுள்ளனர். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பெண் வேட்பாளர்கள் 25 வீதமாக இருப்பதற்குச் சட்டம் வரப்போகிறது.

ஆண்கள் அரச தொழில் துறையில் 35 வீதமானோரேயுள்ளனர். கடந்த வருடம் பல்கலைக்கழகத்துக்கு கலைத்துறையில் தெரிவானவர்களில் 80 வீதமானவர்கள் பெண்கள். 20 வீதமானர்களே ஆண் மாணவர்கள். இலங்கையில் தொழில் ரீதியாகஅதியுயர் பரீட்சையாகக்கருதப்படும் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் கடந்த வருடம் 229 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இது இலங்கையின் வரலாற்றில் கூடுதலான தொகை. இவ்வாறு பரீட்சையில் சித்தியடைந்து தெரிவானோரில் 162 பேர் பெண்களாகக் காணப்பட்டனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும். ஆண் பிள்ளைகளைக்கல்வியில்முன்னேற்றுவதன் மூலமே இந்தநிலை மாறும் எனவும் அவர் மேலும் கூறினார். (வ)

# 13 வயதுச் சிறுமி வகுப்பில் திடீரென மயங்கிச் சாவு

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சிப் பாடசாலை ஒன்றில் நேற்றுமுன்தினம் மயங்கி விழுந்த 13 வயதுச் சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சற்று நேரத்தில் உயிரிழந்தார். ஜெயசிங்கம்துசியந்தினி (வயது-13) என்ற பாரதிபுரத்தைச் சேர்ந்த பாடசாலைச் சிறுமியே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் வசிக்கும் குறித்த மாணவி இருதய நோயினால் பாதிக்கப்பட்டவர். நேற்று முன்தினம் வழமை போன்று பாடசாலைக்குச் சென்றிருந்த போது வகுப்பறையில் அவர் திடீர் சுகவீனமுற்று மயக்கமடைந்துள்ளார்.

இவ்வாறு மயக்கமடைந்த மாணவியை ஓட்டோவில் ஏற்றிக் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். இவ்வாறு சேர்க்கப்பட்ட மாணவிக்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி அவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இதேவேளை மாணவியின் தாயார் குடும்பத்தலைவியாக, பண்ணையில் பணியாற்றியேமூன்றுபிள்ளைகளையும் பராமரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-101)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### திருமதி வினிபிறேட் பாலசுந்தரம்

(உரிமையாளர், வைகுந்தன் வெதுப்பகம்)



பிறப்பு 03.02.1955 இறப்பு 18.09.2015

கடந்த 18.09.2015 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (18.10.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம்.

குடும்பத்தினர்,
077 1974 349

# இரட்டைக் குடியுரிமைக்கு 13300 விண்ணப்பங்கள்

கொழும்பு, ஒக்.18

இரட்டைக்குடியுரிமைக்காக13300 பேரின் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக, இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரட்டைக் குடியுரிமை தொடர்பிலான புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்பட்டதன்பின்னர் இவ்வாறு விண்ணப்பங்கள்கிடைக்கப்பெற்றுள்ளதாக அந்தத் திணக்களத் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

1987ஆம்ஆண்டு45ம்இலக்கசட்டத் திருத்தங்களின் அடிப்படையில் இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டு வந்தது. பின்னர், 2011ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

எனினும் இந்த ஆண்டு ஆரம்பத்திலிருந்து சட்டம் மீண்டும் நடைமுறைக்கு வந்ததன் பின்னர், அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரித்தானியா, பிரான்ஸ், சுவீடன், சுவிட்சர்லாந்து மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளின் விண்ணப்பதாரிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டு வருவதாகக்குடிவரவுகுடியகல்வுத்திணைக்களத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (வ)

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் பாலேந்திரன் (சிறாப்பர்)

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர்-இராமநாதன் கல்லூரி, இணக்க சபை உறுப்பினர்)



சுதுமலை வடக்கைப் பிறப்பிட மாகவும் இணுவில் கிழக்கை வதிவிட மாகவும் கொண்ட வைத்திலிங்கம் பாலேந்திரன் (சிறாப்பர்) (ஓய்வுபெற்ற இராமநாதன் கல்லூரி பிரதி அதிபரும் இணக்க சபை உறுப்பினர்) 16.10.2015 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சுவாமிநாதப்பிள்ளை மற்றும் இராசமணி தம்பதியரின் மருமகனும், ரஞ்சனாதேவியின் (முகாமையாளர்-தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம்) அன்புக் கணவரும், Dr. கார்த்திகா (தேசிய வைத்தியசாலை கொழும்பு) Eng. ஜனகன் (சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தெய்வநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (கல்விப் பணிப்பாளர், விஞ்ஞானம்) மற்றும் பாஸ்கரன் (கப்பற் கூட்டுத்தாபனம்) காலஞ்சென்றவர்களான பராசக்தி பாலகிஷ்ணன் (மொடேர்ண் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) மற்றும் விமலநாயகி காலஞ்சென்ற பாலச்சந்திரன் ஆகியோரின் சகோதரனும், இராசமனோகரன் (ஓய்வுபெற்ற முகாமையாளர் மக்கள் வங்கி-சுன்னாகம்), தேவ மனோகரன் (திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாம வலயம்), இராசதேவி (கனடா), இராசமலர் (லண்டன்), சுலோசனா (ஆசிரியை, உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்), கிருபாகரன்(கனடா), செல்வாகரன் (கனடா), ஐங்கரன்(கனடா), திருக்குமரன் (கனடா) காலஞ்சென்ற இரத்தினகோபால் மற்றும் தனலக்சுமி தனேஸ்வரி செல்வரத்தினம், சிதம்பரேஸ்வரி குமாரகுலசிங்கம், இந்திராணி ஆகியோரின் மைத்துனரும், ஸ்ரீபதி, துஷ்யந்தி, பரமானந்தன் உதயகுமார், யுவராஜா, மதுரா, றஜிதா, சந்திரிக்கா, புகழினி ஆகியோரின் சகலனும், ரமணன் காலஞ்சென்ற தனுஷா ஆகியோரின் சிறிய தந்தையும், யாழினி, விசாகன், பாலினி, அனு, அனந்தன், பானு, பாரி, யதுர்ஷா, விக்னேஷ், ஹரிஸ், ஹரினி, ஹேதுசன், ஹேதுஷா ஆகியோரின் பெரியதந்தையும், செந்தூரன், கஸ்தூரி, சர்மிலன், சாமந்தி, மாதுமை, ஜயபவன், சயான், கிருஷான், மதுஷான், சேயோன், ரணேஸ், சுவாதி, சரிக்கா, சுவேந்திகா, யுவேந்திகா, சுபீக்ஷா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.10.2015) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] வீதி,
இணுவில் கிழக்கு.

தகவல்: குடும்பத்தினர்.
077 4522568, 077 655 1739
075 041 3011

(64083)(10.17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நாணயக் குற்றிகளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது

2014 ஆம் ஆண்டைவிடவும் 2015 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில் வர்த்தகச் சந்தைக்கு நாணயக் குற்றிகள் விநியோகிக்கப்பட்டுள்ளதால், திறந்த வர்த்தகச் சந்தையில் நாணயக்குற்றிகளுக்குத் தட்டுப்பாடு ஏற் படுவதற்கு வாய்ப்பில்லையென்பதாக இலங்கை மத்திய வங்கித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2014 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் இருந்து ஜூன் மாதம் வரையிலும் 45 மில்லியன்கள் பெறுமதி கொண்ட நாணயக்குற்றிகள் விநியோகிக்கப்பட்டுள்ளதோடு, 2015 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் இருந்து ஜூன் மாதம் வரையிலும் 110 மில்லியன்கள் பெறுமதிகொண்ட நாணயக்குற்றிகள் வர்த்தகச் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக, அந்த தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (வ–22)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
25
11
1945

ஆண்டவன் அடியில்
18
09
2015



### அமரர் ஜெயலட்சுமி கையித்தாம்பிள்ளை

புரட்டாதி மாதப்பிறப்பன்றே அமரத்துவம் அடைந்தவளே
நேசமான லட்சுமியே எல்லோரும் விரும்பும்
பாசத்தின் பிறப்பிடமே கோலத்திருவுருவே-உம்
தாயையும், தாய் வம்சத்தையும் எக்கணமும் நேசித்தீரே
சுற்றமும் உறவுகளும் நீர்நலமாக இருப்பீர் என
காத்திருக்க பாதி வழியிலே பாசக்கயிறு
வீசப்பரந்தாமன் பணித்தனனோ? நீர் எம்மைவிட்டுப்
பிரிந்தாலும் எம் நினைவுகளில் எப்போதும் நீர் இருப்பீர்
ஈரவிழிகளுடன் உம் ஆத்மா சாந்திக்காகப்
பிரார்த்திக்கும் உமது....

07, புது வீதி, அத்தியடி,
யாழ்ப்பாணம். 021 222 7668

அன்பு மகள் மற்றும்
குடும்பத்தினர்.

## கண்ணீர்அஞ்சலி



மொறட்டுவைப் பல்கலைக் கழக பொறியியல் பீட இறுதியாண்டு மாணவனும் எமது உயிர் நண்பனுமாகிய

### மகேந்திரன் அமிழ்தன்

அவர்கள் 16.10.2015 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு மீளாத் துயரில் இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2011 பொறியியல் பீட பிரிவு
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்.

(64066) (10.17)

## உயர் தொழில்நுட்பவியல் மாணவர்களுக்கு இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 18

அடுத்த மாதம் நடைபெறவுள்ள உயர் தொழில்நுட்பவியல் பட்டமளிப்பு விழாவில், பட்டம் பெறவுள்ள யாழ். உயர்தொழில்நுட்பவியல்நிறுவனமாணவர்களுடனான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவனத்தின் பழைய மாணவர் சங்க தலைவர் செ. செல்வரதன் தலைமையில் குறித்த கலந்துரையாடல் நடைபெறும் எனவும் பட்டம் பெறவுள்ள சகல மாணவர்களையும் குறித்த நேரத்துக்கு தவறாது கலந்து கொள்ளுமாறும் பழைய மாணவர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (வ–ரி6)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கலட்சுமி (குஞ்சு) குமாரசாமி



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், 161/3A, திருவையாறை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கலட்சுமி (குஞ்சு) குமாரசாமிநேற்று (17.10. 2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் (ஓய்வு பெற்ற இ.போ.ச. சாலை பரிசோதகர்-கோண்டா வில்) அன்புத் துணைவியும், பரந்தன் சின்னத் தம்பி என அழைக்கப்படும் நாகநாதர்-தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காங்கேசு- நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், பிரதீபன், (மருத்துவர் - கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை)காலஞ்சென்ற ரதிதீபன் மற்றும் மலரவன் ஆகியோரின் அன்புத் தாயும், நிஷாந்தினியின் மாமியும், அபிதாஜினியின் பேர்த்தியும், சுந்தரலிங்கம் (வட்டகக்கச்சி), சீதாதேவி (ஆனந்தபுரம்), கணேஸ்வரி (கனடா), நவரத்தினராசா (சுவிஸ்), தியாகராஜா (விவேகானந்தநகர்), நகுலேஸ்வரன் (பரந்தன்) ஆகியோரின் சகோதரியும், கமலாம்பிகை (லண்டன்), கனகமணி (திருவையாறு), முருகேசு (லண்டன்), சுந்தரலிங்கம் (ஆனந்தபுரம்) சாந்தலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.10.2015) திங்கட் கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக இரணைமடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


161/3A திருவையாறு,
கிளிநொச்சி.

(64132)(10.17)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை சண்முகானந்தா



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் மல்லாகம் புகையிரத நிலைய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சண்முகானந்தா நேற்று (17.10. 2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், கந்தசாமி-நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கண்ணம்மாவின் அன்புக் கணவரும், சத்தியாயினி, சத்தியன், சஜிபன், டயானி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரணவனின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புகையிரத வீதி,
மல்லாகம்.

தகவல்: குடும்பத்தினர்.

(C/15941) (10.17)

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், ஒக். 18

திருநெல்வேலி ஸ்மார்ட் கிட்ஸ் பாடசாலை நவராத்திரி விழா, 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு இன்று காலை 9 மணிக்கு கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதிகளாகயாழ். பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் எஸ். ரமணராஜாவும் மாநகர சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஆர். தனுசியாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து 4 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கான விழா பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவில் இராம கிருஷ்ண வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி அதிபர் எஸ். லலீசன் கலந்து கொள்வார் எனப் பாடசாலைச் சமூகம் அறிவித்துள்ளது. (வ–ரி6)

## மரண அறிவித்தல்

### பரஞ்சோதி மகாதேவன்



காரைநகர் செம்பாட்டை பிறப்பிடமாகவும் சின்னாலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பரஞ்சோதி மகாதேவன் (17.10.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி-சிவயோகம் தம்பதியரின் அன்புப் புத்திரனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும், மயூரி, மயூரன், மாதுளன் (கலாசார உத்தியோகத்தர் - காரை நகர்) ஆகி யோரின் பாசமிகு தந்தையும் ஞானசீலனின் (தனம் ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளர்) பாசமிகு மாமனும், ஸாகித்தியன், நர்த்தனன் ஆகியோரின் பாசமிகு பேரனும் உமாதேவி, உருத்திரமூர்த்தி காலஞ்சென்ற சோதிநாதன் மற்றும் வேதநாயகி ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.10.2015) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :- குடும்பத்தினர்.

சின்னாலடி,
காரைநகர்.

T.P: 077 8824 568,
077 9823 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப் ஆணைக்குழுத் தலைமைப் பதவியை தமது கட்சிக்குத் தரக்கோருகின்றது ஜே.வி.பி

கொழும்பு, ஒக். 18

கோப் ஆணைக்குழுவின்தலைமைப் பதவியை தமது கட்சிக்கு வழங்குமாறு ஜே.வி.பி அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.பொது முயற்சியாண்மை குறித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவான கோப் ஆணைக்குழுவின் தலைமைப் பொறுப்பு தமது கட்சிக்கு வழங்கப்பட வேண்டும் எனக்கோரியுள்ளது.

புதிய கோப் ஆணைக்குழுவின் தலைமைப் பதவி எதிர்க்கட்சிக்கு வழங்கப்படும் என முன்னதாக ஆளும் கட்சிக்குள் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

கோப்ஆணைக்குழுவின்தலைமைப்பதவியை ஆளும் கட்சி வகிப்பதனால், இடம்பெறும் ஊழல், மோசடிகள் தொடர்பில் உரிய முறையில் விசாரணை நடத்தப்படுவதில்லை.

தற்போதைய அரசு நல்லாட்சியை உரிய முறையில்முன்னெடுக்க விரும்பினால், கோப் ஆணைக்குழுவின்தலைமைப் பொறுப்பினை எதிர்க்கட்சிக்கு வழங்க வேண்டும்.

குறிப்பாக அரச நிறுவனங்களில் இடம்பெற்று வரும் ஊழல், மோசடிகள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் பொறுப்பினை ஜே.வி.பி.யிடம் ஒப்படைக்க வேண்டும்.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் கட்சியின் பொருத்தமான ஒருவர் ஆணைக்குழுவின் தலைமைப்பதவிக்கு நியமிக்கப்படுவார் என ஜே.வி.பிஅரசுக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (த)

# குடும்பப் பெண் கடத்தல்; 10 ஆவது நபர் கைதானார்

வடமராட்சி, ஒக். 18

வடமராட்சி கம்பர்மலையில் பெண்ணொருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் 9 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்ட நிலையில் 10 ஆவது சந்தேக நபரும் நேற்று வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இது தொடர்பாக தெரியவருவதாவது:-

வடமராட்சி கம்பர் மலை பகுதியைச் சேர்ந்த பெண் கடந்த புதன்கிழமை நீதிமன்றில் இருந்து வந்து கொண்டிருந்த சமயம் வாகனமொன்றில் வந்த மர்ம நபர்களால் கடத்திச் செல்லப்பட்டிருந்தார். இந்த நிலையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் வழி நடத்தலில் விசாரணைகளை ஆரம்பித்த வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீடின் தலையிலான பொலிஸ் குழுக்கள் அதிரடியாகச் செயற்பட்டு எட்டு மணித்தியாலத்துக்குள் புத்தூரில் உள்ள சட்டத்தரணி ஒருவரின் வீட்டில் வைத்துப் பெண்ணை மீட்டதோடு சந்தேக நபரான பெண்ணின் கணவர் சிவானந்தராஜா சுசீந்திரன் என்ற நபரையும் கைது செய்திருந்தனர்.

கணவருடன்விவாகரத்துசம்பந்தமான வழக்கு நீதிமன்றில் இடம்பெற்று வரும் நிலையிலேயே பெண் கடத்தப்பட்டிருந்தார். இந்தக்கடத்தல் தொடர்பில் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த 8 சந்தேக நபர்களும் பொலிஸாரின் பல்வேறு சுற்றிவளைப்புகளில் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்தநிலையில் தொடர்ந்த விசாரணைகளை தொடர்ந்த பொலிஸார் நேற்று அதிகாலையும் கடத்தலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கம்பர்மலையைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்திருந்தனர். குறித்த சந்தேக நபர் பதில் நீதிவான் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்ட போது சந்தேக நபரை எதிர் வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (த-109)

# ரக்பி பயிற்றுவிப்பாளர் நேற்று சடலமாக மீட்பு

கொழும்பு, ஒக். 18

கட்டுகஸ்தோட்டை, மஹாவலி கங்கையிலிருந்து சுமார் 200 மீட்டர் தூரத்திலுள்ள பிங்கா ஓயாவில் மிதந்துக்கொண்டிருந்த நிலையில் ஆண்ணொருவரின் சடலத்தை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

கண்டி பிரதேசத்திலுள்ள பல பாடசாலைகளில் ரக்பி பயிற்றிவிப்பாளராக கடமையாற்றி வந்த மகிந்த கலு ஆராச்சி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மஹாவலி கங்கையிலிருந்தே இவரது சடலம், பிங்கா ஓயா பக்கமாக மிதந்து வந்திருக்கலாம் என கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரி வித்தனர்.

இவர் தற்கொலை செய்துக்கொண்டாரா அல்லது கொலை செய்யப்பட்டுள்ளாரா என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (த)

# தொழிற்சங்க ஆலோசனையின்றி இடமாற்றம் இனிமேல் இல்லை

***பிரதமர் ரணில் தெரிவிப்பு***

யாழ்ப்பாணம், ஒக். 18

தொழிற்சங்கங்களின் ஆலோசனையைப் பெறாமல், அரச நிறுவனங்களில் இடம்பெறுகின்ற இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகளுக்கான கோரிக்கைகளை நிராகரிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

பிரதமர் இது தொடர்பில் அறிவித்தல் ஒன்றின் மூலம் அமைச்சர்களுக்கு அறிவுறுத்தி இருப்பதாகவும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு போன்ற விடயங்கள் குறித்துத் தொழிற்சங்கங்களுடன் பேச்சு நடத்துவதற்கு அரசு வசதி செய்துள்ளது.எனினும் சில தரப்பினர் இதனை மீறி செயற்படுவதாக நிதி அமைச்சர் கூறியுள்ளார். இந்த நிலையிலேயே பிரதமர் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார். கல்வித் திணைக்களம் உள்ளிட்ட பல துறைகளிலும் இத்தகைய பிரச்சினை நீண்டகாலமாகவே இருந்து வரும் நிலையில் இவ்வாறான அறிவித்தல் ஒன்றைப் பிரதமர் விடுத்துள்ளார்.

அது செயல்வடிவம் பெறும்போது சிக்கல்கள் நீக்கப்படும் என்று எதிர்பார்ப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

# பதிவுத் திருமணங்கள் குறைவடைந்துள்ளன

***புள்ளிவிவரத் தகவல்***

கொழும்பு, ஒக்.18

இறுதி புள்ளி விவரவியல் தரவின் பிரகாரம், திருமணம் செய்பவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

2015ஆம் ஆண்டின் புள்ளி விவரவியல் விவரத்தின் பிரகாரம், பதிவுத் திருமணங்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

கடந்த வருடம் ஒரு லட்சத்து 75 ஆயிரத்து 728 பதிவுத் திருமணங்கள் நடைபெற்றன. எனினும் 2013ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 80 ஆயிரத்து 760 பதிவுத் திருமணங்களும் 2011 ஆம் ஆண்டு இரண்டு லட்சத்து 214 பதிவுத் திருமணங்களும் 2012ஆம் ஆண்டு ஒரு லட்சத்த 98 ஆயிரத்து 710 பதிவுத் திருமணங்களும் நடைபெற்றுள்ளன.

கண்டிய மற்றும் முஸ்லிம் பதிவுத் திருமணங்களும் குறைந்துள்ளன. கண்டிய திருமணம், 2012ஆம் ஆண்டு ஆயிரத்து 651ஆக இருந்தது. இதுவே 2011ஆம் ஆண்டு இரண்டாயிரத்து 432ஆக இருந்தது.

இதேவேளை, 2012ஆம் ஆண்டு 20 ஆயிரத்து 189 முஸ்லிம் பதிவுத் திருமணங்கள் நடைபெற்றுள்ளன. எனினும், இது 2013ஆம் ஆண்டு 19 ஆயிரத்து 990 பதிவுத் திருமணங்களே நடைபெற்றன என புள்ளிவிவரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (வ)

## அடுத்த வருட சுதந்திர தின நிகழ்வுகள் மாலையில்

அடுத்த வருட சுதந்திர தின நிகழ்வுகளை வழமைக்கு மாறாக மாலை நேரத்தில் நடத்த அரசு தீர்மானித்துள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இதற்கான அனுமதியை ஜனாதிபதி வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அவென் கார்ட் கப்பலுக்கு சீல்

காலி துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள அவென் கார்ட் கப்பல் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணை நேற்று மாலை முடிவுக்கு வந்துள்ளதாக, கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கப்பலினுள்ள ஆயுதங்களைப் பரிசோதனை செய்வதற்காக குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் நேற்று கப்பலுக்குள் பிரவேசித்திருந்தனர்.

காலி துறைமுகப் பொலிஸார் மற்றும் காலி நீதவான் நீதிமன்றம் என்பவற்றின் அனுமதியுடன் இந்த பரிசோதனையை மேற் கொண்டுள்ளது.

குறித்த விசாரணையின் பின்னர் ஆயுத களஞ்சியத்துக்கு சீல் வைக்கப்பட்டது. கப்பலினுள்ள ஆயுதங்களை கணக்கிடுவதற்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் உதவியும் பெறப்பட்டிருந்தது. கடற்படையினரால் மீட்கப்பட்ட இந்த கப்பல் தொடர்பிலான பரிசோதனை நடாத்தப்பட்டதன் பின்னர் கப்பல், விசாரணைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தக் கப்பலில் கனரக ஆயுதங்கள் 816 உம் ரவைகள் சுமார் 2 லட்சமும் காணப்பட்டதாக கடற்படையினர் இதற்கு முன்னர் பொலிஸாருக்கு முன்வைத்த முறைப்பாட்டில் குறிப்பிட்டதாக அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (வ)

**தவறிவிட்டது**
அச்சுதா திருஞான சம்பந்தர் என்பவரது தேசிய அடையாள அட்டை (898530639 V) கடந்த (08.09.2015) அன்று திருநெல்வேலியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயது செய்து தொடர்பு கொள்ளவும்.
T.P: 077 592 4262 (64118)(12.16.17)

**வீடு விற்பனைக்கு**
நல்லூர் ஆலயச் சூழலுக்கு அண்மையில் 2 பரப் புக்காணியுடன் 5 அறைகளுடன் மாபிள் பதித்த நல்ல தண்ணீர் கிணற்றுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 802 5788 077 919 5868
(64117)(11,15,16,17)

**சிறுநீரகம் தேவை**
O+ குருதிவகையைச்சேர்ந்த 51 வயதுடைய ஒருவருக்கு O+ குருதி வகையுடையவர்களின் சிறுநீரகம் உடனடியாகத்தேவை.
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)
தொடர்பு:
075 203 5764 . 077 9865206
(64112)(12.16.17)

**கார் வாடகைக்கு உண்டு**
(நாள், மாதம்)
தொடர்புகளுக்கு:
077 9961 250.
(64129)(10,17)

**வேலையாள்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் ஸ்ருடியோ ஒன்றுக்கு படப்பிடிப்பாளர், கிரபிக் டிசைனர் தேவை. (64128)(10.17)
சம்பளம் : 10,000 - 30,000 ரூபா
தொடர்பு: 076 7011 645

**பதவிக்கான தேடல்**
நீங்கள் 2015 A/L எழுதியவரா? உங்களிடம் அடிப்படைத் தகைமை O/L உள்ளதா? வயதெல்லை 18-27
* முகாமைத்துவ பயிற்சி நெறிகள் & வேலை வாய்ப்புக்கள்
* யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களுக்கு முன்னுரிமை.
* பயிற்சி நெறிகளின்போது 13,000/= தொடக்கம் பின் 45,000/= சம்பளம் வழங்கப்படும்.
* உணவு & தங்குமிட வசதிகள் உண்டு.
தொடர்புகளுக்கு:
077 230 2795, 0777 98 14 71 (64127)(10.17)

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 2015-10-16 | வெற்றி வாரம் 1890 | வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 09 16 21 38
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி ரூ.2,404,160/-

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 410
சீட்டிழுப்பு திகதி 2015.10.17
வெற்றி இலக்கங்கள் 01 03 04 46 26 L
ரூ. 30,914,680/=

**இலவச கணினி வகுப்புக்கள்**
Online Class
தரம் 10, O/L, A/L மாணவர்களுக்கான கற்கை நெறிகள்
I) Diploma in ms office
II) Diploma in Internet Technology
* பெறுமதிமிக்க சான்றிதழ்
* காலம் : 3 மாதங்கள்
ஆரம்பம் : 24.10.2015, 25.10.2015
நேரம் : 10.00 am, 4.00 pm
IPS Thirunelveli

5 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



இன்று (18.10.2015) ஞாயிற்றுக்கிழமை இல. 56, விதானை வீதி, கண்டுக்குளியில் வசிக்கும் சிவராஜகுமார் மதிவதனி தம்பதியரின் செல்வப்புதல்வர்கள்
**சிவடனுஷன், சிவடனுஷிகன்**
அவர்களை அப்பா, அம்மா, பெரியப்பா, பெரியம்மா, பெரியத்தை, அத்தைமாமா, சின்னத்தை, கனடா பெரியப்பா, அண்ணா ஜெஷன், சின்னண்ணா ஜெனோஷன், அக்கா ஜெனோஷிகா (கனடா) ஆசை அத்தை, மேனகா அத்தை, தண்ணிமாமா, சித்தா, குட்டிமாமா, குட்டி அத்தை ஆகியோர் சகல கலைகளும் கற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.
சித்தா குடும்பம்.
"சிவபதி" 14/1, விதானை வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு நீதிப் பொறிமுறையில் வெளிநாட்டு உதவிக்கு வரவேற்பு

## சட்டத் தரணிகளின் கூட்டமைப்பு தெரிவிப்பு

இலங்கையின் இறுதிப்போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு அமைக்கப்படும் உள்நாட்டு நீதிப் பொறிமுறைக்குப் பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள், சட்டவாளர்கள், விசாரணையாளர்கள் மற்றும் வழக்குத்தொடுநர்களின் உதவியைத் தாம் வரவேற்பதாக இலங்கை சட்டத்தரணிகள் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் இலங்கைசட்டத்தரணிகள் கூட்டமைப்பின் தலைவர் லால் விஜயநாயக்க தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையின் இறுதிப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக, அமைக்கப்படும் உள்நாட்டு நீதிப்பொறிமுறையில் பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள், சட்டத்தரணிகள், விசாரணையாளர்கள் மற்றும் வழக்குத் தொடுநர்கள் உள்ளீர்க்கப்படவேண்டுமென அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளால், ஐ.நா மனித உரிமைகள் சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த தீர்மானத்துக்கு இலங்கையும் இணை அனுசரணை வழங்கியிருந்தது.

அத்துடன் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள நிகழாமைக்கான உத்தரவாதத்திற்கு ஆணைக்குழு, காணமற்போனோர் தொடர்பில் அலுவலகம் அமைப்பது நல்லிணக்கத்துக்கு வழி அமைக்கும் என்பதுடன் பொருளாதாரத்தைக்கட்டியெழுப்பச்சர்வதேச சமூகம் இணைந்து கொள்ளும்.

குற்றச்சாட்டுக்களுக்குப் பாரபட்சமற்ற விசாரணைகளைச் செய்வதற்கு இலங்கையின் அரசியல் அமைப்புக்குள் சுயாதீன மற்றும் நடுநிலைமையான நீதிப்பொறிமுறையை அமைப்பதுடன் சட்ட ஆலோ சகர் அலுவலகம் நிறுவுவதனை நாம் வரவேற்கின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட முன்னைய தீர்மானங்கள் சர்வதேச விசாரணைக்குள் இலங்கையைத் தள்ளியிருக்கும். எனினும் தற்போதைய தீர்மானம் இலங்கைக்குச் சாதகமானது. அதனை நாம் வரவேற்கின்றோம்–என்றார். (த–வ)

### மயக்கமடைந்த

வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டிருந்தனர். அவர்களுக்குத் தொடர்ந்தும் வைத்திய சாலைகளில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது என்று சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ரோஹண புஷ்பகுமார நேற்றுத் தெரிவித்தார். (இ)

### மேன்முறையீட்டு

ஜனாதிபதித் தேர்தலின்போது, பரப்புரை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகக் குழுவொன்று நியமிக்கப்பட்டு, அதனூடாகவே பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், தான் வேட்பாளர் என்பதனால் இதில் தனக்குத் தொடர்பில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அரச தொலைக்காட்சி ஒன்றில் விளம்பரங்களைப் பிரசுரித்தமைக்கு கட்டணம் வழங்காமை தொடர்பிலேயே மகிந்த ராஜபக்சவிடம் விசாரணையை மேற்கொள் ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த–வ)

### அரியாலை

யாழ்.பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். யாழ். நீதிமன்ற நீதவான் பெ.சிவகுமார் சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமையைப் பார்வையிட்டு விசாரணையை மேற்கொண்டார். யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட மருத்துவ நிபுணர் உ.மயூரதனும் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு ஆய்வை மேற் கொண்டார். பின்னர் அங்கிருந்து எடுக்கப்பட்ட மனித எச்சங்கள் பகுப்பாய்வுக்காகச் சட்ட வைத்திய அதிகாரியிடம் கையளிக்கப்பட்டன.

அங்கு மனித மண்டையோடு உள்ளிட்ட எலும்புகள் மற்றும் பெண்களின் ஆடைகள் உள்ளிட்ட பொருள்கள் காணப்படுகின்றமை தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தார். அதனை அடுத்து குறித்த பிரதேசத்துக்குச் சென்ற யாழ்.பொலிஸார் விசாரணை ஆரம்பித்தனர்.

இப்பிரதேசம் முன்னர் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசம் எனவும், இன்னும் ஆள்களற்ற பிரதேசமாகவே இந்த இடம் காணப்படுவதனால் சட்டவிரோத மணல் அகழ்வுகள் இடம்பெறுகின்றன என்று அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். இவ்வாறு மணல் அகழ்வு இடம்பெறும் பிரதேசத்திலேயே இந்த மண்டையோடு உள்ளிட்ட எலும்புகள், பொருள்கள் இனம் காணப்பட்டுள்ளன.

எலும்புகளுடன் பெண்களின் வெளி, உள் ஆடைகள், 2 கைப்பைகள், 2 விதமான செருப்புக்கள், பெண் பிள்ளைகள் பாவிக்கும் சிறிய பேஸ் என்பன காணப்படுகின்றன. அந்தப் பேசினுள் பென்சில், பேனா, சில்லறைப் பணம் என்பன காணப்படுகின்றன. இதனடிப்படையில் 2 பெண்கள் அந்த இடத்தில் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அந்த இடம் சுடலை அல்ல என்பதனாலும் மண்டை ஓட்டில் ஓட்டை காணப்படுவதாலும் அவர்கள் கொல்லப்பட்டார்களா என்ற சந்தேகம் ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது. (த–4–10)

### போராட்டத்தை

விடுவிக்குமாறு கோரி தமிழ் அரசியல் கைதிகள் கடந்த திங் கட்கிழமை முதல், நாடு முழுவதிலும் உள்ள 14 சிறைச்சாலைகளில் சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். அமைச்சர்கள் வாக்குறுதிகள் வழங்கிய போதும் அதனை ஏற்றுக்கொள்ளாமல், ஜனாதிபதி நேரடியாக வாக்குறுதி வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை, ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் பேச்சு நடத்தியிருந்தார். இதன்போது ஜனாதிபதி இந்த மாதம் 31 ஆம் திகதிக்கும் அடுத்த மாதம் 7 ஆம் திகதிக்கும் இடையில் அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்தில் நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். இருப்பினும் நேற்று முன்தினம் இதனைத் தமிழ் அரசியல் கைதிகள் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்நிலையில் நேற்றையதினம் முற்பகல் 11 மணியளவில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் தமிழ் அரசியல் கைதிகளை மகசின் சிறைச்சாலையில் சென்று சந்தித்திருந்தனர்.

இதற்கிடையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த மாதம் 31 ஆம் திகதிக்கும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கும் இடையில் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக எழுத்துமூலம் சிறைச்சாலைகள் ஆணையாளர் ஊடாகத் தமிழ் அரசியல் கைதிகளுக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியை ஏற்றுக் கொள்ளுமாறும், தான் தொலைபேசியில் ஜனாதிபதியுடன் கதைத்தபோது, இந்த மாதம் 31 ஆம் திகதிக்கும் நவம்பர் 7 ஆம் திகதிக்கும் இடையில் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர் என்றும், கடும் குற்றங்கள் செய்தவர்கள் என்று அரசு கருதுபவர்கள் மாத்திரம் அடுத்த கட்டமாக விடுவிக்கப்படுவார்கள் என்றும் ஜனாதிபதி தன்னிடம் தெரிவித்ததாக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் அரசியல் கைதிகளிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற வைப்போம் என்றும், தம்மை நம்பி உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிடுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் கோரியுள்ளார். இதன்போது தமிழ் அரசியல் கைதிகள், இந்த உறுதிமொழி செயற்படுத்தப்படும் என்ற உத்தரவாதத்தைக் கோரி நிற்பதாகத் தெரிவித்ததுடன், உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தற்காலிகமாக அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை கைவிடுவதாகத் தெரிவித்துள்ளனர்.

நவம்பர் மாதம் 7 ஆம் திகதிக்குள் விடுவிக்கப்படவில்லையாயின் மீண்டும் போராட்டம் தொடரும் என்று தெரிவித்த தமிழ் அரசியல் கைதிகள் இது தொடர்பில் ஜனாதிபதியிடம் கையளிக்க மனு ஒன்றையும் எதிர்க்கட்சித் தலைவரிடம் ஒப்படைத்தனர்.

இதேவேளை, நவம்பர் 7 ஆம் திகதிக்குள் நடவடிக்கை எடுக்கச் செய்யப்படும் என்றும் அதற்குள் அரசு நடவடிக்கை எடுக்கத் தவறினால், தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக நவம்பர் மாதம் 7 ஆம் திகதிக்குப் பின்னர் போராட்டங்கள் நடத்தப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (த–5)

### யாழ்.மாணவன்

அமிழ்தன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழையமாணவராவார். இந்த விபத்துச் சம்பவத்தில் இன்னுமொரு மாண வன் காயமடைந்துள்ளார்.

குறித்த இரு மாணவர்களும் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தபோது எதிரே வந்த ஜீப் வண்டியுடன் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்தை அடுத்து இருவரும் வைத்தியசாலைக்குக் கொண்டுச் செல்லப்பட்டபோதிலும், அதில் அமிழ்தன் என்பவர் உயிரிழந்துவிட்டார். மற்றுமொருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் கூறினர். (த–10)

### திருட்டுக்

ஆராய்ச்சி நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. பனை ஆராய்ச்சி நிலையத்துக்கு முன்பாகக் கடலேரிப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பெரிய விளம்பரத் தட்டியை வீழ்த்தி அதிலிருந்த இரும்புக் குழாய்களை அறுத்துக் கொண்டிருந்தவேளை சாவகச்சேரிப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத் துள்ளது. அதனையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் குழாய்களை அறுத்துக் கொண் டிருந்த எட்டுப் பேரைக் கைது செய்ததோடு அவர்கள் பயன்படுத்திய இரு வாகனங்களையும் கைப்பற்றிப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைகளை மேற்கொண்டபோதே அவ்வாறு திருட முற்பட்டவர்கள் இராணுவத்தினர் என்பது தெரியவந்தது. அது தொடர்பான தகவல் இராணுவத்தினருக்குப் பறந்துள்ளது.

இதனை அடுத்து மேற்படி இராணுவத்தினர் பணியாற்றிய முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர், மற்றும் இராணுவப் பொலிஸார் எனப் பெருமளவானோர் சாவகச்சேரி பொலிஸ் நிலைய வளாகத்தில் குவிந்தனர். 8 இராணுவச் சிப்பாய்களையும் தம்மிடம் ஒப்படைக்குமாறும் அவர்களுக்கு எதிராக இராணுவ நடைமுறைக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர்கள் கோரியதாகத்தெரிய வருகின்றது.

எனினும் இந்தச் சம்பவமானது குடியியல்சார் வழக்கு என்பதனால் பொலிஸாரே நடவடிக்கையை மேற்கொள்ளமுடியும் எனப் பொலிஸார் தெரிவித்து, இராணுவத்தினர் 8 பேரையும் நீதிவானிடம் முற்படுத்தவுள்ளதாகவும் கூறப்பட்டது. அதன் பின்னர் அந்த 8 இராணுவத்தினரும் சாவகச்சேரி பதில் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டனர். அது தொடர்பில் ஆராய்ந்த பதில் நீதிவான் பொருத்தமான பொறுப்பான பிணையில் விடுவிக்குமாறு பொலிஸாருக்குக் கூறியுள்ளார். அதன்படி 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதுதவிர, திருட முற்பட்ட விளம்பரத் தட்டி நடப்பட்ட இடத்தையும் இராணுவ அதிகாரிகள் நேற்று முற்பகல் சென்று பார்வையிட்டனர். நுணாவில் சந்தியிலிருந்து நாவற்குழி வரையான சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் 20 இற்கும் மேற்பட்ட விளம்பரத் தட்டிகள் பிரதேச சபையின் அனுமதியுடன் நடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அவ்வாறு நடப்பட்டவற்றில் சுமார் 8 வரையான விளம்பரத் தட்டிகள் திருடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு திருடப்பட்ட தட்டிகளின் உரிமையாளர்கள் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் கூடியதாகவும் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு நடப்பட்ட விளம்பரத் தட்டிகள் முதலில் சாய்வான நிலையில் காணப்படுவதாகவும், சில நாள்களின் பின்னர் அவை நிலத்தில் விழுந்துவிடும் என்றும், மேலும் சில நாள்களில் அந்த விளம்பரத் தட்டிகள் இருந்த இடம் தெரியாது மாயமாகிவிடும் என்றும் பாதிக்கப்பட்டவர்களால் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு காணாமற் போனவை எவையும் இதுவரை மீட்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.குடாநாட்டில் பல இடங்களிலும் திருட்டுக்கள், கொள்ளைகள் இடம்பெற்றுவரும் நிலையில், அவற்றில் பல சம்பவங்களில் ஈடுபடுவது யார் என்பது பொதுமக்களுக்கோ பொலிஸாருக்குக்கூட இன்னும் தெரியாமல் உள்ளது. அதனால் அத்தகைய திருட்டுக்களில் பலர் கைது செய்யப்படாதிருக்கின்றனர் என்றும் கூறப்பட்டுள்ளது. எனினும் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை முன்னெடுத்து வருவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (த–4–9–105)

### பிரகீத்

ஆரம்பத்தில் இந்த முகாம் அகற்றிக்கொள்ளப்பட்டுள்ளது.

எக்னெலிகொட கடத்திச் செல்லப்பட்டு சொரிவில முகாமில் ஒப்படைத்த போது, அந்த முகாமின் பொறுப்பா ளராக பிள்ளையான் செயற்பட்டுள்ளார்.

இந்த முகாமில் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் சித்திரவதைக் குட்படுத் தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, முக்கிய அமைச்சர் ஒருவர் இந்த விசாரணைகளுக்கு இடையூறு செய்து வருவதாகவும் கூறப்படுகின்றது. (த–சி)

### தமிழ் அரசியல்

அப்பா அப்பா நீ எப்ப வருவாய்?, அம்மாவும் வேண்டும் அப்பாவும் வேண்டும் புதிய அரசே விடுதலை செய்,

இவ்வாறு நேற்றுக் கிழக்கில் தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள் கண்ணீருடன் வேண்டுகோள் விடுத்தனர்.

நல்லாட்சி அரசு தம்மைப் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யவேண்டும் என்று வலியுறுத்தி சிறைச்சாலைகளில் தமிழ் அரசியல் கைதிகள் மேற்கொண்டுவந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும், தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனை இன்றி நல்லாட்சி அரசு உடன் விடுதலை செய்யவேண்டும் என்று கோரியும் நேற்றுக் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளில் ஒரு நாள் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகளே மேற்கண்டவாறு கண்ணீருடன் வேண்டுகோள் விடுத்தனர்.

மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலய முன்றிலில் நேற்று நடைபெற்ற அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் பிற்பகல் ஒரு மணியுடன் நிறைவுக்கு வந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழியையடுத்து சிறைச்சாலைகளில் தமிழ் அரசியல் கைதிகள் தங்களது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நேற்றுத் தற்காலிகமாகக் கைவிட்டுள்ளனர்.

இந்தநிலையில், நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றுவந்த உணவு தவிர்ப்புப் போராட்டமும் பிற்பகல் ஒரு மணியுடன் நிறைவுபெற்றது.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி திருகோணமலை ஆளுநர் செயலகத்திற்கு அருகாமையில் நேற்று ஒரு நாள் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

தமிழர் நலன்காப்புக் குழுவினரது அழைப்பின் பேரில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் திருகோணமலை வாழ் அனைத்து மக்கள் சமூகத்தினரும் பங்கேற்றனர்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி. தண்டாயுதபாணி, கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜே.ஜெனார்த்தனன் மற்றும் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய நோயல் இம்மானுவல் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகளும், காணாமல் ஆக் கப்பட்டோரின் உறவுகளும் இந்தப் போராட்டத்திற்கு வலுச் சேர்த்திருந்தனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2030ஆம் ஆண்டு சீனாவில் 110 அணுமின் நிலையங்கள்!

2030ஆம் ஆண்டில் 110 அணுமின் உற்பத்தி நிலையங்களை உருவாக்க சீனா திட்டமிட்டுள்ளது என்று பீஜிங்கில் இருந்து வெளியாகும் சீனா டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதற்காக சீனாவால் 78 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்யப்படவுள்ளது என்று அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

2020க்குள் மின் உற்பத்தியை 58 ஜிகா வாட்ஸ் அளவுக்கு உயர்த்த சீனா திட்டமிட்டுள்ளது என்றும், 2030ஆம் ஆண்டில் 110க்கும் அதிகமான அணு மின்சக்தி நிலையங்களை உருவாக்கும் எனவும் சீனா டைம்ஸ் பத்திரிக்கை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் தற்போது 100 அணு மின்சக்தி நிலையங்கள் உள்ள நிலையில், அமெரிக்காவையும் முந்தும் திட்டத்தை செயற்படுத்த சீனா தயாராகிவிட்டது என்று அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

தற்போது 23 அணு மின்சக்தி நிலையங்கள் சீனாவில் உள்ள நிலையில், தனது புதிய 1100 மெகாவாட் அணு மின் தொழில்நுட்பத்தை விற்க சீனா தீவிர முயற்சி எடுத்து வருகிறது. (ற)



வடகிழக்கு நைஜீரியாவில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் குண்டுதாரி உட்பட 21 பேர் உயிரிழந்துள்ளனர், பலர் படுகாயமடைந்துள்ளனர் என்று அந்த நாட்டு தேசிய அவசரநிலை மேலாண்மை முகாமை தெரிவித்துள்ளது.

அதேவேளை கடந்த வியாழக்கிழமையும் போர்னா மாநிலத்தில் மசூதி மற்றும் குடியிருப்புக் கட்டம் ஆகியவற்றின் மீதும் பல்வேறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. கடந்த இரு தினங்களில் மேற்கொள்ளப்பட்ட வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் மொத்தம் 46 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் மற்றும் மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மொஹமட் புஹாரி கடந்த மே மாதம் ஜனாதிபதியாக பதவியேற்ற நாள் முதல் நைஜீரியாவில் போகோ ஹராம் கிளர்ச்சியாளர்களின் தாக்குதல் தீவிரமடைந்துள்ளது. இதுவரை சுமார் ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். (ற)

## பாவங்களைப் போக்குவதற்கு மகனைக் கொன்ற பெற்றோர்

நியூயோர்க், ஒக்.18

அமெரிக்காவில் தேவாலயம் ஒன்றின் ஆலோசனை அமர்வின்போது பாவத்தைப் போக்குவதற்காக பெற்றோர்கள் தாக்கியதில் 19 வயது இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

நியூயோர்க்கில் இருக்கும் கிறிஸ்தவ தேவாலயத்தில் இடம்பெற்றிருக்கும் இந்த சம்பவத்தில் லூகாஸ் லியோனாட் என்ற இளைஞன் பல மணிநேரங்கள் இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார். தனது பாவங்களுக்கு வருந்துவதாகக் கூறி மன்னிப்புத் தேடும் சடங்கு ஒன்றிலேயே அந்த இளைஞன் தாக்கப்பட்டுள்ளான். இதன்போது அந்த இளைஞனின் இளைய சகோதரரும் தாக்கப்பட்டிருந்தார் என்றும், அவருக்கு உயிராபத்து எதுவும் இல்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கொல்லப்பட்ட இளைஞனின் 65 வயது தந்தை புரூஸ் லியனார்ட் மற்றும் 59 வயது தாய் டெபோரா லிய னாட் ஆகியோர் மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கும் நிலையில், அதனை அவர்கள் மறுத்துள்ளனர். லூகாஸின் 33 வயது சகோதரி மற்றும் மூன்று தேவாலய உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

படுகாயத்துக்கு உள்ளான நிலையில் அந்த இளைஞன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போது அவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இல்லக்கானதாக பெற்றோர் பொய் கூறி உள்ளனர். எனினும் அவர் உடல் உறுப்புகள் கூர்மையான ஆயுதங்களால் தாக்கப்பட்டிருந்ததை மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர். (ற)

## அடுத்த ஆண்டு இறுதிவரை ஆப்கனில் அமெ. படைகள்

### ஜனாதிபதி ஒபாமா தெரிவிப்பு

வொஷிங்டன், ஒக்18

அடுத்த ஆண்டு இறுதிவரை 9 ஆயிரத்து 800 அமெரிக்கப் படையினர் ஆப்கனில் தங்களது பாதுகாப்புப் பணிகளைத் தொடர்வார்கள் என அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை வொஷிங்டனில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஆப்கனில் இன்னமும் பாதுகாப்பு நிலைமை திருப்திகரமாக இல்லை. அந்த நாட்டின் அரசுப் படைகள் தலிபான்களை எதிர்த்து முழுவீச்சில் போரிடும் அளவுக்கு வலுவடைய வேண்டியுள்ளது. இந்த நிலையில் காபூல் உள்ளிட்ட நகரங்களிலும், ஆப்கானிஸ் தானின் கிராமப்புறங்களிலும் தலிபான் படையினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.



இவற்றைக் கருத்தில்கொண்டு அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள 9 ஆயிரத்து 800 அமெரிக்கத் துருப்புகள், அடுத்த ஆண்டு இறுதி வரை தங்களது பணிகளைத் தொடர்வார்கள். அதன் பின்னர் அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 500 ஆக குறைக்கப்படும் - என்றார். (ற)

## ஐ.எஸ். ஆண்டு வருமானம் 320 மில்லியன் பவுண்ட்ஸ்



லண்டன், ஒக். 18

சிரியா மற்றும் ஈராக்கில் நிலைகொண்டுள்ள தீவிரவாத அமைப்பான ஐ.எஸ். தீவிரவாதக் குழுவின் ஆண்டு வருமானம் 320 மில்லியன் பவுண்சைத் தாண்டும் என ஆய்வொன்றில் தெரிய வந்துள்ளது.

ஈராக் மற்றும் சிரியாவின் ஒட்டு மொத்த எண்ணெய்க் கிணறுகளையும் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஐ.எஸ். தீவிரவாதிகள் நாள் ஒன்றுக்கு 40 ஆயிரம் பீப்பாய்கள் வரை எண்ணெய் உற்பத்தி செய்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் தினமும் ஒரு மில்லியன் பவுண்டு வருவாய் ஈட்டுகின்றனர் என்றும், கிளர்ச்சிப் படைகளின் தலைவர்களே ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் இருந்து எண்ணெய் வாங்க நிர்பந்திக்கப்படுகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

அதேவேளை, மின்சாரக் கட்டணம், தொலைபேசிக் கட்டணம் மற்றும் வணிகர்கள் நடத்தும் ஏற்றுமதி இறக்குமதிக்கான வரி உள்ளிட்டவையில் இருந்து ஐ.எஸ். தீவிரவாதிகள் வருமானம் ஈட்டுகின்றனர்.

ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு நூற்றுக்கணக்கான எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன என்று அமெரிக்க கூட்டுப் படைகளின் அதிகாரிகளே உறுதி செய்துள்ளனர். (ற)

## சிறுவர்கள் மத்தியில் வன்முறைக் கலாசாரம்

### ஆஸ்திரேலியப் பிரதமர் கவலை



மெல்பேர்ன், ஒக்.18

சிறுவர்களிடமும் வன்முறைக் கலாசாரம் பரவி வருகின்றமை கவலை அளிக்கின்றது என்று ஆஸ்திரேலியப் பிரதமர் மால்கம் டர்ன்புல் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கான்பெரா நகரில் நடைப்பெற்ற தேசிய வன்முறை தடுப்பு மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சமூகத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு பொலிஸாருக்கு உள்ளது. அதே சமயம், அனைத்து இடங்களிலும் அனைவரையும் அவர்களால் பாதுகாக்க இயலாது. தற்போது, சிறுவர்கள் கூட, வன்முறைக் கலாசாரத்துக்குப் பலியாகி வருவது வேதனை அளிக்கிறது. இத்தகைய போக்கைத் தடுக்க வேண்டும். நாம் எமது அணுகு முறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

தீவிரவாதத்துக்கெதிரான எங்களுடைய போரில், இஸ்லாமிய சகோதரர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும். சக மனிதர்களுடன், பரஸ்பரம் மரியாதையுடன் பழகுவதில் தான் ஆஸ்திரேலியாவின் மதிப்பு அடங்கியுள்ளது. எந்த விதத்திலும், வன்முறை வளராத வகையில், அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும். - என்றார்.

அண்மையில், பொலிஸ் அலுவலக ஊழியர் ஒருவரை, 15 வயதுச் சிறுவனொருவன் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்தமைக்கும் பிரதமர் கடும் கண்டனம் வெளியிட்டிருந்தார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய போட்டியில் பதக்கம் வென்ற மாணவர்களுக்கு நேற்றுக் கல்லூரிகளால் பெரும் எடுப்பில் கௌரவம்





யாழ்ப்பாணம், ஒக். 18
இந்தியாவின் புனேயில் நடைபெற்ற இளையோர் பொதுநலவாய போட்டியில் பளுதூக்கலில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்து ஆண்கள் பிரிவில் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்த யாழ்.மத்திய கல்லூரி மாணவன் விஸ்ணுகாந்தும் வெண்கலம் வென்ற யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் மாணவி ஜெ.டினோஜாவும் குறித்த கல்லூரிகளால் நேற்று விழா எடுத்துக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

**விஸ்ணுகாந்துக்கான கௌரவிப்பு**
பொதுநலவாய பளுதூக்கலில் தங்கம் வென்ற யாழ். மத்திய கல்லூரியின் மாணவன் விஸ்ணுகாந்தும் அவரது பயிற்றுவிப்பாளர் விதனும் யாழ். நகரிலிருந்து மத்திய கல்லூரி வரை திறந்த வாகனத்தின் மூலம் அழைத்துச்செல்லப்பட்டுகௌரவிக்கப்பட்டனர்.
குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சர் குருகுலராஜா கலந்து கொண்ட அதேநேரம் விருந்தினர்களாக வடமாகாண கல்விப்பணிப்பாளர் எஸ்.உயதகுமார், யாழ். மத்திய கல்லூரியின்பழைய மாணவர்சங்கத்தின் தலைவர் தமிழழகன், கோப்பாய் பிரதேச செயலர் பிரதீபன், உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்தயாளன், கோட்டக் கல்வி அதிகாரி சண்முககுமார், யாழ். கல்வி வலய பணிப்பாளர் தெய்வேந்திரராஜா உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

**டினோயாவுக்கான கௌரவிப்பு**
பொதுநலவாய பளுதூக்கலில் வெண்கலம் வென்ற வேம்படி மகளிர் உயர்தரபாடசாலையின்மாணவி டினோயா பாடசாலையின் வாசலில் இருந்து பிரதான மண்டபம் வரை பான்ட் வாத்தியத்துடன் அழைத்துச் செல்லப்பட்டு பாடசாலையின் அதிபர் தலைமையில் கௌரவிக்கப் பட்டார்.
குறித்தகௌரவிப்புநிகழ்வில்பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாகயாழ்.மத்தியகல்லூரியின் அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன், உடற்கல்வி உதவிகல்விப் பணிப்பாளர் சண்தயாளன், கோட்ட கல்வி அதிகாரி சண்முககுமார், யாழ். கல்வி வலய பணிப்பாளர் தெய்வேந்திரராஜா ஆகியோர் கலந்து கொண் டனர். (ம-23)

## இன்றைய மோதல்கள்

**மைக்கல் வி.கழகத் தொடர்**
மாங்குளம், ஒக். 18
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் வடமாகாண ரீதியாக நடத்தப்பட்டுவரும் 7வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.
இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வட்டக் கச்சி செந்தளிர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா அணியும் பிற்பகல் 4மணிக்கு வல்வை ஆதிசக்தி அணியை எதிர்த்து மன்னார் விடத்தல் தீவு ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-422)

**வவுனியா மாவட்ட உதைபந்தாட்டத் தொடர்**
வவுனியா உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்குஇடம்பெறும்ஆட்டத்தில் யூனிபைட் அணியை எதிர்த்து ஈகிள்ஸ் அணி மோதவுள்ளது.

**யாழ். மத்தியின் கூடைப்பந்தாட்டத் தொடர்**
யாழ். மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையினால் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் பொ.விபுலானந்தன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்படும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் லீக் ஆட்டங்கள் யாழ்.மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

**உதைபந்தாட்டச் சங்கத் தொடர்**
இலங்கை உதைபந்தாட்ட சங்கம் நடத்திவரும் லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதில் வதிரி டைமன்ஸ் அணியை எதிர்த்து அம்பாறை ஈஸ்ரன் யுத் அணி மோதவுள்ளது. (ம-23)

## தேசியத்தில் தங்கம் வென்ற சென்.அன்ரனிஸ் வீரர்கள் கல்லூரிச் சமூகத்தினால் கௌரவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஒக். 18
தேசியமட்ட உடற்பயிற்சிப் போட்டியில் 19வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் தங்கம் வென்ற ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி அணி வீரர்கள் கல்லூரி சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.
கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குகல்லூரியின்பிரதானமண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட் டுத்துறை அமைச்சின் செயலாளர் இரவீந்திரனும், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்விப்பணிப் பாளர் எஸ்.உதயகுமார், கௌரவ விருந்தினர்களாக மரியன்னை பேராலய பங்குத்தந்தை அருட்பணி ஆர்.எஸ் சகாயநாயகம், வேலணை கல்வி வலய பணிப்பாளர்ரி.யோண்குயின்ரஸ்,வடமாகாணஉதவிப்பணிப்பாளர் சந்தியபாலன்,ஊர்காவற்றுறைகோட்டக் கல்விப் பணிப்பாளர் உட் படப் பலரும் கலந்து கொண்டனர். (ம-23)

## சொந்தக் கிண்ணத்தை கைப்பற்றியது ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி

யாழ்ப்பாணம், ஒக். 18
மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் ஏற்பாட்டில் 17வயதுக்குஉட்பட்ட இருபாலாருக்குமான லீக்முறையிலானகூடைப்பந்தாட்டத் தொடரின்ஆண்கள்பிரிவில்மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையே சொந்தக் கிண்ணத்தை கைப்பற்றி அசத்தியுள்ளது.
நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் எஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதிக் கொண்டது. நான்கு சுற்றுக்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் முதல் சுற்றை 11:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது ஏஞ்சல். இரண்டாவது சுற்றையும் 17:5 என்ற புள்ளிகளில் கைப்பற்றி ஆதிக்கத்தை தக்கவைத்தது ஏஞ்சல். மூன்றாம் சுற்றில் இரண்டு அணிகளும் மாறிமாறி புள்ளிகளைக் குவித்தனர். இருப்பினும் அந்த செற்றையும் 25:21 எனக் கைப்பற்றியது ஏஞ்சல். நான்காவதும் இறுதியானதுமான செற் 27:6 என்ற அடிப்படையில் மீண்டும் ஏஞ்சலிடம் செல்ல முடிவில் 80:42 என்ற புள்ளிகளின்அடிப்படையில்வெற்றிபெற்று சொந்தத் தொடரில் நடப்பு வருடத்தின் சம்பியனானது. ஆட்டநாயகனாக ஏஞ்சலின் சயிந்திரா தெரிவான அதேநேரம் தொடராட்ட நாயகனாக சென்.பற்றிக்ஸின் சாள்ஸ் தெரிவானார். (ம-23)

## அல்இக்பாலிடம் வீழ்ந்தது அல்மாதர்

யாழ்ப்பாணம், ஒக். 18
வவுனியா உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டத் தொடரின்ஆட்டங்கள்முஸ்லிம்மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அல் மாதர் அணியை எதிர்த்து அல் இக் பால் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஓர் கோலைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்து. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் அல்இக்பால் அணி 7:6 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## ஸ்ரார் வி.கழகத்தின் இறுதியாட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 18
அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 8ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த கழகத்தால் யாழ். மாவட்ட ரீதியாக ஏ, பி என இரு பிரிவுகளாக நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.
இரவு 7மணிக்கு இடம்பெறும் 'பி' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் ஏ பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து இளவாலை மத்திய அணி மோதவுள்ளது. குறித்த நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)

## யாழ்.இந்து, மல்லாவி மத்தி அணிகளுக்கு இலகுவெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 18
யாழ்.மத்தியகல்லூரியின்மாணவர் முதல்வர்சபையினால்வடமாகாண பாடசாலைகளுக்குஇடையில்பொ.விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் இருபாலருக்குமான கூடைப்பந் தாட்டத் தொடரின் லீக் ஆட்டங்கள் யாழ்.மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத்திடலில்இடம்பெற்றுவருகின்றன.
இந்தத்தொடரில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் யாழ். இந்துக்கல்லூரிஅணி99:28என்றபுள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் மல்லாவி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் மல்லாவி மத்திய கல்லூரி அணி 67:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுகளுக்குப் படுதோல்வி
# இன்னிங்ஸால் இலங்கை வெற்றி

இலங்கை மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து கருணாரத்ன, சந்திமல் இருவரின் சதத்தின் உதவியுடன் சகல இலக்குகளையும் இழந்து 484 ஓட்டங்ளைக் குவித்தது. பந்து வீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக பிஸ்கு 4 இலக்குகளையும், ரெய்லர் 2 இலக்குகளையும், றோச், கோல்டர், கபிரியேல், சாமுவேல்ஸ் நால்வரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த தீவுகளுக்கு ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. இதனால் 251 ஓட்டங்களில் சுருண்டு இலங்கையைத் துடுப்பெடுத்தாட அழைக்கத் தகுதியற்ற நிலையில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக மீண்டும் துடுப்பெடுத்தாடியது. 67–2 என்ற நிலையில் இருந்து ஆட்டத்தின் நான்காம் நாளான நேற்றைய தினம் ஆட்டம் ஆரம்பமானது. பிராவோ 20 ஓட்டங்களும் பிஸ்கூ 6 ஓட்டங்களும் எடுத்திருந்த நிலையில் நேற்றுக் களமிறங்கினர். பத்து ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் பிஸ்கூ. கேரத் வீசிய ஒரே பந்தில் எல்.பி.டபிள்யு. முறையில் ஆட்டமிழந்து சென்றார் சாமுவேல்ஸ். மறுமுனையில் பிராவோவின் இன்னிங்ஸும் நிறைவுக்கு வர தீவுகள் 88–5. இன்னிங்ஸ் தோல்வியை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருந்த தீவுகளுக்கு ஆறுதலளித்தார் பிளக்வூட். அவ்வப்பொழுது அதிரடிகளைக் காட்டி அரைச்சதமும் கடந்தார். ஒருமுனையில் ஏற்பட்ட இலக்குச்சரிவால் தோல்வி என்பது உறுதியான போதிலும், இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க இறுதிவரை போராடினார் பிளக் வூட். 92 ஓட்டங் களுடன் பிளக் வூட்டின் இன்னிங்ஸ் முடிவுக்கு வர இலங்கை இன்னிங்ஸாலும் 6 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது. பந்துவீச்சில் இலங்கை சார்பாக கேரத் 4 இலக்குகளையும், பிரசாத், சிறிவர்தன இருவரும் தலா 2 இலக்குகளையும், பிரதீப் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)






## ஆமிருக்கு அபராதம்

உள்ளூர் ஆட்டங்களில் விளையாடி வரும் பாகிஸ்தான் அணியின் இளம் வீரர் ஆமிருக்கு அந்த நாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை 150 சதவீதம் அபராதம் விதித்துள்ளது.

இங்கிலாந்து அணிக்கு எதிராக லண்டனில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் அணி வீரர்களான ஆமீர், ஆசிப், பட் ஆகியோர் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக ஐந்தாண்டு காலத் தடை விதிக்கப்பட்டது. தடைக் காலம் முடியும் முன் வீரர்கள் தங்கள் உள்நாட்டுத் தொடர்களில் விளையாடலாம் என்று ஐ.சி.சி. தனது விதிமுறையில் மாற்றம் செய்ததன் அடிப்படையில், ஆமீர் உள்நாட்டுத் தொடர்களில் விளையாடி வருகிறார். அவ்வாறு ஓர் ஆட்டத்தில் ஆமீர் விளையாடிக் கொண்டிருந்த போது, இக்பால் என்ற வீரருடன் தகராறு ஏற்பட்டது. இதன் உச்சக் கட்டமாக இக்பால், ஆமீரைப் பார்த்து திருடன் என்று கூறியதாக தெரிகிறது. இதற்கு ஆமீரும் பதிலுக்கு இக்பாலைக் கடுமையாகத் திட்டியுள்ளார். குறித்த விடயம் தொடர்பாக பரிசீலனை செய்த பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஆமிருக்கு 150 சதவீதம் அபராதம் விதித்துள்ளது. இக் பாலுக்கு 50 சதவீதம் அபராதம் விதிக்கப் பட்டுள்ளது. (ம)

## மூன்றாவது ஆட்டம் இன்று

இந்தியா தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

ராஜ்கோட் மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. ஏற்கனவே முடிவடைந்துள்ள முதல் இரண்டு ஆட்டங்களிலும் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பதிவுசெய்துள்ள காரணத்தினால் இந்த ஆட்டம் இரண்டு அணியினருக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. கடந்த ஆட்டத்தில் டோனி தனித்து நின்று வென்றுகொடுத்தமையால் விமர்சனப் பிரியர்களின் பார்வை தற்பொழுது கோக்லியிடமும் தவானிடமும் திரும்பியுள்ளது. இதனால் இன்று கோக்லியும், தவானும் தம்மை நிரூபிக்க முனைப்புக் காட்டுவார்கள். (ம–23)



# தப்பிப் பிழைத்தது பாகிஸ்தான்
# ஆட்டத்தின் முடிவு சமநிலையானது



பாகிஸ்தான் – இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதல் டெஸ்ட் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. மலிக் இரட்டைச்சதத்தையும் சபிக் சதத்தையும் விளாச 523–8 என்ற நிலையில் இருந்த பொழுது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது பாகிஸ்தான். பதிலுக்கு முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து நான்காம் நாள் முடிவில் 569–8 என்ற நிலையில் இருந்தது.

ரசிட் 6 ஓட்டங்களுடனும் புரோட் ஓட்டங்கள் எதனையும் பெறாமலும் ஐந்தாவது நாளுக்காகக் களமிறங்கினர். 12 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் ரசிட். இங்கிலாந்து 598–9 என்ற நிலையில் இருந்தபொழுது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தார் அணித் தலைவர் குக்.


இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கியது பாகிஸ்தான். மக்சூட்டை போல்ட் செய்ததன் மூலம் இலக்குச் சரிவை தொடக்கி வைத்தார் அண்டர்சன். முதல் இன்னிங்ஸில் இரட்டைச்சதம் விளாசிய மலிக் இரண்டாவது இன்னிங்ஸில் ஓட்டங்கள் எதனையும் பெறாமல் டக்கில் வெளியேறினார். ஙபீஸ் ரண் அவுட் செய்யப்பட பின்னிலை பெற்றிருந்த 75 ஓட்டங்களை சமன் செய்வதுக்குள்ளேயே 3 இலக்குகளை இழந்தது பாகிஸ்தான். யுனிஸ் கானும் மிஸ்பாவும் சிறிது நேரம் நிலைத்து [illegible]டன் ஆட்டமிழந்தார் மிஸ்பா. 5 ஓட்டங்களால் அரைச்சதத்தை 5 ஓட்டங்களால் தவறவிட்டார் யுனிஸ் கான். பின்வரிசை வீரர்கள் எவரும் ஒற்றை இலக்கத்தை தாண்ட வில்லை. எதிர்பாராத விதமாக 173 ஓட்டங்களில் சுருண்டது பாகிஸ்தான்.

இங்கிலாந்துக்கு வெற்றியிலக்காக 99 ஓட்டங்கள் மட்டுமே. எஞ்சியிருந்தது 11 பந்துப்பரிமாற்றங்கள். அடித்தாடுவதுக்காக ஆரம்ப வீரர்களாக களமிறங்கினர் குக் மற்றும் பட்லர். 29 ஓட்டங்களில் இருவரும் பவிலியனுக்கு சென்றுவிட்டனர். ரூட் இடையிடையே பவுண்டரிகளை அனுப்பிக்கொண்டிருந்தார். ஸ்டோக்ஸ், பரிஸ்ரவ் பெரிதாக இல்லை. 11 பந்துப்பரிமாற்றங்களின் முடிவில் 74–4. மொத்தத்தில் தப்பிப்பிழைத்தது பாகிஸ்தான். ஆட்ட நாயகனாக குக் தெரிவானார். (ம)

## சரிந்தது சங்காவின் சாதனை

பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் இங்கிலாந்து அணித் தலைவர் குக் 263 ஓட் டங்களை விளாசிய தன் மூலம் பாகிஸ்தானுக்கு எதிரான அதிகபட்ச தனிநபர் ஓட்ட எண்ணிக்கையில் சங்கா வின் சாதனையை முறியடித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிராக அதிகபட்ச ஓட்டங்களை எடுத்த வீரர்கள் பட்டியலில் 278 ஓட்டங் களுடன் வில்லியர்ஸ் முதலிடத்தில் உள்ளார். 263 ஓட்டங்களுடன் குக் இரண்டாவது இடத்தில் உள்ளார். தென்னாபிரிக்காவின் சிமித் 234 ஓட்டங்களுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார். நான்காவது இடத்தில் சங்காவும் ஐந்தாவது இடத்தில் மக்கலமும் உள்ளனர். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHEMISTRY
A/L 2016 DAY CLASSES
Sectional Classes
அயன் சமநிலை
செவ்வாய்,வியாழன்
மாலை 5.00 - 6.00
ஆரம்பம்: 22.10.2015 வியாழன்
T.SIVAKUMAR B.Sc, PGDE
NEW SCIENCE WORLD
Navalar Road -Brown Road Junction.
Jaffna.

# அரையிறுதியைத் தவறவிட்டார் தீபிகா



அமெரிக்காவில் நடைபெற்று வரும் ஸ்குவாஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர்பிரிவின்காலிறுதி ஆட்டத்தில்தோல்வியடைந்து அரையிறுதியை தவறவிட்டுள்ளார் தீபிகா பலிக்கல்.

சர்வதேச ஸ்குவாஸ் தரப்படுத்தலில் உலக தரவரிசையில் 19ஆவது இடத்தில் உள்ள இந்திய வீராங்கனை தீபிகா பலிக்கல், 6ஆம் நிலை வீராங்கனை அப்டெல் காவ்யை எதிர்த்து மோதினார். விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் தீபிகா பலிக்கல் முதல் மற்றும் நான்காவது செற்களை 11:9, 11:2 என்று கைப்பற்றினாலும் இரண்டாவது, மூன்றாவது, ஐந்தாவது செற்களை 6:11, 8:11, 3:11 என்ற கணக்கில் இழந்ததன் மூலம் தோல்வியடைந்தார். (ம)

# வென்றால் இந்தியா தோற்றால் டோனியா

தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான ரி-20 தொடரைஇந்தியஅணிஇழந்ததால்இந்தியஅணித் தலைவர் டோனிமீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. சிலர் டோனியை தலைமைத்துவத்தில் இருந்து விலக வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றனர். நிலைமை இவ்வாறிருக்க டோனிக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்துள்ளார் முன்னாள் இந்திய அணித்தலைவர் கவாஸ்கர்.

டோனிதொடர்பாககவாஸ்கர்தெரிவித்ததாவது; 'தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் சிறப்பாக விளையாடாத தவான், ரெய்னா, வீராட் கோக்லி, பின்னி ஆகியோரைப் பற்றி கேள்வி எழுப்ப யாருமில்லை. பந்துவீச்சாளர்களின் செயல்திறன் குறித்தும் யாரும் கேட்கவில்லை. தோல்விக்கு எல்லா வகையிலும் டோனிதான் காரணம் என்று குற்றம்சாட்டுகின்றனர். இது முதிர்ச்சியற்ற தன்மையைக் காட்டுகின்றது. ஒரு காலத்தில் சச்சின் மாதிரி தற்பொழுது டோனிதான் அணியின் பலிக்கடாவாக உள்ளார். என்னைப் பொறுத்த வரை டோனியால் இன்னும் 3 அல்லது 5 ஆண்டுகளுக்கு தலைமைத்துவத்திலும் நீடித்து சிறப்பாக விளையாடவும் இயலும் என்று கருது கிறேன். அதுவரை அவர்தான் அணியின் தலைவர். நான் 38ஆவது வய்தில்தான் ஓய்வினை அறிவித்தேன். சச்சின் 40ஆவது வயதில் தான் ஓய்வு பெற்றுச் சென்றார். டோனியைப் பற்றி முன்வைக்கப்படும் விமர்சனங்கள் முடிவுபெற வேண்டும்.' என்றார். இதே கருத்தை மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் வீரர் லாராவும் தெரிவித்துள்ளார். (ம)

# உலகிலேயே சிறந்த ரசிகர்கள் இந்திய ரசிகர்கள் தானாம்

உலகிலேயே சிறந்த ரசிகர் பட்டாளம் என்றால் அது இந்திய ரசிகர்கள்தான் என்று வில்லியர்ஸ், பிளாஸிஸ், டுமினி உள்ளிட்ட தென்னாபிரிக்க வீரர்கள் பாராட்டியுள்ளனர்.

இந்தியா- தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையேயான 3வது ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இதற்காக இரு அணியினரும் ராஜ்கோட் வந்து சேர்ந்துள்ளனர். இந்நிலையில் தென்னாபிரிக்க வீரர்கள் மீது இந்தியர்கள் காட்டும் அன்பு வியக்க வைப்பதாகவும், தங்களுக்கு சிறந்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் தென்னாபிரிக்க அணியினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்தியரசிகர்கள்தொடர்பாகவில்லியர்ஸ்தெரிவித்ததாவது - 'ரி-20 தொடரை நாங்கள் கைப்பற்றிய போதிலும், தென்னாபிரிக்க அணி மீது இந்திய ரசிகர்கள் அன்பு காட்டி வருவது எங்களை நெகிழ வைத்துள்ளது. உலகில் எங்கு சென்றாலும் இது போன்று அன்பு செலுத்தும் ரசிகர்களை பார்க்க முடியாது. கிரிக்கெட் விளையாட்டுக்கு இந்தியரசிகர்கள்தான் சிறந்தவர்களாக உள்ளனர்' என்றார். (ம)



## அரையிறுதியில் நடால்

நடைபெற்றுவரும் சீன ரென்னிஸ் தொடரில் வாவ்ரிங்காவை மிக இலகுவாக வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார் நடால்.

குறித்த காலிறுதி ஆட்டத்தில் தரப்படுத்தலில் 7ஆவது இடத்தில் இருக்கும் நடால், 4ஆவது இடத்தில் இருக்கும் வாவ்ரிங்காவை எதிர்கொண்டார். இதில் நடால் 6:2, 6:1 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். தொடர்ந்து சரிவைச் சந்தித்து வரும் நடால், இந்த வெற்றியின் மூலம் மீண்டும் தனது பழைய நிலைமைக்கு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரையிறுதியில் நடால் சோங்காவை சந்திக்கிறார். (ம)

BEEFORT
INTERNATIONAL SCHOOL
edexcel Examination Centre No : 91398
விஜயதசமியன்று வித்தியாரம்பம்
ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலை
Play Group , LKG and UKG
- சிறுவருக்கு ஏற்ற மகிழ்ச்சியான சூழல்
- மிகவும் திறமைவாய்ந்த அர்ப்பணிப்புடன் கூடிய ஆசிரியர்கள்
- நவீன முறையிலமைந்த வசதியான வகுப்பறைகள்
- நவீன கல்வி தொழில் நுட்ப முறைகள்
- பாடத்திட்டத்துடன் கூடிய கணினி பாட நெறிகள்
- பாடத்திட்டத்துடன் கூடிய Elocution பாட நெறிகள்
- சிறுவர்க்கான இலவச மருத்துவ பரிசோதனைகள்
- விளையாட்டு நிகழ்ச்சிகள்
- கண்காட்சி, பட்டமளிப்பு மற்றும் கலைவிழாக்கள்...
22-10-2015 ம் திகதி முதல் 25-10-2015 வரை பதிவு செய்யும் மாணவர்களுக்கு அனுமதிக்கட்டணத்தில் 30% கட்டணச் சலுகை
Head Office:
கொழும்பு 13-இல 27,புனித லூசியாஸ் வீதி, கொட்டாஞ்சேனை
யாழ்ப்பாணம் இல 136,நாவலர் வீதி. Tel:0115925923 0757151707
மானிப்பாய் இல 248,யாழ் வீதி. Tel:0213200555 0776168584
திருகோணமலை இல 59A,Green Road. Tel:0262227173 0776168584

Study in Australia
Diploma / Degree / Masters Degree
* Business Management
* Computing & IT
* Hospitality Management
* Engineering
* Travel & Tourism
* Health Sciences
* Cookery
# Entry with G.C.E O/L
# Part time / Paid internships available
## IELTS Not required
# Low course fee
## Conditions Apply
Next Intake : Feb 2016
Study in USA
* Engineering
* Business Management
* Hospitality Management
* Computing &IT
# With or Without IELTS
Conditions Apply
100% Scholarships for Masters Degree in Italy
iCS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107-B 1/1,Galle Road, Colombo - 06
011 4343322 , 021 4926222 , 077 3013060

Xpllora Innovator in ICT Education
கல்வி நிறுவனம் - மானிப்பாய்
விஜயதசமியை முன்னிட்டு சிறுவர்க்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் (13.10.2015 - 25.10.2015 காலப்பகுதிக்குள் அனுமதிக்கட்டணம் 50% ஆகும்)
- Abacus வகுப்புக்கள்
- Elocution வகுப்புக்கள் (சர்வதேச தரம்)
- கணினி வகுப்புக்கள் (Computer)
- சதுரங்க வகுப்புக்கள் (Chess)
- சிங்கள வகுப்புக்கள்
- பாடசாலை பிரத்தியேக வகுப்புக்கள்
மற்றும் நடேஷ்வராலயா நுண்கலைக் கல்லூரியின் சிறுவர் மற்றும் பெரியோரிற்கான வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன....
- பரதநாட்டிய வகுப்புக்கள்
- கர்நாடக சங்கீத வகுப்புக்கள்
- கீபோட் வகுப்புக்கள் (ஓகன்)
- கிற்றார் வகுப்புக்கள்
- வயலின் வகுப்புக்கள்
- யோகாசன வகுப்புக்கள்
- கராத்தே வகுப்புக்கள்
021 3 200 555 | 077 616 8584
#248, யாழ் வீதி, மானிப்பாய்

After AL?
கற்கை நெறி ஒன்றிற்கு கட்டணம் செலுத்தி விரும்பிய கற்கை நெறிகள் அனைத்தையும் கற்றிடுங்கள்
18000/=
இச்சலுகை 19 வரை முற்பதிவுகளிற்கு:
BIT(university of colombo)
Computer Engineering
CIMA,CMA
Ms office
English
Web design
MCS
யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில்
BIT, CIMA விருதுகளை வென்ற நிறுவனம்
Type 18<Name><DateofBirth><District> & send to 772395895
வெளிநாட்டுபல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதற்கான SAT TOFLE
ITஉயர்வேலைவாய்ப்பிற்கான CISCO PHP JAVA MCSE AUTOCAD

அமெரிக்க லொத்தர் விசா
நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்
இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?
இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
பங்களாதேஸ், இந்தியா,பாகிஸ்தான் போன்ற சனத்தொகை கூடிய நாடுகள் இவ்வருடம் விண்ணப்பிக்க தகுதி இல்லாதமையால் ஆசியாவில் இலங்கையர்களுக்கான வாய்ப்புக்கள் அதிகம்
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்
அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு தினங்களில் பதிவுகள் மேற்கொள்ளப்படும்
யாழ்ப்பாணம் 0768226241
நெல்லியடி 0776699892
V2 TRAVELS
கிளிநொச்சி 0768226240
வல்வெட்டித்துறை 0776697960

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன்
ஞாயிறு சிறப்பிதழ் 18.10.2015



# பொது மன்னிப்பு ஒன்றே ஒரே வழி!

## சிறைக் கம்பிகளின் பின்னால் ஓர் உயிர்ப் போராட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது மன்னிப்பு ஒன்றே ஒரே வழி!

## சிறைக் கம்பிகளின் பின்னால் ஓர் உயிர்ப் போராட்டம்



தி.ராஜ்.

கஞ்சா கடத்திய வழக்கில் 5 இந்திய மீனவர்களுக்கு இலங்கை நீதிமன்றம் சாவுத் தண்டனை விதித்து கடந்த ஆண்டு ஓர் தீர்ப்பு வழங்கியது. அவர்களது குற்றம் நிரூபிக்கப்பட்டமையாலேயே சாவுத் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டது. இந்தியாவில் இதன் பின்னர் கொந்தளிப்பு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து அவர்கள் ஐவரையும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொதுமன்னிப்பளித்து விடுதலை செய்தார்.
அப்படியிருக்கும்போது, போதைக் பொருள் குற்றவாளிகளுக்கே பொது மன்னிப்பு அழிக்க முடியும்போது, எங்களுக்கு ஏன் பொதுமன்னிப்பளிக்க முடியாது? இதுதான் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தங்களைச் சந்தித்தபோது தமிழ் அரசியல் கைதிகள் அவரிடம் கேட்ட கேள்வி. பதிலளிக்க முடியாமல் நீதி அமைச்சர் திணறியுள்ளார்.
குற்றவாளிகள் என்று தீர்ப்பு வழங்கப்பட்டவர்களுக்கே பொது மன்னிப்பு வழங்கப்படும்போது, எந்தக் குற்றச்சாட்டுமே இல்லாமல், என்ன வழக்கு என்றே தெரியாமல் சிறையில் வாடும் எமக்கு ஏன் பொது மன்னிப்பு வழங்க உங்களால் முடியவில்லை என்று உணர்வுகள் கொப்பளிக்க தமிழ் அரசியல் கைதிகள் எழுப்பிய கேள்விக்கு நீதி அமைச்சரோ அவருடன் வந்திருந்தவர்களோ பதில் சொல்ல எத்தனிக்கக்கூட இல்லை.

**போதுமான கால அவகாசம் வழங்கிவிட்டோம்**

தமிழ் அரசியல் கைதிகள் இறுக்கமான – ஒரு முடிவைக் கண்டே தீருவோம் – என்ற நோக்குடன் கடந்த திங்கட்கிழமை உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இந்தப் போராட்டத்தை அவர்கள் திடுதிடுப்பென்று ஆரம்பிக்கவில்லை. நல்லாட்சி அரசு என்று சொல்லுகின்ற மைத்திரி அரசுக்கு போதுமான கால அவகாசத்தை வழங்கிய பின்னரே ஆரம்பித்தனர்.
ஜனவரி மாதம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதன் பின் தமது விடுதலை விரைவுபடுத்தப்படும் என்று எண்ணிய தமிழ் அரசியல் கைதிகள் காத்திருந்தனர். அரசு பலமானது இல்லை என்றும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான விவரங்களைத் திரட்ட வேண்டி இருக்கின்றது என்றும் அப்போது சாக்குப்போக்குச் சொல்லப்பட்டது.
நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்து தெளிவான பெரும்பான்மையுடன் புதிய அரசு அமைந்திருக்கின்றது. ஆனாலும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான பேச்சு எடுக்கப்படவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் என்று ஐ.நா. மன்றத்தில் வாக்குறுதி கொடுத்திருந்தாலும், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அக்கறை காட்டுவதற்கு புதிய அரசு தயங்கியது. இதனாலேயே, அரசியல் கைதிகள் தங்களின் போராட்டத்தை கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்தனர்.

**சப்பைக்கட்டுக் காரணங்களை ஏற்கத் தயாரில்லை**

தமிழ் அரசியல் கைதிகள் இதற்கு முன்னரும் இவ்வாறு பட்டினிப் போராட்டங்களை பல தடவைகள் முன்னெடுத்திருந்தனர். மஹிந்த அரசின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் எவையுமே பயனளிக்கவில்லை. ஆகக்கூடியது மூன்று அல்லது நான்கு நாள்கள் போராட்டத்தின் பின்னர் அரசியல்வாதிகள் வாக்குறுதியளிப்பார்கள். அத்துடன் போராட்டம் முடிவுக்கு வரும்.
மீண்டும் ஒரு தடவை அதேபோன்று நடக்காமல் இருப்பதை தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதிப்படுத்த வேண்டும். அவர் வாக்குறுதியளித்தபடி நவம்பர் 7ஆம் திகதிக்கு முன்பாக இந்தப் பிரச்சினைக்கு அவர் ஒரு தீர்வைக் காணவேண்டும்.
பொதுமன்னிப்பில் விடுதலை என்ற வார்த்தையைத் தவிர வேறு எந்த வார்த்தைக்கும் அவர்கள் இணங்கத் தயாரில்லை என்று கைதிகள் விடாப்பிடியாக இருக்கிறார்கள். எனவே இந்த விடயத்தில் ஜனாதிபதி மனிதாபிமானத்துடன் கைதிகளுக்குச் சாதகமாக நடந்துகொள்ள வேண்டும்.
அமைச்சர் மனோகணேசன் புதன்கிழமை தமிழ் அரசியல் கைதிகளை மகசின் சிறையில் சந்தித்துப் பேசியிருந்தார். ஜனாதிபதியின் பிரதிநிதியாக வந்தே பேசுகின்றேன் என்று தெரிவித்து, கைதிகளை போராட்டத்தை கைவிடச் சொல்லிக் கோரியிருந்தார். கைதிகள் விவகாரத்தை ஆராய்வதற்கு குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அது பிரதமர் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அதில் தானும் இருக்கிறார் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். தனது வாக்குறுதியை ஜனாதிபதியின் வாக்குறுதியாக ஏற்று போராட்டத்தை கைவிடச் சொல்லிக் கோரியிருக்கின்றார். ஆனால் கைதிகள் மறுத்துவிட்டனர்.
"பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை எப்படி நம்புவது?" இதுதான் அவரிடம் கைதிகள் கேட்ட கேள்வி. "கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் உங்களைக் கண்டியில் போட்டியிடுமாறு கேட்டு, நீங்கள் தோல்வியடைந்ததும் தேசியப் பட்டியல் தராமல் ஏமாற்றியவர் ரணில் விக்கிரமசிங்க. தற்போதைய தேர்தலில் அசாத்சாலியை போட்டியிட வேண்டாம் என்றும் தேசியப் பட்டியல் ஆசனம் தரலாம் என்று வாக்குறுதி வழங்கி ஏமாற்றியவர் ரணில் விக்கிரமசிங்க. அவரை எப்படி நம்புவது" என்ற தமிழ் அரசியல் கைதிகளின் கேள்வியால் சூடாகிப்போன மனோகணேசன் 5 நிமிடங்களிலேயே சிறைக் கூடத்தை விட்டு வெளியேறிவிட்டார்.
ஜனாதிபதி மைத்திரிபாலவின் வாக்குறுதியைத் தவிர வேறு எவரதும் வாக்குறுதிகளைக் கேட்டு உணவு தவிர்ப்புப் போராட்டத்தை கைவிடப் போவதில்லை என்பதில் கைதிகள் பிடிவாதமாக இருந்துள்ளனர். சிறைச்சாலைகள் ஆணையாளர் ஊடாக ஜனாதிபதி தனது வாக்குறுதியை எழுத்து மூலம் கைதிகளுக்கு வழங்கியதைத் தொடர்ந்தும் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் அதேவிடயத்தை நேரில் உறுதியளித்த பின்னரும் அவர்கள் போராட்டத்தைக் கைவிட இணங்கினார்கள்.
கடந்த காலங்களைப் போன்று உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுப்பதும் பின்னர், நடைமுறைக்கு வராத வாக்குறுதிகளை நம்பி அதனைக் கைவிடுவதுமான செயற்பாட்டுக்கு இனியும் இடங்கொடுக்கப் போவதில்லை என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள். இப்போதும் போராட்டம் கைவிடப்பட்டது தற்காலிகமான செயல் என்றே தெரிவித்திருக்கிறார்.


> குற்றவாளிகள் என்று தீர்ப்பு வழங்கப்பட்டவர்களுக்கே பொது மன்னிப்பு வழங்கப்படும்போது, எந்தக் குற்றச்சாட்டுமே இல்லாமல், என்ன வழக்கு என்றே தெரியாமல் சிறையில் வாடும் எமக்கு ஏன் பொது மன்னிப்பு வழங்க உங்களால் முடியவில்லை

**நியாயமான கோரிக்கை**

தங்கள் மீது வழக்கு தொடுக்கப்பட்டு குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டிருந்தால் வழங்கப்பட்டிருக்கக் கூடிய தண்டனைக் காலத்தைவிட கூடுதலான காலம் சிறையில் இருந்து விட்டோம் என்பது தமிழ் அரசியல் கைதிகளின் வாதமாக இருக்கின்றது. 20 வருடங்கள் வரையில் சிறைவாசம் அனுபவித்தவரும் இன்னமும் தமிழ் அரசியல் கைதியாக தடுப்பில் இருக்கின்றார்.
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் மீதான குண்டுத் தாக்குதல் தொடர்பான வழக்கில் ரகுபதி சர்மாவின் மனைவி, 16 வருடங்களின் பின்னர் குற்றமற்றவர் என்று விடுவிக்கப்பட்டிருக்கின்றார். இதனை உதாரணமாகக் குறிப்பிடும் அரசியல் கைதிகள், தம் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமல் விடுவிக்கப்படும்போது இதுவரை தமது வாழ்நாளை சிறைக்குள் கழிக்க வைத்தமைக்காக யாருக்கு தண்டனை கொடுக்கப் போகின்றார்கள் என்ற கேள்வியையும் எழுப்புகின்றார்கள்.
எனவே தமது வாழ்நாளில் அரைவாசிக் காலத்தை சிறைக் கம்பிகளின் பின்னால் கழித்துவிட்ட அவர்களுக்கு பொதுமன்னிப்பு ஒன்றே ஒரே வழியாக இருக்க முடியும். இந்த விடயத்தில் ஜனாதிபதி சிரத்தையெடுத்து கைதிகளுக்கு ஒரு விடிவைத் தேடித் தரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லாட்சியிலும் அரசியல் கைதிகளுக்குத் தடுப்புத்தானா?

■ சேரலாதன்

நீண்டகாலமாகச் சிறைச்சாலைகளில் விசாரணைகள் எதுவுமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் பிரச்சினை தீர்க்கமானதொரு கட்டத்தைத் தொட்டு நிற்கின்றது.

இந்தக் கைதிகள் நாட்டிலுள்ள 14 சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சுமார் 225 எண்ணிக்கையைக் கொண்ட இவர்கள் தமது விடுதலையை வலியுறுத்தி கடந்த 12ஆம் திகதி தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். நேற்றுவரை 35 பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்ட குழுவினர் நேற்றுக் கைதிகளைச் சந்தித்து, ஜனாதிபதியின் வாக்குறுதியை நேரில் தெரிவித்ததை அடுத்துத் தமது போராட்டத்தை அவர்கள் முடித்து வைத்துள்ளனர்.

இதேவேளை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் பெரிய குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள், இவர்களில் அரசியல் கைதிகள் என எவருமே இல்லை என நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச கூறியிருந்தார். இதே கருத்தை அமைச்சர் ராஜித சேனாரத்னவும் கூறியிருக்கிறார். இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்ற வகையில் நீதித்துறை செயற்பட்டு வருகின்றது. சட்டத்தின் ஆட்சியும் நடைமுறையில் உள்ளது. ஆகவே குற்றமிழைத்தவர்கள் எவராக இருந்தாலும் நீதிமன்றங்களின் முன்பாக அவர்களை நிறுத்தி உரிய தண்டனையைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அல்லது நிரபராதிகளாகக் காணப்படுபவர்களை விடுதலை செய்ய வேண்டும். இதைவிடுத்து எவ்வித விசாரணையும் இல்லாமல், சிறைச்சாலைகளில் தடுத்து வைத்திருப்பதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

முன்பெல்லாம் போரைக் காரணம் காட்டியே தமிழர்கள் பலர் காரணம் எதுவுமின்றிக் கைது செய்யப்படுவதும், சிறைகளில் தடுத்து வைக்கப்படுவதும் வழக்கமாக இருந்தது. தற்போது தடுத்து வைக்கப்பட்டவர்களில் பலர் அந்த வகை யைச் சேர்ந்தவர்கள்தான். குறிப்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள்.

இலங்கை வரலாற்றில் தமிழ்க் கைதிகள் பலர் கொடூரமான முறையில் சிறைக்குள் வைத்தே கொலை செய்யப்பட்டுள்ளனர். 1983ஆம் ஆண்டு இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான மோசமான கலவரத்தின் போது கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் பலர் கொடூரமான வகையில் சித்திரவதைகளின் பின்னர் கொல்லப்பட்டனர். இன்றும்கூட தமிழர்கள் அச்சத்துடன் அதனை நினைவு கூருகின்றனர்.

அன்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியே இடம்பெற்றுக் கொண்டிருந்தது. ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஜனாதிபதியாகவும், ஆர்.பிரேமதாஸ பிரதமராகவும் பதவி வகித்தனர். தற்போதைய பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவும் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தார். அரசின் பூரண ஆசீர்வாதத்துடன் நடந்தேறிய ஜுலை இனக்கலவரத்தையும், வெலிக்கடைப் படுகொலைகளையும் தமிழர்கள் என்றுமே மறந்து விடமாட்டார்கள். அத்தகைய நிலையில், 32 ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் தமிழர்கள் சிறைச்சாலைகளில் விசாரணை எதுவுமின்றி நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை இந்த நாட்டின் தமிழர்களுக்கு எதிரான இனவாதப் போக்கின் தெளிவான சான்று.

குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களென இனம் காணப்பட்ட தமிழர்கள் பலர், அரசின் செல்லப்பிள்ளைகளாக வலம் வந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. மாறாக அரசு தமது தேவைகளுக்கு இவர்களைப் பயன்படுத்தி வருவதையே காணமுடிகின்றது. இதைப் போன்றுதான் முன்னைய ஆட்சியின் போது ஊழல், மோசடிகள் மற்றும் பெரிய குற்றச் செயல்களில் ஈடுபட்ட பலர் தண்டனைகளிலிருந்து தப்பியவர்களாக வெளியில் காணப்படுகின்றனர். ஆனால் அப்பாவிகளான தமிழர்களுக்கு மட்டுமே இந்த நாட்டில் வித்தியாசமான நீதி வழங்கப்பட்டு வருகின்றது.

நல்லாட்சி........... நல்லாட்சியென வெறுமனே கூறிக்கொண்டிருப்பதில் எந்தவித அர்த்தமும் இல்லை. சகல இனத்தவர்களையும் சமனாகக் கருதுவதுதான் நல்லாட்சித் தத்துவத்தின் பிரதானமான அம்சமாக இருக்க முடியும். ஆனால் இன்று இந்த நாட்டில் என்னதான் நடந்து கொண்டிருக்கின்றது? முறையான போர்க்குற்ற விசாரணைகள் இடம்பெறுவதற்கான சாத்தியங்களை தற்போதைய அரசு இதுவரை உருவாக்கியதாகத் தெரியவில்லை. உயர் பாதுகாப்பு வலயங்கள் எனக்கூறப்படும் பெரும் நிலப்பகுதியில் படையினர் இன்னமும் விவசாயம் செய்கின்றனர். கால்நடைகள் வளர்க்கின்றனர். விருந்தகங்களையும், உல்லாச விடுதிகளையும் நடத்தி வருகின்றனர். ஆனால் இந்த நிலங்களுக்குச் சொந்தமானவர்கள் இடம்பெயர்ந்த நிலையில் அகதி முகாம்களிலும், வேறு இடங்களிலும் மோசமான நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இதைவிடக் கொடுமை எங்குதான் இருக்கமுடியும்? இது தான் நல்லாட் சியா? அரசின் சார்பில் கருத்துத் தெரிவித்த மீள் குடியேற்ற அமைச்சர் படையினரின் சம்மதம் இல்லாது எதையும் செய்யமுடியாத நிலையில் இருப்பதாக வெளிப் படையாகவே கூறுகிறார். அவ்வாறாயின் இந்த நாட்டில் படையினரின் ஆட்சியா இடம்பெறுகின்றது? என்ற கேள்வி எழுகின்றது. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தள்ளித் தள்ளிப் போவதற்கும் இதுதான் காரணமா? படையினர் அனுமதிக்க வில்லை என்பதனால்தான் அவர்கள் விடுவிக்கப்பட வில்லையா?



தமிழ் மக்களின் ஆதரவுடன் ஆட்சியில் அமர்ந்திருக்கும் தற்போதைய அரசு கூட இப்படித் தமிழர்களுக்குப் பாதகமான செயல்களையே தொடர்ந்து வந்தால் கொழும்பு அரசுகளைத் தமிழர்கள் எப்படிநம்பமுடியும்? அரசு தனது நம்பகத் தன்மையை வெளிப்படுத்த வேண்டுமாயின் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும். இவர்களில் குற்றம் புரிந்தவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் நீண்டகாலம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டதால் ஏற்கனவே தண்டனையை அனுபவித்து விட்டனர் என்றே கருதமுடியும். மீண்டும் விசாரணை, வழக்கு என்ற பெயரில் அவர்களின் காலம் இழுத்தடிக்கப்படக்கூடாது. நல்லாட்சி என்ன செய்யப்போகின்றது? தான் வாக்குறுதியளித்தபடி நவம்பர் 7ஆம் திகதிக்குள் இந்தப் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துவிடவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயாராகிவிட்ட அலுகோசுகள்



■ அதிரன்

இலங்கையில் சிறுவர்கள், பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரித்துள்ளதை அடுத்து மீண்டும் சாவுத் தண்டனையை செயற்படுத்துமாறு சிறுவர் உரிமை அமைப்புகள், பெண்கள் அமைப்புகள் உட்படப் பலர் குரலெழுப்பி வருகின்றனர்.

சுமார் 40 ஆண்டுகளாக ஒருவருக்குக் கூட சாவுத் தண்டனை நிறைவேற்றப் படாத இலங்கையில், தூக்கு மூலம் சாவுத் தண்டனை நிறைவேற்றுவதற்கான பணியாளரை நியமிக்கும் நடவடிக்கையை சிறைத் துறை அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இலங்கை அரசு சாவுத் தண்டனையை முற்றிலுமாக ஒழிப்பதற்குத் திட்டமிட்டு வரும் நிலையிலும், இந்த அலுகோசு பதவிக்கான இறுதிக் கட்டத் தேர்வுக்கு இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். விரைவில் இருவரில் ஒருவர் சாவுத் தண்டனை நிறைவேற்றும் பணியாளராக நியமிக்கப்படுவார்.

இதுவரை அந்தப் பணியில் இருந்த நபர் தூக்குக் கயிற்றை நேரில் பார்த்ததும் அச்சத்தில் நடுங்கிப் போய் பணியை விட்டுச் சென்று விட்டதால், கடந்த ஓராண்டாக அந்தப் பணியிடம் வெற்றிடமாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில், அந்த இடத்தை நிரப்பும் நோக்கில் பணி நியமன நடவடிக்கைகளை சிறைத்துறை அமைச்சு மேற்கொண்டுள்ளது.

சாவுத் தண்டனை என்பது, மனிதர் ஒருவரின் உயிர்வாழ்வைப் பறிக்கும் தண்டனை ஆகும். மனிதர் இழைக்கும் குற்றம் அல்லது தவறு அவரின் உடல் சார்ந்த செயல்பாடாகப் புரிந்துகொள்ளப்பட்ட தொன்மைக்கால தண்டனை முறைகளில் இதுவும் ஒன்றாகும். திருட்டைச் செய்த மனிதரின் கை துண்டிக்கப்படுதல், வேதத்தைக் கேட்டதற்காகக் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுதல் போன்ற தண்டனை முறைகளுக்கும் சவுத் தண்டனைக்கும் இடையிலான கோட்பாட்டு அடிப்படை ஒன்றேயாகும்.

மிகப் பழைய காலம் முதலே கடுமையான குற்றங்களுக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டு வந்துள்ளது. அதில் குறிப்பாக எல்லா நாடுகளிலும் கொலைக்கு சாவுத் தண்டனை விதிக்கப்படுதல் ஏதேனும் ஒரு காலப்பகுதியில் நிலவி வந்துள்ளது. எனினும் கடுமையான குற்றம் எது என்பது அவ்வச் சமூகங்களின் பண்பாடு, அரசு அல்லது அரசனின் கொள்கைகள், அரசியல் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபட்டு அமையும். இந்தத் தண்டனை நிறைவேற்றப்படும் முறையும் நாட்டுக்கு நாடும், காலத்துக்குக் காலமும் வேறுபாடாக இருந்து வந்துள்ளன.

கொலை, தேசத்துரோகம், அரசுக்கு எதிரான சதி செய்தல் போன்ற குற்றங்கள் பரவலாக சாவுத் தண்டனைக்குரிய குற்றங்களாகக் கருதப்பட்டவை. இவை தவிர அரசு சார்பான மதங்களுக்கு எதிரான குற்றங்கள், பாலியல் குற்றங்கள் போன்றனவும் சாவுத் தண்டனைக்குரிய குற்றங்களாகக் கருதப்படுகின்றன. தற்காலத்தில் சில நாடுகளில் போதைவஸ்துக் கடத்தல் போன்றவையும் சாவுத் தண்டனைக்கு உரிய குற்றங்களாக் கப்பட்டுள்ளன.

சாவுத் தண்டனை நவீன நீதிமுறைகளின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு எதிரானது என்றும் அதனை ஒழிக்கவேண்டும் என்றும் பல்வேறு கருத்துகள் வலுப்பெறத் தொடங்கிய பின்னர் பல நாடுகளில் சாவுத் தண்டனை முற்றாக ஒழிக்கப்பட்டது. பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் இப்போது சாவுத் தண்டனை விதிக்கப்படுவல்லை.

அண்மையில் ஐ.நா. பொதுச் சபையில் உரையாற்றிய பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ், உலகத்தில் இனிமேல் சாவுத் தண்டனை வேண்டாம். அதை ஒழிக்க அனைத்து நாட்டுத் தலைவர்களும் முன்வரவேண்டும் என்று பகிரங்க அழைப்பு விடுத்தார். இந்த மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கலந்து கொண்டு பாப்பரசரின் அழைப்பைக் கவனமாகச் செவிமடுத்தார்.

நாட்டின் பல பாகங்களிலும் அண்மைக் காலமாகச் சிறுவர்கள், பெண்கள் மீதான வன்புணர்வுகள், வன்முறைகள் ஆகியன கட்டுக்கடங்காமல் அதிகரித்து வருவதை அடுத்தே இந்தச் சாவுத் தண்டனையை நிறைவேற்றுமாறு கோரும் குரல்கள் பலமடையத் தொடங்கியுள்ளன. ஆயினும் சாவுத் தண்டனையை மீண்டும் கொண்டு வருவதால் குற்றங்களைக் கட்டுப்படுத்தி விடமுடியாது என்ற கருத்துக்களும் எழாமல் இல்லை.

1976ஆம் ஆண்டு வரை இலங்கையில் நீதிமன்றங்கள் சாவுத் தண்டனை வழங்கியது போலவே, சிறைச்சாலை அதிகாரிகள் அவற்றை நிறைவேற்றி வந்தார்கள். ஆனால், அதன் பின்னர் நீதிமன்றங்கள் சாவுத் தண்டனையை வழங்கித் தீர்ப்பளித்தபோதும் ஜனாதிபதிகள் அதற்கான அங்கிகாரத்தை வழங்குவதில்லை. எனவே, சாவுத் தண்டனை நிறைவேற்றப்படுவதில்லை. 1976ஆம் ஆண்டு வில்லியம் கொபல்லாவ பெயரளவிலான ஜனாதிபதியாக இருந்தார். அதன் பின்னர் பதவிக்கு வந்த நிறைவேற்று ஜனாதிபதிகளும் சாவுத் தண்டனையை நிறைவேற்ற அனுமதி வழங்கவில்லை. உலகில் 139 நாடுகள் சாவுத் தண்டனையை நீக்கியுள்ளன. இலங்கை உட்பட 33 நாடுகளில் சாவுத் தண்டனை இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்தியா, அமெரிக்கா மற்றும் பாகிஸ்தான் உட்பட 57 நாடுகளில் சாவுத் தண்டனை நிறைவேற்றப்படுகிறது.

இலங்கையில் பாலியல் வன்புணர்வு, கொலை, போதைவஸ்து தொடர்பான குற்றங்களுக்கு நீதிமன்றங்கள் சாவுத் தண்டனை விதிப்பது வழக்கம். எனினும், அந்தச் சாவுத் தண்டனைகள் அனைத்தும் பின்னர் ஆயுள் தண்டனைகளாகக் குறைக்கப்படுகின்றன.

எனினும், விதிமுறைகளின்படி நாட்டில் சாவுத் தண்டனை நிறைவேற்றுவதற்கான பணியாளர் ஒருவர் இருக்க வேண்டும் என்பதால் இந்தப் புதிய நியமனத்தை மேற்கொள்வதாக அதிகாரிகள் கூறினர்.

இதுகுறித்து சிறைத்துறை அதிகாரிகள் கூறுகையில், சாவுத் தண்டனை பற்றிய அரசின் நிலைப்பாடு குறித்து எங்களுக்குக் கவலையில்லை. சாவுத் தண்டனைப் பணியாளரை நியமிக்க வேண்டியது எங்கள் கடமை. அதனை நாங்கள் நிறைவேற்றுகிறோம்–என்றனர்.

இதேவேளை, இலங்கையில் சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்தக் கூடாதென மனித உரிமைகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. குற்றச்செயல்களை இல்லாமல் செய்ய சாவுத் தண்டனை தீர்வாக அமையாதென சர்வதேச ஆய்வுகளே உறுதிப்படுத்தியுள்ளதாக ஆணைக்குழுவின் சட்டப்பிரிவுச் செயலாளர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

மேலும் சமூக, பொருளாதார, கலாசாரம் உள்ளிட்ட காரணிகளே குற்றச்செயல்கள் அதிகரிக்க காரணமாக அமைந்துள்ளதென குறிப்பிட்ட அவர், அதற்கான காரணிகளைக் கண்டுபிடித்து தீர்வைப் பெறவேண்டுமே ஒழிய அதற்கு சாவுத் தண்டனை தீர்வாக அமையாது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் எதிர்த்து வந்த காரணத்தாலேயே சாவுத் தண்டனை, கடந்த 1976ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைமுறைப்படுத்தப்படவில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களை தடுக்க சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்த வேண்டுமென பாதிக்கப்பட்டோர் சார்பில் பல்வேறு தரப்பினரால் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில், நாடாளுமன்ற அனுமதியைப் பெற்று சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்திருந்தார்.

சாவுத் தண்டனையை மீண்டும் கொண்டு வருமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் கிருணிகா பிரேமச்சந்திர அண்மையில் நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை கொண்டுவந்திருந்தார். இந்தப் பிரேரணை மீதான விவாதம் நடைபெற்றுவருகிறது.

ஆயினும் இந்தத் தண்டனையை மீண்டும் கொண்டுவருவதா இல்லையா என்பது தொடர்பில் அரசுக்கு ஓர் இக்கட்டு நிலை ஏற்பட்டுள்ளது. இந்த விடயத்தில் இனிமேல் அரசு, எப்படி நடந்துகொள்ளும் என்பது போகப் போகப் புரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறிதளவு வைன்கூட

## கருவிலுள்ள குழந்தையைப் பாதிக்கும்

மருத்துவர் முருகானந்தன்

மதுவின் தீய விளைவுகள் சமூக ரீதியிலும், உடல் ஆரோக்கிய ரீதியிலும் குறிப்பிடத்தக்கவை. மதுவுக்கு அடிமையாகி சீரழிந்த எத்தனையோ குடும்பங்களைக் காண்கின்றோம். குடும்பத் தலைவனின் மதுப்பழக்கம் முழுக் குடும்பத்தையும் பாதிப்பதைக் காண்கின்றோம்.

உடற் சுகம், பசியை ஏற்படுத்த எனச் சிறிதளவு மது அருந்த ஆரம்பித்தவர்கள்கூட, கால ஓட்டத்தில் மதுவுக்கு அடிமையாகி விடுகின்றார்கள். ஒருவரை தனக்கு அடிமையாக்கும் சக்தி (ADDICTION) மதுவுக்கு உண்டு.

பொதுவாக எமது நாட்டுப் பெண்கள் மது அருந்துவது குறைவாகவே உள்ளமை சாதகமான அம்சம்தான். எனினும் மேலோர் வட்ட பெண்கள் சிலரும் குளிர் பிரதேசங்களில் கடும் உடலுழைப்பில் ஈடுபடும் பெண்களும் சிறிதளவு மது அருந்துவதைப் பழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் பலர் மென்மையான மது என பியர் மற்றும் வைன் முதலான குடிவகைகளைப் பாவிக்கின்றார்கள்.

வைன் உடலுக்கு நல்லதென்ற எண்ணமும் பலரிடம் உண்டு. ஆனால், உண்மை என்னவெனில் சிறிதளவு வைன் கூட, உடல் நலனுக்குக் கேடு விளைவிக்கலாம். தொடர்ந்து அருந்தி வரும்போது மூளை, நரம்பு, ஈரல் முதலானவை மெல்ல மெல்ல பாதிப்புக்கு உள்ளாகின்றன. மேலும், சிலர் இவ்வாறு பாதிக்கும்போது, மதுவுக்கு அடிமையாகி கூடுதலாகவோ அன்றி செறிவு கூடிய மதுபானங்களையோ அருந்த ஆரம்பிக்கின்றார்கள். இது சமூக, பொருளாதாரச் சீரழிவுகளை ஏற்படுத்துவதுடன் உடல் ஆரோக்கியத்தையும் பாதித்து விடுகின்றது.

கர்ப்பிணிப் பெண்கள் மதுவை சிறிதளவு அருந்துவதுகூட ஆபத்தானது. மது அருந்தும் போது, சில பெண்களும் புகைப்பிடிப்பதுண்டு. கர்ப்பிணிப் பெண்களைப் பொறுத்தவரை மதுவைவிட, சிகரட் இன்னும் ஒருபடி மேலான ஆபத்தை விளைவிக்கக் கூடியது. குறிப்பாக கருவிலுள்ள சிசுவின் நலனும், எதிர்கால ஆரோக்கியமும்கூட பாதிக்கப்படுகின்றது. இங்கிலாந்து பல்கலைக்கழகம் ஒன்றின் பேராசிரிய ரான பீற்றர் கெப்பர் (PETER HEPPER) இது பற்றிய ஆய்வை மேற்கொண்டுள்ளார். அதன் முடிவுகளின்படி கர்ப்பிணிப் பெண்கள் சிறிதளவு மதுவையும் அருந்தக் கூடாது என்று கூறுகின்றார்.

வைன் போன்ற மிக மென்மையான மது பானங்களை மிகச் சிறிதளவு தொடர்ந்து பாவிப்பதுகூட, ஆபத்தானது என்று எச்சரித்துள்ளார். அரைக் கிளாஸ் வைன்கூட கருவுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகக் கண்டறிந்துள்ள இவரது கூற்றுப்படி கருவிலுள்ள குழந்தையின் சுவாசமும், அசைவும் இதன் காரணமாக இரண்டு மணித்தியாலங்கள் வரை தடங்குதலுக்கு உள்ளாவதாகக் குறிப்பிட்டுள்ளார். கருவிலுள்ள குழந்தை சீராக வளர்வதற்கு அதன் தொடர்ச்சியான அசைவும், சுவாசிப்பும் முக்கியமானவை ஆகும்.

இது பற்றி ஆராய்ந்த குயீன்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பெல்பாஸ்ற் (BELFAST) பெண்களின் கருவை 18 வார கர்ப்பகாலத்தில் ஸ்கான் பரிசோதனை செய்து பார்த்து, பீற்றர் கெப்பரின் ஆய்வு சரியானதே என்று உறுதிசெய்துள்ளார். அவரது ஸ்கான் பரிசோதனையின்போது, கருவின் அசைவும், சுவாசிப்பும் நின்றிருப்பதும், அதைத் தொடர்ந்து சடுதியாகக் குலுங்கித் திரும்பியதையும் அவதானித் தார்.

மது அருந்தும் பெண்களின் கருவிலுள்ள குழந்தைகளின் மூளையின் வளர்ச்சியும், விருத்தியும் கூட பாதிப்படைவதாக பெல்பாஸ்ற் தெரிவித்தார். கரு உருவானவுடனேயே மூளையின் உருவாக்கம் ஆரம்பித்துவிடும். இதன் கட்டமைப்பு வளர்ச்சியும், விருத்தியும் முதல் மூன்று மாத கர்ப்ப காலத்துள் துரிதமாக நடைபெறுகின்றது. சிறிதளவு மென்மையான வைன் போன்ற குடிவகைகள்கூட மூளையின் உருவாக் கத்தை பாதித்துவிடும். எனவே கர்ப்பிணிப் பெண்கள் மாத்திரமன்றி கருத்தரிக்க எதிர்பார்த்திருக்கும் பெண்கள்கூட, சிறியளவில் தானும் மென்மையான குடிவகையைக் கூட, அருந்துவதைத் தவிர்க்க வேண்டும். எப்போதாவது என மது அருந்துவதுகூட பாதிப்பை ஏற்படுத்திவிடுகின்றது.

டாக்டர் மேரி மாதா என்ற சிறுவர்களுக்கான வைத்திய நிபுணர் மது ஒரு வகை நஞ்சாகும் என்றும், இது வளரும் திசுக்களை (TISSUES) பாதித்துவிடும் என்றும் கூறுகின்றார். இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த லண்டன் பல்கலைக்கழகப் பேராசிரியரான அல் அயன்ஸ்லி கிறீர், மாற்ற முடியாத மூளைக் குறைபாடுகளை தடுப்பதற்குச் சிறந்த வழி குழந்தை கருவிலிருக்கும் போது, மதுவை முற்றாகத் தவிர்ப்பதே ஆகும் என்று குறிப்பிடுகிறார்.

# வாழ்க்கையை மகிழ்ச்சியாக வைத்திருக்க

## சில யோசனைகள்!

கே.என்.ராமச்சந்திரன்

எதையும் 'மூட்' பார்த்துத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது, யாரிடமும். சரி, இந்த 'மூட்' பற்றி என்றைக்காவது யோசித்திருக்கிறீர்களா? 'மூட்' என்பதை மனநிலை என்று மொழிபெயர்க்கலாம். நல்ல மன நிலையைப் பற்றி யாரும் கவலைப்படப்போவதில்லை. சில சமயங்களில் கவலை, கோபம், வருத்தம், சோம்பல் போன்ற தீய மனநிலைகள், நாள் கணக்கில் நீடிப்பது உண்டு. அதை எப்படி நீடிக்கவிடாமல் செய்வது?

எளியவழிகள்

1. தீய மன நிலையை நல்லதாக மாற்ற மூச்சுவாங்க வைக்கிற உடற்பயிற்சிகள் உகந்தவை. அப்போது அதிக அளவில் உயிர் வாயு (ஒக்ஸிஜன்) உடலுக்குள் பாயும். இதயம் படபடவென்று அடித்துக்கொண்டு உடல் முழு வதும் குருதி வேகமாகப் பரவும். இருபது நிமிடங்களாவது வேக நடை, நீச்சல், சைக்கிள் ஓட்டு தல்,மெல்ல ஓடுதல், கயிறு தாண்டுதல் போன்ற பயிற்சிகளை மேற்கொள்ளலாம்.

2. உடலுக்கு கனியுப்புக்கள் வலுவூட்டுவதைப் போல வண்ணங்கள் மனதுக்கு வலுவூட்டும். மனதில் கோபமும் எரிச்சலும் உள்ளபோது, சிவப்பு நிறப் பொருள்களைப் பார்க்காமல் தவிர்க்கலாம். மனச் சோர்வின் போது கருப்பு, கரு நீலம் ஆகிய நிறங்கள் அதை அதிகமாக்கும். பிரகாசமும் விறுவிறுப்பும் கொண்ட நிறங்கள் மனதிலும் அந்தப் பண்புகளை உண்டாக்கும். மென்மையான நீலவகை நிறங்கள் கவலையையும் மன இறுக்கத்தையும் தணிக்கும். நீல வானத்தையும் நீலக் கடலையும் பார்த்துக்கொண்டிருந்தால், சில நிமிடங்களுக்குள்ளாகவே மனதில் அமைதி பரவும்.

3. ஒத்த இயல்பு இசை மருத்துவம் என்ற உத்தி மனதைச் சீர்நிலைக்குக் கொண்டுவரும். மனம் சோகத்திலிருக்கும் போது உலகே மாயம், வாழ்வே மாயம்போன்ற சோக ரசப் பாடல்களை நாடாப் பதிவுக் கருவியில் போட்டுக் கேட்கலாம். அதற்கு வசதியில்லாதபோது நாமே பாடலாம். இதைத் தொடர்ந்து, உற்சாகமூட்டும் நான்கு பாடல்களைக் கேட்க அல்லது பாடவேண்டும்.

4. உணவுக்கும் உள்ளத்துக்கும் இடையில் நெருக்கமான உறவு உண்டு. குளுக்கோஸ், அரிசி, கிழங்குகள், கோதுமை போன்ற கார்போஹைட்ரேட்டுகள் நிறைந்த உணவுகள் மனதில் அமைதியை உண்டாக்கும். அவை மூளையில் செரட்டோனின் என்ற நரம்பு உணர்வுக் கடத்திகளின் உற்பத்தியை அதிகமாக்குகின்றன. அது மனதிலும் உடலிலும் உள்ள இறுக்கத்தைத் தளர்த்தி, அமைதியை உண்டாக்கும். புரதங்கள் மன ஆற்றலையும் செயலுறு திறனையும் நீடிக்கச் செய்யும். பருப்புகள், மீன், கோழி இறைச்சி போன்றவற்றில் புரதம் நிறைந்துள்ளது. சொக்லேட், கோப்பி, தேநீர், கோலா போன்றவற்றை அதிகமாக உட்கொண்டால் அவற்றிலுள்ள கஃபீன் மனநிலையைப் பாதித்துக் கவலையையும் எரிச்சலையும் அதிகமாக்கும்.

5. மங்கலான ஒளி மனதில் சோர்வை உண்டாக்கும். மழைக் காலங்களில் பலர் இதை அனுபவிக்கிறார்கள். காதலர்கள் மழைக் காலங்களில் கூடுதலாக வாடுவார்கள். நல்ல வெளிச்சமான, அதிக விளக்குகள் உள்ள இடங்களில் இரண்டு அல்லது மூன்று மணி நேரத்தைக் கழிப்பது உள்ளத்துக்கு உவகையூட்டும்.

6. ஆழ்ந்து தூங்கினாலே மனச்சோர்வு, கவலை, இறுக்கம் போன்றவை தணியும். தூங்கும்போது வரும் கனவுகள் அதற்கு உதவும். அவை மனதில் இறுக்கத்தை உண்டாக்கிய நிகழ்வுகளின் தீவிரத்தை நீர்த்துப்போகச் செய்யும். பல சமயங்களில் நமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக்கூடக் கனவுகள் வழங்கும். தூங்கியெழுந்த பின் மனம் லேசாகிப் புத்துணர்ச்சி பெற்றிருக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செய்திப் பத்திரிகைகளும் அவை புரியும் பணிகளும்

# பத்திரிகைகளின் தோற்றுவாய் 5

ரம்யன்

பதினேழாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இங்கிலாந்தில் பத்திரிகைகள் இக்கட்டான சூழ்நிலைகளில்தான் வெளிவந்து கொண்டிருந்தன. ஆனால், அவை அதிகாரவர்க்கத்துக்கும் முழுமையாகப் பணிந்துபோய் விடவில்லை. ஜோன் வில்க்ஸ் என்பவர் தொடர்பாக அந்தக் காலத்தில் இடம்பெற்ற சம்பவம் ஒன்று மிகச் சுவாரஷ்யமானது. அவர் சம்பந்தப்பட்ட செய்தியொன்றை நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம். டெனிஸ் தோமஸ் அந்த நிகழ்வைப் பற்றி எழுதுவதாவது;

வில்க்ஸ் ஒரு கவர்ச்சியான மனிதர். அரசியலில் ஆர்வம் கொண்ட அவர், தமது சொந்தப் பணத்தையே செலவு செய்தார். அந்த வகையில் த நோர்த் பிரிட்டன் என்ற பெயரில் வாராந்தப் பத்திரிகையொன்றை ஆரம்பித்து நடத்தலானார். பிரதமர் பூட்ஸ் பிரபுவின் அரசின் மீது அவ்வப்போது தாக்குதல் நடத்தி வந்தார்.

ஒருமுறை அமைச்சரவையின் ஓர் உறுப்பினரோடு அவருக்கு மோதல் ஏற்பட்டது. நாடாளுமன்றில் அரசர் நிகழ்த்திய உரையின் மீது கடுமையான விமர்சனம் ஒன்றை த நோர்த் பிரிட்டன் பத்திரிகையில் வெளியிட்டிருந்தார். இது ஓர் அவதூறான செயல், மக்களைத் துரோகமான காரியங்களில் ஈடுபடும்படியாகத் தூண்டும் முயற்சி என்று குற்றஞ்சாட்டப்பட்டது. பத்திரிகை தூக்குத் தண்டனை நிறைவேற்றும் பணியாளரால் எரிக்கப்படவேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருந்தது. குற்றமிழைத்த பத்திரிகைப் பிரதியை வெளியிட்டார்கள் என்று வில்க்ஸும் வேறு நாற்பது பேரும் கைது செய்யப்பட்டார்கள். ஆனால், சட்நுட்பமொன்றை வைத்து, வில்க்ஸ் தம் வாதத்தை நிகழ்த்தினார். குற்றப்பத்திரிகையில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளின் பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவர் தரப்பு வாதமாகவிருந்தது. வழக்கை விசாரித்த பிரதம நீதியரசர் வாதத்தை ஏற்றுக்கொண்டு வில்க்ஸையும் அவரது 40 ஊழியர்களையும் விடுதலை செய்தார். தவறான கைதுக்காக அவர்களுக்கு இழப்பீடும் வழங்கப்பட்டது. வில்க்ஸ் திடீர் புகழுக்குரிய வீரரானார். அரசியலிலும் பிரமுகரானார்.

அந்தக் காலத்தில் செய்திகள் எவ்வாறு முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கப்பட்டன என்பதற்கு ஓர் உதாரணம் 1815ஆம் ஆண்டு மோர்னிங் குரோனிக்கல் என்ற பத்திரிகையில் நெப்போலியன் போனபார்ட் தோற்கடிக்கப்பட்டிருந்த செய்தியை பின்வருமாறு பிரசுரித்திருந்தது.

### போனபார்ட்டின் முழுமையான தோற்கடிப்பு

வெலிங்டன் பிரபுவினால் சாதிக்கப்பட்டுள்ள மிகவும் ஒளிமயமானதும், முழுமையானதுமான வெற்றியை அறிவிப்பதற்காக இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கின்றோம். அது பிரித்தானியாவின் பெயரின் மகிமையைச் சதாகாலமும் உயர்ந்த நிலையில் வைத்திருக்கும் விடயம். கடந்த இரவு பதினொன்றரை மணிக்கு வெவோலி பிரபுவின் புதல்வரான மேகர் பேர்சி, பிரபு பார்தேர்ஸ்டின் காரியாலயத்துக்கு வந்து சேர்ந்தபோது, வெலிங்டன் பிரபுவிடமிருந்து கிடைத்திருந்த கடிதங்களைத் தம்முடன் கொண்டு வந்திருந்தார். அதில் 15ஆம் திகதியிலிருந்து 19ஆம் திகதி வரை இடம்பெற்றிருந்த சம்பவங்களின் விவரம் அடங்கியிருந்தது. கடந்த ஞாயிறன்று உக்கிரமான சண்டை பற்றிய தகவலும் அடங்கியிருந்தது. அதில் பிரெஞ்சுப் படைகள் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டுள்ளனர். அதில் இரு நூற்றுப் பத்துப் பீரங்கிகளும் வெற்றிச் சின்னங்களும் இழக்கப்பட்டுள்ளன!

### செய்திப் பத்திரிகைகள் தோன்றிய விதம்

பொதுவில் இன்றைய தலைமுறையினருக்கு அதுவும் பத்திரிகைத்துறை குறித்து ஆர்வமுள்ளவர்கள் அந்தத் துறையில் ஈடுபட்டுள்ள இளம் வயதினருக்கு இந்தத் தலைப்புப் பயனுள்ளதாகவே இருக்கும். இன்னும் பலர் இதில் மும்முரமாக ஈடுபட்டு பல விடயங்களை அறிந்து கொண்டிருக்கலாம்.

அறிஞர் டெனிஸ் தோமஸ் எமக்குத் தரும் விவரங்கள் சில வருமாறு,

முதலில் செய்திப் பத்திரிகையாவன (அக்காலத்தில் அவ்வாறு அவை அறியப்பட்டிருக்கவில்லை) ஆதிகால ரோமர் காலத்தில்தான் நடைமுறையில் இருந்துள்ளன. அந்தக் காலத்தில் ஏகாதிபத்திய நாடுகளின் படைகள் மோதிக்கொண்ட சந்தர்ப்பங்களில் ரோமன் சாம்ராஜ்யம் முழுவதி லும் அமைந்திருந்த மாகாணங்களின் ஆளுநர்களுக்கு அந்தச் சண்டைகளின் விவரங்கள் அவ்வப்போது அனுப்பப்படு வது வழக்கத்தில் இருந்துள்ளது. அவை உண்மையில் அச்சடிக்கப்பட்டவையாக இருக்கவில்லை.

ரோமர்கள் வேறு எத்தனையோ துறைகளில் முன்னேறியிருந்தாலும் அச்சுக்கலையை அவர்கள் கண்டுபிடிக்கவில்லை. 15 ஆம் நூற்றாண்டில் ஜேர்மன் ஆட்சிக்குட்பட்டிருந்த சில பிரதேசங்களில் சிறிய அளவிலான செய்தித்தாள்கள் சுற்றோட்டத்தில் இருந்துள்ளன.

1566ஆம் ஆண்டளவில் வெனிஸ் அரசானது (அப்போது அது சுதந்திர நாடு) கட்டளை ஒன்றைப் பிறப்பித்தது. பொது அறிவித்தல்கள் எழுத்தில் பொது இடங்களில் ஒட்டப்படவேண்டும். அவ்விடங்களில் அவைகளை வாசிக்க விரும்புபவர்கள் ஒரு சிறு நாணயத்தை அல்லது கஸட்டாவை (Gazetta) செலுத்தியாக வேண்டும் என்பதே அந்தக் கட்டளை. எனவே அந்த அறிவித்தல்கள் தான் பிற்காலத்தில் கஸட்ஸ் (Gazettes) என்று அழைக்கப்படலாயின.

அச்சுக்கலை கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் இது ஐரோப்பா முழுவதும் பரவியது. கஸட் என்பது இன்றும் அரசு வெளியிடும் சட்டபூர்வ அறிவித்தல்களைக் குறிக்கின்றது. வர்த்தமானி என்று தமிழில் கூறுகின்றோம்.

### முதல் ஆங்கிலப் பத்திரிகை

முதலாவது ஆங்கிலப் பத்திரிகையானது வீக்லி நியூஸ் என்பதாகும். 1622 ஆம் ஆண்டில் நதேனியல் பட்லர் (Natheniel butler) என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. இதைத் தொடர்ந்து த லண்டன் வீக்லி கரன்ட் பத்திரிகை அதே ஆண்டில் வெளிவந்துள்ளது. இவை




முக்கிய செய்திகள் குறைவாகவும் வாசிப்பதற்குக் கடின நடையாகவும் காணப்பட்டுள்ளன. பின்னர் வந்த இரு சகாப்தங்களிலும் மேர்க்குரி என்ற பெயரில் பல சஞ்சிகைகள் வெளியாகியுள்ளன.

### வளர்ச்சியின் மூன்று கட்டங்கள்

மேற்குலகில் செய்திப் பத்திரிகை வளர்ச்சியை மூன்று கட்டங்களாக வகுத்துக் கூறுகின்றது பிரித்தானிய கலைக்களஞ்சியம். (Encyclopedia Britannica) அவைவருமாறு:

முதற்கட்டம் அங்குமிங்குமாக வெளிவந்து கொண்டிருந்த முன்னோடிப் பத்திரிகைகள் மெதுவாக ஒழுங்குமுறையிலான பத்திரிகைகளாக வெளிவரத் தொடங்கின.

இரண்டாம் கட்டம் ஓரளவு ஒழுங்குமுறையாக வெளிவந்த போதிலும் பத்திரிகைகள் (சஞ்சிகைகள்) ஒடுக்குமுறைகளுக்குள்ளாகிய நிலையிலேயே வெளிவந்தன. தணிக்கை மற்றும் அனுமதி பெறவேண்டிய நிலைமைகளுக்கும் உள்ளாகின.

மூன்றாம் கட்டம் இந்தக் காலகட்டத்தில் நேரடியான தணிக்கை முறை நீக்கப்பட்டிருந்தது. ஆனால் கட்டுப்படுத்தும் செயற்பாடுகள், வரிவிதிப்புக்கள், கை இலஞ்சம் மற்றும் வழக்கு விசாரணைகள் என்று தொடரவே செய்தன. அதன் பிறகு ஓரளவு சுதந்திரம் நிலவத் தொடங்கியது. 18ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் பிரித்தானிய பத்திரிகைகள் முதிர்ச்சி நிலையின் முதல் கட்டத்தை அடையத் தொடங்கியிருந்தன.

1691ஆம் ஆண்டுக்குப் பிறகு அஞ்சல் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியானது பத்திரிகைகள் நாளேடுகளாக வெளிவருவதைச் சாத்தியமாக்கியது. இந்த வகையிலான முதல் முயற்சியாக டெய்லி கரன்ட் என்ற பெயரில் ஒரு தனிப் பிரதி (தாள்) பத்திரிகை தினசரியாக வெளிவந்தது. (1702 – 1735) இதில் பெரும்பாலும் வெளிநாட்டுப் பத்திரிகைகளில் வெளியாகும் விடயங்கள் சுருக்கமாகத் தரப்பட்டன. ஒரு பக்கத்தில் மட்டுமே விடயங்கள் அடங்கியிருந்தன.

பத்திரிகைத் தணிக்கை இங்கிலாந்தில் நடைமுறையில் இருந்த 1662 முதல் 1695 வரை லண்டன் கஸெட் என்பதைத் தவிர செய்திப் பத்திரிகை என்று சொல்லும்படியாக வேறு எந்த செய்தித்தாளும் வெளிவந்ததாகத் தெரியவில்லை. அந்தப் பத்திரிகையும்கூட அரசின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்துள்ளது.

வரலாற்று ஆசிரியரான மெக்காலே (Macaulay) அந்தப் பத்திரிகை பற்றி எழுதும்போது, நாடு எதை அறிய வேண்டும் என்று இராஜாங்க செயலர் விரும்பினாரோ அதைத் தவிர வேறு ஒன்றுமே அந்தப் பத்திரிகையில் இடம்பெற்றிருக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளமை அன்றைய நிலைமையை விளக்குவதாக உள்ளது.

1566ஆம் ஆண்டளவில் வெனிஸ் அரசானது (அப்போது அது சுதந்திர நாடு) கட் டளை ஒன்றைப் பிறப்பித்தது. பொது அறிவித்தல்கள் எழுத்தில் பொது இடங்க ளில் ஒட்டப்படவேண்டும். அவ்விடங்க ளில் அவைகளை வாசிக்க விரும்புபவர்கள் ஒரு சிறு நாணயத்தை அல்லது கஸட் டாவை (Gazetta) செலுத்தியாக வேண்டும் என்பதே அந்தக் கட்டளை. எனவே அந்த அறிவித்தல்கள் தான் பிற்காலத்தில் கஸட்ஸ் (Gazettes) என்று அழைக்கப்படலாயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசை

# இயற்கையைச் சுரண்டுவதை நிறுத்துவோம்!

இயற்கை என்பது அழகானது, நாம் அதனுள் உள்ளடங்கும் ஓர் அம்சம்தான் என்றும், இயற்கை என்பது கடவுள் என்றும் பல்வேறு நம்பிக்கைகளிடமிருந்து பதில்கள் வரக்கூடும். ஆனால், இலாப – நட்டக் கணக்கில் பதில் சொல்லவேண்டுமென்றால், இயற்கை ஆரோக்கியமாக இல்லாவிட் டால் எந்த முன்னேற்றமும் வளர்ச்சியும் இருக்காது என்றுதான் பதில் சொல்லவேண்டும். இயற்கையை இப்படி இலாப–நட்டக் கண்கொண்டு பார்ப்பதுதான் பெரும் ஆபத்து.

ஒரு காட்டை அது விளைவிக்கும் பொருள்கள், அங்கு வேட்டையாடப்படும் உயிரினங்களின் சந்தை மதிப்பு போன்றவற்றையும், ஒரு மலையை அதில் இருக்கும் கனிம வளங்களைக் கொண்டும் மதிப்பிடுவதுபோல்தான் இது. சமீபத்தில் பிளாட்டினம் நிரம்பிய விண்கல் கடந்துபோனபோது, உலகெங்கும் உள்ள ஊடகங்களில் ஒரு செய்தி இப்படி வெளியானது:

டிரில்லியன் டொலர் மதிப்புள்ள பிளாட்டினத்தைக் கொண்ட விண்கல் புவியைக் கடந்துபோகிறது (டிரில்லியன் டொலர் என்பது இலங்கை ரூபாய் மதிப்பில் ரூ. 140, 207,029,700,000). இவ்வளவு பிளாட்டினம் கொண்ட அந்த விண்கல்லையோ, அதுபோன்ற விண்கற்களையோ மனிதர்கள் சொந்தம்கொள்ளும் நாள்களைப் பற்றிய பல்வேறு செய்திகளும் வெளியாகின. இப்படியே ஒவ்வொன்றுக்கும் விலைப்பட்டி மாட்டிக்கொண்டே போகலாம். மனித உடலில் உள்ள உறுப்புகளின் விலை, இமயமலையின் விலை, வங்கக் கடலின் விலை, பசுபிக் கடலின் விலை, நிலவின் விலை, சூரியனின் விலை என்று எல்லாவற்றுக்கும் மனிதர்கள் விலை வைப்பார்கள். மனிதர்களின் பேராசை எவ்வளவு பிரம்மாண்டமாக உருவெடுத்திருக்கிறது!

### இயற்கைச் சுரண்டல்

இயற்கையின் எல்லைகள் என்பவை திட்டவட்டமானவை அல்ல என்றாலும், அதற்கும் எல்லைகள் இருக்கின்றன. எல்லைக்கோடு எங்கே என்பது தெரியாததாலும், பெரும்பாலும் அதன் உடனடி மற்றும் நேரடி விளைவுகள் நம்மை பாதிக்காததாலும், அந்த எல்லைகளை நாம் மீறிக் கொண்டே இருக்கிறோம்.

இப்படி ஒட்டுமொத்த மனித குலமும் நிகழ்த்தும் மீறலை இயற்கை,எந்த அளவுக்குத் தாங்கிக்கொண்டிருக்கும் என்பது நமக்குத் தெரியாது. ஆனால், இயற்கை தன் போக்கில் நிகழ்த்தும் சில மீறல்களான நிலநடுக்கம், ஆழிப் பேரலை போன்றவற்றின்போது நாம் சக்தியற்றவர்களாக, பேச்சு இழந்து நிற்கிறோம். அப்படியும் நாம் பாடம் கற்றுக் கொள்வதில்லை. மறுபடியும் நம் மீறல் விளையாட்டைத் தொடர்ந்து நிகழ்த்திக்கொண்டிருக்கிறோம்.

இயற்கை என்பது நாம் சாராத, நமக்கு வெளியில் உள்ள ஒன்று, இயற்கை என்பது ஒரு பண்டம் என்பது போன்ற சிந்தனைகள்தான் இந்த இலாப–நட்டக் கணக்குக்கு அடிப்படை. உலகின் நுரையீரல் போன்றவை அமேசான் காடுகள். தினமும் நியூயோர்க் நகரம் அளவுக்கு அமேசான் காடுகள் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. உலக அளவில் ஏன் போக வேண்டும்? நம் ஊரில் இத்தனை மலை விழுங்கி மகாதேவன்களா என்று ஆச்சரியப்படுமளவுக்கு எத்தனை பனைகளைத் தறிக்கிறார்கள்? இப்படியே இயற்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் சுரண்டிக் கொண்டே போனால் இறுதியில் என்ன மிஞ்சும்?

### தேவைகளும் பேராசைகளும்

இன்றைய நம் வாழ்க்கை முறையே, இயற்கையைச் சுரண்டுவதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட வாழ்க்கை முறைக்குள் இருந்துகொண்டுதான் இயற்கைச் சுரண்டலை எதிர்க்க வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். இந்தத் தருணத்தில் காந்தியின் சொற்களை நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது: உலகில் உள்ள அனைத்து மனிதர்களின் தேவையைத்தான் இந்தப் பூமியால் பூர்த்தி செய்ய முடியுமே தவிர, அனைத்து மனிதர்களின் பேராசையையும் அல்ல.

அளவுக்கு மிஞ்சிய மக்கள்தொகை பெருக்கம், அதன் தேவைகள். இவற்றை பூர்த்தி செய்ய வேண்டுமானால், என்னதான் செய்வது? உடனடியாக எல்லாவற்றையும் கைவிட்டுவிட்டு, இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்த ஆதிகாலத்தை நோக்கித் திரும்ப முடியுமா என்பது போன்ற கேள்விகள் கேட்கப்படுகின்றன.

கூடவே முன்னேற்றம், வளர்ச்சி என்றெல்லாம் நாம் பேசும் தற்காலச் சூழலில் இயற்கை ஆர்வலர்கள், சுற்றுச்சூழலியலாளர்கள் போன்றோரை வளர்ச்சிக்கு எதிரானவர்களாகவும், பல நேரம் தேசத்தின் எதிரிகள், அந்நியக் கைக்கூலிகள் என்றும் முத்திரை குத்திவிடுகிறோம். ஆனால், பெரும்பாலான தொழில்களின் அடிப்படை மூலதனம் இயற்கைதான். அப்படியானால், இயற்கை எல்லையற்று நமக்கு எல்லாவற்றையும் வழங்கிக்கொண்டிருக்கும் என்றும், நமது பேராசைச் சுரண்டலை இயற்கை எல்லையற்றுப் பொறுத்துக்கொண்டிருக்கும் என்றும், நாம் நம்புகிறோமா?

சரி, என்னதான் செய்ய வேண்டும்? நம்மால் உடனடியாக ஏதும் செய்ய முடியவில்லை என்றாலும் குறைந்தபட்சம் இயற்கையைப் பற்றியும், இயற்கையைப் பாதுகாப்பது குறித்தும் நமக்குள்ளேயே அக்கறையை விதைக்க வேண்டும். இயற்கைக்கு நேரெதிரான திசையில் செல்லும் இன்றைய நவீன வாழ்வை நம்மால் புறக்கணிக்க முடியாவிட்டாலும், குறைந்தபட்சம் அதில் மிதமான போக்கை கடைப்பிடிக்க வேண்டும். இது மக்களைவிட அரசுக்குத்தான் மிகவும் பொருந்தும். எந்த ஒரு திட்டத்தின் பயன் மதிப்பைப் பார்ப்பதற்கும் முன், அதனால் இயற்கையில் விளையக்கூடிய பாதிப்புகளை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். சுற்றுச்சூழலியலாளர்களின் கூக்குரலை, கோரிக்கைகளைக் கண்ணை மூடிக்கொண்டு நிராகரிக்காமல், குறைந்தபட்சம் அவற்றைப் பரிசீலிக்கவாவது வேண்டும். சுற்றுச்சூழலியலாளர்களின் பின்னணியில் அந்நிய சக்திகளோ, வேறு சுயநலக் கணக்குகளோ இருப்பதாக அரசுக்கு ஆதாரபூர்வமாகத் தெரியவந்தால், பிரச்சினையில் சம்பந்தப்பட்ட மக்களின் குரலையாவது கேட்கவேண்டும். தனது தேசத்தின் எதிர்காலத்தில் அக்கறையுள்ள அரசு, இப்படியெல்லாம் செய்தாக வேண்டும். ஆனால், அப்படிச் செய்கிறதா நம் அரசுகள்?

### ஹூலா சதுப்புநில விவகாரம்

இந்தப் பின்னணியில் இஸ்ரேலின் ஹூலா சதுப்புநில விவகாரத்தை எடுத்துக்கொள்வோம். உலகின் முக்கியமான உயிர்ச் சூழல்களுள் அந்தச் சதுப்பு நிலமும் ஒன்று. மலேரியா கொசுக்கள் உற்பத்தியாகின்றன என்று 1951இல் அந்தச் சதுப்பு நிலத்திலுள்ள நீர் முழுவதையும் வெளியேற்ற ஆரம்பித்து இஸ்ரேலிய அரசு. 1958இல் அந்தச் சதுப்பு நிலத்தை வெற்றிகரமாகத் தரிசுநிலமாகவே ஆக்கிவிட்டது. இஸ்ரேல் தேசத்தின் கட்டமைப்பில் மிக முக்கியமான அருங்காரியமாக, தேச முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக இது கருதப்பட்டது.


ஆனால், அந்தச் சதுப்பு நிலத்தின் மீது கைவைத்தது எவ்வளவு பெரிய இயற்கைப் பேரழிவு என்பதை, அந்த நாடும் மக்களும் விரைவிலேயே உணர ஆரம்பித்தார்கள். சுற்றுச்சூழல் பாதிப்புக்களை மக்கள் மிகவும் வெளிப்படையாகவே அனுபவித்தனர். அரிய உயிரினங்கள் சில முற்றிலும் அற்றுப்போயின. ஆக, தேச வளர்ச்சி என்ற பெயரில் உண்மையில் தேசத்தை அழிவை நோக்கி தள்ளிவிட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்த அந்த நாட்டு அரசு, மறுபடியும் அந்த சதுப்பு நிலத்தை நீரால் நிரப்பியது. தற்போது, ஆண்டுக்கு 50 கோடி பறவைகள் அந்த வழியாக வலசை போகின்றன என்பதைக் கொண்டு, அது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்பதை உணரலாம்.

### பெரும் பிழை தானோ?

ஹூலா சதுப்புநிலம் குறித்து இஸ்ரேலின் மகாகவிகளுள் ஒருவரான யுஹூதா அமிச்சாய் ஒரு கவிதை எழுதியிருக்கிறார்:

எனது இளம் வயதில்  
முழுமனதோடு நான் நம்பினேன்  
ஹூலா சதுப்புநிலம் வடிக்கப்பட வேண்டுமென்று.  
அதன்பின், ஜொலிஜொலிக்கும் வண்ணப் பறவையெல்லாம்  
நீங்கிச்சென்றன அங்கிருந்து.  
அரை நூற்றாண்டுக்குப் பிறகோ  
மறுபடியும் நீரால் நிரப்புகிறார்கள் அவ்விடத்தை,  
எல்லாம் பெரும் பிழையென்று சொல்லிக்கொண்டு.  
ஒருவேளை என் ஒட்டுமொத்த வாழ்க்கையும்கூட  
இதைப் போன்றதொரு பிழைதானோ?

அப்படியென்றால், சதுப்பு நிலத்தை வடித்து இஸ்ரேல் என்ன சாதித்தது? இயற்கையின் மீது தன் விருப்பத்துக்குக் கைவைத்து, இயற்கையை சீர்குலைத்து மேற்கொள்ளப்படும் நம் நாட்டின் பேரணைக் கட்டுமானங்கள், நீர்மின் திட்டங்கள், தங்க நாற்கரச் சாலைகள் போன்ற விவகாரங்களிலும் இதே கேள்வியை நாம் கேட்டாக வேண்டும். நம் நாட்டில் கட்டமைப்புப் பணிகளில் ஈடுபடும் பொறியியலாளர்கள் பலருக்கும் இயற்கையை அறுவைசிகிச்சை செய்வது மிகவும் அலாதியான விடயம். வரைபடத்தை வைத்துக்கொண்டு இரண்டு புள்ளிகளுக்கிடையில் நேராக ஒரு கோடு போடுவதில் அவர்களுக்கு இருக்கும் ஆர்வம் அபாரமானது. ஆனால், இயற்கை என்பது வரைபடமல்ல; நம்மைப் போன்று கோடிக் கணக்கான சிற்றுயிர்களை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் பேருயிர்! இந்த உண்மையை மக்கள், வல்லுநர்கள், அரசு ஆகிய மூன்று தரப்பினருமே உணர்ந்தால்தான் இயற்கையை, குறிப்பாக நம்மைக் காப்பாற்றிக்கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது சொத்துக்களைப் பாதுகாக்க அரசு முன்வருமானால்...





**உயிர்ச்சேதங்களும் இடம்பெறும் சம்பவங்கள் வடக்கு கிழக்கு உள்ளடங்கலாக நாட்டின் நாலாபுறங்களில் இருந்தும் பதிவாகியிருக்கின்றன. முல்லைத்தீவில், வவுனியா வடக்கில், வன்னிப் பிரதேசங்களில், திருகோணமலையின் குச்சவெளிப் பிரதேசத்தில், மட்டக்களப்பில் போரதீவுப்பற்று, வாழைச்சேனை, மண்முனை மேற்கு எனப் பலபிரதேசங்களிலும் ஊருக்குள் நுழையும் யானைகள் கிராமவாசிகளின் வாழிடங்களை சேதமடையச்செய்வதுடன் தென்னை, வாழை, மரவள்ளி, நெல் போன்ற பயன்தரு மரங்களையும் நாசம் செய்கின்றன.**

■ ஸ்டோ ஸ்வாமி

நீதிமன்ற வளாகத்தினுள் நுழைந்து அங்கிருந்த பூஞ்செடிகள் மற்றும் பயிர்த் தாவரங்களை சேதப்படுத்திய கால்நடைகளுக்காக அதன் உரிமையாளருக்கு நீதிமன்று தண்டம் விதித்த சம்பவம் ஒன்று யாழ்ப்பாணத்தில் பதிவாகியிருக்கிறது. குறித்த கால்நடைகளின் உரிமையாளரைக் கண்டறிந்து காவல்துறையினர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ததைத் தொடர்ந்து, தண்டப் பணமாக 1,000 ரூபாவினை செலுத்துமாறு உத்தரவிட்ட நீதிவான், நட்டஈடாக 12,000 ரூபாவினையும் நீதிமன்றுக்குச் செலுத்தும்படியும் தீர்ப்பளித்திருக்கிறார். இதன்படி கால்நடைகளை கட்டுப்படுத்த தவறியமைக்காக 6,000 ரூபாவும் பூங்கன்றுகளை சேதப்படுத்தியமைக்காக 6,000 ரூபாவும் அத்தோடு தண்டமாக 1000 ரூபாவுமாக மொத்தம் 13,000 ரூபாவினை செலுத்துமாறு கால்நடைகளின் உரிமையாளர் கோரப்பட்டிருந்தார்.

இது ஒருபுறமிருக்க, பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்படும் பலர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படும் செய்திகளையும் தினசரி ஊடகங்களில் காணமுடிகிறது.

நாட்டின் பல பாகங்களிலும் இருந்து விலங்குகளால் குறிப்பாக வனவிலங்குகளால் மனிதர்கள் தொந்தரவுக்குள்ளாகும் சம்பவங்கள் அண்மை நாள்களாக அதிகரித்துள்ளன. குறிப்பாகக் காட்டுப் பிரதேசத்தினை அண்டிய கிராமப்புற பிரதேசங்களிலிருந்து இந்த வகையான முறைப்பாடுகள் அதிகளவில் எழுந்தவண் ணம் இருக்கின்றன.

**யானைகளின் அட்டகாசம்!**

வனப்பிரதேசங்களிலிருந்து கிட்டிய கிராமப்புறங்களுக்குப் படையெடுக்கும் யானைகளால் பொருள் சேதங்கள் மாத்திரமின்றி உயிர்ச்சேதங்களும் இடம்பெறும் சம்பவங்கள் வடக்கு கிழக்கு உள்ளடங்கலாக நாட்டின் நாலாபுறங்களில் இருந்தும் பதிவாகியிருக்கிறது. முல்லைத்தீவில், வவுனியா வடக்கில், வன்னிப் பிரதேசங்களில், திருகோணமலையின் குச்சவெளிப் பிரதேசத்தில், மட்டக்களப்பில் போரதீவுப்பற்று, வாழைச்சேனை, மண்முனை மேற்கு எனப் பலபிரதேசங்களிலும் ஊருக்குள் நுழையும் யானைகள் கிராமவாசிகளின் வாழிடங்களை சேதமடையச்செய்வதுடன் தென்னை, வாழை, மரவள்ளி, நெல் போன்ற பயன்தரு மரங்களையும் நாசம் செய்கின்றன.

அண்மையில் மின்னேரியா சமகிபுர குடியிருப்பு பிரதேசத்தில் கிராமத்தினுள் நுழைந்து அட்டகாசம் விளைவித்த யானை, ஊடகவியலாளர் ஒருவரையும் சாவடித்திருந்தது.

கடந்த ஐந்தாம் திகதி திங்கட்கிழமை மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் அலுவலகத்தின் முன்னால் திரண்ட மக்கள், யானைகளிடமிருந்து தமக்குப் பாதுகாப்புத் தருமாறு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றிலும் ஈடுபட்டிருந்தனர். (அதனைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கையை அடுத்து தொடர்ச்சியாக அட்டூழியம் செய்து வந்த யானை ஒன்று அப்பிரதேசத்திலிருந்து பிடிக்கப்பட்டது).

**குரங்குகளின் கும்மாளம்!**

கிராமங்களுக்குள் நுழையும் குரங்குகளின் சில்மிசங்களால் பெருத்த நட்டத்தினை எதிர்கொள்வதாகக் கண்ணீர்விடுகிறார்கள் கமத்தொழிலாளர்கள். விவசாயச் செய்கைகளை மாத்திரமின்றி வாழிடங்கள் மற்றும் பாடசாலை வகுப்பறைக் கூரைகளையும் அவை சேதப் படுத்தியுள்ளன.

வீடுகளுக்குள் அனுமதியற்ற விருந்தாளியாக நுழையும் குரங்குகளால் சமைத்த மற்றும் சமையலுக்காக வைக்கப்பட்ட உணவுகளும் திருடப்பட்டுள்ளன. இதனால் கடும் சிரமத்தைத் தாம் எதிர்கொள்கிறார்கள் என்று கூறுகிறார்கள் கிராமவாசிகள்.

யாழ்ப்பாணத்தின் தென்மராட்சிப் பிரதேசத்தில் விடத்தற்பளை பழவிவசாயிகளுக்கு நெடுங்காலமாக நாசம் விளைவித்துவந்த 25 குரங்குகள் கடந்த மாதம் தான் பிடிக்கப்பட்டு வனஜீவராசிகள் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

**ஊடுருவித் தாக்கும் பன்றிகள்!**

தரைக்கீழ் கிழங்குவகை உணவுகளை இலக்கு வைத்துக் கூட்டாகவும் தனியாகவும் ஊர்களுக்குள் ஊடுருவும் பன்றிகளாலும் நெருக்கடியை எதிர்கொள்கிறார்கள் கிராமவாசிகள். பயிர்ச்செய்கைகளுக்கும் பயிர்நிலங்களுக்கும் சேதாரத்தினை உண்டுபண்ணுவது மாத்திரமின்றி மனிதர்களின் நடமாட்டத்திற்கு அச்சுறுத்தலாகவும் அவை விளங்குகின்றன என்று கவலை தெரிவிக்கின்றார்கள் அவர்கள்.

**குனியக் குனியக் கொட்டும் குளவிகள்!**

குளவிக்கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் பொதுமக்கள் அனுமதிக்கப்படும் பல சம்பவங்கள் பரவலாக மலையகப் பிரதேசத்திலிருந்து அறிக்கையிடப்படுகின்றன. குறிப்பாகத் தேயிலைத்தோட்டத் தொழிலாளர்கள் பலர் தமது வேலைத்தளத்தில் வைத்து குளவித் தாக்குதலுக்குள்ளாகி வைத்திய சிகிச்சை பெற நேர்ந்த அவலங்களைத் தொடர்ந்து குளவிக்கூடுகளை அகற்றக் கோரிக்கை விடுத்து வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட சம்பவங்களும் பதிவாகியிருக்கின்றன.

**[illegible] முதலைகள்!**

[illegible] வசித்து, வறட்சி காரணமாக குடிபெயரும் முதலைகள் உயிரச்சத்தை ஏற்படுத்துகின்றன என்று தெரிவிக்கின்றார்கள் பாதிக்கப்பட்ட தரப்பினர். குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு வாவியை அண்டிய பிரதேசங்களிலேயே இதன் பாதிப்பு அதிகமாகக் காணப்படுகிறது. அண்மை நாள்களாக தெகிவளை மற்றும் காலிமுகத் திடலை அண்டிய கடற்பிரதேசங்களில் முதலை நடமாட்டம் பற்றிய செய்திகள் வெளிவந்திருந்தன.

**இவை யாருடைய சொத்துக்கள்?**


இயற்கைச் சமநிலை தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்தும் விலங்கு வாழிடங்களில் மனிதனின் தலையீடு அதிகரித்ததைத் தொடர்ந்தும் பட்டணம் பார்க்க புறப்படும் வனவிலங்குகளைக் கட்டுப்படுத்தவேண்டிய தேவை தவிர்க்க முடியாததாகி வருகிறது. அத்தகைய விலங்குகளைக் கட்டுப்படுத்தவேண்டிய உரிமையும் கடமையும் அரசுக்குரியது. ஏனெனில் அவை அரசாங்கத்தின் சொத்துக்கள்.

வன இலாகா அல்லது வனஜீவராசிகள் திணைக்களத் தரப்பினர் தமது பரிபாலன சேவையினைச் செவ்வனே நிறைவேற்றுவதன் மூலம் அரசின் சொத்துக்களைக் காக்கவேண்டிய கடமையினை நிறைவேற்றவேண்டும். இல்லையேல் பத்தியின் ஆரம்பத்தில் சொன்ன அதே வழக்கில் அதே சட்டத்தின் கீழ், தமது சொத்துக்களான குளவி உள்ளிட்ட வனவிலங்குகளைக் கட்டுப்படுத்தத் தவறியமைக்காகவும் பொதுமக்களின் உயிர் உட்பட்ட உடைமைகளுக்கு சேதம் விளைவித்தமைக்காகவும் இழப்பீடு கோரி அரசையும் அதிகாரிகளையும் குற்றவாளிக்கூண்டில் ஏற்றமுடியாதா என்ன?

நீதி கோரி ஆராய்ச்சிமணி அடிப்பதற்காக அரசவைக்கு சென்ற பசுமாட்டின் கதையை மட்டுமே கேள்விப்பட்டு வந்த நமக்கு, நீதிமன்ற வளாகத்தினுள் நுழைந்த இந்த பசுமாடு அதன் உரிமையாளருக்கு அபகீர்த்தியையே ஏற்படுத்தியிருந்தாலும், அரசிடம் பதில்கோரும் வகையிலான பொதுநலன் சார் வழக்குகளுக்கான மற்றும் ரிட் மனுக்களுக்கான வாசல் கதவுகளை அகலத் திறந்தே திரும்பியிருக்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கையராய்ப் பிறப்பதற்கு



மங்கையராய்ப் பிறப்பதற்கு
மாதவம் செய்திட வேண்டும்
என்றாயே.
ஊர் உலகில் எம் நிலைமை
உரைக்கும் தரமாமோ ..
உன்னளவில் என் நிலைமை
உணர்வாயோ தோழனே. ?
உன்
வீட்டுக்கு விளக்கேற்ற
நான் லட்சுமியாய் வரணும்
உன் பாதத்தில் எரியும்
கற்பின் புனித கர்ப்பூரம் ஆகணும்.
உன் கண்ணுக்கு மட்டும்
அழகு குறையாத
மகாலட்சுமியாய் இருக்கணும்.
அன்னிய ஆண்களின்
பார்வை படாமல்
நெருப்பைக் கக்கும் எரிமலை
ஆகணும்.
தாயினும் சாலப்பரிந்து
நான் அமுதூட்டணும்
உன் எச்சிலின் மிச்சம்
எனக்கு அமுதம் ஆகணும்.
உன் விருந்தினர் வந்தால்
என் முகம் எப்போதும்
பிளாஸ்ரிக் பூவாய்
மலர்ந்தே இருக்கணும்.
நீ கொஞ்ச நினைக்கையில்
நான் குழந்தை ஆகணும்
உன் விளையாட்டுக்கெல்லாம்
ஒரு பொம்மை ஆகணும்.
நீ அழைக்கும் போதெல்லாம்
நான் அவிழ்ந்து கிடக்கணும்
உன் படுக்கையில் நான் ஒரு
தாசியாகணும்.
உன்
ஆசை நாயகிகளின் அக்கா ஆகணும்
காமச்சூட்டில் உன் மூளை உருகி
அறிவு மழுங்கும் போதெல்லாம்
ஆலோசனைகளை அடுக்கும்
அமைச்சராகணும்
உன் முதுகு சொறிந்திட
என் பவள நகங்கள்
மண்வெட்டி ஆகணும்
உன்
கால்களை பிடிக்கையில்
என் காந்தள் விரல்கள்
இயந்திரம் ஆகணும்.
நீ நோயில் படுத்தால்
என் கமலக் கரங்கள்
கழிப்பறை ஆகணும்.
உன் சோகங்கள் தாங்க
நான் சுமைதாங்கி ஆகணும்.
நீ நெஞ்சில் நினைப்பதை
உடனே முடித்திடும்
அடிமையாக நான்
அவதாரம் எடுக்கணும்
நீ உதைத்திடும் போதும்
கால்களை நக்கும்
நாயாய்க் குரையணும்
நீ மிதித்தாலும் கிழித்தாலும்
பொறுமையில் நான்
பூமியாய் இருக்கணும்
உனக்காக நான்
இன்னும் என்னவெல்லாமோ
ஆகணும்
நீ செத்தாலும் உன்னுடன்
நானும் வேகணும்.
ஆம்
மங்கையராய்ப் பிறப்பதற்கு
மாதவம் செய்திடத்தான் வேண்டும்.

# இல்லறம் நல்லறமாக..

கணவனோ, மனைவியோ எந்த விதத்தில் பிரச்சினை வந்தாலும், இருவரும் ஒரு அணியில் நின்று பிரச்சினையை சமாளிக்கும் போது குடும்பம் வலுப்பெறும். ஆனால், அவர்களுக்குள்ளாகவே பிரச்சினையை உருவாக்கிக் கொண்டு இரு அணிகளாக நின்று போராடும்போது குடும்ப உறவுக்குள் பல துர்தேவதைகளின் ஆதிக்கம் மேலோங்கும்.

■ இணையவள்

திருமணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர், திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவது, மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம். என்பது போன்ற பழமொழிகள் திருமணத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் அமையப்பெற்றுள்ளது. திருமணம் என்பது பெற்றோரால் பார்த்து நிச்சயிக்கப்பட்டு நடத்தி வைக்கப்படுவது. ஆனால் தற்போது காதல் திருமணங்களும் அதிகளவில் நடக்கின்றன. ஆனால் எந்தவகையான திருமணமாக இருந்தாலும், தம்பதிகள் ஒத்துப்போனால் மட்டுமே அவர்களது வாழ்க்கை நீடிக்கும்.

கணவனோ, மனைவியோ எந்தவிதத்தில் பிரச்சினை வந்தாலும், இருவரும் ஒரு அணி யில் நின்று பிரச்சினையை சமாளிக்கும்போது குடும்பம் வலுப்பெறும். ஆனால், அவர்களுக்குள்ளாகவே பிரச்சினையை உருவாக்கிக் கொண்டு இரு அணிகளாக நின்று போராடும் போது குடும்ப உறவுக்குள் பல துர்தேவதைகளின் ஆதிக்கம் மேலோங்கும். அது பெண்ணின் தாயாகவும் இருக்கலாம், ஆணின் தாய் மற்றும் தமக்கைகளின் ஆதிக்கமாகவும் இருக்கலாம். இது குறித்து ஒரு நகைச்சுவை ஒன்று உள்ளது. அதாவது காதலிக்கும் போது காதலன் பேசுவான், காதலி கேட்பாள், திருமணத்துக்குப் பிறகு மனைவி பேசுவாள், கணவன் கேட்பான், குழந்தை பிறந்த பிறகு இருவருமே பேசுவார்கள் ஊரே கேட்கும் என்பது போல குடும்பப் வாழ்க்கை ஆகிவிடக் கூடாது. குடும்ப பிரச்சினைகளில் பெரும்பாலும் கணவனது குடிப்பழக்கம், வேலையில்லாத கணவன், குடும்பத்தை நடத்துவதற்கான வருமானம் இன்னமை, கணவரது தாய் மற்றும் சகோதரிகளின் கொடுமை, அல்லது பாலியல் பிரச்சினைகள் போன்றவை ஒரு பெண்ணுக்கு எதிராக நிற்கின்றன.

இதேபோல, குடும்பத்துக்கு ஒத்துவராத பெண், குடும்ப சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றி அமைத்துக் கொள்ளாத பெண், ஊதாரித் தனம், பல ஆண்களின் சகவாசம், குடும்பத்துக்கு அடங்காத பெண் போன்றவை ஆணின் முன் நிற்கும் பிரச்சினைகளாகும். எதுவாக இருந்தாலும், நமது அன்பாலும், பொறுமையாலும் ஒருவரை அனுசரித்துச் சென்று அவருடனான வாழ்க்கையை இனிதாக்கிக் கொள்வது எவராலும் முடியாத விடயம்தான். எனவே, பிரச்சினை தொடங்கும்போதே அதைப் பற்றி இருவரும் மனம் விட்டுப் பேசி பிரச்சினையை தீர்த்துக் கொள்ளலாம். எதையும் அறிவுபூர்வமாக ஆராயாமல், மனப்பூர்வமாக ஆராய்ந்தால் நல்லவழி கிட்டும். அப்பபடியே பிரச்சினைகள் தொடக்கி அதை கவனிக்காமல் விட்டு விட்டு பின் புரையோடிப் போன சூழ்நிலையில் தம்பதிகள் ஒன்றாக நாடுவது நீதிமன்றத்தைத்தான். விவாகரத்து என்பதிலாவது தம்பதிகளுக்கு ஒத்த கருத்து ஏற்பட்டது குறித்து சில இடங்களில் ஆச்சரியப்பபட்டுத்தான் ஆக வேண்டும். அந்தளவுக்கு எலியும் பூனையுமாக இருக்கும் தம்பதிகளும் உண்டு.



நீதிமன்றங்களில், விவாகரத்து கேட்டுச் செல்லும் தம்பதிகளுக்கு உடனடியாக வழக்குப் பதிவு செய்து விவாக ரத்து வழங் கப்படுவதில்லை. முதலில் உளவியல் ரீதியாக ஆலோசனை வழங்கப்படுகிறது. தேவைப்பட்டால் பல தடவைகூட ஆலோசனை நடத்துகிறார்கள். முடிந்தவரை தம்பதிகளை சேர்த்து வைக்கவே நீதிமன்றங்கள் முயற்சி செய்கின்றன. இறுதி வரை விவாகரத்து பெற்றே தீருவது என்று இருவரில் ஒருவர் பிடிவாதமாக இருந்தாலோ அல்லது இருவரும் பிடிவாதமாக இருந்தாலோ வழக்கு நடத்திவிவாகரத்து வழங்கப்படுகிறது.

இல்லற வாழ்க்கை இனித்திட, மூன்று தாரக மந்திரங்கள்.

சூழ்நிலைக்கேற்ப நடந்து கொள்ளுதல்,அனுசரித்துப் போகுதல், மற்றவர்களை மதித்து நடத்தல். இவ்வாறு இருந்தால் இல்லறம் நல்லறம் தான். நமது வாழ்க்கை நம் கையில்தான் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டென்மார்க்



இது ஐரோப்பாக் கண்டத்திலுள்ள நாடுகளுள் ஒன்று. இதன் தலை நகரம் கோப்பன்ஹேகன் ஆகும். நார்டிக் நாடுகளில் தென் கோடியில் அமைந்துள்ளது இதுவே. இதன் தெற்கில் ஜேர்மனி இதன் எல்லையாக உள்ளது. இதன் வடகிழக்குப் பகுதியில் ஸ்கன்டிநேவிய நாடுகளான நோர்வே, சுவீடன் என்பன அமைந்துள்ளன. இது பால்டிக் கடல் மற்றும் வடக்கு கடலுக்கு இடையில் அமைந்துள்ளது. டென்மார்க் நாடானது தீபகற்பம், ஐஸ்லாந்து மற்றும் 407 தீவுகளை உள்ளடக்கிய தீவுக்கூட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிக் காணப்படுகின்றது.

வருவாய் ஏற்றதாழ்வு மிகவும் குறைவாக உள்ள நாடுகளில் இது ஒன்றாகும். ஐஸ்லாந்துக்கு அடுத்தபடியாக உலகின் மிக அமைதி யான நாடு எனவும் அறியப்படுகிறது. டானிய மொழியே தேசிய மொழியாகும். இது பெரும்பாலான மக்களால் பேசப்படுகிறது.



## நன்றியுள்ள நாய்

நன்றியுள்ள ஜீவனே வா வா
நான் உனக்காகக் காத்திருக்கிறேன் வா வா
காலை முதல் மாலை வரை– என்
காலைச் சுற்றும் தோழனே வா வா

# மரங்களின் வீண் ஆசை

அந்தத் தோட்டத்திலிருந்த பெரிய மரத்துக்கு நீண்ட நாள்களாகவே ஓர் ஆசை இருந்தது. அதனைப் பிற மரங் களிடமும் அடிக்கடிச் சொல்லும். இத னால் ஏனைய மரங்களுக்கும் அந்த ஆசை வந்து விட்டது. எல்லாம் சேர்ந்து இறைவனை அழைத்தன. இறைவன் தோன்றினார். 'என்ன மரங்களே! எதற் காக என்னை அழைத்தீர்கள்?' என்று கேட்டார். 'இறைவா எங்கள் கிளை களில் கூடு கட்டி வசிக்கும் பறவைகள் எல்லாம் நினைத்த நேரத்தில் வெளியே செல்கின்றன. சுதந்திரமாக வானில் பறக் கின்றன. எங்கள் நிழலில் இளைப் பாறும் மனிதர்களும் விலங்குகளும் தங்கள் பாட்டுக்குச் செல்கிறார்கள். ஆனால் நாங்கள் மட்டும் எப்போதும் ஒரே இடத்திலேயே இருக்கிறோம்' என்றது ஆலமரம். 'பிறந்தது முதல் இறுதி வரை ஒரே இடத்திலேயே இருக் கிறோம். உலகில் என்ன நடக்கிறது என்பதே தெரிவதில்லை. அப்படியே நாங் கள் வெளி உலகைக் காணச் செல்வதாக இருந்தால் அது எங்கள் சாவுக்குப் பின்தான் நடக்கிறது' என்று வருந்தியது அரசமரம். 'எல்லா உயிரினங்களுக்கும் கால்களை அல்லது இறக்கைகளைக் கொடுத்த நீ எங் களை மட்டும் ஏன் இப்படிப் படைத்தாய்? இது என்ன ஓரவஞ்சனை' என்று கேட்டது பனைமரம். 'கிளைகள் தான் உங்கள் இறக் கைகள், வேர்கள் தான் கால்கள்' என்றார் கடவுள். "வேர்களா? கால்கள் அவை எங் களைச் சிறைப்பிடித்திருக்கும் விரோதிகள் எங்களுக்கு வேர்கள் வேண்டாம்" என்றன மரங்கள். அதற்குப் பதிலாக மனிதர் களைப் போல் கால்களைக் கொடுங்கள் என்று கோபப் பட்டது வேப்பமரம். 'ஒவ்வொரு படைப்புக்கும் ஒவ்வோர் அர்த்தம் இருக் கின்றது.

உங்களை இப்படி எதற்காக...' என்று இறை வன் முடிக்கும் முன்பே குறுக் கிட்டது முருங்கை. 'விளக்கம் மெல்லாம் வேண் டாம். எங்களுக்கு கால் களைத் தர முடி யுமா முடியாதா?' என்று கேட்டது . 'சரி நீங்கள் ஆசைப் படு வதால் இன்று மட் டும் கால்களைத் தரு கின்றேன். எங்கே செல்ல விரும்புகின் றீர்களோ அங்கே சென்று விட்டு வாருங் கள். பிறகு கால்கள் நிரந்தரமாக வேண் டுமா இல்லையா என் பதைச் சொல்லுங் கள்' என்று இறை வன் வரமளித்தார். மரங்களுக்குக் கால்கள் முளைத்தன. சந்தோஷத்தில் துள்ளிக் குதித் தன. உடலைச் சிலுப்பிக் கிளைகளில் கூடு கட்டி இருந்த பறவைகளை விரட்டின. 'ஏய்! ஓடிப்போங்கள்! இனிமேல் எங்கள் மீது வந்தமர்ந்தால் தொலைத்து விடுவோம்!' என்றன. பாவம் பறவைகள்! எங்கே செல் வதெனப் புரியாமல் தவித்தன. மரங்கள் யாரைப் பற்றியும் கவலைப்படாமல் தோட் டத்தை விட்டுச் சென்றன. வீதிகளில் சந் தோஷமாக ஓடின. உயரமான கட்டடங் களையும் விதவிதமான வாகனங்களையும் கண்டு பிரமித்தன. 'ஆகா இதையெல்லாம் இத்தனை நாள்களாக அனுபவிக்காமல் இருந்து விட்டோமே' என்றது ஆலமரம். இருட்டும் வேளை. எல்லா மரங்களும் கடற்கரைக்கு வந்து சேர்ந்தன. மண்ணில் குதித்துக் குதித்து விளையாடின. இதைக் கண்ட அலை ஆச்சரியப்பட்டது. 'ஏய் மரங் களே! நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்?' என்று கேட்டது. 'இறைவனிடம் வரம் வாங் கினோம். வேர்களுக்குப் பதிலாக கால் களைக் கொடுக்கு மாறு கேட்டோம்' என் றது அரசமரம்.'பாவம் நீ கூட ஒரே இடத் திலேயே வருவதும் போவது மாக இருக் கிறாய். ஊருக்குள் செல்ல நீயும் இறை வனிடம் வரம் கேள்' என்றது வேப்ப மரம். அலை சிரித்தது. 'அது போன்ற பைத்தி யக் காரத்தனமான வரம் எனக்கு வேண்டாம்' என்றது. 'அப்படியானால் நாங்கள் பைத் தியக் காரர்களா?' அன்று கோபமாக முறைத்தது முருங்கை மரம். 'அதில் என்ன சந்தேகம்? சாபத்தை வாங்கி வந்து விட்டு வரம் வாங்கியதாகச் சொல்கிறீர்களே. உங்களுக்குப் பெருமை சேர்ப்பதே காய் களும் கனிகளும் தான். அவற்றை மற்ற உயிரினங்கள் உண்டு வாழ்கின்றன. அந்தக் காய்களும் கனிகளும் நீங்கள் ஒரே இடத் தில் இருந்து கொண்டு மண்ணின் சத்தை யும் நீரையும் பெறுவதன் மூலம் கிடைக் கிறது. வேர்கள் தான் அவற்றைப் பெற் றுத் தருகின்றன. அந்த வேர்களையே உதறிவிட்டு இங்கும் அங்குமாக நட மாடினால் எப்படி கனிகளைப் பெற முடியும்?' என்றது அலை. 'நீ என்ன சொல்கிறாய்? நாங்கள் செய்தது தப்பா?' என்று கேட்டது ஆல மரம். 'ஆமாம். உங்கள் கிளைகளில் பறவைகள் வசிக்கின்றன. நிழலில் உயிரினங்கள் தங்குகின்றன. இப்படி அடுத்தவருக்கு உதவும் அற்புதமான வரத்தை இறைவன் தந்திருக்கிறார். என் னையே எடுத்துக் கொள்ளுங்கள்! நான் இங்கே இருக் கும் வரை தான் மதிப்பு. குழந்தைகள் தேடி வந்து சந்தோஷமாகக் கால் களை நனைக்கிறார்கள். அதுவே நான் ஊருக்குள் சென்றால் என்ன ஆகும்? எல்லோரும் என்னைத் திட்டு வார்கள். யாருக்கும் பயனில்லாமல் துன்பம் கொடுப்பது வரமா? அல்லது மற்றவர்களை மகிழ் விப்பது வரமா?' என்று கேட்டது அலை. மரங்கள் ஒன்றை யொன்று பார்த்துக் கொண்டன. 'அலையே நீ சொல்வது சரி தான். புத்தி கெட்டு இப்படி ஒரு வரத்தை...! சாபத்தை வாங்கி விட்டோம். இப்போதே இறை வனிடம் வேண்டி எங்களை முன்பு போலவே மாற்றிக் கொள்கிறோம். அடுத்தவர்களைச் சந்தோஷப்படுத்தி வாழ்கிறோம்' என்றது அரச மரம். அலை கையசைத்து விடை கொடுக்க மரங்கள் அங்கிருந்து சென்றன.





## மூன்றுக்குப் பெருமை

**பொருள்:** அறம், பொருள், இன்பம்
**சுடர் :** சூரியன், சந்திரன், நெருப்பு
**உலகம்:** பூலோகம், பரலோகம், பாதாளம்
**தொழில்:** ஆக்கல், காத்தல், அழித்தல்
**அரசர் :** சேரர், சோழர், பாண்டியர்
**தமிழ்:** இயல், இசை, நாடகம்
**நூல்:** முதல், வழி, சார்பு
**காலம்:** இறப்பு, நிகழ்வு, எதிர்வு
**இடம்:** தன்மை, முன்னிலை, படர்க்கை
**பாவினம்:** தாழிசை, துறை, விருத்தம்
**முப்பொருள்:** பதி, பசு, பாசம்
**மலம்:** ஆணவம், கன்மம், மாயை
**பொறி:** மனம், வாக்கு, காயம்
**குணம்:** சாத்துவிகம், இராசதம், தாமதம்
**குற்றம்:** காமம், வெகுளி, மயக்கம்
**சக்தி:** இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி
**தீ:** ஆகவனீயம், தக்கிணாக்கீனியம், காருகபத்தியம்
**உயிர்த்தீ:** உதரத்தீ, விந்துத்தீ, சினத்தீ
**பிணி:** வாதம், பித்தம், கபம்
**கடுகம்:** சுக்கு, திப்பிலி, மிளகு
**காய்:** கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்
**கனி:** மா, பலா, வாழை
**முந்நீர்:** ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர்





வி.பவுஜன்,
தரம் –3,
யா/உடுவில் மகளிர் கல்லூரி.



சு.ஸ்ரீகுருபிரசாத்
தரம் –9டி,
யாழ்.இந்துக் கல்லூரி.



வ.தனிஷா
தரம் –2,
யா/கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம்



அ.அபர்நாத்,
தரம் –5 எப்,
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம்

## 18.10.2015 முதல் 24.10.2015 வரை

## உங்களுக்கு எப்படி?

### மேடம்

குரு, சுக்கிரன் உள்ளிட்ட கிரகங்களால் நன்மை உண்டாகும். நீண்ட நாள் எதிர்பார்ப்பும் நிறைவேறும். நல்லோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும். வாகன வகையில் பராமரிப்புச் செலவு ஏற்படும். பிள்ளைகளின் செயற்பாடு கண்டு பெருமை கொள்வீர்கள். மனைவியின் ஆலோசனை, வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழிலில் உற்பத்தி சிறக்கும். விற்பனை அதிகரிப்பதால் வருமானம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் சுபநிகழ்ச்சிகளில் அடிக்கடி பங்கேற்பர். மாணவர்கள் படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர். சனீஸ்வரர் வழிபாடு நன்மையைத் தரும்.

### இடபம்

செவ்வாய், சுக்கிரன், கேதுவினால் நன்மை உண்டாகும். குடும்பத்தில் ஒற்றுமை சிறக்கும். வருமானத்துக்கான புதிய முயற்சி வெற்றி பெறும். வாகனப் பயணத்தில் மிதவேகம் கடைப்பிடிப்பது நல்லது. புத்திரரின் பிடிவாதத்தால் சங்கடம் உருவாகும். உடல்நலனில் அக்கறை தேவை. சத்து நிறைந்த உணவு உண்பது அவசியம். மனைவியின் செயலால் குளறுபடிக்கு ஆளாக நேரிடும். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ற முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்கள் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கப் பெறுவர். பெண்களுக்கு பாதுகாப்பு விடயத்தில் கவனம் தேவை. மாணவர்கள், போட்டியில் பங்கேற்று பரிசு பெறுவர். வைரவர் வழிபாடு துன்பம் போக்கும்.

### மிதுனம்

சுக்கிரன், புதன், சனி ஆகியோரால் நன்மை உண்டாகும். அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். குடும்ப வாழ்க்கை சிறப்பாக அமையும். எதிரிகளின் பலம் குறையும். தாய் வழி உறவினர்களால் உதவி கிடைக்கும். வாகன பயணத்தின் மூலம் இனிய அனுபவம் ஏற்படும். பிள்ளைகள் உங்களின் சொல்லுக்கு மதிப்பளிப்பர். பணக்கடன் தீரும். மனைவி பாசத்துடன் நடந்து கொள்வார். மாணவர்கள் பணியாளர்கள் அக்கறையுடன் பணியாற்றி நற்பெயர் காண்பர். பெண்களுக்கு தாய்வீட்டுச் சீதனம் கிடைக்கும். ஞாபகத் திறன் சிறப்பதால், கல்வியில் முன்னேறுவர். சிவனை வழிபட்டால் நன்மை பெருகும்.

### கடகம்

குரு, சுக்கிரன், சூரியன், ராகு அதிக நன்மை வழங்குவர். பேச்சில் இனிமை உண்டாகும். புதியவர்களின் அறிமுகத்தால் நன்மை ஏற்படும். சமூகப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். புதிதாக வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரரின் எதிர்கால நலனுக்கு தேவையான பணிகளை மேற்கொள்வீர்கள். எதிரியும் உங்களிடம் மறைமுக உதவிபெற முயற்சிப்பார். மனைவியின் ஆலோசனையால் நன்மை ஏற்படும். தொழில், வியாபாரத்தில் வருமானம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் விழிப்புடன் பணியாற்றுவது நல்லது. பெண்களின் மனதில் பக்தி மேலோங்கும். மாணவர்கள் விருப்பமுடன் படிப்பர். போட்டியில் பங்கேற்று பரிசு பெறுவர்.

### சிங்கம்

சுக்கிரன், சந்திரனால் நற்பலன் உருவாகும். சோம்பலைத் தவிர்த்து பணியில் கவனம் செலுத்துவது நல்லது. குடும்பத் தேவைக்கான பணச் செலவு அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது. சத்தான உணவு, சீரான ஓய்வு அவசியம். அறிமுகம் அற்றவர்களுக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். பிள்ளைகள் வளர்ச்சியில் கவனம் செலுத்துவீர்கள். மனைவியின் சொல்லும், செயலும் மனதுக்கு ஆறுதல் அளிக்கும். தொழில், வியாபார மேம்பாட்டில் கவனம் செலுத்துவீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் சட்ட திட்டத்தை மதித்து நடக்கவும். மாணவர்களுக்கு நட்பு விடயத்தில் கவனம் தேவை.

### கன்னி

சனி, செவ்வாய், சுக்கிரன் நன்மை தருவர். புதிய முயற்சி சிறப்பாக நிறைவேறும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வெளியூர் பயணத்தால் இனிய அனுபவம் காண்பீர்கள். பிள்ளைகள் படிப்பு, வேலை வாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். உறவினர் விடயத்தில் குறை காண்பதைத் தவிர்க்கவும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் தேவைப்படும் இலாபம் கூடும். பணியாளர்கள் பணியிலக்கை விரைந்து முடிப்பர். பெண்கள் யாருக்கும் நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்கள், படிப்புடன், கலைத்துறையிலும் ஆர்வம் கொள்வர்.

### துலாம்

கேது, குரு, சுக்கிரன் நற்பலன் தர காத்திருக்கின்றனர். மற்றவர் விடயத்தில் கருத்துச் சொல்வதைத் தவிர்க்கவும். குடும்பத்தில் ஒற்றுமை சிறக்கும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது. புத்திரர்களின் முன்னேற்றம் கண்டு மனம் மகிழ்வீர்கள். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். மனைவி வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர், பணியில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள், பெற்றோர் மகிழும் விதத்தில் படிப்பர். ஆஞ்சநேயர் வழிபாடு வெற்றியைத் தரும்.

### விருச்சிகம்

புதன், ராகு, சூரியன் ஆதாய பலன்களைத் தருவர். அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். உறவினர் வருகையால் கலகலப்பு உண்டாகும். குடும்பத்தில் ஒற்றுமை பெருகும். வீடு, வாகனப் பாதுகாப்பில் கவனம் செலுத்தவும். பிள்ளைகள் அறிவில் மேம்படுவர். எதிரியின் கெடு செயல் பலமிழந்து போகும். மனைவியின் செயல்களில் குறை காண வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாகலாம். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் முதலிடம் வகிப்பர். சிவனை வழிபட்டால் சகல வளமும் தரும்.

### தனுசு

குரு, சுக்கிரன், சூரியன், புதன் அனுகூல பலன் தருவர். புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். குடும்பச் செலவு அதிகரிக்கும். உடன் பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகலாம். வாகனப் பயணம் மகிழ்ச்சியை ஏற்படுத்தும். பிள்ளைகளின் எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். எதிரி தொல்லை மறையும். மனைவியின் அன்பைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்தி இலாபம் காண்பீர்கள். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் நன்மதிப்பை பெறுவர். பெண்கள் குடும்ப நலனில் கவனம் செலுத்துவர். மாணவர்கள் தனித்திறனில் மேம்படுவர். லட்சுமி வழிபாடு செல்வ வளம் சேர்க்கும்.

### மகரம்

கேது, சுக்கிரன், சனீஸ்வரரால் நற்பலன் உண்டாகும். மனதில் தைரியம் அதிகரிக்கும். அதிர்ஷ்ட வாய்ப்பால் வருமானம் கூடும். வீடு, வாகனப் பாதுகாப்பில் கவனம் செலுத்தவும். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும். உடல் நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். மனைவியின் பாராட்டைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கு புதியவர்களின் ஆதரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள், படிப்பில் கூடுதல் அக்கறை செலுத்துவது நல்லது. தன்வந்திரி வழிபாடு ஆரோக்கியம் தரும்.

### கும்பம்

செவ்வாய், குரு, புதனால் நன்மை உண்டாகும். குழப்பம் நீங்கி, மனதில் தெளிவு பிறக்கும் எதிர்பார்ப்பு குறித்த காலத்தில் நிறைவேறும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். நிலுவைப் பணம் கிடைக்கும். மனைவியின் மனதில் நம்பிக்கைக் குறைவு நேராமல் பார்த்துக் கொள்ளவும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகுவதால் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் திறம்பட பணியாற்றி, நிர்வாகத்தின் பாராட்டைப் பெறுவர். பெண்கள் மகிழ்ச்சிகரமான வாழ்வு வாழ்வர். மாணவர்கள் படிப்பில் மேம்படுவர். நாகர் வழிபாடு நலம் சேர்க்கும்.

### மீனம்

சந்திரனால் நன்மை கிடைக்கும். உங்களின் நற்செயலுக்கு அங்கீகாரம் கிடைக்கத் தாமதமாகலாம். பேச்சிலும், செயலிலும் நிதானத்தைப் பின்பற்றவும். புத்திரரின் செயற்பாட்டால் குளறுபடி ஏற்படலாம். குடும்பச் செலவு அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வது அவசியம். மனைவியின் செயற்பாடு நிம்மதிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் உண்டாகும். பணியாளர்களுக்கு, எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். பெண்க்ள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர். மாணவர்கள் முயற்சியுடன் படிப்பது நல்லது. கிருஷ்ணரை வழிபட்டால் சிரமம் தீர்க்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகம் பளபளக்க பளிச் மசாஜ்

முதலில் கிளன்சிங் பிறகு மசாஜ், ஸ்கிரப், பேக் ஆகியவற்றை செய்து கொள்ள வேண்டும். கிளன்சிங்காக பாலை உபயோகப்படுத்தி முகம் முழுவதும் பூசி மெதுவாக இரண்டு நிமிடம் தேய்த்து பஞ்சைக் கொண்டு துடைக்க வேண்டும். இதனால் தோலினுள் படிந்திருக்கும் அழுக்கு நீங்கிவிடும்.

மசாஜ் செய்யத் தயிரை உபயோகப்படுத்த வேண்டும். இது சூரியக்கதிர்களின் தாக்குதலால் ஏற்படும் சருமக் கருப்பைப் போக்கும். அதிக சத்தும் சருமத்துக்குக் கிடைக்கும். தேனைப் பயன்படுத்தியும் மசாஜ் செய்யவேண்டும். பப்பாளி விழுதைச் சேர்த்து வறண்ட மற்றும் சாதாரண சருமத்தினர் மசாஜ் செய்ய உபயோகப்படுத்தலாம். தக்காளி, தோடம்பழம், கொய்யா, வாழைப்பழம் கலவையைக் கொண்டு மசாஜ் செய்தால் முகம் மிகவும் பளபளப்புடன் இருக்கும். மசாஜ் முடிந்தவுடன் ஸ்கிரப் செய்ய வேண்டும். வால்நெட், பாதாம் இவற்றை அரைத்து ஸ்கிரப்பாக பயன்படுத்த வேண்டும். சருமத்தில் அதிக கறுப்பு வெள்ளை இருந்தால் சர்க்கரையைப் பொடித்து அத்துடன் சிறிது பப்பாளி விழுதை சேர்த்து முகத்தில் அழுத்தித் தடவ வேண்டும்.

மசாஜ் முடிந்தவுடன் சிறிய துணியைக் கொண்டு வெந்நீரில் நனைத்து தாங்கக் கூடியளவுக்கு சூட்டுடன் முகத்தின் மேல் போட்டு மூன்று நிமிடங்கள் கழித்து எடுக்க வேண்டும். இவ்வாறு இரண்டு அல்லது மூன்று முறை செய்ய வேண்டும். அவ்வாறு செய்ய இயலாதவர்கள் சிறிய பாத்திரத்தில் நீரைக் கொதிக்க வைத்து ஆவி பிடிக்க வேண்டும் வேப்பிலைகள் சிறிது சேர்த்து ஆவி பிடித்தால் மிகவும் நல்லது. பேக் போட கரட், அப்பிள், தோடம்பழம், உருளைக்கிழங்கு, தேன், வெள்ளரி, பேரீச்சம்பழம், எலுமிச்சைச்சாறு சிறிதளவு இவற்றை அரைத்து பேக் போட்டு அரைமணி நேரம் கழித்து முகம் கழுவ வேண்டும். மேற்கூறியவற்றில் ஏதாவது இரண்டு அல்லது மூன்று சேர்த்து அரைத்தும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். இந்த பேசியல் செய்த உடனேயே கண்கள் குளிர்ச்சியடையும். முகம் பளபளப்பாகவும் அழகாகவும், பொலிவுடனும் மாறும்.

# குழி பணியாரம்



## தேவையான பொருள்கள்:

வெல்லம் – கால் கிலோ
ஏலக்காய் – 10
பாசிப்பருப்பு – கால் கிலோ
தேங்காய் – ஒரு பாதி
எண்ணெய் – 200 கிராம்

## செய்முறை:

பாசிப்பருப்பை அரைமணி நேரம் ஊற வைத்து மிக்ஸியில் அல்லது கிரைண்டரில் கெட்டியாக அரைத்துக் கொள்ளவும். வெல்லத்தை பாகு காய்ச்சிக் கொள்ளவும். தேங்காயை துருவிக் கொள்ளவும். அரைத்த மாவில் வெல்லப் பாகு, தேங்காய் பூ, ஏலக்காய் சேர்த்து கலந்து கொள்ளவும். அடுப்பில் தாச்சியை வைத்து அதில் எண்ணெய் ஊற்றி சூடேறியதும் , ஒரு சிறிய கரண்டியில் மாவை எடுத்து ஊற்றவும். திருப்பிப் போட்டு இருபுறமும் வெந்தவுடன், சிவப்பதற்கு முன்பே எடுத்து விடவும். இனிப்பான குழிப்பணியாரம் தயார்.

# விரல்களுக்கு அழகு

இரண்டு கண்கள், ஒரு மூக்கு, ஒரு வாய் ஆனால் முகத்துக்கு முகம் எத்தனை வித்தியாசம். அதேபோல் விரல்களின் அமைப்பால் கைகளும் மாறுபடுகின்றன. விரல்களுக்கேற்ப நகத்தை அமைத்துக்கொள்வதுதான் விரல் களுக்கு அழகு!

**தடித்த குட்டையான விரல்கள்:-**

நகத்தை, நீண்ட வட்ட வடிவில் வெட்டிக் கொள்ளுங்கள். இதனால் உங்கள் விரல்கள் நீளமாக மட்டுமின்றி மெல்லியதாகவும் தோற்றமளிக்கும்.

**நீண்ட மெலிந்த விரல்கள்:-**

இந்த வகையான விரல்களின் அமைப்பே அழகானது என்றாலும், அளவுக்கதிகமாக நீண்ட தோற்றத்தை அளித்தால் அந்த அழகு குறைந்துவிடும். உங்கள் நகங்களை சதுரமான முனைகள் உள்ளவாறு வெட்டிக்கொண்டால் உங்கள் விரல்களுக்கு அழகு சேர்க்கும்.

**தடித்த நீண்ட விரல்கள்:-**

இந்த வகையான அமைப்பு உள்ள விரல்களுக்கு வட்ட வடிவில் உள்ள நகங்கள் சிறந்தது. அது உங்கள் விரல்களுக்கு நேர்த்தியான தோற்றத்தை அளிக்கும். மற்றும் இது போன்ற விரல் அமைப்பு கொண்டவர்கள் நகத்தின் நிறத்திலேயே இருக்கும் நெயில் பொலிஷ் உபயோகிப்பது சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைப்பக்கம்



## மனைவியின் சந்தேக புத்தி!

ஒரு மனைவி, தன் கணவன் தன்னை நீண்ட காலமாக ஏமாற்றுகிறான் எனச் சந்தேகம் கொண்டிருந்தாள். வீட்டு வேலைக்காரியுடன் தொடர்பு இருப்பதாக உறுதி நம்பினாள். இருவரையும் கையும் களவுமாகப் பிடிக்க ஒரு திட்டம் தீட்டினாள்.

திடீரென்று ஒருநாள் மதியம் வீட்டு வேலைக்காரியை அரைநாள் விடுமுறை கொடுத்து அனுப்பினாள். இதை கணவரிடம் சொல்லவில்லை. அன்று வேலை முடிந்து வந்த கணவர், குட்டி, எனக்கு இன்று வயிறு சரியில்லை என்று சொல்லி குளியலறைக்குச் சென்றார். இரவில் அவர்கள் படுக்கைக்குச் சென்றபோதும், கணவர் பழையபடி மீண்டும் குளியலறைக்குச் சென்று விட்டார்..

மனைவி உடனடியாக வேலைக்காரியின் படுக்கைக்குச் சென்று படுத்துக் கொண்டாள். உடனே விளக்குகளையும் அணைத்து விட்டாள். அவர் அமைதியாக சத்தமில்லாமல் பூனைபோல் வந்து எதுவும் பேசாமல் கட்டிப் பிடித்து முத்தம் கொடுக்க ஆரம்பித்தார்.

உடனே மனைவி கோபத்துடன் நான் இங்கே இருப்பேன் என்று நீங்கள் எதிர்பார்க்கவில்லைதானே? என்று கத்திவிட்டு விளக்கைப் போட்டாள்.

இல்லை மேடம் என்றான் தோட்டக்காரன்!

நான் கண்ட பகல் கனவு பலித்திட்டுது.
என்ன கனவு கண்ணடீங்க?
வேலை போற மாதிரி கனவு கண்டேன். மனேஜர் ஆபீஸ்ல ஏன் தூங்கினேன்னு சொல்லி என்னைத் தூக்கிட்டாரு



ஒண்ணாம் திகதி பிறந்தா முதலாளி டான்னு சம்பளம் போட்டுருவாரு!
ஐயோ! நான் அஞ்சாம் திகதியில்ல பிறந்தேன்.



**சோப்பு டப்பா** @soapudappaa
தேவதைகள் வீட்டுக்கு "வரதட்சணை எதற்கு?????

**Sudharshan** @_SSudha
இந்தப் பேச்சுத்துணை என் பதன் ஏக்கமும் ஆழமும் புரிய வேண்டுமானால் வீடெங்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் முதியவர்களிடம் கொஞ்சம் பேச்சுக் கொடுக்கவும்.


**காட்டுப்பயல்** @sundartsp
அழகான மீன்களுக்குச் சிறைத் தண்டனையும் கொழுத்த மீன்களுக்கு மரண தண்டனையும் அளித்து விடுகிறான் மனிதன்.

**✒எழுத்தாளன்** @WriterAzar
பெண்களிடம் பிடித்ததே, சமையல் நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு அது போல செய்யவே மாட்டார்கள்.

**♥மீரா♥** @MeeraTwitz
அவசரப்பட்டு பேசும் வார்த்தைகள்... அதிகம் யோசிக்க வைக்கிறது....

**அரபுநாட்டு_தமிழன்** @ManuMechstar
அன்பான மனைவி இருந்தால் அது "சூப்பர்" அவளுக்கு அழகான தங்கை இருந்தால் அது "ஓஃபர்"....

**அனாமிகா** @MissLoochu
ஆண்கள் இருக்கும்வரை இரகசியங்கள் வாழும்.




## சிரிக்கலாம் வாங்க...

என்ன! காலையிலை எழுந்த உடனே உங்க கன்னம் வீங்கி இருக்கு?
என் மனைவிக்கு தூக்கத்தில அறையிற வியாதி இருக்கு....





தலைவர் ஏன் தேர்தல் கமிஷன் மேல கடுப்பா இருக்கிறார்?
எல்லோருக்கும் விரல்ல மை வைக்கிற செலவையும் இவர் கணக்குல சேர்த்துட்டாங்களாம்.

### ஸ்பீக்கரு...

"அடுத்ததாக நமது தலைவர் பேச உள்ளார்... அவர் பேச்சைக் கேட்க விரும்பாதவர்கள், என்னுடன் மைதானத்தை விட்டு வெளியே வந்து விடலாம் எனக் கேட்டுக் கொண்டு அவரைப் பேச அழைக்கிறேன்!

"அந்த டாக்டர் அரசியல்வாதியாவும் இருக்கார்னு எப்படிச் சொல்றே..?"
"தன்னோட பேஷன்ட்டுகள் சாகும் வரை போராடுவேன்னு சொல்றாரே!"






திருமண விருந்தில் பெண்கள்



போட்டோகிராபர் வரும்போது | போட்டோகிராபர் போனபிறகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெருப்பை விழுங்கியவள்! 6

கண. மகேஸ்வரன்

தொடர்கதை

என் சிந்தனையில் நான் தெளிவாக ஒரு முடிவெடுத்து நிமிர்ந்த அதேவேளை, அம்மாவின் அழைப்பும் கேட்டது.
எட்டிப் பார்த்தேன்
மாமி சிரித்தபடி கண்ஜாடை காட்டினாள்
ஓஹோ... ஒரு முடிவுக்கு வந்தாயிற்றுப் போல. அப்பாவுக்கு ஒரு சுகயீனம் வந்தாலும் வந்தது, எனக்கும் வேளை வந்து விட்டதா என்ன?
எதைச் சொல்லியாவது, இப்போதைக்குப் பிடிகொடுக்காமல் நழுவிவிட வேண்டும் என்ற முடிவுடன் நடந்தேன்.
"வாம்மா, இப்படி இரு!"
சொல்லி வைத்தாற்போல் ஏக காலத்தில் மாமா மாமி இருவர் குரலும் ஒருசேர ஒரே வசனம் பேசியது எனக்கு ஆச்சரியமாயிருந்தது. சினிமா டயலாக்கைப் பாடமாக்கி உச்சரிப்பதுபோல்.
வாழ்க்கையும் ஒரு சினிமாதானோ?
இந்த உபசரிப்புக்குக்கூட இவர்கள் ஒத்திகை பார்த்திருப்பார்களோ?
இப்படி ஒரு விடயத்தில் இவர்களே கூடிக் கலந்துபேசி ஒத்திகை பார்க்கும்போது, எனது வாழ்க்கை முழுவதையுமே நிர்ணயிக்கும் திருமண பந்தத்தை மட்டும் தீர ஆராயாமல் எப்படி நிறைவேற்றுவதாம்?
எனக்குள் நானே யோசித்துப் பார்த்ததை எண்ணி, இவர்களின் மனமாற்றங்களையும் எடைபோட்டபோது என்னையறியாமலே குபீரென்று சிரித்து விட்டேன்.
விளைவு இடராகிவிட்டது.
"பாரன்! அவவடை கள்ளச் சிரிப்பை... எல்லாம் கேட்டுக்கொண்டுதான் இருந்திருக்கிறா போல...."
மாமி அம்மாவிடம் வெளிப்படையாகவே பேசினா.
"மாமி...!" நான் அதிர்ந்தேன்
"பரவாயில்லையடியம்மா, எல்லாப் பிள்ளையளுக்கும் உள்ளதுதான்."
மறுபடி அதிர்ந்தேன்
"மாமி, நீங்க நினைக்கிற மாதிரி நான் எதையும் ஒட்டுக்கேட்கயில்ல..."
"அப்பிடியா? பரவாயில்லை. இப்ப நாங்க ஒரு முடிவெடுத்திருக்கிறம். கேசவனுக்கு உன்னை....!"
"மாமி...!" அதிர்ச்சிமேல் அதிர்ச்சி. ஆவேசமாக என் குரல் ஓங்கி ஒலித்தது.
"என்னடி பிள்ள?" அம்மா பதறினாள்
"அதெப்படி நீங்கள் மட்டும் முடிவெடுக்க முடியும்?"
மாமி முகத்தை நிமிர்த்தி ஏறிட்டாள்.
மாமாவின் புருவம் சுருங்கியது.
அப்பா வியப்புடன் பார்த்தார்
"கோழியைக் கேட்டு ஆணம் காய்ச்சிறதில்லை."
என்னை நோக்கி சொல்லம்பை வீசியபடி அம்மா முறைத்தாள்
"கோழியைக் கறியாக்கித் தின்னிற மாதிரி என்னையும் வெட்டி வேடிக்கை பார்த்துப் புதைக்கப்போறியளோ?"
"அவளுக்கு வாய் கூடிப்போச்சு...."
அம்மா பரிதாபத்துடன் மாமியைப் பார்த்தாள்
"மாமி. உங்கட பிள்ளையைப் பற்றி ஊரே அறியும். எனக்கு மட்டும் ஒண்டும் தெரியாதெண்ட நினைப்போ?"
"வாயை அடக்கிப் பேசடி. மாமா மாமியெண்டு ஒரு மரியாதை இல்லாமல்..."
அம்மா கடிந்து கொண்டாள்.
"அவள் சொல்லட்டும், விடுங்கோ மச்சாள். நாங்கள் மேற்கொண்டு ஆகவேண்டியதைப் பார்ப்பம்."
மாமியின் முகத்தில் மகிழ்ச்சியில்லை, ஆனாலும் ஏதோவொரு எதிர்பார்ப்பு இருப்பதாக முகத்தில் அப்பியிருந்தது. மாமா வாளாவிருந்தார். நான் தொடர்ந்தேன்.
"சொல்லிறன் எண்டு கோவிக்கக்கூடாது மாமி. என்னைக் கட்டிக் கொடுத்தால் மட்டும் திருந்துவாரெண்டு என்ன நிச்சயம்?"
"....மகள், எல்லாப் பொடியங்களும் அப்படித்தான். அந்த விசயத்தில் சிலர் கோழையள். அவன் கொஞ்சம்..."
மாமியின் பேச்சே எனக்குப் பிடிக்கவில்லை.
"மகனுக்கு வக்காலத்து வாங்குவதாக நினைச்சுக்கொண்டு, எல்லாப் பொடியன்களையும்... சீ.... என்ன ஒரு கெட்ட எண்ணம். இவ சொல்லிறதைப் பார்த்தால், அப்பா மாமா எல்லாரும்... கெட்ட மனிசி. இதையெல்லாம் கேட்டுக்கொண்டு அவையும்.... தூ..." மாமியின் முகத்தில் காறித் துப்பவேண்டும் போலிருந்தது.
"நானும் கண்டிப்பாய்த்தான் சொல்லிறன். எடுத்தேன் கவிழ்த்தேன் என்று இதற்கொரு முடிவெடுக்க முடியாது. இந்த விசயத்தில நான் திடுதிப்பெண்டு ஒத்துக் கொள்ளேலாது...."
மாமி என்ற வார்த்தையையே தவிர்த்துக்கொண்டேன்.
திட்டவட்டமான ஒரு முடிவுடன், அவர்களின் பதிலுக்குக் காத்திருக்காமல் திரும்பிய என்னை அம்மா அதிர்ச்சியுடன் பார்த்தாள்.
"அம்மா! இப்ப அப்பாவுக்கு வருத்தம். முதலில அவரைச் சுகப்படுத்துறதை விட்டிட்டு... இதென்னம்மா கேலிக்கூத்து?"
"கேலிக்கூத்தோ?"
மாமி ஆவேசமாய் எழுந்தாள்
"நீங்களும்.... உங்கட சம்பந்தமும்... அவன் ஆம்பிளை. அவனுக்குத் தேடிவரும். இதுதான் ஒருத்தரையும் பாவம் பார்க்கக்கூடாதென்று.... இன்னுமேன் இருக்கிறியள்? எழும்புங்கோப்பா, நாங்க போவம். அதுகள் எக்கேடாவது கெட்டுப் போகட்டும்..."
மாமி வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்
திரும்பி அப்பாவைப் பார்த்தேன்.
அப்பா முகத்தில் இனம் புரியாத ஒரு பரவசம்.
இனம் புரியாத ஓர் அதிர்ச்சி.
இனம் புரியாத ஒரு பீதி.
எல்லாம் குழைத்து அப்பிவிட்டமாதிரி ஒரு கலவை.

*(நெருப்பு உமிழும்...)*



# வெற்றி என்பது இவற்றில் எ(ஏ)து?

அ.அஜந்தன்
கந்தர்மடம்

வெற்றிக் களிப்பில் தப்பித்திரியும்
போர்க்குற்றவாளிகளே!
நீங்கள் பெற்ற வெற்றிதான் என்ன?
ஆயிரம் அநாதைச் சிறுவர்களை
வடக்குக் கிழக்கில் அலையவிட்டதா?
விதம்விதமாய் கொலை புரிந்து
நம் தேசத்தில் விதவைகளை விதைத்ததா?
வகை தொகையாய் கொன்றொழித்து
மண்ணுள் புதைத்து அதன்மேல்
காப்பெற் வீதி போட்டதா?
முகாம்களின் முன்னால் விகாரைகள்
முளைத்தது போல்
முகாம்களின் பின்னால் புதைகுழிகள்
விளைந்ததா?
நிராயுத பாணியாய் நின்ற பெண்கள்மீது
உந்தன் வீரத்தைக் காட்டியதா?
குருதியோடிய நம் நீரோடையில்
தென்புலத்தான் மீன்பிடிப்பதா?
உறவுகள் உடல்சிதறி உயிர்துறந்த
இடத்தையெல்லாம்
சுற்றுலாத்தலமாக்கி நம் வலிகளை
வேடிக்கைப் பொருளாக்கியதா?
குற்றுயிராய்த் துடித்ததையும்
குருதியில் நாம் குளித்ததையும்
முட்கம்பி வேலிக்குள் முடக்கப்பட்டதையும்
உலகமே வேடிக்கை பார்க்க வைத்ததா?
காணாமல்போனோர் பட்டியலை
ஏ9 வீதிபோல் நீட்டியதா?
முல்லையில் இருந்த முள்ளிவாய்க்காலெனும்
குருசேஷ்திரத்தை
ஐ.நா. சபையில் உலகறியச் செய்ததா?
இவற்றில் எதுதான் நீர்கண்ட வெற்றி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்துக்குட்டி









இந்தியாவில் விளைநிலங்களை வேட்டையாடுவது மற்றும் விவசாயத்துக்கு எதிராக நடக்கும் அநீதிகளைப் பற்றி அழுத்தமாக பதிவு செய்திருக்கும் படம் *கத்துக்குட்டி*.

நண்பன் ஜிஞ்சருடன் (சூரி) சேர்ந்து ஊர் வம்பு, அடிதடி என்று சுற்றிவரும் இளைஞன் அறிவழகன் (நரேன்). அம்மாவுக்கு செல்லப் பிள்ளையான, அப்பாவுக்கு அடங்காத பிள்ளையான அவர், தன் பகுதியில் விவசாயம் அழிந்துவிடக்கூடாது என்பதில் மிகுந்த அக்கறையுடன் இருக்கிறார். நாயகி ஸ்ருஷ்டி டாங்கே, பறவைகளை நேசிப்பது, செடிகொடிகள் வளர்ப்பது என்று இயற்கையை நேசிக்கும் கிராமத்துப் பெண்ணாக வருகிறார். ஒரு மோதலில் ஆரம்பிக்கும் நரேன் - ஸ்ருஷ்டி டாங்கேவின் சந்திப்பு, காலப்போக்கில் காதலாக மாறுகிறது.

இந்த நிலையில் மீத்தேன் எரிவாயு திட்டத்துக்காக அந்தப் பகுதியில் உள்ள விவசாய நிலங்களை குறிவைத்து சிலர் காய் நகர்த்துகிறார்கள். அதே நேரத்தில் 40 ஆண்டுகாலமாக அரசியலில் ஈடுபட்டுவரும் நரேனின் அப்பாவுக்கு கிடைக்க வேண்டிய எம்.எல்.ஏ. சீட் நரேனுக்கு கிடைக்கிறது. ஒரு பக்கம் தேர்தலில் வெல்வது, மற்றொரு பக்கம் விவசாய நிலங்களை மீட்பது என்று ஒரே நேரத்தில் இரண்டு இலட்சியங்களுடன் செயற்படுகிறார் நரேன். அவரால் இந்த இரண்டு இலட்சியங்களையும் நிறைவேற்ற முடிந்ததா என்பதுதான் மீதிக் கதை.

பலசரக்குகளின் பட்டியலில் மதுபானமும் இடம்பெற்றதால் 'டாஸ்மாக்' *(இந்தியாவில் மதுபான விற்பனையில் ஈடுபடும் அரச கடைகள்)* காட்சிகளை தவிர்க்க முடியவில்லை என்ற வரியோடு படத்தைத் தொடங்கும் போதே இயக்குநரின் துணிச்சல் தெரிகிறது. அந்தத் துணிச்சலை படம் முழுக்க வெளிப்படுத்தியிருக்கிறார் இயக்குநர்.

பொதுவாக சமகால அரசியல் பிரச்சினையை சினிமாவாக எடுக்கும்போது அதில் ஆவணத் தன்மை வெளிப்பட்டுவிடும். ஆனால், இந்தப் படத்தின் திரைக் கதையில் நகைச்சுவை, அடிதடி, உணர்ச்சி, அரசியல், அழகியல் என்று ஒரு வர்த்தகத் திரைப்படத்துக்குரிய சரியான கலவைகள் உள்ளன. விளைநிலங்கள் எப்படி அதன் இயல்பு நிலையை இழக்கின்றன என்பதைச் சரியாகப் பதிவு செய்துள்ளார் இயக்குநர் இரா.சரவணன். அவர் ஒரு பத்திரிகையாளரும்கூட.

கிராமத்துக்குள் அலைபேசிக் கோபுரம் வைப்பது அங்குள்ள பறவைகளுக்கு எப்படி இடையூறாக இருக்கிறது, காணி, கட்டட வியாபாரம் செய்வோர் புரியும் அட்டூழியம், ஈமு கோழி விவகாரத்தில் மக்கள் ஏமாற்றப்படுவது, பட்டினிச் சாவுக்கான காரணம், அரசியல்வாதிகளின் சேட்டை என்று பலவற்றைப் படம் போகிற போக்கில் அடித்துச் செல்கிறது. ஆரோக்கியமான வழியில் விவாதிக்கிறது.

அடிதடி வம்புகளால் ஊர் முழுக்க கெட்டபெயர் வாங்கி குவித்திருக்கும் நரேன், அரசியலில் இறங்கப்போகிறோம் என்றதும் அப்படியே பல்டி அடித்து நல்லவனாக மாறும் இடம் கலகலப்பு. யதார்த்தமான கிராமத்து இளைஞன் வேடத்தில் மிக இயல்பாக பொருந்திப் போகிறார் நரேன்.

நாயகனுக்கு இணையான வேடம் சூரிக்கு. நீதிமன்றப் பிடியாணைக்கே பயப்படமாட்டான், பஞ்சாயத்துக்கா பயப்படப்போறான் என்பது போன்ற சிரிப்பு வெடி வசனங்களை படம் முழுக்க அள்ளித் தெளிக்கிறார். நகைச்சுவையைத் தாண்டி நெகிழ்ச்சியான காட்சிகளிலும் மனதில் இடம்பிடிக்கிறார் சூரி.

"சாப்பிட வழியில்லாம சாவறதுக்கு பேரு பட்டினிச் சாவு இல்ல... நாலு பேருக்கு சாப்பாடு போடமுடியாம போச்சேன்னு நினைச்சு சாவுறதுதான் பட்டினிச் சாவு" என்பதுபோன்ற வசனங்கள் படத்துக்கு மிகப்பெரிய பலமாக அமைந்துள்ளன.

மாவட்டச் செயலாளராக வரும் ஞானவேல், நரேனின் அம்மாவாக வரும் துளசி ஆகியோர் நேர்த்தியாக நடித்துள்ளனர். நரேனின் அப்பாவாக நடித்திருக்கும் இயக்குநர் பாரதிராஜாவின் சகோதரர் ஜெயராஜுக்கு இது முதல் படம். ஆனால் நடிப்பில் தேர்ந்த அனுபவசாலியாகத் தெரிகிறார்.

கிராமத்து உடையில் ஸ்ருஷ்டி டாங்கே மிக எளிமையாக நடித்திருக்கிறார். அருள்தேவ் இசையில் பாடல்கள் ரசிக்க வைக்கின்றன. சந்தோஷ் ஸ்ரீராமின் ஒளிப்பதிவு தஞ்சை மண்ணை அதன் மணம் மாறாமல் பிரதிபலிக்கிறது.

படத்தின் முக்கிய திருப்பம் நாயகியின் அப்பா தற்கொலை செய்துகொள்ளும் காட்சிதான். அவரின் தற்கொலை முடிவுக்கான காரணத்தை இன்னும் அழுத்தமாக பதிவு செய்திருக்கலாம். மேலோட்டமாக பதிவு செய்திருப்பதால் அந்தக் காட்சி பெரிய அளவில் மனதில் ஒட்டவில்லை. அதேபோல் நாயகனுக்குக்கும் நாயகிக்கும் இடையே காதல் மலர்வதற்கான காரணங்களும் தெளிவாகச் சொல்லப் படவில்லை. அதைச் சரியாகச் சொல்லி காதல் காட்சிகளை இன்னும் அதிகப்படுத்தி இருக்கலாம். இரண்டாவது பாதி கத்திரியிலும் கவனம் செலுத்தியிருக்கலாம்.

வணிக சினிமாக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் இன்றைய சூழலில் அரசியல் சார்ந்த கதையை தேர்வுசெய்து அதை வர்த்தகத் தன்மை குறையாமல் சொன்ன *கத்துக்குட்டி*யை வரவேற்கலாம்.

## பழசு ஒன்றின் பெருமூச்சு



கிட்டத்தட்ட இறுதிக்கு செற்அப்
ஆனதனால், மூலையிலே முடங்கி
நொந்து போன என்னையொரு
பழசு என்றான் என் பேரன், தப்பேதும்
இல்லை பழசாகிப் போய் விட்டால்
பழசென்றால் என்ன தப்பு?

வலுவிழந்து செயலிழந்து செயற்படவே
இயலாத
எந்தவொரு எந்திரமும் பழசான
ஒன்றுதான்
பயனற்ற அதனைப் பழசென்றால்
தப்பில்லை
உண்மையது வானாலும் அது உழைத்து
ஓய்ந்த இயந்திரமே
தலையைச் சுற்றி வீசிவிட்டு புதிதாக
ஒன்றதனை
பெற்றுப் பயன்படுத்தல்
புத்திசாலித்தனமேதான்
இயந்திரமோ அஃறிணை; வெறும் இரும்பு
தானன்றோ
ஆயின் இந்தப் பழசுக்கோ மனமும்
உயிரும் தானிருக்கே

உடல்வருத்தி உழைத்துத் தேடிய
தேட்டத்தால்
குடும்ப விருட்சத்தைக் கிளைபரப்பிச்
செழிக்க வைத்த
கிழவனவன் என்னைத்தான் பழசு
என்றான் என் பேரன்
சத்தியமாய் அவன்பேரில் தப்பேதும்
இல்லையன்றோ!

இந்தப் பழம்கிழவன் இயக்கத்தின்
பலனாய்த்தான்
தான் தோன்றித் தன் குடும்ப விருட்சம்
தளைத்த கதை
[illegible] உணர்த்தாதது நான் பெற்ற
மகன் தவறன்றோ!
பாவமந்தப் பேரன், பாசவலை
அறியானவன்

என் அப்பரின் அந்திம காலத்தில்
நானும்தான்
இந்த விதம் அரையண்டம் தராமல்
தாறதைத் தின்றுவிட்டு
ஒதுங்கியொரு மூலையிலை கிடந்தால்
தானென்ன
என்ற விதம் சொல்லி முகம் சுழித்துச்
சலித்ததுண்டு

பாவமந்தப் பேரன், அதுவும் புரியாத
வயததற்கு
சோறு தண்ணி மட்டுமன்றி பாசமென்ற
அருமருந்துமே
பழசுகளைத் தெம்பாக்கும் என்ற
உண்மை தெரியாததே
பலபேரைக் காலம் தாழ்த்தி
கழிவிரக்கம் கொள்ளவைக்கும்

ரி.ராஜா உரும்பிராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகி பாலா,
இணுவில்

# ஒப்பிடு; வாழ்க்கையை உயர்த்த மட்டுமே!



மனிதனிடமுள்ள முக்கியமான குணங்களில் ஒன்று மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது. ஒப்பிட்டுப் பார்த்தல் என்பது சில சமயங்கள் ஆரோக்கியமானதாகவும் சூழலுக்கு – மனித வாழ்க்கைக்கு முன்னேற்றத்துக்கு வேண்டிய ஒன்றாகவும் காணப்படும். பல சமயங்களில் தேவையற்ற மன உளைச்சல்களையும் வேண்டத்தகாத வீண் வார்த்தைகளையும் ஏற்படுத்துகிறது.

இந்த ஒப்பீடுகள் பொதுவாகவே ஆண், பெண் இருபாலாரிடமும் காணப்படுகின்றன. பெண்களிடம் இன்னும் அதிகமாக இருக்கின்றது. பணம், பதவி, படிப்பு, தொழில், வசதி வாய்ப்புக்கள் போன்ற பல விடயங்களிலும் ஒப்பீடு தொடர்கின்றது.

ஒப்பீடுகள் ஒரு வகையில் முன்னேற்றத்துக்கு வழி சமைக்கின்றன என்றாலும் போட்டி – பொறாமை இன்றிய ஒப்பீடுகள்தான் தனி மனித – சமூக முன்னேற்றத்துக்கு நல்லது. காழ்ப்புணர்வுடனும், பொறாமையுடனும் கூடிய ஒப்பீடுகள் சில சமயம் அதல பாதாளத்தில் எம்மை தள்ளிவிடக்கூடும்.

சிறு வயதிலிருந்தே ஒப்பீடுகள் ஆரம்பமாகின்றன. உதாரணமாக:– சிறுபிள்ளைகள் கோயிலுக்குச் செல்கிறார்கள் என்றால் அங்கே பல விதமான விளையாட்டுப் பொருள்கள் காணப்படுவது வழமை. அதை அவரவர் விருப்புக்கும், வசதிக்கேற்பவும் வேண்டிக் கொள்வர். இது கோயிலடியில் முடிந்து போகிற விடயம். ஆனால் ஒப்பீடு இனிமேல்தான் ஆரம்பமேயாகும். எதிர்வீட்டுச் சிறுவன் விசில் வைத்திருக்கிறான் என்னிடம் இல்லையே என ஒப்பிடத் தொடங்குகிறார்கள். தன்னிடமும் ஏதோவொரு விளையாட்டுப் பொருள் இருக்கிறது தானே எனத் திருப்திப்பட்டுக்கொள்வதில்லை. தனக்குப் பிடித்த, தான் உயர்வானது என்று கருதுகிற ஒன்று தன்னிடம் இல்லை மற்றவனிடம் இருக்கிறது என்றுதான் யோசிக்கிறான். சரி, அதுதான் அறியாப் பருவம் – விளையாட்டுப் புத்தி என்று விட்டுவிடலாம்.

ஆனால் அந்த ஒப்பீட்டுப் பார்வை தொடர்ந்து வளர்ந்து பெரியவர்களான பின்னரும் ஒவ்வொருவரும் அதையேதான் செய்கிறார்கள். இதற்கு நல்ல உதாரணம் ஒன்று கூறலாம் என நினைக்கிறேன். ஐந்தாம் ஆண்டில் புலமைப் பரிசில் பரீட்சை என்ற ஒன்று நடக்கிறது. இது மாணவர்களின் புலமையை பரீட்சிக்கும் ஓர் ஆரம்பக் கட்டம்தான். அதில் வெற்றி பெறுபவர்களும் உண்டு. வெற்றியை அண்மித்தவர்களும், தோல்வியுற்றவர்களும் உண்டு.

பரீட்சையில் சித்தியடைந்தவர்களுடன் சித்தியடையாத தம் பிள்ளைகளை ஒப்பிட்டுத் திட்டித் தீர்க்கின்றனர் பெற்றோர். "அவன் எப்படி படிச்சு புள்ளி எடுத்தான் பார்த்தியா நீயும் இருக்கிறியே?" என்று பல வீடுகளில் திட்டு விழுகிறது.

சிலருக்கு படிப்பு நல்லா வரும், சிலருக்கு மத்திமம்தான். அவன் திறமைக்கேற்ப செயற்பட்டிருக்கிறானா என்பதைத்தான் பெற்றோர் பார்க்கவேண்டுமே தவிர, அடுத்த மாணவனுடன் ஒப்பிடுவது சரியல்ல. ஆனாலும் எல்லோரும் அதைத்தான் செய்கின்றோம்.

மற்றப் பிள்ளைகளுடன் ஒப்பிடாதீர்கள். மாறாக பிள்ளையிடம் அன்பாகப் பேசி புரியவையுங்கள். நம்பிக்கையை ஊட்டுங்கள். இங்கே ஒப்பீடுகள் வேண்டாமே, தட்டிக் கொடுங்கள் அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

உயர்கல்வி கற்கும்போதும் இதே நிலைதான். மாணவர்களை அவரவர் விரும்பிய துறையில் அவர்களுக்குத் தெரிந்த துறையில் படிக்க விடுவதை விட்டு, பக்கத்துவீட்டுப் பிள்ளை அதைப் படிக்கிறான் இதைப் படிக்கிறான் என்று உங்கள் பிள்ளையையும் படிப்பிக்காதீர்கள்.

அதைவிடுத்து அவையின்ர பிள்ளை 'விஞ்ஞானம்' படிக்குதாம், அப்ப நான் என்ர பிள்ளையை 'கணிதம்' படிக்கப்போறன் என்கிற கதையைப் பல பெற்றோர்களிடம் கேட்டிருக்கிறேன். பிள்ளை என்ன படிக்க விரும்புகிறது, பிள்ளையால் என்ன படிக்க முடியும் என்பதைக் கவனத்தில் கொள்ளாமல் முடிவுகளையும் நீங்களே எடுத்துத் திணிக்காதீர்கள். ஒருவேளை உங்கள் முடிவுக்கு கட்டுப்பட்டு நீங்கள் சொல்லும் துறையை தேர்ந்தெடுத்து படித்து ஒருவேளை சித்தியடையாமல் போனால் அது யாருக்கு நட்டம்? ஆக உங்கள் போலிக்கௌரவங்களுக்காக மற்றவர்களுடன் ஒப்பீடு செய்து வாழ்வதிலும் பார்க்க பிள்ளைக்குப் பொருத்தமான வாழ்க்கையை வாழ விடுங்கள்.

படிப்பில் மட்டும்தான் ஒப்பீடு என்று சொல்ல முடியாது. ஆடம்பரம், சொத்து, வசதி, வருமானம், ஆடைகள் என்று எல்லாவற்றிலும் இந்த ஒப்பீடு ஆதிக்கம் செலுத்துகிறது. தன்னிடம் எது உள்ளதோ அதை மனத் திருப்தியுடன் போட்டுக்கொண்டு நிம்மதியாக சந்தோஷமாக இருப்பதற்கு இந்த ஒப்பீடு மனிதனை விடுவதேயில்லை. எப்போதுமே நாம் நம்மை விட மேலானவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து நிம்மதியையும் இழந்து ஏமாற்றமும் அடைகின்றோம்.

தொலைக்காட்சியில் நேர்காணல் ஒன்றைப் பார்த்தேன். அதில் உயர் பதவி வகிக்கும் பெண்ணொருவர் பேட்டி காணப்பட்டிருந்தார். அப்போது அவர் அணியும் புடைவைகள் குறித்தும் சிறப்புக் கேள்வி கேட்கப்பட்டது. உடனே அந்தப் பெண்மணி, தான் அலுவலகத்துக்கு தினமும் புதுப்புடைவைதான் கட்டுவார் என்றும் தனக்குக் கீழ் பணி புரியும் உழைப்பாளிப் பெண்கள் யாரேனும் தனது புடைவையைப் போல கட்டியிருந்தால் அந்தப் புடைவையைதான் பின்னர் பயன்படுத்துவதே இல்லை என்றும் பெருமையுடன் சொல்லிக்கொண்டார். யாருக்கேனும் கொடுத்துவிடு வாராம். இதுவே தன்னிலும் உயர் அதிகாரிப் பெண்கள் அதே மொடல் புடைவையை கட்டியிருந்தால் தானும் அதைத் தொடர்ந்து உடுத்து வாராம். இத்தனைக்கும் அவர் படித்த அறிவாளியான பெரிய பெண். ஆனால் ஒப்பீடு என்கிற நச்சுப் பொருளால் அவர் வீணடிக்கப்பட்டிருக்கிறார்.

ஒரு நிறுவனத்திலே பலர் தொழில் புரிவார்கள். அவர்களுக்கிடையே பால், வயது, கல்வித் தகைமைகள் போன்ற பல்வேறு வேறுபாடுகள் காணப்படலாம். நிறுவனம் எனும் வகையில் அவரவருக்கு கொடுக்கப்பட்ட வேலைகளை திறம்பட செய்ய வேண்டும் என்பதுதான் முக் கியமே தவிர, அவர் என்ன ஆடை அணிந் திருக்கிறார், என்ன வசதி வாய்ப்போடு இருக் கிறார் என்கிற ஒப்பீடு அல்ல.

அலுவலகங்களில் பொதுவாக சம்பள உயர்வுகளின்போதுதான் இந்த ஒப்பீடு பெரும் தாக்கத்தைச் செலுத்துகிறது. பதவி உயர்வின் போதும் அதுவே நடக்கிறது. சம்பள அதிகரிப்பு என்பது அவர்களின் வேலைத் திறனுக்கேற்றது என்பதை ஏற்றுக்கொள்வதில்லை. அவருக்கு ஆயிரம் ரூபா கூட்டினால் எனக்கும் ஆயிரம் ரூபா கூட்டப்படவேண்டும் என்றே சிந்திக்கிறார்கள்.

அங்கே ஒப்பீடு ஆரம்பமாகின்றது. போட்டி, பூசல்கள் குடியேறுகின்றன. ஒப்பீடுகளை விடுத்து அடுத்தவனின் முன்னேற்றத்துக்கு என்ன காரணமோ அதனைக் கண்டறிந்து, அதற்காக அயராது உழைக்கவேண்டும். அப்போது நீங்களும் சிகரத்தை தொடலாம்.

ஒப்பீடுகளும் சில சமயம் நன்மை பயக்கின்றன. மறுப்பதற்கில்லை. ஆனால் பெரும்பாலான சமயங்களில் நன்மையளிக்கும் ஒப்பீடுகளை நாம் செய்வதேயில்லை என்பது தான் கவலைக்குரியது.

மற்றவர்களுடன் அல்லது மற்றவர்களுடைய நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது ஆனந்தத்தின் இறப்பைக் குறிக்கும் என்று புகழ்பெற்ற எழுத்தாளர் ஒருவர் கூறியுள்ளார். ஒருவரை மற்றவருடன் ஒப்பிட்டுப் பார்ப்பதால் தேவையில்லாத மன உளச்சலும் மனச் சங்கடமும் ஏற்படும்.

நான் அணிந்து கொள்வதற்கு எனக்கு காலணிகள் இல்லையே என்று சலித்துக் கொண்டே இருந்தேன். கால்களே இல்லாத ஒரு நபரைப் பார்க்கும் வரை என்ற வாசகத்தை நினைவு படுத்திப் பாருங்கள்.

ஒப்பிட்டுப் பார்த்தல் சில சமயம் வேண்டியது தான். தேவையான சமயத்தில் அனைவருக்கும் பொதுவான விடயத்தில் தேவைதான்.

ஒப்பீடும் நாம் உண்ணும் உணவு போலத்தான். எப்படி உணவு நம் உடம்புக்கு அவசியமோ அதுபோல அளவுக்கு மிஞ்சினால் அது கொழுப்பாகி எம் உடலில் தேங்கி நோயைத் தருகிறதோ அது போலவே ஒப்பீடுகளும் அளவோடிருந்தால் ஆரோக்கியம், அளவுக்கு மீறினால் ஒரு கட்டத்தில் எம்மையே அழித்து விடும்.



## எப்படி நம்பிக்கையைப் பாடுவது...

எப்போது
என் கவிதை
நம்பிக்கையை
பாடும்
இப்போது வரை
விடையில்லை
என்னிடம்

துயர் பாடி
துக்கமே பாட
எனக்கென்ன
ஆசையா
வண்ணம் மாறா
வாழ்வின்னும்
தொடர்கையில்

எப்படி
எண்ணத்தில்
மட்டும்
ஏற்றம் வரும்
உடைந்துபோன
மனங்களை
ஒட்டவைக்க

வழி தெரியா
கால
அலைக்கழிவில்
எப்படி
என்கவிதை
நம்பிக்கையைப்
பாடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல்நலத்தைப் போன்றதே மனநலமும்!



 க. சண்முகம்

ஆடையைக் கிழித்துக் கொண்டு, சாலையில் கூச்சலிட்டு, தலைவிரி கோலமாகக் கல்லெடுத்து எறிபவர் மட்டுமே மனநலம் பாதித்த வரல்லர். வாழ்வில் ஏற்படும் எத்தனை எத்தனையோ தொல்லைகள், மன அழுத்தங்கள், துன்பங்களால் பாதிக்கப்பட்டு தங்களது விருப்பங்கள் நிறைவேறாமல் போகும்போது, மனமுடைந்து விபரீதமாக நடந்து கொள்வோரும் மனநலம் பாதித்தவரே ஆவர்.

வெளித் தோற்றத்தைக் கொண்டு இவர்களை மனநலம் பாதித்தவர்கள் என்று கணிக்க முடியாது. மனநலம் பாதித்தவர்களைத் தனிநபர் நோயாக மட்டும் கருதாமல், ஒரு சமூகப் பிரச்னையாகக் கருத வேண்டியிருக்கிறது.

மனநலம் பாதிப்பு (Mental Health Problems) என்பது உள – சமூக ரீதியான வேதனையான நிலையாகும். இப்பிரச்சினை அதிக நபர்களைப் பாதிப்புக் குள்ளாக்குகிறது. மன நோய்க்குக் காரணம் பேய், பிசாசு, பில்லி, சூனியம் போன்றவை என்ற தவறான அபிப்பிராயம் இன்றளவும் இருந்து வருவது வருந்தத்தக்கது. மன நோய் உள்ளவர்களைப் பைத்தியக்காரன் என்று சொல்லி ஒதுக்குவதும், உறவினர் என்று சொல்லக் கூச்சப்படுவதும் இன்றளவும் நடைமுறையில் உள்ளது.

மனநலம் பாதித்தவர்கள் இழைக்கும் வன்முறைகளைவிட அவர்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளே அதிகம். குறைந்தபட்சம் 14 மடங்கு அதிகமானதாக உள்ளது என்று ஆய்வுகள் உணர்த்துகின்றன.



பெண்கள், குழந்தைகள், பிற்படுத்தப்பட்டோர் மீது இழைக்கப்படும் அநீதிகள், அவர்கள் மனநலத்தைப் படிப்படியாகப் பாதிப்படையச் செய்கிறது.

உலகம் முழுவதும் சுமார் 45 கோடி மக்கள் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் என்று தெரிய வந்துள்ளது. போரால் வடக்கிலும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் மன நெருக்கீடுகளுக்கும் மன நலப் பாதிப்புக்கும் உள்ளாகியிருக்கிறார்கள். உடல் நலத்தைப் போல, மனநலத்துக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். மன நலத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காததால் நாட்டில் மன நோயாளிகளின் எண்ணிக்கை கூடிக் கொண்டே வருகிறது.

பாதிப்புக்கான காரணங்கள்: குடும்பப் பிரச்சினை, பாலியல் பிரச்சினை, வேலை யில்லா நிலை, மரபியல் பிரச்சினை, ஏமாற்றம், தோல்வி, சந்தேகம், போட்டி, பொறாமை, போதைப் பழக்கம் போன்றவையாகும்.

மனநலப் பாதிப்பால் சோகம், தொடர் தலை வலி, பசியின்மை, உடல் சோர்வு, ஜீரணக் கோளாறு, பயம், விபரீதக் கற்பனை, நம்பிக் கையற்ற, எதிர்மறையான எண்ணங்கள், குற்ற உணர்வு, தற்கொலை எண்ணம் ஆகி யவை தோன்றும். உடல் நலம் பாதித்தால் உடனே மருத்துவ ரைப் பார்க்கிறோம். ஆனால், மனநலம் பாதிக்கப்பட்டால் மருத்துவரிடம் செல்லத் தயங்கும் நிலைதான் காணப் படுகிறது.

அனைத்து வயதினரையும் மனநலம் பாதிக்கிறது. மனநிலை பாதிக்கப் பட்டவர்கள் தற்கொலைக்கும் முயற்சிக்கின்றனர். ஆண்டுதோறும் உலகம் முழுவதும் எட்டு லட்சம் பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர். இவர்களில் 15 முதல் 44 வயதுக்குட்பட்டோரே அதிகம். ஒரு வயதுக் குழந்தைக்குக்கூட மன அழுத்தம், மனச் சோர்வு ஏற்படும் வாய்ப்பு உள்ளதாக ஆய்வுகள் உணர்த்துகின்றன.

மன நோய் உள்ளவர்கள் சமூகத்தின் ஓர் அங்கமாக உயிர் வாழ்வதற்கு உரிமை உண்டு. சமுதாயப் பராமரிப்பு மையங்கள், இடைக்காலத் தங்கும் விடுதிகள் ஆகியவற்றை அரசு அமைக்க வேண்டும்.

தற்கொலை என்பது குற்றச் செயல்பாடு அல்ல, தற்கொலை முயற்சி செய்பவர்களுக்கு மனநலச் சிகிச்சை அளிக்க வேண்டும். மனித உரிமை சார்ந்த அணுகுமுறையை புதிய மனநலச் சட்டம் மேற்கொண்டுள்ளது.

மனநல நோயாளிகளுக்கு மயக்க மருந்து இல்லாமல் மின்சார அதிர்ச்சி சிகிச்சை அளிப்பது, சங்கிலியால் பிணைத்தல், தலையை மொட்டை அடித்தல் போன்ற மனித உரிமைக்கு எதிரான நடவடிக்கைகளுக்குப் புதிய மனநலச் சட்டம் தடை விதிக்கிறது. அங்கீகாரமற்ற மனநலச் சேவை மையம் நடத்துபவர்களுக்கு ரூ. 50 ஆயிரம் அபராதம் விதிக்கப்ப டுகிறது. தனி நபருக்கான சிகிச்சையை, அவரது குடும்பம் முழுவதையும் கருத்தில் கொண்டு அளிக்கப்படும் குடும்ப சிகிச்சை என்பன மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

1992ஆம் ஆண்டு முதல் உலக மனநல மருத்துவக் கூட்டமைப்பின் சார்பில், ஒக்ரோபர் 10ஆம் திகதி உலக மனநல தினம் கடைப்பிடிக் கப்பட்டு வருகிறது. "மாண்புடன் மனநலம் காப்போம்" (Dignity in Mental Health) என்பது 2015ஆம் ஆண்டின் உலக மனநல தினத்தின் மையக் கருத்தாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

மனநலம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு அவசியம். மனநலப் பாதிப்பும் உடல் நலப் பாதிப்பைப் போலத்தான். மதுவோ, போதைப் பொருளோ மனக் கவலைக்கு ஏற்ற மருந்தாகாது. எனவே, அவற்றைத் தவிர்ப்போம். மற்றவர்களுடன் பேசி மகிழுவோம்.

மனம் வெறுமையாக இருப்பதுபோல் இருந்தால் மகிழ்ச்சி தரும் நடவடிக்கைகளில் இறங்குவோம். திரைப்படம், விளையாட்டு, உடற்பயிற்சி, இசை, புத்தகம், யோகா போன்றவற்றை மேற்கொள்ளு வோம். தனிமையைத் தவிர்த்தாலே பாதி பிரச்சினை தீர்ந்துவிடும்.

பொதுவாக, மனது என்ன நினைக்கிறதோ, அதுதான் செயல் வடிவம் பெறுகிறது. மனநலம் பாதித்த ஒவ்வொருவருக்கும் மிகவும் தேவை யானது அவரை எந்த நிலையிலும் புரிந்துகொள்ளும் ஒரு நல்ல நண்பனே என உளவியலின் தந்தை சிக்மண்ட் ஃபிராய்டு கூறுகிறார்.

ஆரம்பக் கட்டத்திலேயே மனநலச் சேவை கிடைக்கப் பெற்றால் பெரும்பாலானவர்களுக்குத் தீர்வு ஏற்பட்டுவிடும். நோய் வந்த பின் தடுக்காமல் வருமுன் காப்பதே சிறந்தது.

## உயிருக்குறுகண் செய்யாதொழிப்போம்!!!

மனிதன் : ஐயையோ
பாம்பல்லோ! அங்கே
அடிக்கத் தடி கொண்டு வா
மகனே
உயிரோடிருந்தால், நீ
எம்மையெல்லாம்
உயிர்பறிக்கத் தீண்டிடுவாயே

பாம்பு : ஏனையா எனக்கு
அடிக்க வாறீர்
என்ன தீங்கு செய்தேனுமக்கு?
உமக்கேன் நான்
தீண்டவேணும்?
நமக்குத் தொல்லை
செய்யாதபோது!

உயிர்க்கொலை
பாவமென்று இன்னும்
உமக்கு தெரியாதோ? ஐயா....!
உலகத்தில் எல்லா உயிரும்
வாழத்தான் பிறந்தன -

மனிதன்: உன் சொல் எனக்கு
விளங்குதப்பா
உலக நியதி இதுதானப்பா!
உன்னை நான் விட்டுவிட்டால்
என்ன நடக்குமோ தெரியாதப்பா!

மகன்: அப்பா அப்பாம்பைக்
கொல்லாதேங்கோ

அது நமக்கொரு தீங்கும்
செய்யவில்லையே
உலகச் சூழலைச்
சமநிலைப்படுத்தவே
உயிர்களை இறைவன்
படைத்தானப்பா!

உற்றநோய் நோன்றல்
உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உருவே என்று
சின்ன வயதில் கற்றதெனக்கு
இன்னும் ஞாபகம் இருக்குதப்பா!

பாம்பு: ஒன்றுக்குமே
யோசியாதீர் ஐயா
ஒரு தீங்கும்
செய்யமாட்டேன் உமக்கு
என் உயிரைக் காப்பாற்றவே
நான் பிறரைத் தீண்டுகின்றேன்.

மனிதன்: உன்சொல்லை நான்
நம்புகிறேன்
என்சொல்லை நீ நம்பலாம்
இனிமேல்
வள்ளுவன் வாக்கை கற்றுக்
கொண்டேன் இனி
எள்ளளவும் உயிர்க் குறுகண்
செய்யமாட்டேன்!

சைவப் புலவர்
அம்பலவாணர் இராஜரட்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பேரனுக்கு பெயர் வைக்கப் போறன்



கலாபூஷணம் எஸ்.புஸ்பராஜன். அரியாலை.

பூரணம்! பூரணம்! என்றவாறு சைக் கிளை வேலியில் சாத்திக் கொண்டே கூப்பிட்ட கிட்டினர், சைக்கிளில் கொழுவியிருந்த சொப்பின் பாய்க்கை எடுத்து அதற்குள் சுருட்டி வைத்திருந்த நீளமான முரல்மீனை வெளியே எடுத்த வண்ணம் வந்தார்.

அவரின் சத்தம் கேட்ட பூரணமும், என்னடா இந்த மனுசன் இண்டைக்கும் குடித்து விட்டு வெறியில வருகுதுபோல என்று மன சுக்குள் புறுபுறுத்தவாறே வந்தாள். பேரன் பிறந்து இன்றுடன் மூன்று நாளாய் தலை கீழாய்த் தானே வருகுது.

"என்னப்பா! என்ன?" பூரணம் கடுகடுத் தாள். மனுசனின் கையில் கிடந்த கரு முரலைப் பார்த்ததும் அவளுக்குப் பத்திக்கொண்டு வந்தது.

"எண்டைக்கு இந்தக் கொண்டாட்டம் ஓயப் போகுது. அந்தப் பச்சைப் பிள்ளைத்தாச்சிப் பெட்டைக்கு ஒரு பால்சுறா துண்டெண்டா லும், பத்தியத்துக்கு வாங்கி வருமெண்டு பார்த்தால் இந்தப் பாழ்பட்ட மனுசன் கரு முரலோடு வந்து நிக்குது." சிடுசிடுத்தாள்.

"உதேனப்பா இந்த மீன்?" கோபம் வார்த்தைகளில் வெடித்தது.

"நீ வாய்க்கு வாய் காட்டினால் அடிக்க இந்த மீன்தான் இதமா இருக்கும்" என்று இடக்குப் பேசினார் கிட்டினர்.

"மூச்சுக் காட்டாமல், நல்லா அரைச்சுப் பொரிச்சுக் காய்ச்சு."

பூரணத்தின் கையில் மீனைத் திணித்துவிட்டு நகர்ந்தார் கிட்டினர்.

"ஓ! அப்பதான் மூக்குமுட்ட குடிச்ச வாய்க்கு உவப்பாய் இருக்கும்."

புறுபுறுத்தபடியே மீனை வாங்கிக் கொண்டு குசினிக்குள் நுழைந்தாள் பூரணம். அவளின் பின்னாலேயே போன கிட்டினர்" குசினி விறாந்தையில் நீட்டி நிமிர்ந்து அமர்ந்தார்.

"பூரணம்!"

கிட்டினரின் அழைப்பில் அதிகாரம் கொடி கட்டிப் பறந்தது.

"எண்ணெய்ப் போத்தலைக் கொண்டு வா. தேய்ச்சு முழுகப்போறன். கெதியாக் கொண்டு வந்து தேச்சுவிடு."

இடுப்பில கிடந்த அரைப் போத்தல் சாரா யத்தை உருவியபடியே உத்தரவு பறந்தது.

"ஒரு கிளாசும் கொண்டு வா."

போத்தலின் அடியில் ஒரு தட்டுத்தட்டிவிட்டு முடியைத் திருகவும், பூரணம் டம்ளரைக் கொண்டு வந்து, குனிந்து நிலத்தில் 'நங்' என்று வைத்தாள்.

கிட்டினரும் ஒரு ரவுண்ட் அடித்தார். பானம் மெல்ல உள்ளே இறங்க இறங்க அவருக்கு உசார் கூடிக்கொண்டே வந்தது. சிவனே என்று பூரணம் முதுகுக்கு எண்ணெய் தேய்த் துக் கொண்டிருந்தாள்.

"பேரன் பிறந்து இன்றைக்கு மூன்று நாளாய்ப் போச்சு. பேரனுக்கு என்ன பெயர் வைக்கப் போகிறானாம் ராகவன்? அவன்தான் எங் கடை குடும்ப வாரிசு; ஆம்பிளைப் பிள்ளை யின்ர பிள்ளையெல்லே? அவனுக்கு என்ர பெயர் மாதிரி கடவுள் பெயராய்த்தான் வைக்க வேணும்." புசத்தல் உரத்துக் கொண்டே வந்தது.

"பெயர் வைக்கிற வேலையை ராகுலன் கவனிக்கட்டும். பிள்ளைத் தாச்சிப் பெட் டைக்கு நாளைக்கு வெந்நீர் வார்க்க வேணும். எங்கேயாவது போய் இலைகுழை ஒடிச்சுக் கொண்டு வாங்கோ" என்று சந்தடி சாக்கில் குறுக்கிட்டாள் பூரணம்.

"அதென்ன இலைகுழையளென்று எனக் கென்ன தெரியும்!" கிட்டினரிடம் இருந்து அசட்டையாகப் பதில் வந்தது.

"உதுகள் தெரியாது; நாலு எழுத்துப் படிச் சனான் என்று மட்டும் பெருமையடிக்கத் தெரியும்." புறுபுறுத்தாள் பூரணம்.

"அடியே! பூரணம் என்று எழுதச் சொன்னால் புராணம் என்று எழுதுற உனக்குத் தாண்டி உதெல்லாம் தெரியும். எனக்கென்ன பள்ளிக் கூடத்திலே வெந்நீர் குழை இதுதான் என்று சொல்லியே தந்தவை?" பதிலடி கொடுத்தார். குறைவெறியில் கிட்டினர். அடுத்த ரவுண்டு முடிந்து கிளாசை வைத்த வண்ணம், "நான் பேரனுக்குப் பெயர் வைக்க வேணுமென்று திரியிறன். நீ என்னடாவென்றால், என்னைக் குடிகாரன் எண்டு பார்க்கிறாய்.... நான் ஒரு பெரிய குடிகாரனாய் இருந்தால் உன்ரை தாலிக்கொடிகூட எனக்குச் சாராயமாக வயித் திலே இறங்கியிருக்கும்... ஓ!"

வார்த்தைகள் சரமாரியாய் வந்து கொட்டின.

"இன்றைக்கும் நீ பூரணச் சந்திரனாய்த் தாண்டி இருக்கிறாய். உனக்கென்னடி குறை வைச்சிருக்கிறன். நீதான் என் னைக் குடிகாரனாய்ப் பார்க்கிறாய். ஆனால் வெளியிலே... கிட்டினர் கால் வைச்ச நிலத்துப் புல்கூடச் சாகாது எண்டுறாங்கள். அதெல்லாம் சரி பேர னுக்குப் பெயர் வைக்கிற அலுவலைப் பாக்கவேணும்." புலம்பல் தொடர்ந்தது.

"பிள்ளைக்குப் பேர் வைக்க முதலாளி யளக் கூப்பிட்டாக் கழுத்தில காதில கிடக்கிறதுகளக் கழட்டிப் பிள்ளைக்குப் போட்ட காலம் எல்லாம் மலையேறிப் பேச்சு கண்டியோ!" கிட்டினத்தார் இழந்துபோன தங்கச் சங்கிலிக்காகப் பச்சாதாபப்பட்டார்.

"ஏனப்பா! புதிசாய் செய்து போடமாட் டினமே! கழுத்தில காதில கிடக்கிற பழ சத்தானே போடுவினம்?" பூரணத்திடம் இருந்து கேள்வி பவ்வியமாக வந்தது என்றாலும் கிட்டிணர் சன்னதம் கொண் டார்.

"உனக்கு இதுவெல்லாம் எங்கே புரியப் போகுது. உனக்குத்தானே புத்திவிடிய முன்னம் பொழுது விடிஞ்சு போச்சே! அப்படியொரு காலம் போட்டுது."

"அது பறவாயில்ல. அதுக்குப் பிறகு வந்த அப்புவின்ர காலம் படுமோசம். அந்தக் காலம் பிள்ளைகளுக்குப் பெயர் வைச்சால் விதானையாரிட்டப் போய்ப் பதியவேணும். படிச்ச சனம் தாங்களே போய் போம வாங்கிப் பதிஞ்சுபோடுங் கள். விதானையாரும் பேச்சு மூச்சுக் காட்டாமல் அப்படியே போமை வாங் கிப் போடுவார். பிறப்புச் சேட்டிபிக் கற்றும் அவங்கள் நினைத்த மாதிரி வந்து சேர்ந்து விடும். ஆனால், எழுத வாசிக்கத் தெரியாத, எங்கட ஆக்கள் போனால் வில்லங்கம்தான். எங்களயாக்கள் விதா னையாரைப் பாத்துத் தலையைச் சொறி வினம். விதானையாரும் என்னடாப்பா பெயர்வைக்கப் போறாயா.... ஆணா? பெண்ணா? எண்டுவார். எங்கடயள் ஒரு பேரைச் சொல்லிப்போட்டு வருங் கள். சேட்டிபிக்கற் வந்ததும் அதுகள் பக்குவமாய் மடித்துப் பெட்டகத்தில வச் சிடுங்கள். பிள்ளையை பள்ளிக்கூடம் சேக்கேக்கதானே சேட்டிபிக்கற்றை தேடுறது. அப்பத்தானே பிள்ளைக்கு என்ன் பேர் வச்சிருக்கெண்டு தெரிய வரும். காத்தான் என்றோ கறுவல் எண்டு ஏதோ எழுதியிருக்கும். அப்படிப் படிச்சவனுக்[illegible] பேர் படிக்காதவனுக்கு இன்னொரு [illegible] பெயர் வச்ச காலமடி அது."

> **நையாண்டி பண்ணுற கூட்டம்தான் இந்த இடக்குமுடக்கான பெயர்களை, அர்த்தமில்லாத பெயர்களை வைக்கினம். இவன் ராகுலனும் ஒரு அறப்படிச்சது. இதுவும் என்ன பெயர் வைக்குதோ அதுவும் ஆண்டவனுக்குத் தான் தெரியும். என்ன இருந்தாலும் என்ர பேரனுக்குப் பேர் வைக்கிற விடயத்திலே நான் கவனமாகத்தான் இருப்பன். அவன் தான்ரி கிட்டினன்."**

"அது மாதிரி என்ர பேரனுக்கு வக்க ஏலுமே! நான் இருக்குமட்டும் அவன் ராசாதான்!" கிட்டினரின் சுதி கூடியிருந்தது.

"இப்பவல்லோ எங்கடை பிள்ளையளுக் கும், மற்றப் பிள்ளைகளைப்போல, விதம் விதமான, வடிவான பேருகள வைக்கினம். அதிலயும் இப்ப வாயிலே தடுக்குப்படுகிற மாதிரி உச்சரிக்க முடியாதபடி இடக்கு முடக் காத்தானே பேருகள் கிடக்கு. அதுமாதிரி யில்லாமநல்லதமிழ்ப்பேராவைக்கவேணும்." பூரணம் பதிலுக்குத் தன் ஆதங்கத்தையும் சொன்னாள்.

"நையாண்டி பண்ணுற கூட்டம்தான் இந்த இடக்குமுடக்கான பெயர்களை, அர்த்தமில் லாத பெயர்களை வைக்கினம். இவன் ராகு லனும் ஒரு அறப்படிச்சது. இதுவும் என்ன பெயர் வைக்குதோ அதுவும் ஆண்டவ னுக்குத் தான் தெரியும். என்ன இருந்தாலும் என்ர பேரனுக்குப் பேர் வைக்கிற விட யத்திலே நான் கவனமாகத்தான் இருப்பன். அவன் தான்ரி கிட்டினன்."

பளிச்செனத் தெறித்த எச்சிலில் சாரய வாடை வீசியது.

"நீங்கள் என்ன பெயரையும் வையுங்கோ; முதலிலே பிள்ளையின்ர பலனைக் காட்டி சாத்திரிட்டக் கேளுங்கோ எந்த எழுத்திலே தொடங்கிற பேர் வைக்க வேணுமெண்டு." பூரணம் குறுக்கிட்டுக் கேட்டாள்.

"நாளைக்குக் காலங்காத்தாலே சாத்திரியா ரட்டைப் போகப் போகிறேன். இப்ப இருக்கிற சாத்திரிமார் எல்லாம் என்ன..... புத்தூரில் தங்கராசா சாத்திரியார்தான் இருந்தார். அவர்தான் ஆள். அந்தாள் சாத்திரம் பார்த் துச் சொன்னால் அப்படியே எல்லாம் நடக் கும். என்ன அந்த மனுசனைச் சந்திக்கிற தென்றால் செக்கலுக்கை எழும்பி எழு மணிக்கு முன்னம் அங்கே போய்ச் சேர்ந் தால் தான் மத்தியானச் சாப்பாட்டுக்குத் தன் னும் வீட்டுக்கு வரலாம். மற்றும்படி சந்தை மாதிரி சனம் நிறைஞ்சு நிக்கும்."

ஒரு வழியாக கிட்டினர் எழுந்தார். அரப்பு, எலுமிச்சங்காயை எல்லாவற்றையும் கொண்டு கிணற்றடிக்கு வருமாறு பூரணத் துக்கு உத்தரவிட்டார். நல்லாத் தலையில தேய்த்து குளிரக் குளிரக் குளிர நல்லா முழுக வேணும் என்று நினைத்துக்கொண்டார்.

அரப்பு எலுமிச்சைக் காயோடு பூரணம் கிணற் றடிக்கு வந்து அரைமணித்தியாலமாச்சு. கக்கூசுக்குப்போன கிட்டினர் வந்த பாடில்லை. அடுப்பில மீன் வேற என்று பூரணம் பரபரத்துக் கொண்டிருந்தாள்.

பேரன் ஒன்று பிறந்தது, அன்றிலிருந்து இந்த மனுசன் ஒரே குடியும் கூத்தும்தான் என்று தனக்குள் புறுபுறுத்தாள் பூரணம். ஒரு வழியாக முழுக்கு முடித்த கிட்டினர் சமைச்சு வச்ச சாப்பாட்டையும் சாப்பிடாமலேயே உறங்கிப் போனார்.

ராகுலனின் மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டு எழுந்தார். "அப்பு! இந்தா இதை வைச்சு நாலு நாளைக்குக் குடி" என்று ஒரு போத்தல் சாராயத்தை கிட்டினரிடம் கொடுத்தான் ராகுலன். கிட்டினருக்குப் பக் என்றிருந்தது. கொஞ்சம் முன்னாலதான், இவன் பெடியன் தனக்கொரு பிள்ளை பிறந்திருக்கெண்டு இந்த அப்புவை இடைசுகம் கவனிச்சானோ என்று திட்டியிருந்தார். வெறியில எங்கயும் வெளி வாயா திட்டிப்போட்டாரோ என்று உள்ளூர ஒரு சந்தேகம் அரித்தெடுக்கத் தொடங்கியது. ஆனாலும் வாயிலே ஒரு புன்சிரிப்போடு போத்திலை வாங்கிக்கொண்டார்.

"அட தம்பி பிள்ளைக்குப் பெயர் வைச்சிட் டியா?"

"அப்பு; ஒருவாறு படாதபாடுபட்டு தனுஷ் என்று பேர் வைச்சிட்டன்."

அட நாசமறுந்த பாவி! இதுக்கு அந்தக் காலத்து விதானைமாரே பறவாயில்லயே! கிட்டினர் வாய் வரை வந்த வார்த்தைகளை மென்று விழுங்கிக் கொண்டுதனது மகனைப் பார்த்துச் சிரித்தார்.


"இதுக்கு என்ன அர்த்தம் தம்பி?"

ராகுலனுக்கு அப்புவின் கேள்வியின் அர்த்தம் புரிந்தது.

"அப்பு! பெரியாக்களின்ர, சரித்திரகாரரின்ரை பெயர் அது இது என்கிறாய். அப்படியென்றால் சீதை என்றால் என்ன அர்த்தம்? கோதை என்றால் என்ன அர்த்தம்? அவையள் ஒரு காலத்திலே சரித்திரம் சொல்கிறமாதிரி வாழ்ந்துகாட்டேல்லையா? அது போலத் தான் என்ர பிள்ளை தனுசும் ஒரு காலத்தில சரித்திரம் எழுதும் வகையில் வாழ்ந்து காட்டுவான். அதுக்குப் பிறகு நீங்கள் சொல்கிற மாதிரி எதிர்காலத்திலே பிறக்கும் பிள்ளை களுக்குப் பெற்றோர்கள் தனுஷ் என்று சரித் திரப் பேர் வைப்பார்கள்."

"உன்ர மகனின்ரை சரித்திரம் காண நான் எங்க உயிரோட இருக்கப்போகிறன். காடு வாவா எண்டுது...." மனச்சலிப்போடு சொன்ன கிட்டினர், மகன் தந்த சாராயப் போத்தலைத் தூக்கிப் பார்த்துவிட்டு அப்படியே ஒரு ஓரமாக வைக்கிறார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# அசரவைக்கும் கறையான்களின் கட்டடக் கலை!

த.வி.வெங்கடேஸ்வரன்

நிலத்துக்கு அடியில் பல மீற்றர் நீள சுரங்கங்கள், நிலவறைகளைக் கட்டி வாழும் கறையான்கள் மின்விசிறி, குளிர்சாதனம் இல்லாமல், தமது புற்றை காற்றோட்டமாக வைத்துகொள்வது எப்படி? உலகின் பல நாடுகளின் பெருநகரங்களில் பாதாள ரயில் திட்டம் உள்ளது. பூமிக்கு அடியில் பல கிலோ மீற்றர்களுக்குச் சுரங்கப் பாதையில் ரயில் போகும். பூமிக்கு அடியில் பல லட்சம் மக்கள் போய்வருவதால் அங்குள்ள காற்றில் உயிர் வாயு (ஒக்சிசன்) குறையும். கரியமில வாயு (கார்பன் டை ஒக்ஸ்சைடு) சற்றே உயரும். நெரிசல் காரண மாக ஈரப்பதம்கூடி புழுக்கமும் துர்நாற்றமும் ஏற்படும். இதனை சமாளிக்கத்தான் பாதாள ரயில்கள் குளிரூட்டப்படுகின்றன.

**புற்றுக்குள் ஏ.சி.**

கறையான் புற்றைப் பாருங்கள். அது நிலத்துக்கு அடியில் பல மீற்றர்களில் வலைப் பின்னலாய் பல சுரங்கப் பாதைகளைக் கொண்ட ஒரு நிலவறை. மூன்று மீற்றர் ஆழம் கொண்டதாக இருக்கும். தரைக்கு மேலே குன்று போன்ற அமைப்பு இருக்கும். குன்று போன்ற அமைப்பின் நடுவே தடிமனான சுவர் கொண்ட சுமார் 5 மீற்றர் உயரமுள்ள சிமினி. அதைச் சுற்றிலும் தடிமன் குறைந்த சற்றே உயரம் தாழ்ந்த குழல் போன்ற பல அமைப்புகள் இருக்கும். கறையானின் புற்றில் காற்றோட்டம் ஏற்படுவது எப்படி? எடுத்துக்காட்டாக ஆப்பிரிக்கக் காடுகளில் மதியம் 40 டிகிரி செல்சியஸ் வெப்பம் இருக்கும். இரவில் வெறும் ஒரு டிகிரி செல்சியஸ் கடும் குளிர் இருக்கும். எனினும் அங் குள்ள கறையான் புற்றின் உள்ளே வளிச்சீராக்கி உள்ளதுபோல சீராக சுமார் 30 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை உள்ளது. இந்தச் சீரான வெப்பநிலை யில்தான் அவற்றின் உணவான குறிப் பிட்ட வகை பூஞ்சைகளைக் கறையான்களால் உருவாக்கிக்கொள்ள முடியும்.

**புற்று ஒரு நுரையீரல்**

கறையான்கள் தங்களின் புற்றில் காற்றோட்டத்தையும் தட்பவெப்ப நிலையையும் நிலைப்படுத்துவது தாங்கள் வளர்க்கும் ஒருவகையான பூஞ்சைகளைப் பாதுகாக்கவும்தான். கறையான்கள் புற்றில் தாங்கள் வாழும் பகுதியை விட சுமார் எட்டு மடங்கு அளவுள்ள பகுதியில் ஒரு வகையான பூஞ்சையை உணவுக்காகப் பயிர் செய்கின்றன. 400 கிலோ எடையுள்ள ஒரு பசு ஒரு ஆண்டில் தின்று தீர்க்கும் புல்லின் அளவுக்கு பூஞ்சைகளை ஒரு கறையான் உண்ணும். இந்த பூஞ்சைகள் வளர புற்றில் சீரான தட்பவெப்ப நிலைமை இருக்க வேண்டும்.

மீற்றர் கணக்கில் பரவியுள்ள பூஞ்சைகளும் பல ஆயிரம் கறையான்களும் புழங்கும் பாதாளச் சுரங்கத்தில் உள்ள காற்று தன் இயல்பில் மாசுபடும். காற்றில் கரியமில வாயுவின் செறிவு உயரும். ஈரப்பதம் கூடி புழுக்கம் ஏற்படும். இவை கறையானுக்கு மட்டுமல்ல. அவை பயிர் செய்யும் பூஞ்சைக்கும் ஆபத்து. எனவே, கறையான் தன் புற்றில் காற்றோட்டத்தை உறுதி செய்தாகவேண்டும்.

கரையான் தன் புற்றில் காற்றோட்டத்தை உறுதிசெய்வது எப்படி என்பதை ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் செயல்முறை கணிதவியல், இயற்பியல் மற்றும் பரிணாம உயிரியல் பேராசிரியராக இருக்கும் எல்.மகாதேவன் ஆய்வு செய்துள்ளார்.

அவரும் அவரது ஆய்வு மாணவர்கள் கிங்கும் ஒக்கோவும் சில கருவிகளைக் கொண்டு இந்தியாவின் பெங்களூருக்கு அருகில் உள்ள காட்டில் இருந்த உயிர்ப்புள்ள புற்றுகளையும் மடிந்த புற்றுக்களையும் ஆராய்ந்தனர். காலை, மாலை, இரவுகளில் சிமினியில் நிகழும் காற்றுச் சலனம், நிலவறைக்குள் ஏற்படும் வெப்ப நிலைமை, புற்றில் அங்கும் இங்கும் உள்ள கரியமில வாயுவின் செறிவு உள்ளிட்ட பல தகவல்களைச் சேகரித்தனர்.

கறையான் புற்று நாள் ஒன்றுக்கு ஒருமுறை காற்றை உள்ளே இழுத்தும் ஒருமுறை வெளியே விட்டும் நிலவறையில் காற்றோட்டத்தை உறுதிசெய்கிறது என்று அந்த ஆய்வில் கண்டனர். அதாவது கறையான்களுக்கு வெளிப் பக்கமாக உள்ள நுரையீரல் போல கரையான் புற்று செயல்படுகிறது.

**கட்டடக்கலைக்கான பாடம்**

தொலைநோக்கியும் மைக்ரோஸ்கோப்பும் நமது கண்களின் நீட்சி. கிரேன் இயந்திரம் நமது கைகளின் நீட்சி. அதுபோல கறையான் புற்று, அதிலும் குறிப்பாக, தரைக்கு மேலே உள்ள புற்றின் பகுதி கறையான்களின் கூட்டு நுரையீரல் போல செயல்படுகிறது என்றும் அவர்கள் கண்டனர்.

நுரையீரலைக் கொண்டு நாம் நன்றாக மூச்சைப் பிடித்து இழுத்துவிடுவதுபோல புற்றின் சிமினி அதனைச் சுற்றி இருக் கும் குழல் அமைப்புகளைப் பயன்படுத்தி அந்தப் புற்று முழுவதுமாக நாள் ஒன்றுக்கு ஒரு தடவை காற்றை உள்ளிழுத்தும் ஒரு தடவை வெளிவிடவும் செய்கிறது எனக் கண்டனர். காலையில் குன்றின் வெளிப்புறச் சுவர்களைச் சூரிய ஒளி வெப்பமேற்றும். சற்றே வெப்பமடையும் காற்று சிமினி வழியே குன்றுக்குள்ளே நிலவறைக்குள் செல்லும்.

நுரையீரல் மூச்சை உள்ளே பிடித்து இழுப்பது போல சிமினி வெளிக்காற்றை பிடித்து இழுத்து நிலவறைக்குள் புகுத்தும். சுற்றியுள்ள குழல் அமைப்புகள் தடிமன் குறைவாக உள்ளதால் இரவில் புற்று வெகு விரைவில் குளிர் அடையும். நடுவே உள்ள தடிமனான சுவர் கொண்ட சிமினி உயர் வெப்பநிலையில் இருக்கும். இப்போது நிலவறையில் இருக்கும் வெப்பக் காற்றை சிமினி வெளியே துப்பும். பகல்பொழுதில் நிலவறைக்குள் தேங்கிய கரியமில வாயு கொண்ட அசுத்தக்காற்று இவ்வாறு வெளியேறி நிலவறை சுத்தப்படும்.

கடற்கரைப் பகுதிகளில் மதியத்துக்கு முன்னர் வேக வேகமாக நிலம் வெப்பமடைகிறது. அதனால் மதியத்தில் கடலிலிருந்து நிலம் நோக்கிக் காற்று வீசும். இரவில் வெகு விரைவாக நிலம் குளிர்ந்துவிடும். கடல் நீர் பரப்பு வெப்ப நிலையில் இருக்கும். அதனால் கடல் நோக்கி காற்று வீசும். அதாவது ஒரே நாளில் கடலிலிருந்து நிலம் நோக்கியும், நிலத்திலிருந்து கடல் நோக்கியும் காற்று மாறி மாறி வீசும். அதுபோலத்தான் கறையான் புற்றில் காலையில் புற்றுக்குள் வெளிக் காற்று செல்ல, மாலையில் நிலவறையிலிருந்து அசுத்தக்காற்று வெளிப்படும்.

மகாதேவன் கருத்து சரியென்றால், காலையைவிட மாலையில் நிலவறையில் கரியமில வாயுவின் செறிவு அதிகரிக்க வேண்டும். இரவில் இது வெகுவாகக் குறைய வேண்டும். மேலும், சிமினியின் வாயில் ஊடாக பகலில் காற்று உள்ளே செல்ல வேண்டும். இரவில் காற்று வெளிப்படவேண்டும். ஆய்வாளர்கள் கருவிகளைப் புற்றில் பொருத்தி சோதனை செய்தபோது கிடைத்த தகவல்கள் இந்தக் கருத்தை உறுதிசெய்தன.

தனது ஆய்வு கறையான் புற்று எப்படிக் காற்றோட்டமாக இருக்கிறது என்பதை மட்டும் சுட்டவில்லை, நவீன கட்டடக் கலைஞர்களுக்கு இது ஒரு பாடம் என்கிறார் மகாதேவன். அளவில் பெரிதாகவும் பல மாடிகள் உயரத்திலும் கட்டடங்களை எழுப்பி வருகிறோம். பெரும் ஆற்றலைச் செலவழித்து செயற்கை முறையில் நாம் இந்தக் கட்டடங்களுக்குக் காற்றோட்ட வசதியைச் செய்கிறோம்.

இந்தியாவின் மொத்த ஆற்றல் செலவில் சுமார் மூன்றில் ஒரு பங்கு மனிதர்களின் வாழ் விடங்களில் செலவழிக்கப்படுகிறது. கறையான் புற்றின் வடிவமைப்பை மேலும் துல்லியமாக ஆராய்ந்து எதிர்காலத்தில் ஆற்றல் வீணாகாமல் முறையான வடிவத்தில் கட்டடங்களை வடிவமைக்க முடியும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார் மகாதேவன்.



## காதல் பரீட்சை

உயிர் கருகும் தழல் வெயிலும்
நிறம் தொலைத்து பனி போர்த்திக் கொண்ட
மலர்கள் சொரிந்து பாதம் தொட்டன
இலையுதிர்த்து நிர்வாணமான கிளைகள்
மெல்லென செந்துளிற் திரைச்சீலையை
உள்ளிருந்து இழுத்துக்கட்டிக்கொண்டு
கைலாகு பண்ணியது
காக்கைகள் குயில்களாகின
எச்சில் தேடியலைந்த நாய்கள்
மான்குட்டிகளாய் மருண்டு பார்த்தன
புகைகக்கிச் செல்லும்
நகர நெரிசலின் ஊர்திகள்
விழாக்காலத் தேர்போல்
ஊர்வலம் சென்றன
இதே தெருவில் இதே சலசலப்பில்
நேரம் தொலைத்த பரபரப்பில்
எனக்காக நீ காத்திருந்த காதலைக்
காணவென்று வேண்டுமென்றே
நான் தாமதமாய் வந்த வேளையில்......

- திருமலை -கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்யை எப்போதுமே துறந்து நில்லுங்கள்



சாம் ரமேஸ்குமார்.

சத்யம் வத!
தர்மம் சர!
என்கின்றது சனாதன தர்மத்தின் புனித வேதங்கள். உண்மையைப் பேசி தர்ம வழியில் நட என்பதே அதன் பொருளாகும். தர்மத்தைச் சார்ந்து வாழ்பவர்களுக்கு என்றும் பொய் பேசுதல் அவசியமாகாது. பொய் பேசும் மனிதர்கள் என்றுமே உண்மை இயல்பிலிருந்து விலகி நிற்கின்றார்கள். அந்த மனிதர்களின் வாழ்வு அதர்மத்தால் நிரம்பி காலம் முழுவதும் வெறுமையாய்க் கழிகின்றது. கடைசியில் தர்மமெனும் கதிரவனின் ஒளி இவர்கள் மீது வீசாமலேயே இறப்பு எனும் பள்ளத் தாக்கில் சாய்ந்து விடுகின்றார்கள். அதனால் தான் பொய் பேசும் வாய்க்கு ஒரு பொரியும் கிடையாது என்பார்கள் நம் முன்னோர்கள்.

தற்கால உலகில் அனேகர் - படித்தவர் முதல் பாமரர் வரை - பெரும்பாலும் பொய் பேசுவதையே நவீன நாகரிகமாகக் கொண்டுள்ளார்கள். இது சிறிய குடும்பங்களிலிருந்து ஆரம்பித்து சமுதாயம், தேசம், உலக மென எங்கும் விரிவடைந்துள்ளது எனலாம். சிறு விடயங்களிலிருந்து பெரிய விடயங்கள் என எண்ணத்தில், பேச்சில், செயற்பாடுகளில் அனைத்திலுமே மனிதர்களிடம் பொய் தாண்டவமாடுகின்றது.

இந்தப் பொய் பல வகையாக மனிதர்களிடம் காணப்படுகின்றது. புறவுலகில் ஒவ்வொரு மனிதர்களும் தங்களை உயர்த்திக் காட்டுவதற்கும், முதலாளி வர்க்கத்தினர் பெரும் இலாபம் சம்பாதிப்பதற்கும், அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றுவதற்கும், இயற்கையின் ஒழுங்கமைப்பில் வாழாதவர்கள் தங்கள் தவறுகளை மறைப்பதற்கும் என இந்தப் பொய்யின் தொடர்ச்சி பலவகைகளிலும் நீள்கின்றது.

குறிப்பாக இன்றைய காலகட்டத்தில் வாழும் அதிகளவான குடும்பங்களில் கணவனும், மனைவியும் சிவனும் சக்தியுமென ஒன்று கூடி வாழாது இரு துருவங்களாக மாறி, நிரந்தரப் பிரிவை நோக்கி பயணிக்கின்றார்கள். இதற்குக் காரணம் பிரிவினையை ஒவ்வொரு குடும்பங்களிலும் பொய்யென்ற கலகமே எப்போதும் முதன்மை வகிக்கின்றது. இதனால் நம்பிக்கை படிப்படியாகக் குறைவடைந்து அந்தக் குடும்பங்களில் அன்பும், வணைப்பும் இல்லாது அமைதி சீர்குலைந்து போகின்றது. இதுவே அவர்களின் நிரந்தர பிரிவினைக்கும், அவர்களின் குழந்தைகளின் எதிர்கால அழிவுக்கும் வழி வகுக்கின்றது.

பொய்யின் பிறப்பிடம் கட்டுப்பாடும் ஒழுங்கமைப்பும் இல்லாத குடும்பங்களே ஆகும். அனைத்து நற்பண்புகளையும் ஒவ்வொருவருக்கும் கற்றுத் தருவது குடும்பமே. புனிதமான ஒழுக்கத்தைக் கொண்ட ஒரு குடும்பத்தைவிட சிறந்த பல்கலைக் கழகம் இந்த உலகில் எங்குமே இல்லை எனலாம். ஆகவே குடும்பம் ஒன்றே மெய்ப்பொருள் தன்மை வாய்ந்தது. அதன்படி ஒழுகி வாழ்வதே இனி வரும் சந்ததியினருக்கு ஒவ்வொரு குடும்பங்களும் செய்யும் மேலான கடமையாகும்.

சிவனின் அடி முடி தேடிய புராணக் கதையில் சிவனின் முடியைத் தேடிய பிரம்மா சிவனின் சிரசில் சூட்டப்பட்டிருக்கும் தாழம்பூவைக் கண்டுவிட்டதால்தான் முடியைக் கண்டு விட்டதாக சிவனிடமும் விஷ்ணுவிடமும் பொய்யுரைத்தார். தனக்குச் சார்பாக சிவனின் சிரசில் இருக்கும் தாழம் பூவையும் பொய்ச் சாட்சியாக்கினார். தாழம் பூவும் பிரம்மாவுக்காக பொய்யுரைத்தது.

கடைசியில் பொய் பேசிய குற்றத்துக்காகப் பிரம்மா பக்தர்களால் வணங்கப்படாதவாறு தனக்கான தனி ஆலயத்தை இழந்தார். தாழம் பூ சிவபூஜையில் இருந்து நிரந்தரமாய் அகற்றப்பட்டது. உண்மையை ஒத்துக் கொண்ட விஷ்ணு உயர்த்தப்பட்டார். கடவுள் கூட பொய்க்காகத் தண்டிக்கப்பட்டார் என்பதற்கு இதைவிட சிறந்த உதாரணம் உலகில் எங்கும் இல்லை. உண்மையே மனிதனின் சுயமாகும். அதனால் பண்புள்ள மனித குணநலன்களை மனிதன் கைவிடுவது ஒருபோதும் மேலான செயலாகாது. பிரம்மாவாகிய கடவுளே தண்டிக்கப்படும்போது சாமானிய மனிதர்களாகிய நாம் பொய்யான பாவ செயல்களிலிருந்து எப்போதும் தப்ப முடியாது. முதலில் உலகின் தன்மையை உணர்வோம். பின் எம் இயல்டை உணர்வோம். அதன் பின் உண்மையில் வாழ்ந்து பொய்யை துறப்போம்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 391

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ✿ | 4 | 5 | 6 |
| | ✿ | 7 | | | | | |
| 8 | 9 | | | ✿ | 10 | | ✿ |
| 11 | | | ✿ | 12 | | ✿ | 13 |
| ✿ | | ✿ | 14 | | ✿ | 15 | |
| 16 | | 17 | | ✿ | 18 | | |
| | ✿ | 19 | | 20 | | ✿ | |
| 21 | | | ✿ | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:...........................................
பூரணமான தபால் விலாசம்:
.......................................
.......................................
கையொப்பம்:...........................................

**இடமிருந்து வலம்**

1. உழைத்துப் பெறு
2. உடல் சோர்வால் வருவது
7. செல்வந்தன்
8. பத்துப்பாடல்களைக் கொண்டது.
10. தங்களது
11. மேன்மையானது
12. நெஞ்சுப் பகுதி
14. இது ஓய்வதில்லை
15. மத்தி
16. கோவில்களில் அமைக்கப்படும் உயர்ந்த கட்டடம்
18. நஞ்சு
19. சாப்பிடும் உணவு உடலில் சேர்வது இதன் மூலம்
21. நடுப்புள்ளி
22. சேதமுற்றபின் எஞ்சுவது

**மேலிருந்து கீழ்**

1. கணவன்-மனைவி
2. பாதிப்பானது
3. நாள்
4. நிலுவை அளவையில் குறிப்பிட்டதொரு எடை
5. நூறு ஓட்டங்கள் எடுத்த கிரிக்கெட் வீரர் இதை எடுத்தாகக் குறிப்பிடுவர்
6. சாப்பிடு
9. சாவி
12. பூக்களால் தொடுக்கப்படுவது
13. தாய்-தகப்பன்-பிள்ளைகள் சேர்ந்த குழுமம்
14. சமையலறைக் கருவியொன்று
15. அசைந்து செல்லுமாறு பணித்தல்
16. தற்கால முக்கிய உணவுக்குப் பயன்படுத்துவது
17. உணவுக்குப்பின்னர் தனித்தும் பருகலாம்
18. தங்குமிடம்
20. ஈரலிப்பான இடத்தில் வளரும் தாவர இனம்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 389 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1)இதிகாசம் (5)அவா (7)யன்னல் (8)பகல் (9)கலியாணம் (11)புரம் (13)சம்பாதி (15)தவி (16)பானை (17)வரி (18)கட (19)அம்பு (20)அலம்பல் (22)குருவி (23)திலகம்

**மேலிருந்து கீழ்**
(1)இயம்புதல் (2)தின் (3)கானகம் (4)சல்லி (5)அகம்பாவம் (6)வால் (8)பணம் (10)யாசனை (12)ரவி (14)திரிபுரம் (16)பாடம் (18)கலவி (19)அல்ல (20)அரு (21)பதி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 389 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
எஸ்.ஏ.வி. பாலசுப்பிரமணியம்,
இல 11/5 சைவப்பாடசாலை ஒழுங்கை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
தே.மோகேந்தர்,
இல 64, அனிஞ்சியன் குளம்,
யோகபுரம்.

**3 ஆம் பரிசு**
ப.சந்திரஜித்,
பிராமண தெரு, தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

**4 ஆம் பரிசு**
சி.பராந்தகன்,
இல.51, கோவில் வீதி,
குருமன்காடு, வவுனியா.

**5 ஆம் பரிசு**
சி.நளினி,
இல. 24, திருமகள் வீதி, நெல்லியடி.

**பாராட்டுப் பெறுவோர்**

இ.இராஜேஸ்வரி
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

யோ.யோ. யோகராசா,
வல்லை வீதி, தொட்டிலடி,
சங்கானை.

து.அபிராமி,
இல 515/5 கொழும்புத்துறை கிழக்கு,
யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி
இல.391
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிகேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(28.10.2015 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.391 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 01.11.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி 389 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடாளுமன்றத்தில் கலப்பு நீதிமன்றம்

சந்திரசேகர ஆசாத்

கடந்த வாரம் கலப்பு நீதிமன்றம் தொடர்பான ஒரு விவாதம் நடத்தப்பட வேண்டும் எனக் கோரி சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழப்பங்களை ஏற்படுத்திய காரணத்தால் சபை சிறிது நேரம் ஒத்தி வைக்கப்படவேண்டிய நிலை ஏற்பட்டது. வழமைபோல் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்களான விமல் வீரவன்ச, தினேஸ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார உட்பட்ட சிலரே இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

ஏற்கனவே விமல் வீரவன்ச, தினேஸ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, உதயன்கம்பன்பில, டியூகுணசேகர, திஸ்ஸவிதாரண ஆகியோர் நாடாளுமன்றில் எதிர்க்கட்சிக் கூட்டணியாக இயங்கப்போகிறார்கள் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமக்கே உரியது எனவும் கூறி வருகின்றனர். எதிர்க்கட்சித் தலைவராகக் கூட ஒரு தமிழர் இருப்பதை அவர்களால் சகிக்க முடியவில்லை. அது அவர்களின் இனவாதச் சிந்தனைப் போக்கின் வெளிப்பாடாகும்.

**கலப்பு நீதிமன்றம்**

அதன் தொடர்ச்சியாகவே இன ஒடுக்குமுறையின் இன்னொரு முனைப்பாகக் கலப்பு நீதிமன்றத்தைக் கையில் எடுத்துள்ளனர். இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பாக அமெரிக்காவால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கலப்பு நீதிமன்றம் என்ற வார்த்தை நீக்கப்பட்டு விட்டபோதும் அவர்களின் பரப்புரையில் இன்னும் அது வலுவுடனேயே நிலை கொண்டுள்ளது. அமெரிக்கத் தீர்மானத்தை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் இவர்கள் கலப்பு நீதிமன்றம் என்ற இல்லாத ஒன்றை முன்னிறுத்தி, அதற்கெதிரான போரைத் தொடுத்து, இலங்கை அரசு நாட்டையும் படையினரையும் காட்டிக் கொடுத்துவிட்டது எனப் பரப்புரை செய்து வருகின்றனர். அதேவேளையில் இலங்கை அரசோ அமெரிக்கத் தீர்மானம் மூலம் இலங்கையையும் பல முக்கிய படைத் தளபதிகளையும் சில கட்டளையிடும் பொறுப்பிலிருந்த அரசியல்வாதிகளையும் பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்றி விட்டதாகக் கூறிவருகிறது. எப்படியிருப்பினும் எதிர்வரும் 22, 23ஆம் திகதிகளில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் வேளையில் அந்த விவாதத்தை இன வெறியைக் கக்கும் ஒரு மேடையாகவும் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு எதிராகச் சிங்கள மக்களை அணிதிரட்டும் ஒரு வாய்ப்பாகவும் மகிந்த ஆதரவாளர்கள் பயன்படுத்துவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது. ஆனால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் வகையில் இல்லை என்பதுதான் முக்கியமான விடயமாகும்.

2012, 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பாகச் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தி வந்த அமெரிக்கா, இந்த முறை உள்ளகப் பொறிமுறைக்கு உட்பட்ட விசாரணையைப் பரிந்துரை செய்துள்ளது. பொதுநலவாய நீதிபதிகள் வெளிநாட்டு சட்ட வல்லுநர்கள், வழக்குத் தொடுநர்கள் ஆகியோரின் பங்களிப்புடனேயே மேற்படி விசாரணை நடைபெற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டபோதும் அது இலங்கையின் நீதிக் கட்டமைப்புக்குள்ளேயே இடம்பெறும். இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடத்தப்படும் விசாரணை மூலம் குற்றங்கள் நியாயமான முறையில் இனங்காணப்படவும் குற்றவாளிகள் இனங்காணப்படவும் சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவாகவே உள்ளன எனத் தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

பயங்கரவாதச் தடைச் சட்டம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அணுகுமுறைகள் என்பவற்றின் கீழ் நீதி நிலை நிறுத்தப்பட முடியுமா என்ற கேள்விக்குக் கடந்தகால அனுபவங்கள் பாதகமான பதிலையே தருகின்றன. எப்படியிருந்த போதிலும் உள்ளகப் பொறிமுறையின் கீழ் நடத்தப்படும் ஒரு விசாரணைக் குழுவை எப்படி ஒரு கலப்பு நீதிமன்றம் எனக் குறிப்பிட முடியும்?

ஆனால் மகிந்த ஆதரவுக் குழுவினர் இது ஒரு கலப்பு நீதிமன்றம் எனவும், இதன் விசாரணைகள் மூலம் இலங்கையின் இறைமை பாதிக்கப்பட்டு விட்டதெனவும் நாடாளுமன்றத்தில் முழங்குவார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

ஏனெனில் அவர்களுக்கு இரு நோக்கங்கள் உண்டு. ஒன்று இன ஒடுக்குமுறைச் சிந்தனைப் போக்கை சிங்கள மக்கள் மத்தியில் மழுங்கி விடாமல் பார்த்துக் கொள்வது. மற்றது அந்த இனவெறிச் சித்தாந்தத்தை மூலதனமாகக் கொண்டு தற்போதைய அரசை ஆட்சியிலிருந்து இறக்கி மீண்டும் மகிந்தவைச் சிம்மாசனம் ஏற்றுவது. இந்த அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றும் முகமாகவே அவர்களின் ஒவ்வொரு நகர்வும் மேற்கொள்ளப்படுகின்றன.

**தேவை முடிந்தது மேற்குலகிற்கு**

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மைத்திரிபால சிறிசேன பெற்ற வெற்றி, அவரது வெற்றி அல்ல இலங்கை மக்களின் வெற்றி என்பதைவிட அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகளின் வெற்றி என்றே கூறவேண்டும்.

மைத்திரிபால சிறிசேனவுக்கு ஜனாதிபதிப் பதவியும், அதிகாரமும் கிடைத்துள்ளது. மக்களுக்கு [illegible] திகார ஆட்சியிலிருந்து [illegible] கிடைத்துள்ளது. ஆனால் மேற்குலகம் பெற்ற வெற்றியோ அவற்றை விடப் பல மடங்கு வலிமை வாய்ந்ததாகும்.

இலங்கையின் அமைவிடம் காரணமாக சர்வதேசப் பார்வையில் இலங்கைக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. இலங்கையைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்கள் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் மட்டுமன்றி மத்திய கிழக்கின் ஒரு பகுதியிலும்கூட தமது இராணுவ, பொருளாதார வாய்ப்புக்களை உறுதியாக நிலைநிறுத்த முடியும்.

இந்த நிலையில் மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தின்போது இலங்கை மிக வேகமாகவும், ஆழமாகவும் சீனசார்பு நிலையை நோக்கி நகர்த்தப்பட்டது. சீனாவின் பட்டுப்பாதைத் திட்டத்துக்கு வசதியாக அம்பாந்தோட்டை துறைமுகம் அமைக்கப்பட்டது. கொழும்பில் சீனாவால் ஒரு துறைமுக நகரம் ஆரம்பிக்கும் வேலையும் ஆரம்பிக்கப்பட்டது. அது மட்டுமன்றி கொழும்புத்துறைமுகத்தின் இறங்குதுறை ஒன்றும் சீன நிறுவனத்துக்குக் குத்தகையாகக் கொடுக்கப்பட்டது. மேலும் விமான நிலையம், நெடுஞ்சாலைகள் எனப் பல முனைகளிலும் சீனாவின் ஆதிக்கம் மேலோங்கிய நிலையே காணப்பட்டது.

மேற்குலகுடன் முக்கியமாக அமெரிக்காவுடன் கடும் பொருளாதாரப் போட்டியாளனாக விளங்கும் சீனாவுக்கு இலங்கை அரசு வழங்கிய வாய்ப்புக்களை மேற்குலகம் ஏற்கத் தயாராயில்லை. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகளின் மறைமுக எச்சரிக்கைகளையும் மகிந்த அரசு பொருட்படுத்தவில்லை.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கையை வழிக்குக் கொண்டுவர மேற்கொண்ட முயற்சிகளிலும் வெற்றி பெற முடியவில்லை. அவை தொடர்பான ஐ.நா. தீர்மானங்களையும் மகிந்த அரசு அலட்சியம் செய்தே வந்தது.

அடுத்த கட்டமாக ஐரோப்பிய ஒன்றியம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை அடிப்படையாகக் கொண்டு [illegible]வில் ஜி.எஸ்.பி. சலுகையை நிறுத்தியது. இந்த இரு நடவடிக்கைகளும் இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியபோதும் மகிந்த அரசு [illegible] கொள்கையை [illegible]

ஆனால், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்ற பின்பு மேற்குலகின் செல்லப்பிள்ளையான ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார். ஒரு கலப்பு அரசு அமைக்கப்பட்டு விட்டது. இலங்கையைச் சீனாவின் கட்டுக்குள் கொண்டுவர மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் வேகமாக மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகின்றன. அதாவது அமெரிக்கா உட்பட மேற்குலகம் எதை விரும்பு கிறதோ அதை நிறைவேற்றக் கூடிய ஒரு களநிலை உருவாக் கப்பட்டுவிட்டது. எனவே மேற்குலகைப் பொறுத்தவரையில் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய தேவையின் பெறுமதி வெகுவாகக் குறை வடைந்து விட்டது. எனவே இலங் கையின் உள்ளகப் பொறிமுறை யூடாக நடத்தப்படும் விசாரணை களில் வெளிநாட்டு நீதித்துறை நிபுணர்களின் பங்களிப்பு காத்திரமாக இருக்கும் என எதிர்பார்க்க முடியாது.

ஏற்கனவே மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் சிலரது பெயர்கள் குறிப்பிடப் பட்டு குற்றஞ்சாட்டப்பட்டு இருந்ததாகவும் இலங்கை அரசின் கோரிக்கையின்பேரில் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக் கப்பட்ட போது அவை நீக்கப்பட்டு விட்டன என்றும் தகவல் வெளிவந்தது. அதுமட்டுமன்றி அமெரிக்கத் தீர்மானத்தில் முன் வைக் கப்பட்ட 28 அம்சங்களில் இலங்கையின் வேண்டுகோளின்படி 8 அம்சங்கள் நீக் கப்பட்டன. அத்துடன் கலப்பு நீதிமன்றம் என்ற வார்த்தையும் அகற்றப்பட்டுவிட்டது.

அதாவது ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை இலங்கை அரசுக்கும் சாதகமான மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு அமெரிக்கத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

**சர்வதேசப் பங்களிப்பு நீர்த்துப்போகும்**

இப்படியான நிலையிலும் கலப்பு நீதிமன்ற விவகாரம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. மகிந்த குழுவினர் விசாரணைகளில் வெளிநாட்டு நிபுணர்களின் பங்களிப்பு இலங்கையின் இறைமைக்கும் ஆபத்து என ஒப்பாரி வைக்கப் போகின்றனர். அரச தரப்போ வெளிநாட்டு நிபுணர்கள் வெறும் பார்வையாளர்கள் மட்டுமே என்ற தோரணையில் பதிலளிக்கும். அது நாடாளுமன்றப் பதிவேட்டில் பதியப்படும். இதன் காரணமாக இயல்பாகவே வெளிநாட்டு நிபுணர்களின் பங்களிப்பு செல்லாக் காசாக்கப்படும். அந்த விடயத்தில் மகிந்த ஆதரவாளர்கள் வெற்றி பெறுவார்கள் என்றே நம்பவேண்டியுள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளே போராட்டங்களாக வெடித்தன என்பதையும் அந்தப் போராட்டங்கள் ஆயுத முனையில் ஒடுக்கப்பட்டபோதே ஆயு தப்போராட்டமாக வெடித்தது என்பதையும் அந்த ஆயுதப் போராட் டமே உள்நாட்டுப் போராக மாற்றம் பெற்றது என்பதையும் சர்வதேசமோ இலங்கை அரசோ ஏற்றுக் கொள்ளும் போது மட்டும்தான் நியாயமான விசாரணை நடத்தப்பட்டு நீதியை நிலைநாட்ட முடியும்.

விடுதலைப் போராளிகளின் நடவடிக்கைகள் பயங்கரவாதம் எனவும் அரச பயங்கரவா[illegible] எதிரான ஒரு [illegible] நடத்தியது எனவும் ஒரு பார்வை இருக்கும் வரை உண்மையைக் கண்டறியவோ நீதியை நிலைநாட்டவோ முடியாது.

உள்ளகப் பொறிமுறை மூலம் நடத்தப்படும் விசாரணைகளையும் தீர்ப்புகளையும் ஒரு சட்டத்[illegible] நாடாளுமன்றத்தில் நீர்த்துப்போக [illegible]த்து விட முடியும். இல்லாத ஒரு கலப்பு நீதிமன்றம் பற்றி நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துவதுவே [illegible] நீதிமன்ற[illegible] பலவீனமாக்கும் கைங்கரியத்தை [illegible] மேற்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறியப்படாத வேர் டேவிட் ஐயா

ஔண்யன்

டேவிட் ஐயாவின் வாழ்வின் பெரும்பகுதி அலைதலிலேயே தொலைந்து போனது. அவர் ஆயுதம் ஏந்திப் போராடியவர் அல்லர். துப்பாக்கியை அவர் தூக்கக் கூட இல்லை. என்றாலும் அவர் போராளி. இந்திய அரசைப் பொறுத்தவரை '93 வயதிலும் மிக ஆபத்தான பயங்கரவாதி'. அப்படிப் பயங்கரமான மனிதராக அவர் இந்திய அதிகார பீடத்தால் பிரகடனப்படுத்தப் படுமளவுக்கு என்னதான் செய்தார் டேவிட் ஐயா?

வேறொன்றுமில்லை. காந்திய வழியில் நின்றதும், வெலிக்கடைச் சிறைப் படுகொலைக்கு கண்கண்ட சாட்சியாக இருந்ததும், ஆயுதமேந்திப் போராடியவர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததும் தான் டேவிட் ஐயாவை இந்திய அரசு 'மிக ஆபத்தானவர்கள்' பட்டியலில் இடுவதற்குக் காரணம்.

ஊர்காவற்றுறை கரம்பனில் பிறந்த டேவிட் ஐயா, 1953 இல் அவுஸ்திரேலிய மெல்பேர்ன் பல்கலைக் கழகத்தில் கட்டடவியல் தொடர்பான பட்டப்படிப்பை முடித்தவர். பின்னர் லண்டனிலும் நைஜீரியாவிலும் நகரத் திட்டமிடல் கற்கையைப் பூர்த்தி செய்து, உலகின் பல பாகங்களுக்கும் கட்டடவியல் தொடர்பான தேடலை மேற்கொண்டார். கென்யாவின் மொம்பாசா என்ற நகரத்தை வடிவமைக்க டேவிட் ஐயாவும் முக்கிய பங்கு வகித்தார்.


இத்தனையும் செய்துவிட்டு 50 வயதைத் தாண்டிய நிலையில் இலங்கையில் காந்தியம் தொடர்பான சிந்தனைகளைப் பரப்பும் வகையிலான செயற்திட்டங்களை அவர் முன்னெடுத்தார். இந்த நிலையில் தமிழர்களின் விடிவுக்காக ஆயுதமேந்திய போராளிகளின் மீது டேவிட் ஐயாவுக்குக் கரிசனை இருந்தது. அவரின் நண்பர்களில் ஒருவரான சந்ததியார் புளொட் அமைப்பில் சேர்ந்து இயங்க டேவிட் ஐயாவை அழைத்தார். ஆயுதம் ஏந்தாத போராளியாக , நிர்வாக வேலைகளை மட்டும் செய்ய டேவிட் ஐயா ஒப்புக்கொண்டார். காந்திய வாதியான டேவிட் ஐயாவுக்கு ஆயுதங்கள் மூலம் தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கை இருக்கவில்லை.அதேநேரம் போராளிகளின் தியாகங்கள் வீண் போகக் கூடாது என்ற ஏக்கமும் அவரிடம் இருந்தது.

இந்த நிலையில் தான் அவர் கொழும்பில் பணியாற்றிக் கொண்டிருந்த போது, போராளிகள் பற்றிய தகவலைக் கொடுக்காமல் மறைத்தார் என்ற குற்றத்துக்காக இலங்கை அரசு, டேவிட் ஐயாவைக் கைது செய்து, வெலிக்கடைச் சிறையில் அடைத்தது. அந்தவேளையில் தான் உலகின் மிக மோசமான படுகொலைகளில் ஒன்றான வெலிக்கடைச் சிறைப் படுகொலை நிகழ்ந்தேறியது. குட்டிமணி, தங்கத்துரை உள்ளிட்ட போராளிகள் சிறைக்குள் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள். டேவிட் ஐயாவும் கொலை செய்யப்படும் நிலை வரை சென்று, கடைசி நிமிடத்தில் உயிர் தப்பினார். பின்னர் அங்கிருந்து மட்டக்களப்புச் சிறைக்கு அவர் மாற்றப்பட்டார். மட்டக்களப்பில் போராளிக்குழுக்களால் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட சிறையுடைப்பில் தப்பியவர்களில் டேவிட் ஐயாவும் ஒருவர். அதன் பின்னர் வன்னிக்காடுகளில் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டு, இலங்கையை விட்டு இந்தியாவுக்குச் சென்றார்.அங்கே புளொட் அமைப்பின் நிர்வாக வேலைகளைக் கவனித்தார். ஆயினும் எதையும் தனித்து முடிவெடுக்கும் புளொட் தலைவர் உமாமகேஸ்வரனின் போக்கும், ஆயுதங்களே எதையும் தீர்மானிக்கும் என்ற அவரின் நம்பிக்கையும் டேவிட் ஐயாவுக்கு வெறுப்பை உண்டாக்க ஒரு நாள் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு, புளொட் அமைப்பை விட்டு விலகினார். ஆயினும் அதனால் சீற்றமடைந்த புளொட் அமைப்பினர் அவரைக் கடத்தினர்.நல்லவேளையாக அவர் மீண்டும் உயிருடன் திரும்பி வந்தார்.

அதன் பின்னர் ஆயுதக் குழுக்களில் இருந்து தப்பி வருவோர், இலங்கையில் இருந்து அகதிகளாக வருவோர் என எல்லோருக்கு மிகக் குறைந்த விலையில், கடனடிப்படையில் உணவுப்பார்சல்களை வழங்கத் தொடங்கினார்,. 1985க்கு பின்னர் தமிழகத்துக்கு தப்பிப்போன போராளிகளுக்கும் , அகதிகளுக்கும் டேவிட் ஐயாதான் அட்சய பாத்திரம் . கடனுக்கு என்று உணவைக் கொடுத்தாலும் அவர் எவரிடமும் காசைத் தா என்று கறாராக கேட்டதில்லை. தந்தால் வாங்கிக் கொள்வார். இல்லாவிட்டாலும் தொடர்ந்து உணவை வழங்கிக் கொண்டே இருப்பார்.

இப்படிப்பட்டவரைத் தான் இந்திய அரசு 'மிக ஆபத்தானவர்கள்' என்ற பட்டியலுக்குள் உள்ளடக்கி, அவரைத் தொடர்ச்சியாகக் கண்காணித்து வந்தது.

புளொட் அமைப்பில் இருந்து விலகி, பசித்தோரின் காமதேனுவாக டேவிட் ஐயா மாறிய பின்னர் அவருக்கு பிடித்த ஒரே போராளித் தலைவர் பிரபாகரன் தான். புலிகள் எப்போதுமே பிறத்தியாரின் நெருக்குதலுக்கு அஞ்சாமல் சுயஇயக்கமாக செயற்பட்டார்கள்.



இந்தியாவின் சொல்வழி கேட்டோ, அல்லது வேறு தலைவர்களின் எடுப்பார் கைப் பிள்ளையாகவோ இருக்கவில்லை.என்னைக் கேட்டால் பிரபாகரனின் அரசியலில் சில முரண்பாடுகள் இருந்தாலும், அவரை நான் சிறந்த தலைவராகப் பார்க்கிறேன்.

அன்றைக்கிருந்த போராளிக்குழுக்களில் அவர் மட்டும்தான் தனித் தமிழ் ஈழத்துக்காக எத்தகைய சமரசங்களையும் செய்து கொள்ளவில்லை என்று டேவிட் ஐயா புலிகளைப் பற்றிச் சொல்லியுள்ளார்.

முதுமை அவரை முழுதாக ஆட்கொள்ளும் வரை அவரின் உணவு வழங்கல் தொடர்ந்தது. வருமானத்துக்கு பிள்ளைகளுக்கு ஆங்கில வகுப்புகளும் எடுத்தார். கடைசிக் கட்டத்தில் மிகுந்த பிரயத்தனங்களின் மத்தியில் இலங்கைக்குத் திரும்பிய டேவிட் ஐயா, கிளிநொச்சியில் உள்ள முதியோர் இல்லமொன்றில் தங்கியிருந்தார். தனது 93 ஆவது வயதில் அவர் காஸச் சிறையில் இருந்து விடுதலையாகிப் போனார்.

> “ இந்தியாவின் சொல்வழி கேட்டோ, அல்லது வேறு தலைவர்களின் எடுப்பார் கைப் பிள்ளையாகவோ இருக்கவில்லை.என்னைக் கேட்டால் பிரபாகரனின் அரசியலில் சில முரண்பாடுகள் இருந்தாலும், அவரை நான் சிறந்த தலைவராகப் பார்க்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் லஞ்சம்

## குற்றச்சாட்டு மீது முழுமையான விசாரணை அவசியம்

■ ரைசா விக்கிரமதுங்க

வடக்கு – கிழக்கிற்குச் செல்பவர்களால் அந்த வீடுகளை அவதானிக்கமுடியும். தோட்டங்கள், வயல்களுக்கு நடுவிலும், புழுதிபடிந்த வீதிகளுக்கிடையிலும் பளிச்சிடும் நிறங்களில் புதிய வீடுகளை அவதானிக்கலாம். அந்த வீடுகளின் கூரைகளில் காணப்படும் வழங்கியவர்களின் பெயர்கள் வழமையாக நாங்கள் பார்க்காதவைகள். அவை ஐ.நா. அல்லது செஞ்சிலுவை சங்கம். இந்த வீடுகள் இந்திய வீடமைப்பு திட்டத்தின் ஒரு பகுதியாகக் கட்டப்பட்டவை. 2010இல் முன்னாள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கை சேர்ந்த இடம்பெயர்ந்த மக்களுக்கு 50,000 வீடுகளை உருவாக்கத் திட்டமிடப்பட்டது.

குறிப்பிட்ட திட்டம் தற்போது இரண்டாவது கட்டத்தில் உள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் 2014இல் 16,000 வீடுகள் கட்டப்பட்டதாக இந்தியத் தூதரகம் தெரிவிக்கின்றது.

இந்திய உதவித் திட்டத்துடனான இந்த வீடுகளை அமைக்கும் பணிக்கு நான்கு முகவர் அமைப்புகள் தெரிவுசெய்யப்பட்டன, யு.என்.ஹபிடாட், இலங்கை செஞ்சிலுவை சங்கத்துடன் இணைந்து சர்வதேச செஞ்சிலுவை சங்கம்,தேசிய வீடமைப்பு அதிகார சபை மற்றும் ஹபிடாட் கியுமானிட்டி ஆகியவை வீடமைக்கும் பணிகளைப் பொறுப்பெடுத்துக் கொண்டன. இதற்கு முன்னர் இந்தத் திட்டத்தின் பரீட்சார்த்தக் கட்டம் இந்திய நிறுவனம் ஒன்றிடமே கொடுக்கப்பட்டது. ஆனால் அந்த நிறுவனத்தின் இலாபம் மற்றும் அது வேலையைப் பகிர்ந்து கொடுத்த நிறுவனங்களின் இலாபம் எல்லாவற்றையும் கழித்துக் கொண்டு, பார்த்தால் பயனாளிகளுக்குக் கிடைத்த வீட்டின் பெறுமதி மிகச் சொற்பம் என்பதால் அது பின்னர் கைவிடப்பட்டது.அதன் பின்னரே இந்த நான்கு நிறுவனங்களிடமும் அந்தப் பணி ஒப்படைக்கப்பட்டது.

தற்போது இந்தத் திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் முழு வீச்சில் இடம்பெற்று வருகின்றது. அங்குள்ள முழங்காவிலில் வீட்டினை வழங்குவதற்காக பெண் ஒருவரிடம் செஞ்சிலுவை சங்க அதிகாரியொருவர் பாலியல் லஞ்சம் கோரினார் என்ற குற்றச்சாட்டு வெளியானதைத் தொடர்ந்து வீடமைப்பு திட்டம் விசாரணைக்குள்ளாகியுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தொடர்பாடல்கள் மற்றும் மனிதாபிமான இராஜதந்திரத்திற்கான மூத்த முகாமையாளர் மகியாஸ் ஜொனே, இலங்கை செஞ்சிலுவை சங்கத்தில் பணியாற்றும் தொழில்நுட்ப அதிகாரி தொடர்பாக முறைப்பாடு கிடைத்துள்ளதை உறுதிசெய்தார். குறிப்பிட்ட தொழில்நுட்ப அதிகாரி பாதிக்கப்பட்ட மக்களுக்கும், மனிதாபிமான அமைப்பிற்கும் இடையில் இணைப்பு அதிகாரியாக பணியாற்றுபவர். வீடமைப்புத் திட்டத்திற்காகத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு அவர்களுக்கான நிதியைத் தவணைமுறையில் வழங்குவது இத்தகைய அதிகாரிகளின் பணி. அத்திபாரங்கள், சுவர்கள் போன்றவற்றினை ஏற்படுத்துவதற்காக இந்த நிதி வழங்கப்படும்.

முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கை செஞ்சிலுவை சங்கம் 1000 முதல் 1200 வீடுகள் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

"முறைப்பாடு கிடைத்தவுடன் நாங்கள் விசாரணைகளை ஆரம்பித்துவிட்டோம், விசாரணைகள் இன்னமும் இடம்பெறுகின்றன. இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையானால் நாங்கள் ஒழுக்காற்று நடவடிக்கையை எடுப்போம். பொலிஸாரிடம் இந்த விடயத்தை கையளிப்போம்" என ஜொனே தெரிவித்தார், இந்திய தூதரகமும், சர்வதேச செஞ்சிலுவை சங்கமும் இந்த விவகாரம் தொடர்பாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து செயற்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முதற்கட்ட நடவடிக்கையாகக் குற்றச்சாட்டிற்கு உள்ளாகியுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர், அவருக்குப் பொறுப்பான முகாமையாளர், முறைப்பாடு செய்த பெண்மணி உட்பட இதில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் விசாரணைக்குள்ளாகியுள்ளனர்.

"நாங்கள் மிகவும் அவதானமாக இந்த விசாரணையை முன்னெடுக்கவேண்டும், இதில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் தெரிவிப்பதையும் நாங்கள் செவிமடுக்க வேண்டும்." ஜொனே இவ்வாறு தெரிவித்தார். சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளில் உண்மையுள்ளதா என்பது தெரியவரும்வரை அந்த தொழில்நுட்ப அதிகாரியின் பெயரையும் நாங்கள் பகிரங்கப்படுத்த முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான அதிகாரி விசாரணை முடிவுகள் வெளியாகும் வரை கட்டாய விடுப்பில் அனுப்பபட்டுள்ளார்.

குறிப்பிட்ட சம்பவங்கள் தொடர்பாக ஊடகங்களில் வெளியான தகவல்களில் முரண்பாடுகள் உள்ளதாகவும் செஞ்சிலுவைச் சங்க அதிகாரி தெரிவித்தார்.




"குறிப்பிட்ட பெண்மணி விதவையில்லை, இரண்டுபிள்ளைகளின் தாயான அவர் சமீபத்தில் விவாகரத்துப் பெற்றுள்ளார்" என்றார் அந்த முகாமையாளர். ஊடகங்கள் வெளியிட்ட தகவல்களில் வேறு பல முரண்பாடுகள் உள்ளன எனவும் அவர் தெரிவித்தார். நிர்வாக ரீதியிலான குறைபாடுகள் குறித்து பல முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்துள்ளன, ஆனால் இவ்வாறான முறைப்பாடு கிடைப்பது இதுவே முதற்றடவை என்றார் அவர்.

இலங்கைசெஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான செயலாளர் தம்பு சேதுபதி, பாலியல் ரீதியிலான சலுகைகளை கோரியது தொடர்பாக எழுத்து மூலமான முறைப்பாடுகள் 30 கிடைத்துள்ளதாகவும், இதில் 15 முறைப்பாடுகளை கொழும்பில் உள்ள தலைமையலு வலகத்திற்கு அவர் அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார் எனப் பத்திரிகைகள் தகவல் வெளியிட்டுள்ளன.

இது குறித்து கேள்வி எழுப்பிய வேளை – இவ்வாறான சம்பவங்கள் எவையும் இடம்பெறவில்லை என ஜோனே நிராகரித்தார். இலங்கைச் செஞ்சிலுவை சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான செயலாளரை தொடர்பு கொண்ட வேளை தனக்கு தற்போது இது குறித்து கருத்துச் சொல்வதற்கான அதிகாரம் இல்லை எனவும், அதேபோன்று கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகள் எவருக்கும் அந்த அதிகாரம் வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கில் பாலியல் துஷ்பிரயோகங்கள் என்பது எப்போதும் மிகவும் மௌனமான மொழியில் பேசப்பட்ட ஒரு விடயம். ஏப்ரல் 2012இல் நான் வடபகுதிக்குச் சென்று போரால் இடம்பெயர்ந்த திசா மற்றும் வரோஹரா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) உட்படப் பல பெண்களைச் சந்தித்தேன், 1990இல் வவுனியாவிற்கு இடம்பெயர்ந்து சென்ற அவர், போர் முடிவடைந்த பின்னரே தனது பகுதிக்குத் திரும்பியிருந்தார். ஆனால் சிறிது நாள்களில் அவரது பெற்றோர் சாவைத் தழுவினர். திசா தனியாளாக விடப்பட்டார். தனியாக வாழும் பெண் என்பதனால் அவர் எந்த வீடமைப் புத் திட்டத்துக்கும் விண்ணப்பிப்பதற்கான தகுதியை பெற வில்லை என தெரிவிக்கப்பட்டது.இதனால் அவர் நண்பர்கள். உறவினர்களுடன் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

அவ்வேளை நான் சந்தித்த பல பெண்கள் தனியாக நடப்பதற்கே தாங்கள் அச்சம் கொண்டுள்ளனர் எனத் தெரிவித்தனர். நிரந்தர வீடுகளுக்கு செல்வதற்கு முன்னர் தாங்கள் வாழ்வதற்காக அவர்கள் அமைத்த தற்காலிக தங்குமிடங்கள் அவர்களை இயற்கையிடமிருந்து பாதுகாக்கக் கூடியனவாகக் கூடக் காணப்படவில்லை. அவர்களின் பின்னால் நகர்ந்து கொண்டிருந்த ஆண்களிடமிருந்தும் அவர்களுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை.

போருக்குப் பின்னர் வடக்கு–கிழக்கில் மதுபானக் கடைகளும், கள்ளுத் தவறணைகளும் பல்கிப் பெருகியுள்ளன. மதுபாவனை அதிகரிப்பு பலசமூகப் பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைந்துள்ளது. நான் உரையாடிய பெண்கள் தென் பகுதியிலிருந்து செல்லும் வியாபாரிகளால் தாங்கள் வீதிகளில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர் என்றும் தெரிவித்தனர். [illegible] பின்னர் தவறணைகள், மதுபானக் கடைகள் இருக்கும் பகுதியால் செல்வதற்கு அஞ்சினர். தமக்கு ஏற்படும் இவ்வாறான இடர்கள் குறித்து அவர்கள் தயக்கத்துடனேயே பகிர்ந்துகொண்டனர். அவர்களுடைய பெயர்களைப் பயன்படுத்தமாட்டேன் என நான் உறுதியளித்த பின்னரே தாங்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை அவர்கள் என்னுடன் பகிர்ந்துகொண்டனர்.

வடக்கின் மகளிர் அபிவிருத்தி நிலையமும், சர்வதே நெருக்கடி குழுவும் கடந்த காலங்களில் இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்டது உட்பட பல பாலியல் முறைகேடுகள், துன்புறுத்தல் சம்பவங்கள் குறித்துச் சுட்டிக் காட்டியுள்ளன.

சமீபத்தில் வடக்கு – கிழக்கை சேர்ந்த 8 மகளிர் அமைப்புகளின் கூட்டமைப்பு பாலியல் சித்திரவதை மற்றும் வன்முறைகள் இடம்பெற்ற சகல சம்பவங்கள் குறித்தும் துரிதமாக விசாரணைகளைமேற்கொள்ளுமாறும் ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது.ஒக்ரோபர் 7ஆம் திகதி விடுத்த அறிக்கையில் இவர்கள் பல சம்பவங்கள் குறித்து சுட்டிக்காட்டியிருந்தனர். குறிப்பாக 2001ஆம் ஆண்டு மன்னாரில் இரு பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளானதையும், மூன்று பொலிஸார், ஆறு கடற்படையினர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதையும் இவர்கள் நினைவுபடுத்தியுள்ளனர்.

மன்னார் சம்பவம் குறித்து விசாரணை செய்வதற்காக விசேடஆணைக்குழு அமைக்கப்பட்டபோதிலும், இதுவரை இதற்குத் தீர்வு கிட்டவில்லை. இதில் பாதிக்கப்பட்ட ஒருவர் தன்னுடைய பாதுகாப்பிற்காக நாட்டை விட்டுத் தப்பியோடவேண்டிய நிலைக்கு உள்ளானார்.

இந்தச் சம்பவங்களைப் பகிரங்கப்படுத்த முனைபவர்கள் தொடர்ச்சியாக எதிர்கொள்ளும் துன்புறுத்தல்களும், அச்சுறுத்தல்களும் குறிப்பிடத்தக்கவை.

இந்த வகைக் குற்றங்களைப் படையினர் மாத்திரம் மேற்கொள்ளவில்லை, அரச அதிகாரிகளும், அரசியல்வாதிகளும், அதிகாரத்தில் உள்ளவர்களும்கூட மேற்கொள்கின்றனர். இது அரசகட்டமைப்புகளில் காணப்படும் தண்டனையிலிருந்து விடுவித்தலை புலப்படுத்துகின்றது. இவ்வாறான சம்பவங்களில் பொலிஸார் முறைப்பாடுகளை அனேகமாக ஏற்றுக்கொள்வதில்லை. கைதுசெய்வதற்கும், விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் முன்வருவதில்லை. இதனால் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நீண்டு தொடர்கின்றன. இதன் காரணமாக பெண்களுக்கான நீதி என்பது எப்போதும் தாமதிக்கப்பட்டதாகவும் மறுக்கப்பட்டதாகவும் மாத்திரமன்றி மறைக்கப்பட்டதாகவும் காணப்படுகின்றது என வடக்கு கிழக்கு மகளிர் அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன.

குற்றங்கள் நிரூபிக்கப்படும் வரை ஒருவர் அப்பாவி என்பது உண்மையானதாக இருக்கலாம். எனினும் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பாரதூரமானவை. மூடிமறைக்கப்பட அனுமதிக்க முடியாதவை. அவ்வாறு மூடிமறைப்பதற்கு அனுமதிக்கவும்கூடாதவை. பாலியல் முறைகேடுகள் குறித்துப் பேசுவதானால் தங்களுக்கு களங்கம் ஏற்படும் என்ற எண்ணம் குறிப்பாக வடகிழக்கில் காணப்படுவதை கருத்தில்கொள்ளும்போது.

பாலியல் துன்புறுத்தல்கள் குறித்த உண்மைகளைத் தெரிவிப்பதற்கு முன்வருபவர்கள் அச்சுறுத்தல்களையும், மிரட்டல்களையும் எதிர்கொள்கின்றனர். அதேவேளை இந்தத் தடைகளையும் மீறி நீதிகோருபவர்கள் தங்கள் வழக்குகள் நீதிமன்றங்களில் முடங்கிகிடப்பதைக் காண்கின்றனர்.

செஞ்சிலுவை சங்க அதிகாரி மீது முன்வைக்கப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டு முழுமையான விசாரணையை எதிர்கொள்ளுமா? அல்லது மறக்கப்பட்டு வெறுமனே தலைப்பு செய்திகளில் ஒன்றாக மாறிவிடுமா?

இதனைவிட முக்கியமானது கிளிநொச்சி அதிகாரி கொழும்பிற்கு அனுப்பிய பல முறைப்பாடுகள் குறித்தும் விசாரணைகள் இடம்பெறுமா அல்லது அவையும் மூடி மறைக்கப்படுமா என்பது. செஞ்சிலுவைச் சங்கம் பதில் சொல்லவேண்டும்.

**தமிழில்: ரஜீபன். நன்றி: கிரவுண்ட் வியூ இணையத் தளம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எப்பவுமே டோனிதான்!

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ரி-20 தொடரை இழந்ததும் முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் தோல்வியடைந்ததும்தான் தாமதம் இந்திய அணியின் ஒருநாள் ஆட்டங்களுக்கான, ரி-20 ஆட்டங்களுக்கான தலைவராகதொடர்ந்தும்நீடித்துவரும் டோனி மீது விமர்சனங்கள் வந்து குவிந்தன. சிலர் டோனி இந்த வருடத்துடன் ஓய்வுபெறவேண்டும் என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்கள். இன்னும் சிலர் தலைமைத்துவத்தில் இருந்து விலக வேண்டும் அதே நேரம் அணியை விட்டுச் செல்லக்கூடாது என்றனர். வேறுசிலர் ரி-20 தொடரில் தலைமைத்துவத்தை உதறவேண்டும் என்றனர். இவ்வாறன விமர்சகர்களுக்கு தனது செயலின் மூலம் பதில் சொல்லியுள்ளார் டோனி.

### தேவையற்ற விமர்சனங்கள்

டோனிமீது விமர்சனங்களை வைத்தவர்கள் அவரின் பெறுபேறுகளைப் பற்றிச்சிந்திக்காமல்கண்மூடித்தனமாக ஏதோ ஓர் எரிச்சல் குணத்தில் முன்வைத்துள்ளார்கள் என்பதனை இந்திய அணிதோல்வியடைந்தஆட்டங்களில் டோனியின் பெறுபேறுகளை பற்றி அலசுவதன் மூலம் துல்லியமாகத் தெரிந்து கொள்ளலாம். இந்தியா தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையே மூன்றுரி-20ஆட்டங்கள்நடைபெறவேண்டிய இடத்தில் 2 ஆட்டங்களே நடைபெற்றன. மூன்றாவது ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டது. எனவே முதல்இருஆட்டங்களில்ஒன்றிலாவது இந்தியா வெற்றிபெற்றிருந்தால் தொடர் 1:1 என்று சமநிலையிலேயே முடிந்திருக்கும். முதலாவது ஆட்டத்தில் 200 ஓட்டங்களை இலக்காக நிர்ணயித்த இந்தியா தென்னாபிரிக்காவின் துல்லியமான விரட்டலில் வீழ்ந்தது. இந்தியாவின் இந்தத் தோல்விக்கு தென்னாபிரிக்க அணியின் போராட்ட குணம் ஒரு காரணம் என்று சொல்லிக் கொண்டாலும் நடுவரின் தவறான தீர்ப்புக்களும் ஒருகாரணமாகஅமைந்துவிட்டன. 17ஆவது பந்துப்பரிமாற்றத்தில் அக்சர் பட்டேலின் பந்தில் எல்.பி.டபிள்யு ஆனார் அசத்தலாக ஆடிக்கொண்டிருந்த டுமினி. அந்த ஆட்டமிழப்புக்கான இந்திய அணியின் கோரிக்கை நூறு வீதம் சரியானது. ஆனால் நடுவராக இருந்த குல்கர்ணி டுமினியை தொடர்ந்தும் துடுப்பெடுத்தாட அனுமதித்தார். டுமினியின் ஆட்டமிழப்பு கொடுக்கப்பட்டிருந்தால் இந்தியாவுக்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருந்திருக்கும். எனவே இந்த ஆட்டத்தில் இந்தியா வென்றிருந்தால் இரண்டாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வென்றிருந்தாலும் தொடர் 1:1 என்று சமநிலையில் முடிந்திருக்கும்.

முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணியின் தோல்விக்கும் டோனி மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. 303 என்ற இமாலய இலக்கைவிரட்டிச் சென்ற இந்திய அணி ரோகித் சர்மாவின் 150 ஓட்டங்கள் கைகொடுத்தும் வெறும் 5 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இந்த ஆட்டத்தில் டோனி 30 பந்துகளில் 31 ஓட்டங்களைக் குவித்திருந்தார். இறுதிவரை களத்தில் நின்ற காரணத்துக்காக அவரை எந்த அடிப்படையில் குறைசொல்லமுடியும். 82 பந்துகளில் 60 ஓட்டங்களை (22 பந்துகள் வீணடிப்பு) எடுத்திருந்த ரகானேயும் 300 ஓட்டங்களுக்கு மேல் விட்டுக்கொடுத்த இந்தியப் பந்துவிச்சாளர்களுமே இந்தத் தோல்விக்கு பொறுப்பேற்க வேண்டும்.

### கோக்லியின் தெரிவு எதற்காக?

டோனிமீது விமர்சனங்களை அள்ளி விளாசிய விமர்சனப் பெருந்தகைகளின் பிரதான தெரிவாக இருந்தவர் கோக்லி. இவர்கள் மட்டில் எந்த அடிப்படையில் டோனியை விட கோக்லி சிறந்தவர்என்பதுதான்புரியாதபுதிராக உள்ளது. இந்திய அணி தோல்வியடைந்த ஆட்டங்களில் கோக்லியின் ஓட்ட எண்ணிக்கை 11, 18 என்றவாறாக மிகக் குறைந்த மட்டத்திலேயே இருந்தது. இவ்வாறிருக்க டோனியை பதவி விலகவேண்டும் என்றும் கோக்லி தலைவராக வேண்டும் என்றும் குறிப்பிட்டது எந்த அடிப்படையில் நியாயமான கருத்து. டோனியின் பெறுபேறுகள்சரியில்லைஎன்பதன்படி பார்க்கின்ற போதிலும் டோனிக்கு அடுத்த கட்டத் தலைமைத்துவ தெரிவாக ரோகித் சர்மா அல்லது ரகானே அல்லவா இருக்க வேண்டும்.

### செயல் வீரன் டோனி

பொதுவாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்ற வேளையில் மௌனம் காத்து தனது செயலால் பதிலளித்து விட்டுச் செல்லும் டோனி தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரிலும் தான் ஒரு செயல் வீரன் என்பதை மீண்டும் நிரூபித்துள்ளார். இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் ஒரு கட்டத்தில் இந்தியா 124-6 என்ற நிலைமையில் இருந்தது. எப்படிப் பார்த்தாலும் 200 ஓட்டங்களை தாண்ட முடியாது என்ற நிலைமை. களத்தில் நின்றவர் எமது கப்டன்கூல்தான். ஆட்டத்தைமுடித்துவைப்பதில்உலகின் சிறந்த வீரர் தான்தான் என்பதை தனது தனித்துவமான போராட்ட குணத்தின் மூலம் இந்திய அணியை அனைத்து இலக்குகளையும் இழக்கவிடாது 247 ஓட்டங்கள் வரை அழைத்து வந்ததன் மூலம் அவர் நிரூபித்தார். இந்த ஆட்டத்தில் டோனி 92 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காது களத்தில் நின்றார். ஒரு ஸ்டம்பிங், 3 பிடியெடுப்புக்கள், களவியூகங்கள் என்று அனைத்திலும் அசத்தி பலம்மிக்க துடுப்பாட்ட படையைக் கொண்ட தென்னாபிரிக்காவை 225 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழக்கச் செய்து திரில் வெற்றிபெற்றுக் கொடுத்தார்.

### விமர்சகர்களுக்கு சாட்டை

டோனியின் மட்டையில் இருந்து பறந்த பந்துகளை விட வெற்றிக்குப் பின்னர் அவர் சொன்ன ஒரு வார்த்தை அவர் மீது விமர்சனங்களை முன்வைத்தவர்களுக்கு சாட்டையாக மாறியுள்ளது. அந்த வார்த்தை 'தவறு செய்வேன் என வாளுடன் காத்திருக்கிறார்கள்' என்பதே. முதல் ஒருநாள் ஆட்டத்தில் தோல்வியடைந்த பின்னர் உரையாற்றும்பொழுது 'தோல்விக்கு நானே காரணம்' என சிரிப்புத் தவறாமல் தன் தலையில் தூக்கி போட்டுக்கொண்ட டோனி, இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் தனது தனி முயற்சியால் கிடைத்த வெற்றியின் பின்னர் வெற்றிக் கான காரணம் 'அணியின் கூட்டுமுயற்சி' என்றார். அங்கேதான் நிற்கிறார் கப்டன் கூல்.

### 3ஆவது ஒருநாள் ஆட்டம் இன்று

இந்தியா தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டம் இன்று ராஜ்கோட் மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக நடை பெறவுள்ளது. இரண்டு அணிகளும் சிறப்பான போர்மில் இருப்பதால் கடந்த ஆட்டங்களைப் போன்ற ஒரு திக்திக் நிலைமை நிச்சயம் இன்றைய ஆட்டத்திலும் இருக்கவே செய்யும்.

# ஆண்கள் அணியில் இணைந்த பெண்

## இங்கிலாந்து வீராங்கனை வரலாற்றுச் சாதனை



ஆஸ்திரேலியாவின் கழக அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள கிரிக்கெட் தொடரில் ஆண்கள் அணியில் பெண் ஒருவர் இணைந்து விளையாடவுள்ளமை பரபரப்பாக பேசப்படும் விடயமாக மாறியுள்ளது. இங்கிலாந்து மகளிர் அணியின் இலக்குக்காப்பாளராக இருக்கின்ற சாரா ரெய்லரே அவ்வாறு ஆண்களுடன் சரிநிகராக விளையாடவுள்ளவராவார்.

கிரிக்கெட்டில் பெண்கள் ஈடுபடுவது தற்பொழுது வழமையாக மாறிவிட்ட போதிலும் ஆண்களின் ஆட்டத்துக்கும் பெண்களின் ஆட்டத்துக்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கும். பந்துகளின் வேகங்கள், எகிறும் பவுன்சர்கள், பவுண்டரி எல்லை அளவுகள் இவை அவ்வாறான வித்தியாசங்களைக் காட்டும் விடயங்களில் சில. ஒரு வீராங்கனையால் நிச்சயமாக ஜோன்சன், ஹசில்வூட், ஸ்டாக் போன்ற வீரர்களின் வேகத்தைச் சமாளிக்க முடியாது. இவ்வாறிருக்கையில் சாரா இந்த சவாலை எதிர்கொள்ள துணிந்தமையே பெரிய விடயம். அதிலும் இலக்குக்காப்பாளராகவே களமிறங்கப் போகின்றமை அதைவிடப் பெரியவிடயம்.

சாராவின் இந்த முடிவு புருவத்தை உயர்த்திப் பார்க்கக்கூடிய வகையில் அமைந்திருந்தாலும் மறுமுனையில் அவர் இதற்கு பொருத்தமானவர் என்றே எண்ணத் தோன்றுகிறது. ஒரு வீரருக்கே உரிய வேகமும் துடுப்பாட்டத்திறனும் சாராவிடம் அப்படியே உள்ளது. கடந்த வருடம் உலகின் சிறந்த கிரிக்கெட் வீராங்கனை என்ற விருதை வென்ற சாரா நிச்சயம் இந்த சவாலை சமாளிப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org